ஜாய்ஸ் மேயர்

#1 நியூயார்க் டைம்ஸ் அதிகம் விற்பனையாகும் ஆசிரியர்



# ஒரு பெண்ணின் ஆத்துமாவை குணப்படுத்துதல்

உங்களுடைய உணர்ச்சிக் காயங்களை மேற்கொள்வது எப்படி

*ஜாய்ஸ் மேயர், சர்வதேச அளவில் புகழ்பெற்ற வேத பாட ஆசிரியராவார், எப்படி கிறிஸ்துவின் மீட்கும் அன்பு உணர்ச்சிக் காயங்களை ஆற்றி, வாழ்வில் மகிழ்ச்சியைக் கொண்டுவருகிறது என்பதை துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பெண்களுக்கு காட்டுவதற்கு தனது சொந்த வரலாற்றை வரைந்துள்ளார்.*

வாழ்க்கையின் சூழ்நிலைகளால் ஆழமாக காயப்பட்ட ஒரு பெண்ணின் இருதயமும், ஆத்துமாவும் குணமடைய முடியுமா? அவள் நேசித்த மற்றும் நம்பிய ஒரு மனிதனால் காயப்பட்டிருந்தால், அவளால் மீண்டும் நேசிக்க முடியுமா, நம்ப முடியுமா? ஒரு பெண்ணாக பல ஆண்டுகளாக துஷ்பிரயோகத்தை, கைவிடப்படுதலை, மற்றும் தனக்கு நெருக்கமானவர்களால் காட்டிக் கொடுக்கப்படுதலை அனுபவித்திருக்கும் ஜாய்ஸ் மேயர் “ஆம்!” என்று எதிரொளிக்கிறார்.

மேயரின் நேர்மறை அவரது சொந்த பயணத்தில் இருந்தும், , மேலும் அவர்களின் வலியை முழுமையாக சமாளிக்க முடியும் என்று நம்பாத பல பெண்களைப் பார்த்தால் வருகிறது -அல்லது எங்கிருந்து தொடங்குவது என்று கூட தெரிந்துகொள்ள முடியும்-அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல் வாழ்க்கையை மாற்றும் பைபிளின் ஞானம்.

மேயரின் நன்கு விற்பனையாகும் பியூட்டி ஃபார் ஆஷஸ் என்ற புத்தகத்தில் தனது தனிப்பட்ட குணப்படுத்தும் கதையைப் பற்றி கூறினார். இப்போது, அதிக காலம் கடந்து, ஒரு பெண்ணின் ஆத்துமாவை குணப்படுத்துவது ஜாய்ஸின் கதையையும் அனைத்து பெண்களுக்கான குணப்படுத்தும் பயணத்தையும் ஆழமாக ஆராய்கிறது. ஒவ்வொன்றும் உங்கள் உண்மையான விதியை கடவுளின் விதியாகக் கண்டறிய உங்களைத் தடுத்து நிறுத்தும் தடைகள் எதுவாக இருந்தாலும் அதை உடைக்க உங்களுக்கு வழிகாட்டுகிறது. கடவுள் எல்லா வலிகளையும் குணப்படுத்த முடியும், அவர் அதை உங்களில் செய்ய விரும்புகிறார். ஒரு பெண்ணின் ஆத்துமாவை குணப்படுத்துவது முதலில் இருக்கட்டும். கடவுள் உங்களுக்காக உத்தேசித்துள்ள அற்புதமான, மகிழ்ச்சியான எதிர்காலத்தை நோக்கிச் செல்லுங்கள்.

# ஒரு
# பெண்ணின்
# ஆத்துமாவை
# குணப்படுத்துதல்

# ஒரு பெண்ணின் ஆத்துமாவை குணப்படுத்துதல்

உங்களுடைய உணர்ச்சிக்
காயங்களை மேற்கொள்வது எப்படி

ஜாய்ஸ் மேயர்

JOYCE MEYER
MINISTRIES®
Sharing Christ – Loving People

C14, Vikrampuri Colony, Karkhana, Secunderabad, Telangana - 500 009

Copyright © 2018 by Joyce Meyer

Cover copyright © 2018 by Hachette Book Group, Inc.

Hachette Book Group supports the right to free expression and the value of copyright. The purpose of copyright is to encourage writers and artists to produce the creative works that enrich our culture.

The scanning, uploading, and distribution of this book without permission is a theft of the author's intellectual property. If you would like permission to use material from the book (other than for review purposes), please contact permissions@hbgusa.com. Thank you for your support of the author's rights.

FaithWords
Hachette Book Group
1290 Avenue of the Americas, New York, NY 10104 faithwords.com
twitter.com/faithwords
First Edition: September 2018

FaithWords is a division of Hachette Book Group, Inc. The FaithWords name and logo are trademarks of Hachette Book Group, Inc.

The publisher is not responsible for websites (or their content) that are not owned by the publisher.

The Hachette Speakers Bureau provides a wide range of authors for speaking events. To find out more, go to www.hachettespeakersbureau.com or call (866) 376-6591.

Unless otherwise noted Scriptures are taken from *The Amplified Bible, Classic Edition* (AMPC). Copyright © 1954, 1958, 1962, 1964, 1965, 1987 by The Lockman Foundation.

Scripture quotations marked (AMP) are taken from *The Amplified Bible* (AMP). *The Amplified Bible, Old Testament,* copyright © 1965, 1987 by The Zondervan Corporation. *The Amplified New Testament,* copyright © 1954, 1958, 1987

by The Lockman Foundation. Used by Permission.

Scriptures noted (NIV) are taken from the *Holy Bible: New International Version*®. Copyright © 1973, 1978, 1984 by International Bible Society. Used by permission of Zondervan Publishing House. All rights reserved.

Scripture quotations marked (NKJV) are taken from the *New King James Version.* Copyright © 1979, 1980, 1982 by Thomas Nelson, Inc., Publishers. All rights reserved.

Scripture quotations marked (NASB) are taken from *The New American Standard Bible* (NASB). Copyright © 1960, 1962, 1963, 1968, 1971, 1972, 1973, 1975, 1977, 1995 by The Lockman Foundation.

Scripture quotations marked (ESV) are taken from *The Holy Bible, English Standard Version.* ESV® Text Edition: 2016. Copyright © 2001 by Crossway Bibles, a publishing ministry of Good News Publishers.

Library of Congress Cataloging-in-Publication Data has been applied for.

ISBNs: 978-1-4555-6024-0 (hardcover), 978-1-4555-6026-4 (large type), 978-1-4555-6022-6 (ebook), 978-1-5460-1028-9 (international)

Healing the Soul of a Woman *(Tamil - New Print 2024)*
*How to Overcome Your Emotional Wounds*

Printed at:
Caxton Offset Pvt. Ltd.
Hyderabad - 500 004

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| *முகவுரை* | | *vii* |
| *அத்தியாயம் 1:* | பெண்களின் வரலாறு | *1* |
| *அத்தியாயம் 2:* | கிடைக்கக்கூடிய சிறந்த வாழ்க்கையை வாழ்வது | *14* |
| *அத்தியாயம் 3:* | தேவன் காயம்பட்டவர்களை விரும்புகிறார் | *25* |
| *அத்தியாயம் 4:* | ஆரோக்கியமான ஆத்துமா என்றால் என்ன? | *37* |
| *அத்தியாயம் 5:* | எனக்கு உதவுங்கள்! என்னை எனக்கு புரிந்து கொள்ளமுடியவில்லை | *48* |
| *அத்தியாயம் 6:* | நீங்கள் தேவனுக்கு பிரியமானவர்கள் | *60* |
| *அத்தியாயம் 7:* | காயப்படும் மக்கள், மக்களை காயப்படுத்துவர் | *72* |
| *அத்தியாயம் 8:* | குற்ற உணர்ச்சியையும், அவமானத்தையும் இறக்கி விடுங்கள் | *85* |
| *அத்தியாயம் 9:* | உங்கள் உண்மையான சுயத்தைக் கண்டறிதல் | *98* |
| *அத்தியாயம் 10:* | எந்த நேரத்திலும் நிறுத்தக் கூடாது | *111* |
| *அத்தியாயம் 11:* | நீங்கள் சேதமடைந்த பொருள் அல்ல | *123* |
| *அத்தியாயம் 12:* | பாவத்தின் காயங்கள் | *136* |
| *அத்தியாயம் 13:* | உள்ளிருந்து வெளியே வாழ கற்றுக்கொள்வது | *147* |
| *அத்தியாயம் 14:* | உங்களுக்கு தேவையானது உங்களிடம் உள்ளது | *160* |
| *அத்தியாயம் 15:* | குணப்படுவதற்கான தடைகள் | *173* |

அத்தியாயம் 16: சுய பரிதாபம் என்ற தடை 186

அத்தியாயம் 17: உங்களுக்காக எழுந்து நிற்கவும் 197

அத்தியாயம் 18: எல்லைகளை அமைக்கவும் - சுவர்களை கட்ட வேண்டாம் 207

அத்தியாயம் 19: உங்களின் சிறந்த கூட்டாளியாகுங்கள் 219

அத்தியாயம் 20: சார்பு நிலை காயங்களை ஆற்றுதல் 230

அத்தியாயம் 21: ஆரோக்கியமான ஆத்துமாவின் ஆசீர்வாதங்கள் 242

அத்தியாயம் 22: வலியற்ற பாதை 253

அத்தியாயம் 23: மிகப்பெரிய பரிமாற்றம் 266

முடிவுரை 277

பின் இணைப்பு 1: வாக்குரிமை 279

பின் இணைப்பு 2: கிறிஸ்துவுக்குள் நீங்கள் யார்? 293

முடிவுரை 297

# முகவுரை

*அவர் இருதயம் நொறுங்குன்றவர்களைக் குணப்படுத்துகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்.*

*—சங்கீதம் 147:3*

*தன் வாழ்க்கையின் சூழ்நிலைகளாலோ அல்லது அவள் நேசித்து நம்பின ஒருவராலோ ஆழமாக காயப்பட்டிருக்கும் ஒரு பெண்ணால் குணமடைய முடியுமா? அவளுடைய இருதயமும், ஆத்துமாவும் குணமாகுமா? அவளால் மீண்டும் ஒருமுறை நேசிக்கவும், நம்பவும் முடியுமா? ஒரு பெண்ணாக என் தந்தையால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு, என் தாயால் கைவிடப்பட்டு, என் முதல் கணவரால் ஏமாற்றப்பட்ட, நான் எவ்வித தயக்கமுமின்றி "ஆம்!" என்று சொல்ல முடியும். நீங்கள் ஒரு காயப்பட்ட ஆத்துமாவுடன், தனிமையை உணர்ந்துக்கொண்டு ,நேசிப்பாரற்று, தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருப்பீர்களென்றால் நீங்கள் அப்படி இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று என்னால் உறுதியளிக்கமுடியும்.*

*1994 ஆம் ஆண்டு வெளிவந்த சாம்பலுக்கு பதில் சிங்காரம், என்ற புத்தகம், உணர்ச்சியை குணப்படுத்தலைப் பற்றி நான் எழுதிய முதல் புத்தகமாகும். அப்போதிருந்து நான் இந்த பகுதியில் அதிக அனுபவத்தைப் பெற்றிருக்கிறேன், மேலும் தேவனுடைய வார்த்தையில் அதிக அறிவைப் பெற்றிருக்கிறேன், மேலும் நான் அந்த விஷயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நான் இந்த புத்தகத்தில் பகிர்ந்து கொள்ளும் சில பகுதிகளை மற்ற புத்தகங்களிலும் உள்ளடக்கி எழுதியுள்ளேன், ஆனால் தேவனின் உதவியோடு, இந்தப் புத்தகம் உணர்ச்சியை குணப்படுத்துதல்*

என்ற இந்த விஷயத்தைப் பற்றிய விவிலியக் கண்ணோட்டம் அனைத்தையும் உள்ளடக்கிய கையேடாக இருக்கும்.

எண்ணிலடங்கா மக்கள் கடந்த கால காயங்களால் தங்கள் ஆத்துமாக்களில் காயம்பட்டவர்களாக சுற்றித் திரிகிறார்கள். அவர்களுக்கு, குணப்பட முடியும் என்று தெரிந்திருக்கவில்லை அல்லது என்ன செய்வது அல்லது எப்படி தொடங்குவது என்று தெரியாதிருக்கிறார்கள். என்னுடைய பயணத்தில் நான் கற்றுக்கொண்டதை பகிர்ந்து கொள்கிறேன். உங்களுடைய பயணம் என்னுடையது போல் இருக்காது என்றாலும், முழுமையை நோக்கிய உங்கள் முன்னேற்றப் பாதையில் நீங்கள் முன்னேறும்போது, எனது கதை ஒரு உத்வேகமாகவும், வழிகாட்டும் ஒளியாகவும் இருக்கும் என்று நம்புகிறேன்.

நம் உடல் நோய்வாய்ப்படுவதைப் போலவே, நம் ஆத்துமாவும் நோயுற்றிருக்கலாம், ஆனால் தேவன் நம் ஆத்துமா உட்பட நாம் காயப்படும் எல்லா இடங்களிலும் நம்மை குணப்படுத்த விரும்புகிறார். ஆத்துமா என்பது மனம், சித்தம் மற்றும் உணர்ச்சிகள். இது நம் உள்ளான பகுதி, மிக முக்கியமான பகுதியாகும். நாம் பொருளாதார ரீதியாக என்ன வைத்திருந்தாலும் அல்லது வாழ்க்கையில் நம் சூழ்நிலைகள் எவ்வளவு நன்றாக இருந்தாலும் நமக்கு காயப்பட்ட மற்றும் இரத்தம் கசிந்துக் கொண்டிருக்கும் ஆத்துமா இருக்குமேயென்றால், நாம் வாழ்க்கையை அனுபவிக்க மாட்டோம். நம் காயம், அவமானம், கோபம், கசப்பு, மனச்சோர்வு, சந்தேகம், பாதுகாப்பின்மை, குற்ற உணர்வு அல்லது பயம் போன்றதினால் ஏற்பட்டிருந்தாலும் அதை எதிர்கொண்டு சமாளிக்க வேண்டும்.

எனது கடந்த காலத்தை கருத்தில் கொண்டு நான் எதிர்பார்க்கக்கூடிய சிறந்த வாழ்க்கை எனக்கு இருப்பதாக நினைத்து பல வருடங்களாக வாழ்க்கையில் நொண்டி நடந்துக்கொண்டிருந்தேன். என் அப்பா எனக்கு செய்த பாலியல் துஷ்பிரயோகத்தால், நான் எப்பொழுதுமே இரண்டாம் தர வாழ்க்கையையே பெற்றுக் கொள்வேன் என்று இளம் பருவ வயதின் போது நினைத்துக் கொண்டிருந்தேன். எனது கடந்த காலத்திலிருந்து உருவாக்கப்பட்ட எந்த பிரச்சனையையும் நான்

சமாளிக்க முயற்சிக்கவில்லை. ஏனென்றால் அவைகளை பற்றி எதாவது செய்ய முடியும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் நான் தவறாக நினைத்துக் கொண்டிருந்தேன்.

நம் எண்ணம் எவ்வளவு தவறானதாக இருக்கக் கூடும் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. ஆனால் அது தவறு என்று நமக்குத் தெரியாவிட்டால், அதற்கு மேல் நாம் ஒருபோதும் உயர மாட்டோம். இந்த புத்தகத்திலே, ஒரு அற்புதமான, நிறைவான வாழ்க்கை உங்களுக்குக் கிடைக்கும் என்பதைக் காட்டுவேன் என்று நம்புகிறேன். தேவனின் உதவியோடு, தேவன் உங்களை உருவாக்கிய அற்புதமான பெண்ணாக இருக்க உங்களை விடுவிக்கும் வழிகளில் சிந்திக்கவும், நடந்து கொள்ளவும் கற்றுக்கொள்ள முடியும்.

உங்களுக்கு என்ன கிடைக்கும் என்பதை நீங்கள் அறிந்தால், அதனைப் பெற்றுக் கொள்ள நீங்கள் ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்கிறேன்! ஆத்துமாவின் காயங்களுக்கு உலகம் பலவிதமான வைத்தியங்களை வழங்குகிறது, அவற்றில் சில உதவியாக இருக்கலாம், ஆனால் இயேசு நமக்கு முழுமையான சுகமடைதலை வழங்குகிறார். அவரே நம் ஆத்துமாக்களை குணப்படுத்துபவர், மீட்டெடுப்பவர். சங்கீதக்காரன் தாவீது தேவன் அவனுடைய ஆத்துமாவை மீட்டெடுத்தார் என்று கூறினார் (சங்கீதம் 23:3).

ஒன்று மீட்டெடுக்கப்படும்போது அது மீண்டும் ஒருமுறை புதியது போல் ஆக்கப்படுகிறது.

தம்முடைய சாயலில் படைக்கப்பட்ட ஒரு பெண்ணாகிய உங்களுக்காக, தேவன் எப்படிப்பட்ட வாழ்க்கையை விரும்பினார்? அது நிச்சயமாகவே குறைக்கப்பட்ட, மதிப்பிழந்த, தவறாக நடத்தப்பட்ட, துஷ்பிரயோகிக்கப்பட்ட, பயன்படுத்தப்பட்ட, மற்றும் அடிக்கப்பட்ட ஒன்றல்ல. அவர் நமக்கு நிபந்தனையற்ற, எல்லையற்ற அன்பையும், மதிப்பையும், முழுமையையும், நீதியையும், அமைதியையும், மகிழ்ச்சியையும் வழங்குகிறார் - அதுவே அவரை நம்பி அவருடன் வாழ்பவர்களுக்கான அவருடைய ஆசீர்வாதங்களின் ஆரம்பம்.

உங்கள் ஆத்துமாவை குணப்படுத்துவதற்கான பயணத்தை நீங்கள் தொடங்கும்போது, குணமடைய நேரம் எடுக்கும் என்பதை நினைவில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அது சில நேரங்களில் வேதனையாகவும் இருக்கிறது, ஏனென்றால் சீழ்பிடித்து, நம் ஆத்துமாக்களை விஷமாக்கிக்கொண்டிருக்கும் தொற்றுக் கிருமிகளை அகற்ற சில வேளைகளில், அந்த பழைய காயங்களைத் திறக்க அனுமதிக்க வேண்டியிருக்கிறது. ஆத்துமாவுக்கு சிகிச்சை தேவைப்படும் பெண்களுக்கு இரண்டு தேர்வுகள் மட்டுமே உள்ளன. முதலாவதாக, வாழ்க்கையில் நொண்டிக்கொண்டே ஒவ்வொரு நாளையும் கடக்க முயற்சிப்பது, இரண்டாவதாக, "எனக்கு போதுமான துன்பம், மகிழ்ச்சியின்மை, பாசாங்கு, குற்ற உணர்வு மற்றும் அவமானம் ஏற்பட்டுவிட்டது அதினின்று நான் முழுமையடைய நான் என்ன செய்ய வேண்டுமோ அதை செய்யத் தயாராக இருக்கிறேன்! என்பதேயாகும்."

## அத்தியாயம் 1

# பெண்களின் வரலாறு

*சாத்தியக்கூறுகளின் சிறிய தீப்பொறிகளை சாதனையின் தீப்பிழம்புகளாக மாற்றுவதன் மூலம், உங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.*

*- கோல்டா மேயர்*

*பெண்கள், தேவனின் ஐடியா என்பதை முதலில் கூறுகிறேன். அவர் முதலில் ஆதாமைப் படைத்திருந்தாலும், அவனுக்கு ஒரு உதவியாளர் தேவை என்பதை அவர் விரைவிலே உணர்ந்தார். எனவே அவர் ஆதாமின் பக்கத்திலிருந்து ஒரு விலா எலும்பை எடுத்து அதிலிருந்து ஏவாளை உருவாக்கினார். ஆதாமின் பக்கத்திலிருந்து ஏவாள் எடுக்கப்பட்டதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதனால், அவள் வாழ்க்கையில் அவனுக்குத் தேவையான ஒருவளாக அவனுடன் நடக்க வேண்டும் என்பதை இது குறிக்கிறது. அவன் அவள் மீது ஏறி நடக்க அவனுக்கு அனுமதி இருக்கிறது என்பதைக் குறிக்கும்படி அவனது கால்களின் அடிப்பகுதியில் இருந்து அவள் எடுக்கப்படவில்லை.*

*படைப்பின் கதையை நீங்கள் நன்கு அறிந்திருந்தால் (ஆதியாகமம் 1-3), தேவன், ஆதாமையும், ஏவாளையும் படைத்த பிறகு அவர் அவர்களை ஏதேன் என்ற அழகிய தோட்டத்தில் வைத்தார், அவர்கள் வாழ்க்கையை ஏராளமாக அனுபவிக்கவும், அவருடன் ஐக்கியம் கொள்ள வேண்டும் என்பதே அவருடைய திட்டமாக இருந்தது. அவர்கள் தங்கள் சொந்த விருப்பங்களைச் செய்வதற்கு அதிகமான சுதந்திரத்தைப் பெற்றிருந்தனர் மேலும் அவர்கள் வசித்துக் கொண்டிருந்த முழு சாம்ராஜ்யத்தின் மீதும் அங்கிருந்த விலங்குகள் மற்றும் அனைத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரமும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் தேவன்*

அவர்களைச் செய்ய வேண்டாம் என்று கூறின காரியமும் ஒன்று இருந்தது, அது ஜீவ விருட்சம் உட்பட மற்ற எல்லா மரங்களிலிருந்தும் கனிகளை அவர்கள் சாப்பிட முடியும் ஆனால் நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை அவர்கள் சாப்பிடக்கூடாது. (ஆதியாகமம் 2:9, 16-17). இதிலிருந்து தேவன், தம்முடைய படைப்பு, அவரால் மட்டுமே கொடுக்க இயலும் ஜீவனால் நிரப்பப்பட வேண்டும் என்று விரும்பினார் மேலும் அவர்கள் நன்மையை மட்டுமே தெரிந்து கொள்ள வேண்டும் தீமை அல்ல என்று அவர் விரும்பினார் என்பதே அவரது உண்மையான நோக்கம் என்பது தெளிவாகின்றது.

நிச்சயமாக, தேவன், அவர் அனைத்தையும் அறிந்தவராதலால் ஆரம்பத்திலிருந்தே, ஒரு பாம்பாக ஏவாளுக்குத் தோன்றிய சாத்தான், அவளை ஏமாற்றி, அவளும் ஆதாமும் அவர் தடைசெய்த அந்த ஒரு மரத்தின் கனியை சாப்பிடுவார்கள் என்பதை அறிந்திருந்தார். அந்த ஒரு தவறான நடவடிக்கை இன்று நமது கிரகத்தில் இருக்கும் அனைத்து வலி மற்றும் செயலிழப்புக்கான கதவைத் திறந்தது. தேவன், தம் திட்டம் தோல்வியடையும் என்று அறிந்திருப்பாரென்றால், பின்னர் அதை ஏன் அவர் நடக்காமலிருக்கும்படி செய்யவில்லை? என்று நீங்கள் கேட்கலாம், பதில் மிகவும் எளிமையானது: தேவன் மனிதனை சுய சித்தத்துடன் படைத்தார், ஏனென்றால், வேறு வழியில்லாமல் அவரை தெரிந்து கொள்பவர்களுடன் அல்ல, அவரை விருப்பத்துடன் தெரிந்துக் கொள்ளும் மக்களுடன் அவர் ஐக்கியம் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். மக்கள் தங்கள் வாழ்க்கையிலே அவருடன் பங்காளிகளாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார், அவருடைய கட்டளையை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லாமலிருக்கும் பொம்மைகளுடன் அல்ல.

நீங்கள், எப்படி இப்படிபட்ட முட்டாளாக இருக்க முடியுமா? என்று ஆதாம் மற்றும் ஏவாள் மேல் கோபம் கொள்வது மிகவும் எளிது, ஆனால் நம்மில் ஒவ்வொருவரும் அப்படியாகத்தான் செய்திருப்போம். தேவன் அவர்களை சுய சித்தததுடன் படைத்திருந்தாலும், அதாவது அவருக்குக் கீழ்ப்படியாமல் இருக்கும் திறனும் அவர்களுக்கு இருந்தாலும், ஆரம்பத்திலிருந்தே ஆண்கள் மற்றும் பெண்களின் முழுமையான மறுசீரமைப்பு மற்றும்

முழுமைக்கான ஒரு திட்டமும் அவரிடம் இருந்தது. அந்த திட்டத்தை எளிமையாக கூற வேண்டுமென்றால் , அது இயேசுவே.

தேவன் நம்மை மிகவும் நேசித்ததால், அவர் தமது ஒரே குமாரன் நம்முடைய பாவங்களுக்கான கிரயத்தை செலுத்துவதின் மூலம் நமக்கு முழு இரட்சிப்பை கொண்டு வர வேண்டுமென்று என்று ஆரம்பத்திலிருந்தே திட்டமிட்டார். இரட்சிப்பு என்றால் ஜீவன் என்று பொருள், ஆனால் தேவன் நமக்கு அளிக்கும் ஜீவன் வெறுமனே நாம் சுவாசிக்க மற்றும் நடக்க தேவையான திறன் கொண்டது அல்ல தேவன் மட்டுமே அறிந்திருக்கும் அந்த ஜீவனை அவர் அளிக்கிறார். நாம் தேவனுடைய ஜீவனால் நிரம்பியிருக்கலாம். அந்த ஜீவன் மிகவும் வல்லமை வாய்ந்தது, அதனால் கடந்த காலத்தில் நம் ஆத்துமாவை சேதப்படுத்தும்படி நமக்கு என்ன நடந்திருந்தாலும், நாம் முழுமையாக குணமடைந்து மீட்கப்பட முடியும். எல்லா மரணமும் ஜீவனால் விழுங்கப்படுகிறது, இருள் வெளிச்சத்தால் விழுங்கப்படுகிறது. இயேசு ஜீவனாகவும், ஒளியாகவும் இருக்கிறார். அதனால்தான் யோவான் 1:4 கூறுகிறது, "அவரில் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு வெளிச்சமாயிருந்தது."

தேவன் ஒருபோதும் எந்த திட்டமும் இல்லாமல் இருப்பதில்லை என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். உங்களுக்கு என்ன நடந்திருந்தாலும் பரவாயில்லை, தேவனுக்கு உங்களைக் குறித்து ஒரு திட்டம் இருக்கிறது, அது ஒரு நல்ல திட்டம்.

சாத்தான் ஏவாளை வெற்றிகரமாக ஏமாற்றிய பின், கீழ்ப்படியாமல் இருக்க அவளைத் தூண்டிய பிறகு, தேவன் அவனிடம் ஒன்றை சொன்னார், அது வரலாறு முழுவதும் பெண்கள் ஏன் மிகவும் ஒதுக்கப்பட்டுள்ளனர், அவமதிக்கப்பட்டிருக்கின்றனர், மதிப்பிழக்கப்பட்டிருக்கின்றனர் என்பதைப் புரிந்து கொள்ளும்படி செய்கின்றது. ஆதியாகமம் 3:14-15 கூறுகிறது:

"அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டுமிருகங்களிலும் சகல காட்டுமிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன்

*வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்;*

*உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்."*

இந்த வசனத்தில் ஏவாளின் "சந்ததி" என்பது வலியுறுத்தப்பட்டிருக்கின்றது என்பதை தயவுசெய்து கவனிக்கவும், சர்ப்பத்தின் சந்ததி இல்லை. ஏனென்றால் ஏவாளின் சந்ததி இயேசு கிறிஸ்து. அவளே அனைத்து உயிரினங்களுக்கும் தாயாக இருக்கிறாள், இயேசுவின் வம்சாவழியிலும் இருக்கிறாள். ஏவாளின் சந்ததி அவனுடைய தலையை நசுக்கும் அல்லது அவனுடைய அதிகாரத்தை அவனை விட்டு எடுத்து, அவனை தோற்கடித்துவிடும் என்று தேவன் சாத்தானுக்குத் தெரியப்படுத்தினார். நம் அன்றாட வாழ்வில் அவன் நம்மை எப்படித் தாக்கிக்கொண்டிருக்கிறான் என்பதை குறிக்கும் விதமாக சாத்தான், கொஞ்சக் காலத்திற்கு, தேவனின் பிள்ளைகளின் குதிங்காலை நசுக்குவான் என்றார், இது நம்முடைய அன்றாட வாழ்வில் எப்படி அவன் நம்மை தாக்குகிறான் என்பதை குறிக்கிறது.

இதே வகையான தாக்குதல் இயேசு பூமியில் இருந்த காலத்தில் அவருக்கு எதிராகவும் நிகழ்த்தப்பட்டது, ஆனால் கதையின் முடிவு என்னவென்றால், இயேசு நமக்குப் பதிலாக மரித்தார், நம் வலியையும், துக்கத்தையும் எடுத்துக் கொண்டார், நாம் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு துன்பப்பட்டு, நம் பாவங்களுக்கான கிரயத்தை செலுத்தினார். ஆனால் அதிர்ஷ்டவசமாக அது கதையின் முடிவு அல்ல. அது அப்படியாக இருந்திருந்தால், அது சாத்தானுக்கு அவன் எப்போதும் எதிர்பார்த்திருந்த வெற்றியைக் கொடுத்திருக்கும். அவன் உண்மையில் நம் இரட்சகரின் குதிங்காலை நசுக்கினான். ஆனால் இயேசு கல்லறையில் மூன்று நாட்கள் இருந்தார் அந்த சமயத்தில் அவர் "மரணத்தின் திறவுகோல் மற்றும் பாதாளத்தின் (இறந்தவர்களின் சாம்ராஜ்யம்) திறவுகோலைக்" கைப்பற்றினார் (வெளிப்படுத்துதல் 1:18), பின்னர் அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார், அவர் என்றென்றும் உயிருடன்

இருக்கிறார்! ஏவாளின் சந்ததியின் (இயேசு) மூலம் தேவன் சாத்தானின் தலையை நசுக்கினார் (அதிகாரம்).

ஆதாமும் ஏவாளும் தங்களின் கீழ்ப்படியாமையின் மூலம் அவனுக்குக் கொடுத்த அதிகாரம் சாத்தானிடமிருந்து உரிந்துக் கொள்ளப்பட்டது. ஆனால் அவன் தோற்கடிக்கப்பட்டுவிட்டான் என்பது நமக்கு தெரியாவிட்டால், அவனுடைய பொல்லாத மற்றும் தீய திட்டம் நம் வாழ்வில் நம்மை தொடர்ந்து ஆண்டு கொள்ள அனுமதிப்போம். சாத்தான் தோற்கடிக்கப்பட்டு விட்டான், குணப்படுதல் மற்றும் அபரிதம் நிறைந்த வாழ்க்கை உங்களுக்கு இருக்கிறது! அதை பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம், விசுவாசத்தின் மூலம் இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தேவனுடைய வார்த்தையில் உள்ள வாக்குத்தத்தங்களெல்லாம் உங்களுக்கானது என்று நம்புவதேயாகும். அப்படி நீங்கள் செய்யும் போது, இயேசுவுடனான உங்கள் வாழ்க்கை பயணத்தை நீங்கள் தொடங்குகின்றீர்கள், உங்கள் பாதையிலே அவர் உங்களை வழிநடத்துவார்.

நீங்கள் எவ்வளவு ஆழமான குழிக்குள் இருப்பதாக உணர்ந்தாலும், தேவனின் கரம் உங்களை வந்தடைந்து, உங்களை வெளியே உயர்த்தும் அளவுக்கு மிகவும் குறுகியதாக இருக்கிறதில்லை. அவர் உங்களை உயர்ந்த இடங்களில் வைத்து, எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தையும், விவரிக்க முடியாத சந்தோஷத்தையும் உங்களுக்களிப்பார். தேவன் நீங்கள் இருக்கும் இடத்தில் உங்களைச் சந்தித்து, நீங்கள் இருக்க வேண்டிய இடத்திற்குச் செல்ல உதவுவார்.

## பெண்கள் மீதான சாத்தானின் தாக்குதல்

காலங்காலமாக பெண்கள் கொடூரமாக, நியாயமற்ற முறையில் நடத்தப் படுவதற்கான காரணம் பிசாசின் தாக்குதல் தான். எனது கருத்தைத் தெரிவிக்க நான் அறிந்த சில புள்ளி விவரங்களை உங்களுக்குத் தருகிறேன். (மேலும் புள்ளிவிவரங்களுக்கு இப்புத்தகத்தின் பின்னாலிருக்கும் இணைப்பு I ஐப் பார்க்கவும்.)

**வாக்குரிமை:**

- *ஆகஸ்ட் 18, 1920 ல் அமெரிக்க அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தம் மூலம் அமெரிக்க பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படுவது அங்கீகரிக்கப்பட்டது. - பெண்களின் வாக்குரிமை எனப்படும் உரிமை அது. அமெரிக்கா நிறுவப்பட்ட நேரத்தில், அதன் பெண் குடிமக்கள், அதன் ஆண்களைப் போன்று, வாக்களிக்கும் உரிமை உட்பட அனைத்து உரிமைகளையும் பகிர்ந்து கொள்ளவில்லை.*[1]

**சம ஊதியம் மற்றும் சொத்து உரிமைகள்:**

- *சராசரியாக, அமெரிக்காவில் முழுநேர வேலை செய்யும் பெண்கள், ஊதிய இடைவெளி காரணமாக ஒவ்வொரு ஆண்டும் மொத்தமாக $840 பில்லியனுக்கும் அதிகமாக இழக்கிறார்கள்.*[2]

**கல்வி:**

- *உலகளவில், 65 மில்லியன் பெண் பிள்ளைகள் பள்ளிக்கு செல்வதில்லை.*[3]
- *உலகில் உள்ள 774 மில்லியன் படிப்பறிவற்ற மக்களில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள்.*[4]
- *அனைத்து பெண்களும் ஆரம்பக் கல்வி பெற்றிருந்தால், குழந்தை இறப்புகள் 15 சதவீதம் குறைவாக இருந்திருக்கும். எல்லா பெண்களுக்கும் இடைநிலைக் கல்வி இருந்தால், குழந்தை இறப்புகள் பாதியாகக் குறைந்து, 3 மில்லியன் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும். தாய்மார்களின் கல்வி, குழந்தை ஊட்டச்சத்தை மேம்படுத்துகிறது. அனைத்துப் பெண்களும் ஆரம்பக் கல்வியைப் பெற்றிருந்தால், 1.7 மில்லியன் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் ஏற்படும் வளர்ச்சி குன்றிய நிலையில் இருந்து காப்பாற்றப்பட்டிருப்பார்கள்.*[5]

**பாலினப்படுகொலை:**

- *பாலினப்படுகொலை (அவர்களின் பாலினத்தின் அடிப்படையில்*

ஒருவரின் கொலை பெண் கொலை என்றும் அழைக்கப்படுகிறது) காரணமாக 126 மில்லியன் பெண்கள் காணவில்லை என மக்கள்தொகை ஆய்வாளர்கள் மதிப்பிட்டுள்ளனர். இது முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர் மற்றும் எய்ட்சினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் ஆகியவை இணைந்தால் அது எவ்வளவு அதிகமாக இருக்குமோ அவ்வளவு அதிகமானது. ஒவ்வொரு ஆண்டும், 2 மில்லியன் பெண் குழந்தைகளை பாலின-தேர்ந்தெடுப்பால் ஏற்படும் கருக்கலைப்புக்கும், சிசுக்கொலைக்கும் இழக்கிறோம். அது ஒரு நிமிடத்திற்கு நான்கு பெண்களாவார்கள். சீனாவில் மட்டும் 62 மில்லியன் பெண்கள் காணாமல் போயுள்ளனர். இது அந்நாட்டின் பெண்களின் மக்கள் தொகையில் 9.5 சதவீதமாகும்.[6]

- பாலினப்படுகொலை எல்லா வயது பெண்களையும் பாதிக்கிறது ஆனால் குறிப்பாக இளையவர்களை கடுமையாக பாதிக்கிறது. கடந்த இருபது ஆண்டுககளில், பெண் குழந்தைகளை அகற்றுவதற்காக எடுக்கும் முறையில் இந்த பாலின-தேர்ந்தெடுப்பால் ஏற்படும் கருக்கலைப்பு, சிசுக்கொலையை விட முதன்மையான இடத்தை பெற்றிருக்கிறது.[7]

## பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் துஷ்பிரயோகம்:

- உலகெங்கிலும் உள்ள பெண்களில் 35 சதவீதம் பேர் ஒரு நெருங்கிய துணையினால் உடல் ரீதியான அல்லது பாலியல் ரீதியான வன்முறையையும் அல்லது துணையல்லாத ஒருவரால் அவர்களின் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் பாலியல் வன்முறையையும் அனுபவித்திருப்பதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், சில தேசிய ஆய்வுகள், 70 சதவிகிதம் வரை பெண்கள், அவர்களின் வாழ்நாளில் நெருங்கிய துணையால் உடல் அல்லது பாலியல் வன்முறையை அனுபவித்திருப்பதாக காட்டுகின்றன.[8]

- உலகளவில் கண்டறியப்பட்டுள்ளது, மனிதர்களைக் கடத்துவதால் பாதிக்கப்பட்டவர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் வயது வந்த பெண்கள். பெண்கள் மற்றும் பெண்

*பிள்ளைகள்70 சதவீதமாகும். கடத்தப்பட்ட ஒவ்வொரு மூன்று குழந்தைகளில் இரண்டு பெண் பிள்ளைகள் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.*[9]

**மனிதர்களைக் கடத்துதல்:**

- *கடத்தப்படும் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளில் 98 சதவீதம் பேர் பாலியல் கொடுமைகளுக்காகத்தான் கடத்தப்படுகின்றனர்.*[10]
- *அமெரிக்காவில் பாலியல் வர்த்தகத்தில் நுழையும் ஒரு பதின்ம வயதினரின் சராசரி வயது பன்னிரெண்டு முதல் பதினான்கு வயது. பாதிக்கப்பட்டவர்களில் பலர் சிறுவயதில் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதால் ஓடிப்போன பெண்கள்.*[11]
- *அமெரிக்க வெளியுறவுத் துறையின் கூற்றுப்படி, இந்த நூற்றாண்டில், அமெரிக்கா மற்றும் உலகம் முழுவதிலும் மனிதக் கடத்தலானது மனித உரிமைச் சவால்களில் மிகப்பெரியதொன்றாக இருக்கிறது.*[12]

*அதிர்ஷ்டவசமாக, குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் பெண்கள் சில முன்னேற்றம் அடைந்துள்ளனர், ஆனால் அங்கேயும் பெண்கள் இன்னும் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறார்கள்.*

*மேலும் உலகின் பல பகுதிகளில் நான் முந்தைய பக்கங்களில் விவரித்த பல விஷயங்கள் இன்றும் கூட நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன. பெண்களின் சுதந்திரம் மற்றும் மறுசீரமைப்புக்கான போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது, ஆனால் நான் தேவன் மேல் வைக்கும் நம்பிக்கையின் மூலம் குணமடைய முடியும் என்பதை அறிந்திருப்பதால் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் உலகம் முழுவதும் உள்ள பெண்களுக்கு இந்த சுதந்திரத்தை கொண்டு வருவதற்கு நமது ஊழியம் உதவிக் கொண்டிருக்கிறதற்காய் நான் மகிழ்ச்சியடைகிறேன்.*

*மதிப்பிழந்து, அவமதிக்கப்பட்ட ஒரு நீண்ட வரலாற்றின் காரணமாக, முன்னேற்றம் அதிகம் ஏற்பட்டிருக்கும் இடங்களிலும் கூட, இன்று பல பெண்கள், அவர்களின் உண்மையான*

மதிப்பையும், விலைமதிப்பையும் பார்க்கிறதில்லை. அவர்கள் தங்கள் திறன்களை சந்தேகிக்கிறார்கள், மேலும் பலவற்றில் ஒரு தவறான மனப்பான்மை காரணமாக, தங்கள் வாழ்க்கையில் பெரிய காரியங்களைச் செய்ய முயற்சி கூட செய்கிறதில்லை. "நான் ஒரு பெண் தானே" என்ற இந்த அறிக்கையே நான் கேட்க விரும்பாத ஒரு அறிக்கை ஆகும். அந்த அறிக்கையே போதிய விளக்கம் அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

தேவன் என்னை ஊழியத்திற்கு அழைத்தபோது, நான் ஒரு பெண் என்ற காரணத்தை தவிர வேறு எந்த காரணமும் இல்லாமல் நான் நிறைய நிராகரிப்பை அனுபவிக்க ஆரம்பித்தேன் என்பது எனக்கு நினைவிருக்கிறது. பெண்கள் தேவனுடைய வார்த்தையைக் கற்பிக்கவில்லை. "பெண்கள் ஞாயிறுப் பள்ளிகளில் கற்பிக்கலாம், ஆனால் முக்கிய சபையில் கற்பிக்க அவர்களுக்கு அனுமதி இல்லை" போன்ற விஷயங்களை நான் கேள்விப்பட்டேன். இதில் எந்த அர்த்தமும் இல்லை, ஏனென்றால், பெண்கள் கற்பிப்பது முறையற்றதென்றால், ஞாயிறு பள்ளியில் கற்பிப்பது எப்படி முறையற்றதோ அப்படியே முக்கிய சபையில் கற்பிப்பதும் முறையற்றதே, அல்லது ஒரு போதகராகவோ, ஒரு சுவிசேஷகராகவோ அல்லது சபையில் வேறு எந்த வகையான பதவியை வகிப்பதும் முறையற்றதே.

நான் நியாயந்தீர்க்கப்பட்டேன், விமர்சிக்கப்பட்டேன், என் தேவாலயத்தை விட்டு வெளியேறும்படி கேட்டுக் கொள்ளப்பட்டேன், நான் செய்ய வேண்டுமென்று உணர்ந்ததை என்னால் செய்ய முடியவில்லை ஏனென்றால், நான் ஒரு பெண் என்று ஜெபத்தில் தேவனிடம் சென்று அவருக்கு நினைவூட்டும் அளவுக்கு குடும்பம் மற்றும் நண்பர்களால் நான் ஒதுக்கப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டேன். "ஜாய்ஸ், நீ ஒரு பெண் என்று எனக்குத் தெரியும்!" என்று அவர் என் இருதயத்திலே தெளிவாக சொன்னது என் நினைவிலுள்ளது.

எனக்கு எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் அவர் என்னை செய்யும்படி வழிநடத்துவதை நான் தொடர்ந்து செய்ய அவர் விரும்பினார். அதிர்ஷ்டவசமாக, ஆண்டுகள் செல்ல, செல்ல பலரின் மனங்கள் மாறிவிட்டன, ஆனால் அவர்கள் அனைவரும் மாறவில்லை.

பெண்கள் சமூகம் அனைத்திலும் தங்களுக்கு உரிய இடத்தைப் பெற்று, மதிக்கப்பட்டு, மரியாதை அளிக்கப்பட்டு, பாராட்டப்பட அனுமதிக்கப்படும் நாட்களை காண்போம் என்று நம்புகிறோம்.

தங்கள் உரிமைகளுக்காகப் போராடத் தீர்மானித்த சில பெண்கள் அவர்களுக்கோ அல்லது நாம் வாழும் உலகத்திற்கோ ஏற்புடையதல்லாத வகையில் கலகக்காரர்களாகவும், ஆரோக்கியமற்ற மனப்பான்மை கொண்டவர்களாகவும் மாறிவிட்டனர். பெண் விடுதலை இயக்கம் எதற்காக தொடங்கப்பட் டது என்பதை புரிந்து கொள்ள இயலும். பெண்கள் ஒடுக்கப்பட்டதால் மிகவும் சோர்ந்து போயிருந்ததால் அடிமைத்தனத்திலிருந்து வெளியேற முடிவு செய்தனர். ஆயினும், இந்த செயல் முறையினால் பல பெண்கள் இப்போது தேவனின் சித்தத்துடன் உடன்படாத அளவுக்கு மனப்பான்மையைக் கொண்டுள்ளனர்.

தேவன் ஆதாமுக்கு (ஆண்களுக்கு) ஏவாள் (பெண்கள்) மீது அதிகாரம் கொடுத்தார், ஆனால் அவளை ஆண்டு கொள்ள அல்ல. அது அவளுடைய பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்டது. தாங்கள் கவனித்துக் கொள்ளப்பட வேண்டும், பொக்கிஷமாக கருதப்பட வேண்டும், பாதுகாப்பாக உணர வேண்டும் என்ற உள்ளார்ந்த ஆசை பெண்களுக்கு உண்டு, ஆண்கள் அதை வழங்க வேண்டும்.

அது நிகழாததால், பல சந்தர்ப்பங்களில், ஆண்கள் செய்ய வேண்டிய காரியங்களை குறைந்த பட்சம் பெண்களே செய்யத் தொடங்கினர். ஆரம்பத்திலிருந்தே காரியங்கள் சரியாக நடைபெற்றிருந்தால், இந்த ஏற்றத்தாழ்வு ஏற்பட்டிருக்காது, ஆனால் அவை சரியாக நடைபெறாததால், துரதிர்ஷ்டவசமாக, ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே இருக்கவேண்டுமென்று தேவன் எதிர்பார்த்த அழகான உறவின் நோக்கம் நிறைவேறாமல் போய்விட்டது. இந்தப் பகுதிகளில், நாம் கற்றுக் கொள்ள உலகத்தைப் பார்க்கத் துணியக் கூடாது, ஆனால் நாம் தேவனுடைய வார்த்தையைப் பார்க்கலாம்; வேதத்தில் உள்ள தெய்வீகக் கொள்கைகளுக்குக் கீழ்ப்படிவதின் மூலம், அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருக்கும் ஆரோக்கியமான சமநிலையை நாம் அனுபவிக்க முடியும்.

நான் ஊழியத்திலுள்ள ஒரு பெண், ஒரு சர்வதேச ஊழியத்தின்

தலைவர், ஆனாலும் கணவனின் அதிகாரத்தை மதிக்கும் ஒரு பெண். டேவும் நானும் ஒருவரையொருவர் நேசித்து, மதித்து, தேவனுக்கு சமர்ப்பணம் செய்வது போல ஒருவருக்கொருவர் எங்களை சமர்பிக்கிறோம். நூற்றுக்கணக்கான சந்தர்ப்பங்களில் பலவிதமான ஆண் அதிகார நபர்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதால், எனக்கு அது சுலபமானதாக இருக்கவில்லை, நிறைய கற்றுக்கொள்ள் வேண்டியிருந்தது. ஆனால் ஆண்களும், பெண்களும் மரியாதையுடன், அமைதியாக வாழ தேவன் கொண்டிருந்த அவரது அசல் திட்டத்தைக் காண தேவன் எனக்கு உதவினார். நான் கற்பிக்கும் பாக்கியம் பெற்ற பெண்களுக்கு எப்போதும் நான் ஒரு மாதிரியாக இருக்க வேண்டும் என்று பிராத்திக்கிறேன்.

> எனக்கு வாழ்க்கையில் நல்ல தொடக்கம் இருக்கவில்லை, ஆனால் நான் ஒரு நல்ல முடிவைக் கொண்டிருக்க முடிவு செய்திருக்கிறேன்!

அதிர்ஷ்டவசமாக, நமது வரலாறு நமது விதியாக இருக்க வேண்டியதில்லை. “எனக்கு வாழ்க்கையில் ஒரு நல்ல தொடக்கம் இருக்கவில்லை, ஆனால் ஒரு நல்ல முடிவைக் கொண்டிருக்க முடிவு செய்திருக்கிறேன்! என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு. உங்களுக்கு குணமடைய வேண்டிய காயம்பட்ட ஆத்துமா இருக்குமேயென்றால், அத்தகைய தீர்மானத்தையும், பிரகடனத்தையும் நீங்கள் செய்ய வேண்டுகிறேன்.”

## மனோபாவம்

ஒருவரின் கெட்ட மனப்பான்மையின் ஆபத்தை பற்றியும் நல்ல மனப்பான்மையின் சக்தியைப் பற்றியும் பல புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன.

இந்த விஷயத்தைப் பற்றிய ஆழமான மற்றும் முழுமையான ஆய்வாக இந்த பகுதி இருக்காது, ஆனாலும் நான் அதைப் பற்றி எழுத விரும்புகிறேன். காயப்பட்ட ஆத்துமாக்களைக் கொண்டிருக்கும் பெரும்பாலான மக்களைப் போல நானும் மிகவும் மோசமான அணுகுமுறையைக் கொண்டிருந்தேன். என் தலையில் இது போன்ற ஒன்று ஒலித்துக் கொண்டிருந்தது: இனி

எவரும் என்மேல் அதிகாரம் செலுத்தப்போவதில்லை! இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்று யாரும் சொல்லப்போவதில்லை. நான் என்னை கவனித்துக்கொள்வேன், அதனால் நான் யாரிடமும் எதையும் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் ஆண்களை நம்ப முடியாது, ஏனென்றால் அவர்கள் அவர்களின் சுயநலன்களுக்காக உங்களைப் பயன்படுத்துவதில் மட்டுமே ஆர்வமாக உள்ளனர். யாரும் என்னை புண்படுத்தும் நிலைக்கு இனி ஒருபோதும் நான் தள்ளப்பட மாட்டேன்.

இந்த எண்ணங்களும் அவைகளைப் போன்ற பலவும் பல வருடங்களாக என் மனதில் மீண்டும் மீண்டும் ஓடிக்கொண்டிருந்தன. என் அணுகுமுறை கடினமாக இருந்தது, என் மனம் உறுதியாக இருந்தது. இது உங்களை எந்த விதத்திலாகிலும் விவரிக்கிறது என்றால், நீங்கள் இயேசுவை உங்கள் இருதயத்திற்குள் அழைத்தவுடன் அவரை உங்கள் மனப்பான்மைக்குள்ளும் அழைக்குமாறு பரிந்துரைக்கிறேன். நீங்கள் உங்கள் இருதயத்தை திறந்து மக்களை உங்கள் வாழ்வுக்குள் மீண்டும் அனுமதித்தால் நீங்கள் ஒருபோதும் காயமடைய மாட்டீர்கள் என்று நான் சொல்ல மாட்டேன் ஆனால் நீங்கள் காயப்பட்டால், உங்களை குணப்படுத்தும் இயேசு மீண்டும் ஒருமுறை உங்களுக்கு உதவ உங்களுடன் இருப்பார் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். எப்பொழுதும் காயமடைந்து விடக்கூடாதென்று நம்மைப் பாதுகாத்துக் கொள்ள நம் வாழ்க்கையைச் செலவழித்தால், நம் வாழ்க்கையை தனிமையில் கழிப்போம்.

அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியர்களுக்கு எழுதும் போது, கிறிஸ்து இயேசுவில் இருந்த அதே தாழ்மையான மனப்பான்மையை அவர்களும் பெற்று இருக்குமாறு அறிவுறுத்தினார். (பிலிப்பியர் 2:5-8). பிறரிடம் நம்மைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே நமக்கு பயத்தை ஏற்படுத்துகின்றது. ஏனென்றால் நாம் அதை பலவீனமாகப் பார்க்கிறோம், மேலும் ஏதேனும் பலவீனத்தைக் வெளிக்காட்டினால்,அதை பிறர் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வார்களென்று கருதுகிறோம். ஆனால் உண்மையிலே, சாந்தமும் மனத்தாழ்மையும் கட்டுப்பாட்டில் உள்ள பலம், பலவீனம் அல்ல. ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டிய சூழ்நிலையிலே, டேவுக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு

ஏற்படும்போது, நான் விரும்புவதை நான் பெறவில்லை என்றால் எனக்கு மிகவும் சங்கடமாக இருக்கும். நல்ல மனப்பான்மையுடன் விட்டுக்கொடுக்க தேவனின் உதவி எனக்கு இன்னும் நிறைய தேவை என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

> தேவன் உங்கள் பக்கம் போராடும் போது நீங்கள் எப்போதும் வெற்றி பெறுவீர்கள்.

ஆனால் தேவன் கேட்பதை அது சரியானதாக இருப்பதால் நான் செய்தால் அவர் எப்போதும் என்னை கவனித்துக்கொள்வார் என்பதை அறிந்திருக்கிறேன், அவர் உங்களுக்கும் அப்படியே செய்வார்.

தேவன் நமக்கு வழங்கும் மறுசீரமைப்பின் ஒரு பகுதி ஆரோக்கியமான மனப்பான்மையைக் கொண்டிருப்பதாகும். அது தவறான விஷயங்களுக்கு எதிராக எப்போது ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதையும், எப்போது விட்டுக் கொடுக்க வேண்டும் மேலும் பிறர் நாம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறார்களோ அதை எப்போது செய்ய வேண்டும் என்பதை அறிந்திருப்பதாகும். எனக்குரியதை நான் பெற்றுக்கொள்ள முயன்று இந்த உலகத்துடன் போராடிக்கொண்டிருப்பதாக நான் இனியும் உணர வேண்டியதில்லை என்பதற்காக தேவனுக்கு நன்றியுள்ளவளாக இருக்கிறேன். நீங்களும் அப்படி வாழ வேண்டியதில்லை என்பதை உங்களுக்குக் கற்பிக்க இந்த வாய்ப்பைப் பெற்றதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தேவன் உங்கள் யுத்தங்களை செய்ய விரும்புகிறார். மேலும் தேவன் உங்கள் பட்சமாக யுத்தம் செய்யும் போது, நீங்கள் எப்போதுமே வெற்றி பெறுவீர்கள் என்று நான் கூறும்போது என்னை நம்புங்கள்!

## அத்தியாயம் 2

# கிடைக்கக்கூடிய சிறந்த வாழ்க்கையை வாழ்வது

*அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.*

*- யோவான் 1:4*

*"ஆஹா, நல்ல வாழ்க்கை!" அந்த சொற்றொடரைக் கேட்கும்போது, நாம் தினம் தினம் ஒரு கடற்கரையில் உல்லாசமாக படுத்துக் கொள்வது அல்லது நாம் வாங்க வேண்டுமென்று நினைக்கும் ஒரு புதிய வாகனத்தை வாங்குவது அல்லது ஒரு படகை சொந்தமாக வாங்கி மீன்பிடிப்பது என்று நினைக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட வாழ்க்கை சிறந்ததல்ல என்பது நிரூபனமாகியுள்ளது, ஏனென்றால் அந்த வகையான வாழ்க்கையைக் கொண்ட பலர் தாங்கள் மகிழ்ச்சியற்ற, தனிமையான மற்றும் துன்பகரமான வாழ்க்கை தான் வாழ்ந்துக் கொண்டிருப்பதாக ஒப்புக்கொள்வார்கள். ஜே கோல்ட் என்ற அமெரிக்க கோடீஸ்வரரிடம் நிறைய பணம் இருப்பதாக கேள்விப்பட்டேன், ஆனால் அவர் இறந்து கொண்டிருந்தபோதோ, "நான் பூமியில் மிகவும் பரிதாபகரமான மனிதன் என்று நினைக்கிறேன்." என்று அவர் கூறினார்.*

*அந்த காரியங்களைக் கொண்டிருப்பதில் தவறில்லை, ஆனால் அவை வாழ்க்கை அல்ல; அவை பொருட்கள் தான். தேவன் நமக்கு உண்மையான வாழ்க்கையை இயேசு கிறிஸ்து மூலமாக வழங்குகிறார் - ஒரு உண்மையான வாழ்க்கை, வாழக்கூடிய சிறந்த வாழ்க்கை. அவர் நமக்கு தேவனுடனான நேர்த்தியான வாழ்க்கையை வழங்குகிறார். சமாதானமான, சந்தோஷமான வாழ்க்கை. (ரோமர் 14:17). நாம் நிரம்பி வழியும் பரிபூரணமான*

வாழ்வை பெற்றுக் கொள்வதற்காகவே அவர் வந்ததாக இயேசு கூறினார் "நிறைவான, நிரம்பி வழியக்கூடிய வாழ்க்கை." (யோவான் 10:10).

சிறந்த வகையான வாழ்க்கை தேவனிடம் மட்டுமே காணப்படுகிறது, ஏனென்றால் அவர் ஜீவனாக இருக்கிறார், மேலும் நாம் நம்முடையது என்று அழைக்கும் வாழ்க்கை அவரிடமிருந்து ஒரு பரிசு. அவரே ஜீவனைக் கொடுக்கிறவர்!

## உங்களுக்கு மேம்படுத்தல் தேவையா?

பல்வேறு வகையான தொழில்நுட்பங்கள் இன்று நமக்குக் கிடைக்கின்றன, அவற்றில் இரண்டு கணினிகள் மற்றும் செல்போன்கள்.

இந்த சாதனங்களை விற்கும் நிறுவனங்கள் தொடர்ந்து மேம்படுத்தல்களை வழங்குகின்றன, மேலும் நம்மில் பெரும்பாலோர் அவற்றைப் பெற விரைந்து செல்கிறோம். நாம் நேரத்தை வீணடிப்பதில்லை, பணத்தை செலவழிக்கிறோம், வரிசையில் காத்திருக்கிறோம், புதிய மேம்படுத்தலைப் பெற்றுக் கொள்வதற்கு என்ன வேண்டுமோ அதையெல்லாம் செய்கிறோம். நாம் சிறந்ததொன்றை பெற்றிருக்க விரும்புகிறோம்.

தொழில்நுட்பத்தைப் பற்றி நாம் அவ்வளவு ஆக்ரோஷமாக இருந்தால், நமக்கு கிடைக்கக்கூடிய சிறந்த வாழ்க்கையை பெற்றுக்கொள்ளவும், அதை பெற்றுக் கொள்ள அவ்வளவு ஆக்ரோஷமாகவும் ஏன் இருக்க கூடாது? நீங்கள் பெறும் புதிய மேம்படுத்தல் எவ்வாறு வேலை செய்வது என்பதை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டியது போலவே, தேவனுடனும், நம் வாழ்க்கைகென்று அவர் கொண்டிருக்கும் திட்டத்துடனும் நாம் எவ்வாறு இணைந்து செயல்படுவதென்பதையும் கற்றுக் கொள்ளவேண்டும்.

எனக்கு ஒன்பது வயது இருக்கும் போதிருந்தே தேவனுடன் ஒருவிதமான ஐக்கியம் இருந்தது. அந்த நேரத்தில் நான் பல மேம்படுத்தலைப் பெற்றுக்கொண்டேன். அவருடனான எனது உறவின் மூலம் எனக்கு என்ன கிடைக்கிறது என்பதை நான்

புரிந்துக் கொள்ள தொடர்ந்து கற்றுக்கொண்டிருந்தேன். எனவே, உங்களுக்கு எதுவுமே தெரியாமலிருக்கலாம், அல்லது ஒருவேளை நீங்கள் வேதாகமத்தில் படித்தறிந்திருக்கலாம், ஆனால் நாம் அனைவரும் கிறிஸ்து மூலம் தேவன் நமக்கு கிடைக்கச் செய்திருக்கும் வாழ்க்கையை முழுமையாக வாழ்வதில் குறைவு படுகின்றோம், என்று நான் நினைக்கிறேன்.அதில் நானும் அடங்குகிறேன். அதனால்தான் நாம் தொடர்ந்து வளர வேண்டும், கற்றுக் கொள்ள வேண்டும்.

இது நம் வாழ்நாள் முழுவதும் தொடரும் ஒரு செயல்முறை, இது மிகவும் உற்சாகமானதொன்று என்று நான் நம்புகிறேன் என்பதையும் சேர்க்கலாம் என்று நான் நினைக்கிறேன். இயேசு கிறிஸ்து மூலம் தேவன் உங்களுக்கு வைத்திருக்கும் சிறந்த வாழ்க்கையை எப்படி அனுபவிக்க வேண்டுமென்பதைக் கற்றுக் கொள்ள இப்போதே ஏன் அர்ப்பணம் செய்யக் கூடாது:

> ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். என்று எபேசியர் 2:10 அந்த ஜீவனைப் பற்றி பேசுகிறது.

சில சமயங்களில் ஒரு புத்தகத்தைப் படிக்கும் போது அந்த ஆசிரியர் பயன்படுத்தும் வேதவசனங்களை மேலோட்டமாக வாசிக்கும் போக்கு நமக்கு இருக்கும், அதனால் நான் ஒரு கணம் படிப்பதை நிறுத்திவிட்டு, திரும்பிச் சென்று, நான் மேற்கோள் காட்டிய வேத வாக்கியத்தை மெதுவாகப் படிக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அது உங்களுக்கு என்ன சொல்கிறது என்று சிந்தியுங்கள்.

என்னுடைய விளக்க உரையை உங்களுக்குத் தருகிறேன்: தேவன் நம்மைப் படைத்தார்; நாம் அவருடைய கைவேலைப்பாடுகள். பாவத்தின் காரணமாக நாம் உடைந்து போன வாழ்க்கையை வாழ்ந்தோம். ஆனால் இயேசுவின் மூலம் வழங்கப்பட்ட இரட்சிப்பின் மூலம் நாம் மீண்டும் பிறந்தோம், அல்லது மீண்டும் ஒருமுறை புதிதாக உருவாக்கப்பட்டோம்.

மேலும் காரியங்களை சரியாகச் செய்வது எப்படி என்று கற்றுக்கொள்ள தொடங்க வேண்டும் தேவன் எப்போதும் தமது மக்களுக்காக ஒரு நல்ல திட்டத்தை வைத்திருக்கிறார், அவர் எப்போதும் அப்படியே செய்வார். அதைத் தேர்ந்தெடுத்து அதில் எப்படி நடக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்பவருக்கு இது கிடைக்கிறது.

நான் 1976 இல் ஒரு பெரிய மேம்படுத்தலைப் பெற்றேன். இது ஒரு முழுமையான மறுசீரமைப்பு என்று கூட நீங்கள் கூறலாம். நான் நிர்பந்தமாக இருந்து சலித்துப் போனதால் ஒரு மாற்றத்திற்காக தேவனிடம் அழுததன் விளைவு தான் அது. அவருடைய வார்த்தையைப் படிக்கவும், எனக்காக என்னவெல்லாம் இருக்கிறது என்பதை கற்றுக்கொள்ளவும் எனக்கு உண்மையான விருப்பத்தை அளித்ததன் மூலம் என் அழுகைக்கு அவர் பதிலளித்தார். இதற்கு முன் பல ஆண்டுகளாக நான் ஒரு கிறிஸ்தவளாக தான் இருந்தேன், தேவாலயத்திற்கு சென்று, கலந்துகொண்டு நல்லவளாக இருக்க முயற்சித்தேன். பலரைப் போலவே எனக்கும் ஒரு கிறிஸ்தவர் என்றால் என்ன என்பது பற்றிய ஒரு தவறான எண்ணம் இருந்தது. அநேகந்தரம் நாம் அதை, தேவாலயத்திற்கு செல்வதையும், காணிக்கை கூடையிலே கொஞ்சம் பணம் போடுவதையும், நாம் அவநம்பிக்கையில் இருக்கும் போது ஒரு ஜெபத்தை கூறுவதும், எப்போதாவது ஒரு சிறிய வேதப் பகுதியை வாசிப்பதையும், மற்றும் நல்லவராக இருக்க முயற்சி செய்வதுமே என்று அதை குறுக்கிவிடுகிறோம். ஆனால் அந்த வகையான வாழ்க்கை ஒருபோதும் நிறைவாய் இராது. அது செய்யக்கூடியதெல்லாம் நம்மை விரக்தியடையச் செய்வது தான். நாம் செய்ய வேண்டியதைச் செய்கிறோம் என்று நினைத்துக் குழப்பம் அடைகிறோம், ஆனால் நம் வாழ்க்கை இன்னும் மிகவும் பரிதாபமாக இருக்கிறது.

ஆனால் நான் தேவனுடைய வார்த்தையைப் படித்து, நான் கற்றுக்கொண்டதைக் கடைப்பிடித்தபோது, என்னில் அற்புதமான மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன -என் ஆத்துமாவிலே. அது விரைவானதென்றோ அல்லது எளிதானது என்றோ நான் ஒப்புக்கொள்ள மாட்டேன், அது பெரும்பாலும் வலிமிகுந்ததாக இருந்தது, குறிப்பாக உணர்வுபூர்வமாக அப்படி இருந்தது. உதாரணமாக, நான் எனது தவறுகளை ஒப்புக்கொள்ள

வேண்டியிருந்தது மற்றும் எனது எல்லா பிரச்சனைகளையும் எனது கடந்த காலத்தின் மீதும் மற்றவர்களின் மீதும் குற்றம் சாட்டுவதை நிறுத்த வேண்டியிருந்தது. அது கடினமானதாக இருந்தது, ஏனென்றால், ஒரு நபர் நீண்ட காலமாக மறுத்துக் கொண்டே வாழ்ந்தால், உண்மையை எதிர்கொள்வது ஒருபோதும் எளிதானதாக இராது. உங்கள் மொபைலில் புதிய மேம்படுத்தல் பெறுவதைப் போன்றது. நீங்கள் அதை பெற்றுக் கொள்ள விரும்பினீர்கள், ஆனால் நீங்கள் அதைப் பெற்றவுடன், எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி கவலைப்படாமல் இருக்கலாம், ஏனெனில் பழையதே மிகவும் எளிதானதாக இருக்கிறது. குறைந்தபட்சம் நான் அதைத்தான் செய்கிறேன்.

நான் எல்லாவற்றையும் கற்றுக்கொண்டு அதை சிறப்பாக பயன்படுத்த கற்றுக் கொள்வதற்கு என் நேரத்தை எடுத்துக் கொண்டால், எனது கணினி மற்றும் தொலைபேசி மூலம் என்னால் என்ன செய்ய முடியும் என்பதை என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. எப்போதாவது, என் கணினியில் ஏதோ குழப்பம் ஏற்பட்டால், என் மகன் எனக்கு உதவ வேண்டியிருக்கும். அப்போது, என்னிடம் புதிய உபகரணங்கள் இருந்தும், நான் பழமையான சில முறைகளைப் பயன்படுத்துவதை அவன் பார்க்கும்போது, "நீங்கள் புதிய வழியைக் கற்றுக்கொண்டால் இது எவ்வளவு எளிதாக இருக்கும் என்று உங்களுக்குத் தெரியாது"என்று சொல்வான்.

## ஒரு புதிய வாழ்க்கை முறை

இயேசு, "நானே வழி" என்றார் (யோவான் 14:6). கிறிஸ்தவத்தின் ஆரம்ப நாட்களில், கிறிஸ்தவம் பெரும்பாலும் "வழி" என்று அழைக்கப்பட்டது. தேவனுடைய திட்டம், தேவன் அளிக்கும் எல்லா நன்மைகளுக்கும் நம்மை வழிநடத்தும் ஒரு வழியை உள்ளடக்கி உள்ளது. இந்தத் திட்டம் இயேசுவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வதிலிருந்து தொடங்குகிறது. ஒருவர் விசுவாசத்துடன் தேவாலயத்திற்குச் செல்லலாம், ஆனாலும் கிறிஸ்தவராக இல்லாமல் இருக்கலாம். கிறித்துவம் என்பது வெறுமனே ஒரு சபையிலே அங்கத்தினராக இருப்பதோ அல்லது

கிறிஸ்தவம் என்பது வெறுமனே ஒரு சபை உறுப்பினராகி ஒரு நல்ல நபராக இருக்க முயற்சி செய்வது அல்ல.

ஒரு நல்ல நபராக இருக்க முயற்சிக்கிறதோ இல்லை, ஆனால் அது இயேசுவைப் பற்றியதும், அவர் நமக்காக என்ன செய்தார் என்பதை பற்றியதுமாகும். நம்முடைய பாவங்கள் மற்றும் குற்றங்களுக்காக அவர் தம்மையே தியாகமாக வழங்கி கிரயம் செலுத்தினார். நாம் அவரைப் பெற்றுக்கொள்ளும் போது, அவர் உண்மையில் தம்முடைய ஆவியாக வந்து நமக்குள் வாழ்ந்து, வாசம் செய்து, நம்மை தம்முடைய வீடாக மாற்றிக் கொள்வார். நீங்கள் மறுபடியும் பிறந்தவுடன் (பாவத்திலிருந்து மனந்திரும்பி இயேசுவை இரட்சகராகப் பெறுவது), தேவனி டமிருந்து சில வெகுமதிகளைப் பெற்றுக் கொள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளால் வழிநடத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் பரிசுத்த ஆவியானவரால் நீங்கள் தூண்டப்பட்டு, வழி நடத்தப்படலாம். அவர் உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய முழு திட்டத்திற்குள் உங்களை வழிநடத்துவார். அது உண்மையிலேயே ஒரு புதிய வாழ்க்கை முறை.

புதிய ஏற்பாட்டிலுள்ள எபிரேயரின் புத்தகம் இயேசு, தம் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் திறந்து வைத்த புதிய மற்றும் வாழும் வழியைப் பற்றி பேசுகிறது (எபிரெயர் 10:20). அதில் சங்கடமானதாகவோ அல்லது சற்று அசாதாரணமாகவோ தோன்றும் புதிய வாழ்க்கை முறையைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் உள்ளன, ஏனெனில் அவை நீங்கள் முன்பு கற்றுக்கொண்டவற்றிலிருந்து வேறுபட்டவை. அந்த விஷயங்களில் ஒன்று, நம் எதிரிகளையும், நம்மை துஷ்பிரயோகம் செய்பவர்களையும், தவறாகப் பயன்படுத்துபவர்களையும் மன்னித்து, உண்மையில் அவர்களை நேசிக்கவும் ஆசீர்வதிக்கவும் வேண்டும் என்ற தேவனின் அறிவுறுத்தலாகும்.

ஆஹா! அது எனக்கு கடினமான ஒன்றாக இருந்தது. என்னை தனது சொந்த இச்சையை வெளிப்படுத்துவதற்கான வழிமுறையாக பயன்படுத்தி, என் குழந்தைப் பருவத்தை திருடிய என் தந்தையை

மன்னிக்க வேண்டுமா? என் தந்தை எனக்கு செய்ததை அறிந்திருந்தும், என்னை மீட்பதற்குப் பதிலாக, ஒன்றுமே தெரியாதவள் போல் பாசாங்கு செய்து, நான் ஏதோ தவறு செய்வது போல் என்னை நடத்திய என் அம்மாவை மன்னிக்க வேண்டுமா? அவர்களை மன்னிப்பது எனக்கு முற்றிலும் நியாயமற்றதாகத் தோன்றியது, அப்படி செய்ய நீண்ட காலம் எடுத்தது, அதைச் செய்யத் தயாரான போது அது வேதனையாக இருந்தது.

இந்த புதிய வாழ்க்கை முறையைப் பற்றி தேவன் எனக்குக் காட்டிய பல விஷயங்களில் இதுவும் ஒன்று, அதனால்தான் நான் சொல்கிறேன் அது ஒரு வாழ்நாள் பயணம். நான் இன்னும் கற்றுக் கொண்டிருக்கிறேன். ஆனால் பரிசுத்த ஆவியானவர் என்னை வழிநடத்திய ஒவ்வொரு பாதையும் நான் முன்பு இருந்த இடத்தைதை விட ஒரு சிறந்த இடத்திற்கு என்னை கொண்டு வந்தது என்று தெளிவாக சொல்ல விரும்புகிறேன். ஒரு நல்ல வாழ்க்கைக்கு நம்மை அழைத்துச் செல்லும் காரியத்தை தவிர வேறு எந்த கடினமான காரியத்தையும் செய்ய தேவன் சொல்ல மாட்டார். நீங்கள் இந்த நம்பிக்கையுடன் உங்கள் பயணத்தைத் தொடங்கினால், என்னுடைய பயணத்தை விட உங்கள் பயணம் குறுகியதாக இருக்கலாம்.

நம் கணினி செயல்பாடுகளைப் போலவே, புதிய வழியைக் கற்றுக்கொள்வது சவாலானதாக இருக்கலாம், அதனால் பழைய நிலைக்குத் திரும்பிவிடலாம் என்று நினைக்கத் தோன்றலாம், ஆனால் நாம் புதிய வழியிலே தொடர்ந்தால், அது நம்மை அதிக பலனுள்ளவர்களாக, சுலபமானவர்களாக மாற்றிவிடும். இந்த புத்தகம் முழுவதும் நான் தேவன் உங்களுக்கு அளிக்கும் பல புதிய வழிகளை உங்களிடம் பகிர்ந்து கொள்ளுகிறேன். மேலும் அவை ஒவ்வொன்றையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு நான் மனப்பூர்வமாக வேண்டிக்கொள்கிறேன்.

## தேவனுடைய வார்த்தையை நேசித்தல்

நான் என் வேதபுத்தகத்தை நேசிக்கிறேன். இது வெறும் புத்தகம் அல்ல அதை விட மிக அதிகம்; அது ஜீவனால் நிரம்பியுள்ளது.

புதிய வாழ்க்கை முறையை நமக்குக் கற்றுக்கொடுக்கிறது, அதன் செயல்பாட்டில் காயம்பட்ட ஆத்துமா குணமடைவதையும், எதிர்காலத்திற்கான நம்பிக்கையையும் அனுபவிக்கத் தொடங்குகிறோம். தேவனின் அறிவுரையை பின்பற்றுவதில் காணப்படும் குணப்படுதலைப் பற்றி சாலமோன் இவ்வாறாக கூறினார்:

> என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம் (நீதிமொழிகள் 4:20-22).

தேவனின் வார்த்தைகள் நமக்கு ஜீவனாக இருக்கிறது, மேலும் நமது உள்ளான ஜீவன் (ஆத்துமா) உட்பட நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதிக்கும் குணத்தை கொண்டுவருகிறது. ஜீவனளிக்கும் தேவனுடைய வார்த்தையின் வல்லமையால் நாம் முழுமையாக குணமடைகிறோம்.

நாம் அவருடைய வார்த்தையை நம்பினால் நம் வாழ்வில் அற்புதமான காரியங்களை அது செய்யும். தேவனுடைய வார்த்தை நம் மனதை புதுப்பித்து, தேவனைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும், நம்மைப் பற்றியும், பிறரைப் பற்றியும் முற்றிலும் புதிய வழியிலே சிந்திக்க செய்கிறது.

பலரைப் போலவே, எனக்கு நிறைய தெரியும் என்று ஒரு முறை நினைத்தேன், ஆனால் தேவனுடைய வார்த்தையைப் படிப்பதற்கு முன்பு நான் கற்றுக்கொண்டவற்றில் பெரும்பாலானவை தவறானதாக இருந்தது. உலகம் எனக்கு என்ன கற்றுக் கொடுத்தது என்பதை அறிந்திருந்தேன், நான் எப்படி உணர்கிறேன் என்பதை அறிந்திருந்தேன் எனக்குத் தெரியும், ஆனால் தேவன் எனக்கு கற்றுக் கொடுக்க விரும்பிய புதிய வழியைப் பற்றி நான் அறியாமலிருந்தேன். தேவனுடைய வசனம் நம் பாதைக்கு வெளிச்சம் (சங்கீதம் 119:105). அதை படித்து, என்ன செய்ய

வேண்டும் என்று அது கூறுகிறதோ, அதை செய்யுங்கள் நீங்கள் குணமடைந்து, முழுமையாவீர்கள்.

காயப்பட்ட நம் ஆத்துமாக்களுக்கு தேவனுடைய வார்த்தை மருந்தாக இருக்கிறது. “என் கடந்தகால உணர்ச்சி காயங்களுக்கு புத்தகத்தைப் படிப்பது எப்படி மருந்தாக இருக்க முடியும்?” என்று நீங்கள் கேட்கலாம். ஒரு உதாரணத்தைப் பயன்படுத்தி அதை விளக்குகிறேன். நீங்கள் ஒரு மருந்தகத்திற்குச் சென்று, மருந்துச் சீட்டிலுள்ள மாத்திரைகளை வாங்கி வீட்டிற்குச் சென்று அவற்றை உட்கொள்ளத் தொடங்கும் போது, உங்கள் நோய்த்தொற்றைக் குணப்படுத்தவும், உங்கள் வலியை போக்கவும், அல்லது உங்களை துன்புறுத்தும் அனைத்தையும் குணப்படுத்த அந்த மாத்திரைகளுக்குள் மருந்து இருக்கிறது. நீங்கள் கவனமாக மருந்து எடுத்துக் கொண்ட போதும் உங்களுக்கு இன்னும் சிக்கல்கள் இருந்தால், அதை மீண்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் தேவனுடைய வார்த்தை முழுவதுமாக ஜீவன் அளிக்ககூடியதாகவும், குணப்படுத்தக்கூடியதாகவும் இருக்கிறது. இது எழுத்துக்களாலான பக்கங்களைக் கொண்ட புத்தகமாக காணப்படலாம், ஆனால் ஜாக்கிரதையாக அதை உங்கள் இருதயத்தில் எடுத்துக்கொண்டு, விசுவாசிப்பீர்களேயென்றால் அதற்கு ஆச்சரியமான குணப்படுத்தும் வல்லமை இருக்கிறது.

> உங்கள் காயப்பட்ட ஆத்துமாவிற்கு தேவனுடைய வார்த்தை மருந்து.

தேவனுடைய வார்த்தை, அவர் என்ன செய்யச் சொல்கிறாரோ அதைச் செய்பவர்களுக்கான வாக்குத்தத்தங்களால் நிறைந்துள்ளது. மேலும் இந்த வாக்குத்தத்தங்களை விசுவாசித்து அவர் மீது நம்பிக்கை வைக்கும் ஒவ்வொருவருக்கும் அது உரியதாகிறது.

வேதத்தை படிப்பது உங்களுக்கு அச்சுறுத்தலாகத் தோன்றினால் அல்லது ஒருவேளை உங்களால் பைபிளைப் புரிந்துகொள்ளவே முடியாது என்று நினைத்தால் உங்களைப் போலவே வேதத்தை கற்றுக் கொள்ள வாஞ்சையாய் இருக்கும் மக்கள் குழுவில் சேர்ந்து ஒன்றாகப் படிக்குமாறு நான் பரிந்துரைக்கிறேன். உங்களுக்கு

உதவி தேவைப்படும் பகுதிகளில் அனுபவம் வாய்ந்த, நற்பெயர் பெற்ற ஒரு தலைவர் கொண்ட ஒரு குழுவைக் கண்டுபிடியுங்கள்.

நீங்கள் உதவியைப் பெறுவதற்கான மற்றொரு வழி, குழு சிகிச்சை முறை, இது பலருக்கு உதவியிருக்கிறது, நீங்கள் கடந்து வந்த பாதையைப்பற்றி உண்மையிலேயே பச்சாதாபம் கொள்ளக்கூடியவர்களுடன் இருப்பதற்கான ஒரு வாய்ப்பு இது. அத்தகைய குழுவைக் உங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், பரிசுத்த ஆவியானவர் தாமே, எனக்கு செய்ததைப் போன்று, உங்களையும் ஒரு தனி நபராக வழிநடத்துவார் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். எனக்கு உதவி தேவைப்படும் பகுதிகளைப் பற்றிய பல்வேறு வேத அடிப்படையிலான புத்தகங்களைப் படிப்பதன் மூலமும், வேத பாடங்கள் மூலமாகவும், தேவாலயத்தில் நல்ல வேத போதனையின் கீழ் உட்கார்ந்து கேட்டதின் மூலமாகவும், பிரார்த்தனை மற்றும் தேவனுடனான ஐக்கியத்தின் மூலமாகவும் நான் முழுமையடைந்தேன்.

உங்கள் ஆத்துமாவுக்கு சிகிச்சை தேவைப்படுமேயென்றால், உதவி பெற எங்கு செல்ல வேண்டும் என்று உங்களுக்குத் தெரியாதிருக்குமேயென்றால், அவர் உங்களுக்காகத் திட்டமிட்டுள்ள குணப்படுத்தும் பாதையில் உங்களை வழிநடத்தும்படி தேவனிடம் கேட்குமாறு நான் பரிந்துரைக்கிறேன். அவர் என்னை வழிநடத்தியது போலவும், இன்னும் ஆயிரக்கணக்கான மக்களை வழிநடத்தியதை போலவும் அவர் உங்களையும் வழி நடத்துவார். நீங்கள் அவருடைய வழிகாட்டுதலைப் பின்பற்றும்போது, நாங்கள் அனுபவித்த அதே குணப்படுத்துதலையும் முழுமையையும் நீங்களும் அனுபவிப்பீர்கள்.

காயப்படும் ஒவ்வொரு நபரின் குறிக்கோளும் குணமடைய வேண்டும் என்பதே, அதற்காக பல்வேறு பாதைகளை எடுக்க முடியும். தேவனுடைய வார்த்தை மற்றும் அவருடைய வாக்குத்தத்தங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு பாதையை நீங்கள் தேர்வு செய்வது மிகவும் முக்கியமானது. இல்லையெனில், உங்கள் நேரத்தையும், முயற்சியையும், மற்றும் அதிகப் பணத்தையும் எந்த பலனையும் கொடுக்காத ஒன்றைச் செய்வதற்கு நீங்கள் அதிகமாக செலவழிப்பதால் அதிக விரக்தி அடைவீர்கள்.

குணமாகுதல், மற்றும் விடுதலையை வாக்குப் பண்ணும் பல சிகிச்சை திட்டங்களில் நூறாயிரக்கணக்கான டாலர்களை செலுத்தியவர்களை நான் அறிவேன் ஆனாலும் அவர்கள் இயேசுவை தங்கள் வாழ்க்கையில் அனுமதித்து, அவரை சார்ந்து அவர் வழிகளை பின்பற்றும் வரை எந்தவொரு முன்னேற்றத்தையும் அடையவில்லை.

கடந்த கால அல்லது தற்போதைய சூழ்நிலைகளால் உங்கள் ஆத்துமாவிலுள்ள காயங்கள் குணமடைய வேண்டிய நிலையிலே நீங்கள் வாழ்ந்துக் கொண்டிருப்பீர்களேயென்றால், நீங்கள் செய்யவேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால் உங்களுக்குத் தேவையான உதவியைப் பெறுவதற்கு நீங்கள் ஒரு முடிவை எடுக்க வேண்டும். அமைதி, மகிழ்ச்சி, நம்பிக்கை மற்றும் உற்சாகம் நிறைந்த ஒரு அற்புதமான வாழ்க்கை உங்களு க்காக காத்திருக்கிறது. நீங்கள் இழக்க விரும்பாத வாழ்க்கை இது!

## அத்தியாயம் 3

# தேவன் காயம்பட்டவர்களை விரும்புகிறார்

*காயமடையாத வாழ்க்கை ரபியுடன் எந்த ஒற்றுமையையும் கொண்டிருக்கவில்லை.*

*- பிரென்னன் மானிங்*

நமது உண்மையான பிரச்சனை காயப்படுவதில் இல்லை, ஆனால் நாம் குணமடைய விரும்புகிறோமா இல்லையா என்பதில் உள்ளது. தேவன் உண்மையிலே, நம் காயங்களை, நமக்கு ஞானத்தை வழங்குவதற்கு பயன்படுத்துகிறார், இருளில் இருக்கும் மற்ற காயப்பட்ட ஆத்துமாக்களுக்கு ஒளியைக் கொண்டுவருவதற்கு நம்மைச் சித்தப்படுத்தி உபயோகிக்கின்றார்.

"நம் கடந்த காலத்தை அழிக்க வேண்டுமென்ற ஒரு பயனற்ற முயற்சியில், நம் குணப்படுத்தும் பரிசை சமூகத்திற்கு கொடுக்காமலிருக்கின்றோம். நாம் பயத்தினிமித்தமாகவோ, அவமானத்தினிமித்தமாகவோ நம் காயங்களை மறைத்தால், நமது உள்ளான இருளை ஒளிரச் செய்யவோ அல்லது பிறருக்கு ஒளியாக மாற்றவோ முடியாது."[13] என்று பிரென்னன் மேனிங் கூறினார்.

> பிரச்சனை காயப்படுவதில் இல்லை, ஆனால் நாம் குணமடைய விரும்புகிறோமா இல்லையா என்பதில் உள்ளது.

காயம்பட்ட தங்கள் ஆத்துமாவைக் குணப்படுத்த அனுமதிக்கும் வீரர்கள் தம் சேனையிலே இருக்க வேண்டுமென்று தேவன்

விரும்புகிறார். கடந்த காலத்தில் உங்களை யார் நிராகரித்திருந்தாலும் பரவாயில்லை, இயேசு உங்களை நிராகரிக்க மாட்டார் என்று நான் உறுதியளிக்கிறேன். உங்கள் கடந்த காலத்தின் காரணமாக தேவனால் உங்களைப் பயன்படுத்த முடியாது என்று நீங்கள் எப்போதாவது உணர்ந்திருந்தால் கொரிந்துவில் உள்ள சபைக்கு பவுல் எழுதியதைக் கவனியுங்கள்:

> எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை (1 கொரிந்தியர் 1:26).

சில பதவிகளுக்கு உங்களைத் தகுதிப்படுத்தும் கல்வி உங்களுக்குக் குறைவாக இருக்கலாம், ஆனால் உங்கள் சாதாரண கல்வி தேவனுக்கு அவ்வளவு முக்கியமில்லை. அதை கொண்டோ அது இல்லாமலோ அவர் உங்களை பயன்படுத்தக்கூடும். ஒருவேளை உங்களுக்கு செல்வாக்கு நிறைந்தவர்களையோ சக்திவாய்ந்தவர்களையோ தெரியாமலிருக்கலாம், ஆனால் அது ஒரு பொருட்டல்ல, ஏனென்றால் தேவன் உங்களுக்கு தயவைத் தருவார். “மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்.” (1 சாமுவேல் 16:7). மற்றும் 1 கொரிந்தியர் 1:27-28 கூறுகிறதாவது:

> ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில்
> பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்;
> பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன்
> உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்.
>
> உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின்
> இழிவானவைகளையும், அற்பமாய்
> எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும்,
> தேவன் தெரிந்துகொண்டார்.

தேவன் வேண்டுமென்றே தம்முடைய ராஜ்ய சேனையில் வேலை செய்ய, காயமடைந்தவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்.

*அவர்களின் காயங்கள், பலவீனங்களின் மூலம், அவர் கிரியை செய்கிறார். மக்கள் அவரது வல்லமையைப் பார்க்கிறார்கள். உலகில் உள்ள மக்கள் தாங்கள் வலிமையானவர்கள், தேவையான அனைத்து தகுதிகளும் பெற்று உள்ளார்களென்று நினைக்கும் போது, அவர்கள் தேவனை சார்ந்து இருக்கிறதில்லை, அவர் அநேக சமயங்களில் அவர்களை கடந்து சென்று, உலகக் கண்ணோட்டத்தில் தகுதி குறைந்த ஆனால் தங்கள் வாழ்க்கையின் அனைத்து பகுதிகளிலும் முழுவதுமாக அவரை சார்ந்திருக்கும் ஒருவரை அவர்களுக்குப் பதிலாக தேர்ந்தெடுக்கிறார்.*

*நீங்கள் தேவன் மீது உங்கள் நம்பிக்கையை வைக்கும் போது, ஒரு நாள் வரும் அப்போது உங்களைத் துன்புறுத்துபவர்கள் கூட, தேவன் உங்கள் வாழ்க்கையிலும், அவருடைய கருவியாகிய உங்கள் மூலமாகவும் செய்த வலிமையான காரியங்களைப் பார்ப்பார்கள். அனுபவத்தை பெற்றுக்கொள்வது நல்லது தான், ஆனால் அந்த அனுபவத்தைப் பெறுவது வேதனையானது.*

*உங்கள் வாழ்க்கையிலே வேதனையான எவ்வளவு காரியங்களை கடந்துவிட்டீர்கள் என்று யோசிப்பதற்கு பதிலாக, இப்போது நீங்கள் பெற்றுக் கொண்ட அனுபவத்தைப் பற்றியும், தேவனின் மகளாக உங்களுக்கு முன்னால் இருக்கும் அனைத்து வாய்ப்புகளைப் பற்றியும் ஏன் சிந்திக்கக்கூடாது? தேவனிடம் நிராகரிப்பு இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதனால்தான் இயேசு சொன்னார்:*

> *அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனா-யிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று. (யோவான் 3:18).*

*நீங்கள் ஒரு வேலைக்கு விண்ணப்பிக்கும் போது, உங்கள் விண்ணப்ப படிவத்தில் உத்தரவாதமாக இருக்கும் ஒரு கேள்வி "உங்களுக்கு எவ்வளவு அனுபவம் இருக்கிறது?" முதலாளி, ஒரு வேளை உங்கள் கல்வித் தரத்தில் ஆர்வமாக இருக்கலாம், ஆனால்*

சமமாகப் படித்த இரண்டு பேர் விண்ணப்பிக்கும் போது, வேலை செய்ய விண்ணப்பிக்கும் பகுதியில் அனுபவம் இல்லாதவரைவிட, அனுபவம் உள்ளவருக்கே அந்த வேலை நிச்சயமாக கிடைக்கும்.

வேறு எதுவும் கொடுக்க கூடாததை அனுபவம் நமக்கு கொடுக்கும். தேவனுடைய வார்த்தையினாலும் வாழ்க்கை அனுபவத்தினாலும் கற்றுக்கொள்கிறோம் (நீதிமொழிகள் 3:13).

> பேசுவது எளிது, ஆனால் அனுபவம் மட்டுமே நாம் சொல்வதைக் கேட்கத் தகுந்ததாக ஆக்குகிறது.

ஒரு விஷயத்தைப் பற்றி பேசுவது எளிது, ஆனால் அனுபவம் மட்டுமே நாம் சொல்வதைக் கேட்பதற்கான தகுதியை கொடுக்கின்றது. தங்களுக்கு எதுவுமே தெரியாததைத் தீர்மானிக்கும் மற்றும் அனுபவித்திராததைப் பற்றி மக்களுக்குக் கற்பிக்க முயற்சிக்கும் நபர்களால் இந்த உலகம் நிறைந்துள்ளது.

ஒரு உளவியலாளர் என்னிடம் இவ்வாறு கூறியது எனக்கு நினைவிருக்கிறது, அவள் நோயாளிகளுக்கு ஆலோசனை கொடுக்க முயற்சிக்கும் போது சில சமயங்களில் தான் என்ன பேசுகிறோம், என்ன ஆலோசனை கொடுக்கின்றோம், கொடுக்கும் ஆலோசனை அவர்களுக்கு உதவுகின்றதா என்பது புரியாமலே பேசிக்கொண்டிருப்பதாக கூறினாள். உள்ளான குணப்படுதலுக்கான என் முதல் புத்தகமான "சாம்பலுக்கு பதில் சிங்காரம்" மற்றும் மனதைப் பற்றிய என் முதல் புத்தகமாகிய "மனதின் போர்க்களம்"போன்ற புத்தகங்களைப் படித்த பிறகு, தன்னிடம் வருபவர்களை பேச அனுமதித்து, அவர்கள் தங்கள் வேதனையைப் பற்றி சொல்வதை கேட்ட பின் அலோசனை சொல்லவேண்டிய தருணம் வரும் போது அவர்களுக்கு அந்த இரண்டு புத்தகங்களை பரிந்துரை செய்வதாக அவள் கூறினாள். அவள் உளவியல் படித்தவள். ஆனால் எனக்கோ அனுபவம் இருந்தது; எனவே, அவளுடைய கல்வியும் எனது அனுபவமும் அவளுடைய நோயாளிகளுக்கு உதவ ஒன்றாகச் செயல்பட்டன.

ஒவ்வொரு உளவியளாளரும், மன நல நிபுணரும் தங்கள் நோயாளிகள் கடந்து வந்த அனைத்தையும் அனுபவித்திருக்க

வேண்டிய அவசியம் இல்லை, ஆனால் அவர்கள் கற்றுக் கொடுக்கும் கொள்கைகளை தங்கள் சொந்த வாழ்க்கையில் பயன்படுத்தும் போது அவர்களின் கல்வி பெரிதும் மேம்படும் என்று நான் நினைக்கிறேன்.

வாழ்க்கையில் நாம் அனுபவித்த வேதனையான விஷயங்களை நாம் வெறுக்கிறோம், ஆனால் நாம் அவரை அனுமதித்தால் தேவன் அவற்றைப் பயன்படுத்தி மற்றவர்களுக்கு உதவுவார். எனக்கு சில அனுபவம் கிடைக்க வேண்டுமென்பதற்காக தேவன் என் துஷ்பிரயோகத்திற்கு ஏற்பாடு செய்தார் என்று நான் ஒரு நொடி கூட நம்பவில்லை, ஆனால் அவர் என்னுடைய அனுபவத்தை மற்றவர்களுக்கு உதவ பயன்படுத்தியிருக்கிறார், உங்கள் வாழ்க்கையில் உங்கள் அனுபவத்தைக் கொண்டும் அப்படியே செய்வாரென்று நான் நம்புகிறேன்.

அவரால் பயன்படுத்தப்படுவதற்கு விருப்பத்துடன் இருக்கும் அனைவரையும் தேவன் பயன்படுத்துகிறார், ஆனால் அவருடைய இராஜ்ய வேலைகளில் அனுபவம் வாய்ந்தவர்கள் மட்டுமே நிரப்பக் கூடிய சில பதவிகள் உள்ளன. யாராவது புண்பட்டுக் கொண்டிருந்தால், அவர்கள் என்ன அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களென்ற நடைமுறை அனுபவம் இல்லாத ஒருவரிடம் பேசுவதால் பயன் ஏதும் ஏற்படுகிறதில்லை அதனால் விரக்தியே மிஞ்சுகிறது. நாம் கஷ்டப்படும் போது நமக்கு பச்சாதாபம் தேவை, நாம் இருக்கும் இடத்தில் இருந்த ஒருவர் தான் அதை நமக்கு கொடுக்க கூடிய சிறந்த நபர்.

## நமக்கு உதவ இயேசுவை தகுதியாக்குவது எது?

இந்தக் கேள்விக்கான உங்கள் ஆரம்ப பதில், "சரி, ஜாய்ஸ், அவர் தேவக் குமாரன். அதுவே அவரை தகுதியாக்குகிறது இல்லையா?" ஆனால் இயேசு நம்முடைய வேதனையை அவர் அனுபவிக்கத் தெரிந்துக்கொண்டார் என்று வேதம் சொல்கிறது.

*அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற*

*யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, (எபிரேயர் 5:8-9).*

இந்த இரண்டு வசனங்களும் இயேசுவைப் பற்றி மட்டுமல்ல, என் சொந்த வாழ்க்கையைப் பற்றியும் என்னிடம் பேசுகின்றன. அவர் நம் வலியை உண்மையாகப் புரிந்து கொண்டார் என்று சொல்ல, நம்முடைய பிரதான ஆசாரியராக இருப்பதற்கு இயேசுவுக்கு அனுபவம் தேவைப்பட்டது, இயேசுவின் குணப்படுத்தும் வல்லமையுடன் என்னுடைய அனுபவமும், இயேசு என்னுடைய காயப்பட்ட ஆத்துமாவை குணப்படுத்தியது போலவே மற்றவர்களையும் குணப்படுத்துவாரென்று என்று நான் தைரியமாக அவர்களிடம் சொல்ல என்னை தகுதியுடையவளாகியிருக்கிறது.

இயேசு துன்பப்பட்டார். அனுபவம் பெற்றார். மேலும் அது அவருடைய பிதா அவர் எதைச் செய்ய வேண்டுமென்று விரும்பினாரோ அதற்கேற்ப அவரை ஆயத்தப்படுத்தியது. "புரிந்துகொள்ளவும், அனுதாபப்படவும், நம் பலவீனங்களோடு பகிர்ந்துகொள்ளும் உணர்வைப் பெற்றிருக்கக் கூடிய ஒரு பிரதான ஆசாரியர் நம்முடன் இருக்கிறார்," ஏனென்றால் நாம் இப்போது கடந்து செல்லும் காரியங்களை அவர் கடந்து வந்திருக்கிறார் (எபிரெயர் 4:15) என்று பவுல் எழுதினார். ஒவ்வொரு முறையும் இந்த வேத வாக்கியங்களைப் படித்து, சிந்திக்கும் போது ஆச்சரியப்படுகிறேன். நான் அனுபவித்தவைகள் மற்றவர்களுக்கு உதவ பயன்படுத்தப்படும் என்ற நம்பிக்கையை அவை எனக்கு அளிக்கின்றன.

தேவன் நல்லவர், எனவே சாத்தான் தீங்கிழைக்கும் நோக்கத்தோடு செய்பவைகளை எடுத்து அதை நம் நன்மைக்காகவும், உதவி தேவைப்படும் மற்றவர்களின் நன்மைக்காகவும் மாற்றி அமைப்பார். நாம் தேவனுடைய வலிமை மிக்க சேனையின் வீரர்கள். ஆனால் காயமடைந்த அவருடைய வீரர்களை ஒரு மருத்துவமனையில் வைப்பதற்கு பதிலாக அவர் உண்மையில் அவர்களை அதிக வல்லமையான, செல்வாக்கு நிறைந்த பதவிகளுக்கு உயர்த்துகிறார்.

மோசே தனது வாழ்க்கையில் உதவி தேவைப்படும் ஒரு கட்டத்தை அடைந்த போது, ஞானத்தையும், புரிந்து கொள்ளுதலையும் கொண்ட, அனுபவம் வாய்ந்த மற்றும் மரியாதைக்குரிய மனிதர்களை கண்டுபிடித்து அவர்களை ஊக்குவிக்கும் படி தேவன் அவரிடம் கூறினார். (உபாகமம் **1:13**). நீங்கள் தேவனுடைய உபயோகத்திற்காக உங்கள் அனுபவத்தை அவரிடம் கொடுத்திருக்காவிடில் அதை அவரிடம் கொடுக்க வேண்டும் என்று இந்த தருணத்தில் உங்களை கேட்டுக்கொள்கிறேன். "நான் ஒரு உடைந்த பாத்திரம், ஆனால் நீர் என்னைப் பயன்படுத்தினால் நான் உம்முடையவள்," என்று நான் தேவனிடம் சொன்னது தெளிவாக நினைவுக்கு வருகிறது. அவர் அவ்வாறாகவே செய்தார். தேவனிடம் நாம் கொடுக்கும் எதுவும் வீணாகாது. நம் வாழ்வின் உடைந்த துண்டுகளை எடுத்து அதை அழகான காரியங்களாக உருவாக்குகிறார். சாம்பலுக்கு பதில் சிங்காரத்தை தருகிறார். "நான் உறுதியாக நம்பும் ஒரு விஷயம் எதுவென்றால் தேவனுடைய கதை ஒருபோதும் சாம்பலில் முடிவதில்லை" என்று எலிசபெத் எலியட் கூறினார்.[14]

> தேவனுடைய கதை ஒருபோதும் சாம்பலில் முடிவதில்லை

அந்தக் கூற்று என்னை ஆழமாகத் தொட்டு நம்பிக்கையைத் தருகிறது. நாம் சாம்பலில் ஆரம்பிக்கலாம், ஆனால் நாம் அவற்றை இயேசுவிடம் கொடுக்கும் போது, அவர் அழகான ஒன்றை உருவாக்குகிறார். உங்கள் வாழ்நாள் முழுவதும் கசப்புடனும் வெறுப்புடனும் இருந்து உங்கள் வலியை வீணடிக்க வேண்டாம். ஏனென்றால் நீங்கள் அநியாயமாக நடத்தப்பட்டதாக உணர்கிறீர்கள். அதற்கு பதிலாக, உங்கள் அனுபவங்களை மற்றவர்களுக்கு உதவும் மதிப்புமிக்க கருவியாக மாற்றுங்கள்.

வேதனையான காரியங்களை கடந்து சென்றுக் கொண்டிருந்ததால் பயத்தில் இருந்த மக்களுக்கு கொடுக்க தேவன் ஏசாயாவுக்கு இந்த வார்த்தையைக் கொடுத்தார்:

> இதோ, போரடிக்கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன்; நீ

*மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய். அவைகளைத் தூற்றுவாய், அப்பொழுது காற்று அவைகளைக் கொண்டுபோய், சுழல்காற்று அவைகளைப் பறக்கடிக்கும்; நீயோ கர்த்தருக்குள்ளே களிகூர்ந்து, இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள்ளே மேன்மைபாராட்டிக்கொண்டிருப்பாய். சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன் (ஏசாயா 41:15-17).*

*நீங்கள் இதை கவனமாகப் படித்தால், தேவன் உங்களை எடுத்து உதவி தேடுபவர்களுக்கு உதவ பயன்படும் வகையில், உங்களை ஒரு மதிப்புமிக்க கருவியாக மாற்றுவதாக வாக்குறுதி அளிப்பதை நீங்கள் காண்பீர்கள். நான் காற்று அடித்துச் செல்லக்கூடிய அளவுக்கு சிறிய துண்டுகளாக மலைகளை அடித்து, உடைக்க பயன்படும் ஒரு புதிய, கூர்மையான, போரடிக்கும் கருவியாக இருப்போம் என்ற எண்ணத்தை விரும்புகிறேன். அவர்களுக்கு முன்னால் இருக்கும் மலைகளை அவர்களால் ஒருபோதும் வெல்ல முடியாது என்று நினைக்கும் திரளான மக்கள் உள்ளனர், ஆனால் நீங்கள் உங்களது அனுபவத்தை அவர்களுக்கு உதவ உபயோகிக்கலாம்.*

## பரிசுத்தப்படுத்தப்பட்ட அனுபவங்கள்

*சங்கீதக்காரரான தாவீது தனக்கு ஏற்பட்ட பரிசுத்தமான அனுபவங்களைப் பற்றி பேசினார் (சங்கீதம் 119:7). பரிசுத்தப்படுத்தப்பட்டது என்ற சொல்லுக்கு தேவனுடைய பயன்பாட்டிற்காக பிரிக்கப்பட்டது அல்லது பரிசுத்தமாக அறிவிக்கப்பட்டது என்று பொருள். வாழ்க்கையில் நமக்கு நடக்கும் வேதனையான, அநியாயமான காரியங்கள் தேவனிடமிருந்து வந்தவை அல்ல, ஆனால் அவர் தமது சொந்த உபயோகத்திற்காக அவற்றைப் பரிசுத்தப்படுத்த முடியும். நான் இந்த எண்ணத்தை விரும்புகிறேன். சாத்தான் தான் நமது உண்மையான எதிரி, உண்மையிலே, நம் வலிகள் மற்றும்*

துன்பங்கள் அனைத்திற்கும் பின்னால் அவன் தான் இருக்கிறான், ஆனால் தேவன் அந்த வலிகளை பரிசுத்தப்படுத்தி, பிறருக்கு உபயோகிக்க அனுமதிப்பதன் மூலம் தீமையை நன்மையால் வெல்லும் இரகசியத்தைக் கண்டுபிடித்திருக்கிறோம் (ரோமர் 12:21).

உங்கள் வாழ்க்கையில் பிசாசு செய்ததையோ அல்லது அவன் ஏற்படுத்திய அழிவையோ நீங்கள் விரும்பவில்லை என்றால், வெறுப்புடனும், கோபத்துடனும், சுயபரிதாபத்துடனும் இருப்பதன் மூலம் அவன் உங்களை ஆட்டிப்படைக்க அனுமதிக்காதீர்கள். மாறாக, தேவன் உங்கள் வலியை பரிசுத்தப்படுத்தட்டும், ஒரு வழியில் எதிரி உங்களுக்கு எதிராக வரலாம், ஆனால் ஏழு வழியில் ஓடிவிடுவார்கள் என்ற வேதவாக்கியம் நிறைவேறுவதை நீங்கள் பார்ப்பீர்கள் (உபாகமம் 28:7). உங்கள் கடந்த காலத்தின் வலியிலிருந்து விலகி ஓடியே உங்கள் வாழ்க்கையை இனி நீங்கள் கழிக்க வேண்டியதில்லை; நீ பிசாசை (உங்கள் உண்மையான எதிரி) ஓட வைக்க முடியும்.

பெண்களுக்கு அவர்களின் ஆத்துமாவை காயப்படுத்தும் பல வகையான விஷயங்கள் நடக்கின்றன, ஆனால் அவை எதுவுமே வீணாக வேண்டியதில்லை. நம்மை காயப்படுத்தும் சில விஷயங்களின் குறுகிய பட்டியல் இதோ:

- எல்லாவிதமான துஷ்பிரயோகம்
- பயமுறுத்தப்படுதல்
- வன்முறையான கணவனால் தாக்கப்படுதல்
- ஒரு துரோகியான கணவர்
- குழந்தை அல்லது கணவனின் இறப்பு
- நீண்ட கால நோய்
- விவாகரத்து
- பராமரிப்பாளராக இருப்பதன் அழுத்தம்
- நிராகரிப்பு
- ஓரங்கட்டப்படுதல் (பெற்றோர், கணவன், நண்பர் அல்லது முதலாளியால்)
- சிநேகிதியின் துரோகம்
- வதந்திகள் அல்லது பொய்களின் பொருளாக இருத்தல்
- நோய்வாய்ப்பட்ட அல்லது வலியில் இருக்கும் குழந்தை

- வாழ்க்கையில் அழிவின் பாதையைப் பின்பற்றும் அன்பானவர்
- பாரபட்சம்
- ஒரு குற்றத்திற்கு பலியாவது
- குழந்தைகளைப் பெற இயலாமை
- மற்றவர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய இயலாமை
- எடை, முகப்பரு அல்லது வேறு சில உடல் குறைபாடுகளுடன் போராடுவது
- நீங்கள் ஒருபோதும் போதுமானவர் அல்ல-ஒருபோதும் போதுமான அளவு புத்திசாலி இல்லை, போதுமான அளவு அழகானவர் அல்ல, போதுமான அளவு நல்லவர் அல்ல போன்ற உணர்வு.

தேவனால் குணப்படுத்த முடியாதது எதுவுமில்லை.

உங்களுக்கு இந்த வரம்பு மீறல்களில் எது இருந்தாலும் தேவனால் மீட்கப்பட்டு அவருடைய மகிமைக்காகப் பயன்படுத்தப்படலாம். உங்களை காயப்படுத்திய எதுவும் உங்கள் வாழ்நாள் முழுவதும் ஒரு தழும்பாக இருக்காது. உங்களால் மீண்டு வர இயாலாததென்று எதுவுமில்லை, தேவனால் குணப்படுத்த முடியாதது எதுவுமில்லை.

## வாழ்வுக்காக குறிக்கப்பட்டது

துஷ்பிரயோகம், பாலியல் உணர்ச்சி, மனம் அல்லது உடல் ரீதியாக இருக்கலாம். எந்த வகையான துஷ்பிரயோகமும் தீங்கு விளைவிக்கும், ஆனால் பாலியல் துஷ்பிரயோகம் ஒரு பெண்ணின் ஆத்துமாவிற்கு மிகவும் அழிவுகரமானது என்று கூறப்படுகிறது.

உடல், உணர்ச்சி அல்லது குழந்தை பாலியல் துஷ்பிரயோகம் பெண்களின் மூளையை சில வடிவங்களில் மாற்றுகிறது என்று கூறப்படுகிறது. இதை கேட்கும் போது, ஒரு நபரை அவர்களின் வாழ்நாள் முழுவதும் எதிர்மறையான முறையிலே அவர்கள் இருப்பதாக உணர வைக்கும், ஆனால் ஒரு நல்ல செய்தி உள்ளது: நாம் பரிசுத்த ஆவியானவரால் குறிக்கப்பட்டு முத்தரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்டுள்ளோம், மேலும் நாம் எதை கடந்து

சென்றிருந்தாலும் தேவனுடைய சிறப்பான பயன்பாட்டிற்காக பாதுகாக்கப்பட்டிருக்கிறோம்.

> நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார். (எபேசியர் **1:13-14**).

பரிசுத்த ஆவியின் முத்திரையானது, நாம் முழுமையாக மீட்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய முழு சுதந்திரத்தை பெறுவோம் என்பதற்கு உத்தரவாதம் அளிக்கிறது. முழுமையை நோக்கிய பயணத்தைத் தொடங்கும் போது, நாம் எவ்வளவு காயப்பட்டிருந்தாலும் பரவாயில்லை, நாம் அதை கைவிட்டுவிடாத வரை தேவன் நமது வெற்றிக்கு உத்தரவாதம் அளித்திருக்கிறார். உடைந்த நம் வாழ்வின் துணுக்குகளைச் சேகரித்து எதுவும் வீணாகி விடாதபடி உறுதி செய்கிறார்.

பரிசுத்த ஆவியின் முத்திரை எதைக் குறிக்கிறது என்பதன் முழு அர்த்தத்தையும் நன்றாகப் புரிந்துகொள்ள, பவுல் எபேசியர்களுக்கு கடிதம் எழுதிய காலத்தின் ஒரு சிறிய வரலாறை நான் உங்களுக்கு சொல்லுகிறேன். எபேசு பட்டணம், மரம் வெட்டும் வணிகங்களைக் கொண்ட ஒரு நகரமாக இருந்தது. தொழிலாளர்கள் நகரின் வழியாக ஓடும் ஆற்றில் இருந்து மேல்நிலையிலுள்ள காடுகளுக்குள் சென்று மரக்கட்டைகளை வெட்டினர். அதில் அவர்கள் பணிபுரியும் மரம் வெட்டும் நிறுவனத்தின் முத்திரை குறிக்கப்படும் அல்லது முத்திரையிடப்படும். இந்த மரக்கட்டைகளை மிதக்கச் செய்து நகரத்திற்கு கொண்டு வந்து எபேசில் உள்ள கப்பல்துறைகளில் அவற்றின் உரிமையாளர்கள் அவர்களுக்கு தேவைப்படும் போது அதை வந்து எடுக்கும் வரை வைத்திருப்பார்கள். ஏனென்றால் அவர்கள் உரிமையைக் குறிக்கும் முத்திரை குறிக்கப்பட்டிருப்பதால், அவைகள் திருடப்படாமல் பாதுகாக்கப்பட்டது.

நாம் கிரயத்திற்கு வாங்கப்பட்டிருக்கிறோம், அந்த கிரயம் இயேசுவின் இரத்தம்; நாம் நம் முழு மீட்புக்காக காத்திருக்கும் போது பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்பட்டிருக்கிறோம். பிசாசு திருடவும், கொல்லவும், அழிக்கவும் மட்டுமே வருகிறான்,

ஆனால் நாம் நம் வாழ்க்கையை அனுபவித்து மகிழும்படி இயேசு வந்தார் (யோவான் 10:10).

நீங்கள் தேவனால் முத்திரையிடப்பட்டு குறிக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் அவருடையவர்கள். நீங்கள் இப்போது பத்திரமாக இருக்கிறீர்கள்.

> நீங்கள் தேவனால் முத்திரையிடப்பட்டு குறிக்கப்பட்டுள்ளீர்கள்.

பெண்கள் விரும்பும் விஷயங்களில் ஒன்று பாதுகாப்பாக உணர வேண்டும் என்பது. மேலும் நீங்கள் தேவனிடம் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்.

நீங்கள் தேவனுடைய உபயோகத்திற்காக பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள் (பரிசுத்தப்படுத்தப்பட்டீர்கள்), அது நீங்கள் கடந்து வந்த வலி அல்லது சேதம் அனைத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. உங்கள் கடந்தகால வலிகள் மற்றும் காயங்கள் அனைத்தையும் பரிசுத்த ஆவியானவரிடம் கொடுத்து விட்டு, உங்கள் வாழ்க்கையில் அவரது மறுசீரமைப்பு திட்டத்தை தொடங்க அவரிடம் கேட்கும்படி நான் உங்களை வருந்திக் கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் வலியை வீணாக்காதீர்கள் - உங்கள் நன்மைக்காக தேவன் அதை மாற்றியமைக்கட்டும்.

## அத்தியாயம் 4

# ஆரோக்கியமான ஆத்துமா என்றால் என்ன?

*தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது; அவரால் என் இரட்சிப்பு வரும்.*

*- சங்கீதம் **62:1***

ஒரு பெண்ணின் ஆத்துமா ஒரு மர்ம இடமாக இருக்கிறது, ஏனென்றால் அதை பார்க்க முடிகிறதில்லை அரிதாகவே புரிந்து கொள்ளப்படுகிறது. அந்த பெண்ணாலேயே புரிந்துக் கொள்ளப்படுகிறதில்லை. இருப்பினும், நமது ஒட்டுமொத்த ஒப்பனையில் இது ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. நம் உடல் எப்படியிருக்கின்றது என்பது நமக்குத் தெரியும், நாம் செய்ய வேண்டியது எல்லாம் கண்ணாடியில் அதைப் பார்ப்பதுதான். நாம் பார்ப்பதை விரும்பாமல் இருக்கலாம், ஆனால் குறைந்தபட்சம் அது என்னவென்று நமக்குத் தெரியும். நாம், ஆத்துமாவைக் கொண்ட உடம்பில் வாழும் ஆவியாயிருக்கும் மனிதர்கள். உங்கள் உள்ளான மனிதன் ஆவி மற்றும் ஆத்துமாவால் ஆனது. உங்கள் வெளி மனிதன் உங்கள் உடல்.

ஒரு பெண் அவள் மறுபடியும் பிறக்கும்போது, அவளுடைய ஆவியில் தான் பரிசுத்த ஆவியானவர் வந்து வாழ்கிறார். அவள் இயேசுவை அவளுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது, அவளுடைய ஆவி தேவனுடைய இருப்பிடமாக மாறுகிறது, மேலும் முழுவதுமாக பரிசுத்தமில்லாத இடத்திலே தேவன் இருக்க முடியாது என்பதால் மனிதனுடைய ஆவி அந்த நேரத்தில் தானே பரிசுத்தப்படுத்தப்படுகிறது. உண்மையிலே அந்த நேரத்தில் தானே

ஒரு அற்புதமான வாழ்க்கையை வாழ தேவையான அனைத்தையும் நாம் பெறுகிறோம், ஆனால் நமக்கு அதைப்பற்றிய அறிவு இல்லாததால், அதற்கு நேரமும், நாம் அதை புரிந்துகொள்வதற்காக ஜாக்கிரதையாக தேவனுடைய வார்த்தையை படிப்பதும் அவசியமாகிறது. நம்மிடம் என்ன இருக்கிறது என்பதை அறிந்த பிறகு, அதன்படி செயல்பட நாம் தீர்மானிக்க வேண்டும். தெரிந்துகொள்வது படி 1, ஆனால் அதை 2வது படியால் பின் தொடர வேண்டும், அது என்னவென்றால் இப்போது நமக்கு தெரிந்திருப்பதை செய்வதாகும்.

உதாரணமாக, இயேசு சமாதானப் பிரபு, அவர் தேவ பெண்ணில் வாழ்வதால், அவள் உண்மையிலேயே அவள் வசம் சமாதானத்தைக் கொண்டிருக்கிறாள், ஆனாலும் அவள் இன்னும் கவலைப்படலாம், ஒழுங்கற்ற உணர்ச்சிகளைக் வெளிக்காட்டலாம். ஒழுங்கற்றதாக இருப்பது என்பது நிலையற்ற, கணிக்க முடியாத, சீரற்ற, மாறக்கூடிய அல்லது கோபாவேசத்துடன் இருப்பதாகும் அப்படியாக அவளுடைய சூழ்நிலைகளால் கையாளப்பட்டு அவள் வாழவோ, நடந்துக்கொள்ளவோ இனி விரும்பவில்லை என்று முடிவு செய்தவுடன், அவளுக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலின் படி நடந்து கொள்ள தன் ஆத்துமாவின் உணர்ச்சிப் பகுதிக்கு அவள் மறு பயிற்சியளிக்கும் செயல்முறையைத் தொடங்குகிறாள். தேவனுக்கு கீழ்ப்படிய தேவையான பெலத்தைக் கொடுக்க அவள் அவர் மேல் சார்ந்திருக்க வேண்டியிருக்கும் மேலும் அவள் மிகவும் சுதந்திரமாக இருந்தால், இதற்கு சிறிது காலம் ஆகலாம், அவள் மாற்றங்களைப் பார்க்கத் தொடங்கும் முன் வாழ்க்கை புயலின் நடுவில் அமைதியாக இருக்கும் அவளது முயற்சியில் பல தோல்விகளும் அடங்கியிருக்கும்.

மனம் தளராமல் இருங்கள், அவர் நம்மில் தொடங்கிய நற்செயல்களை நிறைவு செய்வார் (பிலிப்பியர் 1:6) என்று தேவன் வாக்களித்திருப்பதை நினைவில் கொள்வது அவசியம். நாம் விட்டுவிடாமல் இலக்கை நோக்கி தொடர்ந்துக்கொண்டே இருப்பது தான் நமது பங்காகும். இறுதியில், கொஞ்சம் கொஞ்சமாக நம் ஆத்துமா தேவனுக்குள் இளைப்பாறும்.

உட்கார்ந்து அல்லது படுத்து நம் உடலுக்கு ஓய்வு கொடுப்பது எப்படி இருக்கும் என்று நமக்கு தெரியும், ஆனால் ஆத்துமாவில்

உள்ளான மனிதனில் இளைப்பாறுவது எப்படி என்பதை அறியாமலிருக்கலாம். நாம் நம் மனம், சித்தம் மற்றும் உணர்ச்சிகளில் முழுமையான இளைபாறுதலில் இருக்கும்போது தான் நம்மை வருத்தப்படுத்தும் சூழ்நிலைகள் மற்றும் மனிதர்களின் கொடுங்கோன்மையிலிருந்து முழுவதுமாக விடுபடுவோம். வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளையும், நம் வாழ்விலுள்ளவர்களையும் நம்மால் கட்டுப்படுத்த முடியாது, ஆனால் தேவன் நமக்கு ஆவியின் கனியாகிய சுயக்கட்டுப்பாட்டைக் கொடுத்திருக்கிறார், அவருடைய உதவியுடன் நம்மைச் சுற்றி என்ன நடக்கிறதோ அதற்கான பிரதிக்கிரியையை நாம் கட்டுப்படுத்த கற்றுக்கொள்ளலாம். இதுதான் உண்மையான சுதந்திரம்.

ஒரு ஆரோக்கியமான ஆத்துமா ஓய்வாக இருக்கிறது. அது உணர்ச்சிவசப்படுவதில்லை. இது கவலைப்படவோ அல்லது கவலையாகவோ, பதட்டமாகவோ, பயமாகவோ இருக்கிறதில்லை. அது குற்ற உணர்ச்சியினாலோ, அவமானத்தாலோ பாரமடைந்திருப்பதில்லை. அது தேவனில் தனது உறைவிடத்தைக் கண்டுபிடித்து, தனது கவலைகள் அனைத்தையும் கவனித்துக்கொள்ள அவரை நம்புகிறது. இன்று நம் உலகில் கவலைப்பட வேண்டிய விஷயங்கள் ஏராளமாக உள்ளன என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. நீங்கள் ஒற்றை தாயாக தனிமையாக குழந்தைகளை வளர்க்க முயற்சி செய்துக் கொண்டிருக்கலாம் அல்லது உங்களுக்கு ஒரு சிறப்பு தேவை உள்ள குழந்தை இருக்கலாம் அல்லது நீங்கள் தொடர்ந்து நிதி நெருக்கடியில் இருக்கலாம், அல்லது நோயுடன் போராடிக் கொண்டிருக்கலாம் அல்லது வயதான பெற்றோரைப் பராமரிப்பவராக இருக்கலாம், "உங்கள் ஆத்துமாவில் இளைப்பாறுங்கள்" என்று அவர்களிடம் சொல்லுவது கேலி செய்வது போன்று தோன்றலாம். நீங்கள் அப்படி உணர்ந்தால், நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்பதை நான் முழுமையாக புரிந்துகொள்கிறேன். ஆனால் தேவனால் சாத்தியமில்லாதது எதுவும் இல்லை, தேவன் மட்டுமே கொடுக்கக்கூடிய இயற்கைக்கு அப்பாற்பட்ட ஓய்வை பெற்றுக் கொள்ள முடியும்.

# பொறுப்பு

*நம் அனைவருக்கும் நிறைய பொறுப்புகள் உள்ளன, அதை நாம் புறக்கணிக்க முடியாது. நல்ல கணவர்கள் இருந்தாலும் பெண்கள் நிறைய விஷயங்களை கவனித்துக்கொள்கிறார்கள், ஆனால் ஒற்றைப் பெற்றோருக்கு அந்தப் பொறுப்பு பெரிதாய் இருக்கிறது. ஒரு பெண் தான் படுக்கைக்குச் செல்கிறேன் என்று சொல்லி விட்டு, செல்வாள், ஆனால் செல்லும் போது பத்து சிறிய வேலைகளைச் செய்து முடித்து விட்டு செல்கிறாள், ஆனால் ஒரு ஆண் தான் படுக்கைக்குச் செல்வதாகச் சொன்னால், சென்று படுத்துக் கொள்வான். என்னுடைய ஒரு மகளுக்கு நான்கு வாலிப பிள்ளைகள் உண்டு. முப்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு நான் இந்த ஊழியத்தை தொடங்கும் போது எனக்கு மூன்று வாலிப பிள்ளைகளும் ஒரு குழந்தையும் இருந்தனர். அதனால் அது எவ்வளவு சவாலானது என்று எனக்குத் தெரியும். ஆனால் வாழ்க்கை இன்று இருப்பது போல் அன்று மிகவும் சிக்கலானதாக இல்லை.*

*என் மகள் ஒரு காரியத்திலிருந்து மற்றொன்றுக்கு, பின் மற்றொன்றுக்கு என்று செல்வதை நான் பார்க்கிறேன். அது அன்றாட நிகழ்வு போல் தெரிகிறது. அவள் கணவர் சமீபத்தில் ஒரு மீன்பிடி பயணத்திற்கு சென்றார், எனவே அமைதியான சில நாட்கள் தனக்கென்று கிடைக்கும் என்று எண்ணினாள்.அவள் தனக்கான அந்த சிறிது நேரத்தை எவ்வாறு செலவிட வேண்டுமென்று திட்டமிட்டாள், அதைக் குறித்து அவள் உற்சாகமாக இருந்தாள். தான் தனியாக இருக்க போகிறேன் என்று அவள் நினைத்த முதல் நாளே பள்ளியிலிருந்து அழைப்பு வந்தது; அவரது மகள்களில் ஒருவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் அவளை அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. பின்னர் கல்லூரியில் படிக்கும் அவள் மகன் மதியம் கல்லூரியிலிருந்து வீட்டிற்கு வரும் போது தனது காதலியை அழைத்து வர விரும்பினார். அவளின் தனிமையான நேரம் நடக்கவேயில்லை. வாழ்க்கை உருண்டது.*

*நமக்கு பொறுப்புகள் உள்ளன. நம்முடைய பொறுப்புகளை புறக்கணிக்காமல், நம்முடைய கவலைகளை அவர் மீது வைக்கும்படி தேவன் நம்மை அழைக்கிறார் (1 பேதுரு 5:7).*

> நம் பொறுப்புகளை புறக்கணிக்காமல், நம் கவலைகளை அவர் மீது வைக்க தேவன் அழைக்கிறார்.

பொதுவாக நம் ஆத்துமாவில் நாம் சுமக்கும் மன அழுத்தம் இல்லாமல் இதை நாம் செய்தால், காரியங்கள் எவ்வளவு எளிதாக இருக்கும் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. நாம் நமது ஆத்துமாவில் ஓய்வெடுத்து, உள்ளான அமைதியுடன் இருக்கும்போது நம் ஆற்றல் உண்மையிலேயே பெரிதும் அதிகரிக்கிறது என்று நான் நம்புகிறேன். இன்று நாம் அனுபவிக்கும் மன அழுத்தத்திலிருந்து விடுபட எல்லா நேரங்களிலும், எல்லா விஷயங்களிலும் தேவனை நம்புவதைக் கற்றுக்கொள்வதைத் தவிர, வேறு வழி எனக்கு எதுவும் தெரியவில்லை.

நாம் அவரிடம் வந்தால், அவர் நம் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் தருவார் என்று இயேசு கூறினார்.

> *வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத்தேயு 11:28).*

அடுத்த வசனத்தைப் படித்தால், அவருடைய இளைப்பாறுதலை அனுபவிப்பது அவருடைய வழிகளைக் கற்றுக்கொள்வதைப் பொறுத்தது என்பதை நாம் காண்கிறோம்.

> *நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாவிற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். (மத்தேயு 11:29).*

நீங்கள் இங்கே சிறிது நிறுத்திவிட்டு, இந்த இரண்டு வேதவசனங்களைத் திரும்பத் திரும்ப வாசித்து, இயேசு உங்களுக்குச் சொல்வதன் ஆழத்தை சிந்தித்துப் பாருங்கள் என்று நான் பரிந்துரைக்க விரும்புகிறேன். உங்கள் ஆத்துமாவிற்கு

இளைப்பாறுதல் உண்டு! உங்கள் மனதில், உங்கள் உணர்ச்சிகளில் மற்றும் உங்கள் சித்தத்தில் சமாதானம் உங்களுக்காக இருக்கிறது.

நான் எப்போதும் எனது சொந்த ஆலோசனையைப் பின்பற்றுவதில்லை. சமீபத்தில் நான் ஒரு சூழ்நிலையைப் பற்றி வருத்தப்படவும், கவலைப்படவும் செய்தேன். ஒரு ஊழிய நிகழ்வில் ஊழியம் செய்யத் தயாராக இன்னும் சில மணிநேரங்கள் மட்டுமே இருந்தது, அது நான் வருத்தப்படுவதற்கு சரியான நேரம் அல்ல. ஆனால் நான் வருத்தமாக இருந்தேன். ஒரு சூழ்நிலை சரியாக கையாளப்படவில்லை, அது என்னை மோசமாக பாதித்திருந்தது, அந்த சமயத்தில் அதை கையாளக்கூடியவர் நான் மட்டும் தான். நான் நேர்மையாக சொல்ல வேண்டுமென்றால்– அது எப்போதும் எளிதானது அல்ல– அது என்னால் புறக்கணிக்க முடியாத ஒரு பொறுப்பாக இருந்தாலும், அந்த நிமிடத்திலே நான் அதை கவனிக்க வேண்டியதில்லை என்பதை நான் உணர்ந்திருந்திருக்க வேண்டும். அந்த சமயத்தில் அதை நான் செய்யவேண்டியிருந்திருக்காது. ஒரு பெரிய மாநாட்டில் நான் பிரசிங்கிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் போது என் அமைதியை இழந்திருக்கவேண்டிய அவசியம் இருந்திருக்காது. தேவன் என்மீது இரக்கமுள்ளவராக இருந்ததால் அதை மக்களுக்கு நன்மையாக மாற்றியபோதிலும், நான் ஊழியம் செய்யும் போது எனக்கு பரிட்சயமான சமாதானத்தையும், ஆறுதலையும் விட்டு விட்டிருந்தேன். எனக்கு போதிப்பது மிகவும் கடினமாக இருந்தது, மேலும் எனது செய்தி நன்றாக இல்லை என்று நினைப்பது எனக்கு எளிதாக இருந்தது. நான் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தேன், என் நேரம் முடிந்து விட வேண்டும் என்று விரும்பினேன், அப்படியாக எப்போது முடியும் என்று நான் காத்திருக்கும் போது, எனக்கு ஒரு பிரச்சனை இருக்கிறது என்று அறிந்திருந்தேன்.

நீங்கள் யாராக இருந்தாலும், எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருந்தாலும் சரி சில சமயங்களில் நீங்கள் உங்களை மீண்டும் பழைய வடிவங்களுக்குள் விழுந்துவிட அனுமதித்து விடுவீர்கள் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வது முக்கியம் என்பதால் இதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக நம் எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகளுக்கு இது

உண்மையாக இருக்கிறது. தேவன் இரக்கமுள்ளவர். நீங்கள் என்ன தவறுகள் செய்தாலும் அவை அவருக்கு ஆச்சரியமானதாகவோ அதிர்ச்சியாகவோ இருப்பதில்லை என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் அதைச் செய்வதற்கு முன்பே நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதை அவர் ஏற்கனவே அறிந்திருக்கிறார். ஆனாலும் அவர் உங்களை நேசிக்கிறார். தேவனுடன் எப்போதுமே ஒரு புதிய தொடக்கம் அல்லது புதிய தொடக்கத்திற்கான வாய்ப்பு உள்ளது!

## தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்புங்கள்

விசுவாசத்தின் மூலம் தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் நுழைய முடியும் என்று எபிரேயர் புத்தகம் கூறுகிறது (எபிரெயர் 4:3, 10). நம் நம்பிக்கையும், நம் சார்பையும், தேவன் மீதும் அவருடைய வாக்குத்தத்தங்கள் மீதும் நாம் வைக்கும்போது, ஆரோக்கியமான ஆத்துமாவை அனுபவிக்க ஆரம்பிக்கிறோம்.

மனிதனின் விருப்பம்/ சித்தம் ஆத்துமாவின் ஒரு பகுதியாகும், நாம் தேவனுடைய சித்தத்தைத் தேர்ந்தெடுக்க நமது சுய சித்தத்தை பயன்படுத்த வேண்டும். உதாரணமாக, தேவனுடைய வார்த்தை எதையாவது செய்ய வேண்டாம் என்று சொல்லும் போது, அதை நாம் செய்தால், அதற்காக நாம் மனந்திரும்பி தேவனுடைய மன்னிப்பை பெறும்வரை நம் ஆத்துமாவில் இளைப்பாறுதல் இருக்காது.

> சுய சித்தமும் தேவனுடைய இளைப்பாறுதலும் இணைந்து செல்லாது.

சுய விருப்பமும் தேவனுடைய இளைப்பாறுதலும் இணைந்து செல்லாது. அவர் சொல்வதை நாம் உண்மையாக நம்ப வேண்டும் என்று தேவன் விரும்புகிறார், ஏனென்றால் நாம் அப்படி செய்யும் போது, அவருக்குக் கீழ்ப்படிகிறோம். அது நடக்கும் போது, நம் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். நாம் அனைவரும் தேவனுடன் நம் பயணத்தை சுய-விருப்பம் நிறைந்தவர்களாய் தொடங்குகிறோம், அதை தேவ சித்தத்திற்கு விற்று விடுவதற்கு அதிக நேரம் எடுக்கும். அது பெரும்பாலும் வலிமிகுந்ததாக

இருக்கும் என்று சொல்வது பாதுகாப்பானது என்று நினைக்கிறேன். ஆவிக்குரிய குழந்தைகள் மனித குழந்தைகளிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல. இருவரும் தங்கள் சொந்த வழியை விரும்புகிறார்கள், அவர்கள் அதைப் பெறவில்லையென்றால் மோசமாக நடந்து கொள்வார்கள். நம் குழந்தைகளுக்கு நாம் பயிற்சி கொடுப்பது போல், தேவனும் நம்மை பயிற்றுவிக்கிறார்.

காயம்பட்ட உங்கள் ஆத்துமாவுக்கு குணம் வேண்டும் என்றால், தேவனுடைய வழியே சிறந்த வழி என்று அனுபவத்தால் எனக்கு தெரியும் என்று நான் கூறும்போது தயவுசெய்து என்னை நம்புங்கள். நான் பல ஆண்டுகளில் தேவனுடைய சித்தத்திற்கு அடிபணியக் கற்றுக்கொண்டேன், நான் உண்மையில் இன்னும் சில விஷயங்களை விட்டு விடக் கற்றுக்கொண்டிருக்கிறேன். ஆனால் ஒவ்வொரு முறையும் தேவன் சொல்வதைச் செய்யும் அளவுக்கு அவரை நான் நம்பும் போது, என் வாழ்க்கை கொஞ்சம் சிறந்ததாகிறது. என் ஆத்துமா அதிக இளைப்பாறுதலை அனுபவிக்கிறது.

> நீங்கள் எப்படி உணர்கிறீர்கள், என்ன விரும்புகிறீர்கள் அல்லது எதை நினைக்கிறீர்கள் என்பதை நம்புவதை விட தேவனை நம்புவதற்கு இப்போதே முடிவெடுக்கவும்.

நம்புவது (தேவனை விசுவாசிப்பது) தான் தேவனின் இளைப்பாறுதலை அனுபவிக்க ஒரே வாசலாகும். நாம் தேவனை எவ்வளவு அதிகமாக நம்புகிறோமோ, அவ்வளவு எளிதாக வாழ்க்கை மாறுகிறது. ஏனென்றால் நாம் அவரிடம் நம்மை அர்பணிக்கும் போது, அவர் நம்மை பார்த்துக் கொள்வார். அவர் அதை நம் நேரத்திலோ அல்லது நம் விருப்பப்படியோ செய்யாமல் இருக்கலாம். ஆனால் அவர் நம்மை எப்போதுமே கவனித்துக்கொள்வார், ஏனென்றால் அவர் நம்மை நிபந்தனையின்றி நேசிக்கிறார்.

நீங்கள் எப்படி உணர்கிறீர்கள், என்ன விரும்புகிறீர்கள் அல்லது எதை நினைக்கிறீர்கள் என்பதை நம்புவதை விட தேவனை நம்புவதற்கு இப்போதே முடிவெடுக்கவும். அவருடைய

வாக்குத்தத்த-ங்களெல்லாம் எல்லாவற்றையும் விட பெரியவை மற்றும் நம் நம்பிக்கைக்கு தகுதியானவை. மற்ற அனைத்தும் மணலை போன்றது, ஆனால் அவருடைய வார்த்தை நிரந்தரமானது என்றென்றும் நிலைத்திருக்கக் கூடியது.

நாம் அனைவரும் ஒரு வாழ்க்கையை உருவாக்குகிறோம், அதைக் கட்டியெழுப்புவதற்கான அடித்தளம் நம் வீட்டைக் கட்டுவதற்கான அடித்தளத்தை விட முக்கியமானது. நீங்கள் எந்த அடித்தளத்தில் உங்கள் வாழ்க்கையை உருவாக்குகிறீர்கள்? இது பிரபலமான கருத்தை சார்ந்திருக்கிறதா, அல்லது நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அல்லது உணர்கிறீர்களோ அதை சார்ந்ததா, அல்லது மக்கள் எதை ஏற்பார்களோ அதை சார்ந்ததா? அந்த விஷயங்களில் ஏதேனும் ஒன்றாக அது இருந்தால், நீங்கள் நிலையற்ற தரையில் கட்டுகிறீர்கள். இந்தக் கருத்தைச் சொல்ல இயேசு ஒரு உவமையைச் சொன்னார்.

> ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார். (மத்தேயு 7:24-27).

இயேசுவாகிய பாறை மீது நாம் கட்டினாலும் அல்லது மணல் மீது கட்டினாலும் மழையும் வெள்ளமும் வரும் என்று தான் இந்த வேத வாக்கியங்கள் கூறுகின்றன. வாழ்க்கையின் சோதனைகளையும் இன்னல்களையும் யாராலும் தவிர்க்க

*முடியாது, ஆனால் தங்கள் வாழ்க்கையை சரியான அடித்தளத்தில் (இயேசு)கட்டியெழுப்பியவர்கள் புயல்களை தாண்டி வந்து, இன்னமும் வலுவாக நிற்பார்கள்.*

## உனது மனதை மாற்று

*உங்கள் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட வேண்டுமானால், உங்கள் எண்ணத்தை மாற்ற வேண்டும். நம் எண்ணங்கள் நம்மீது அற்புதமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தேவன் நம் வாழ்கைக்கென்று ஒரு அற்புதமான திட்டத்தை வைத்திருக்கிறார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கற்பிக்கிறார், ஆனால் அது நடப்பதைக் காண நாம் அவசியம் நம் மனதை முழுமையாகப் புதுப்பிக்க வேண்டும்.*

> *நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:2).*

*உங்களுக்கு காயப்பட்ட ஆத்துமா இருந்தால், உங்களுடைய பல சிந்தனைகள் இன்னும் தேவனுடைய வார்த்தையுடன் ஒத்துப்போகவில்லை என்று நான் உறுதியாக நம்புகிறேன். அநேகமாக மற்ற எல்லா விஷயங்களை விட, சாத்தான் நம்மைக் கட்டுப்படுத்த நம் எண்ணங்களைப் பயன்படுத்துகிறான். அவன் ஏவாளுக்கு எண்ணங்களை பரிந்துரைத்தது போல நமக்கும் பரிந்துரைக்க முடியும். ஆனால் நாம் அவற்றைப் பெற்றுக் கொண்டு நமக்குரியதாக்கிக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. இருப்பினும், அவை நம்மை அடிமைத்தனத்தில் வைத்திருக்கும் பொய்கள் என்பதை அறிந்து கொள்ளாவிட்டால் அவ்வாறாகவே செய்வோம்.*

*நான் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானதால், எனக்கு எப்போதும் இரண்டாம் தரமான வாழ்க்கை தான் இருக்கும் என்று நினைத்தேன் என்று முன்பு குறிப்பிட்டிருந்தேன். அது உண்மை என்று நான் நினைத்தேன், ஏனென்றால் எனக்கு அவ்வளவுதான்*

சிந்திக்கத் தெரிந்தது. ஆனால் எனது கடந்த காலத்தை விட்டு விட்டு ஒரு அற்புதமான எதிர்காலத்தை அனுபவிக்க இயலும் என்று தேவன் சொல்லியிருப்பதை நான் கண்டுபிடித்தபோது, எனது தவறான சிந்தனை என்னை அடிமைத்தனத்தில் வைத்திருப்பதை உணர்ந்தேன், உங்கள் எண்ணங்கள் உங்களுக்கும் அதையே செய்கின்றன.

அடுத்த அத்தியாயங்களில், நமது கடந்தகால வலிகளுக்கு நம்மைக் கட்டுபடுத்த சாத்தான் பயன்படுத்தும் பல பொய்களை நான் வெளிப்படுத்துவேன். நீங்கள் உண்மையைக் கண்டுபிடிக்கும் போது, அது உங்களை விடுவிக்கும் என்று நம்புகிறேன்!

## அத்தியாயம் 5

# எனக்கு உதவுங்கள்! என்னை எனக்கு புரிந்து கொள்ளமுடியவில்லை

*வாழ்க்கையில் மிகவும் கடினமான விஷயம் உங்களை அறிந்துக்கொள்வதுதான்.*

- தேல்ஸ்

யாராவது உங்களிடம், "எனக்கு உன்னைப் புரியவில்லை!" என்று சொல்லியிருக்கிறார்களா? என் வாழ்நாளில் அதை பலமுறை கேட்டிருக்கிறேன். எந்த ஒரு நல்ல பதிலையும் என்னால் கொடுக்க இயலவில்லை, ஏனென்றால் எனக்கே என்னைப் புரியவில்லை என்பது தான் உண்மை. நீங்கள் எந்த விஷயங்களையாவது செய்த பின் ஏன் அதை செய்தீர்களென்றோ அல்லது ஏன் அவ்வாறாக நடந்துகொண்டீர்கள் என்றோ, அல்லது நீங்கள் ஒருவேளை திரும்ப திரும்ப ஏன் அவ்வாறாக செய்கிறீர்கள் என்று ஆச்சரியப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் சொல்லும் காரியங்கள் எப்படி இருக்கிறது? நீங்கள் கோபத்தில் மற்றவர்களைப் புண்படுத்தும் வார்த்தைகளை சொல்லி விட்டு பின்னர் நீங்கள் ஏன் அப்படி சொன்னீர்கள் என்று கூட தெரியாமலிருக்கிறீர்களா? நாம் செய்யும் அனைத்தையும் ஏன் செய்கிறோம் என்று உங்களுக்கும் எனக்கும் தெரியாமலிருக்கலாம், ஆனால் ஒரு காரணம் இருக்கிறது.

> நமது நடத்தைகளின் மூலத்தை / வேரைப் புரிந்துகொள்வது அவற்றை மாற்றுவதற்கு இன்றியமையாதது.

நமது நடத்தைகளின் மூலத்தை / வேரைப் புரிந்துகொள்வது அவற்றை மாற்றுவதற்கு இன்றியமையாதது. தேவனுடைய வார்த்தையைப் படிப்பது நமக்கு விளங்கிக் கொள்ளுதலை அளிக்கிறது. நம் வாழ்க்கையில் பயத்தின் வேர் உள்ளது. அது நம் செயல்களையும் எதிர்வினைகளையும் பாதிக்கிறது என்பதை அது நமக்கு வெளிப்படுத்தலாம். நான் பயத்தில் வேரூன்றி வளர்ந்தேன். அது என்னை மோசமாக, குறிப்பாக என் உறவுகளை பாதிக்கிறது என்பதை அறிய வேண்டியிருந்தது. என் ஆளுமையானது மிகவும் தைரியம் வாய்ந்தது, அதனால் மக்கள் மற்றும் சில சூழ்நிலைகளுக்கு எனது எதிர்வினைகள் பயத்தில் வேரூன்றியிருந்தது என்பதை சொல்வது எனக்கு கடினமாக இருந்தது. மிகச் சிலரே தாங்கள் பயப்படுவதாக ஒப்புக்கொள்ள விரும்புகிறார்கள், ஆனால் என்னைப் போன்ற ஆக்ரோஷமான, தைரியமானவர்கள் உண்மையில் அதை ஒத்துக்கொள்ள விரும்ப மாட்டார்கள், ஏனென்றால் அதை ஒப்புக்கொள்வது நம்மை பலவீனமாகவும் கட்டுப்பாட்டை இழப்பதாகவும் உணர வைக்கிறது.

இன்றும் கூட எனக்கு ஏதோ ஒரு வினோதமான எதிர்வினை இருக்கலாம், அதை சற்று தரித்து நின்று நான் ஏன் சொன்னேன் நான் செய்ததைப் போல ஏன் செய்தேன் அல்லது நடந்துகொண்டேன், என்று தேவனிடம் கேட்டால், அதற்கு காரணம் பயம் தான் என்பதை அடிக்கடி காட்டுகிறார். ஆனால் என் ஆத்துமா குணப்படும்படியான எனது பயணத்தின் தொடக்கத்தில் நான் பிரதிக்கிரியை செய்ததைவிட இப்போது வித்தியாசமாக பிரதிக்கிரியை செய்கிறேன். நான் இப்போது பயப்படும்போது கூட என்னால் என் நம்பிக்கையை தேவன் மீது வைக்க முடியும் என்று இப்போது எனக்குத் தெரிந்திருக்கிறது. நாம் பயப்படுவதால், பயப்பட வேண்டியதில்லை.

மக்களுக்கு எதிராக பிசாசு பயன்படுத்தும் முக்கிய வேதனைகளில் ஒன்று பயம். அதன் மூலம் நம்மைக் கட்டுப்படுத்தி, தேவன் விரும்பும் நபராக இருப்பதிலிருந்து நம்மைத் தடுக்க வேண்டும் என்பதே அவனுடைய விருப்பமாகும். தாவீது ராஜா பயந்தபோது, தேவன் மீது நம்பிக்கை வைப்பதாக கூறினார் (சங்கீதம் 56:3). அவர் தேவனுடன் அற்புதமான உறவைக் கொண்டிருந்த ஒரு மனிதர், அவர் ஒரு பெரிய வல்லமை மற்றும் அதிகாரத்தை

கொண்ட ஒரு ராஜா, ஆயினும் சில நேரங்களில் அவர் பயத்தை அனுபவித்தார். பயம் அனைவருக்குமே தன்னை வெளிப்படுத்துகிறது, ஆனால் அது நம்மை கட்டுப்படுத்த நாம் அனுமதிக்க வேண்டியதில்லை.

என்னுடைய சில ஆரோக்கியமற்ற எதிர்வினைகள் பாதுகாப்பின்மையில் வேரூன்றியுள்ளன. நான் பொருத்தமாக இல்லை அல்லது என்னில் ஏதோ ஒன்று தவறாக இருக்கிறது மேலும் நிராகரிக்கப்பட்டு விடுவோமோ என்ற பயம். சாதகமாகப் பயன்படுத்தப்பட்டு விடுவோமோ என்ற பயம் என் வாழ்க்கையில் பெரியதாக இருந்தது, அது மக்களை என் வாழ்க்கையில் அனுமதிக்காதபடி அல்லது, நான் அவர்களை உள்ளே அனுமதிப்பேனென்றால், ஒவ்வொரு சூழ்நிலையிலும் கட்டுப்பாட்டை கொண்டிருக்க முயற்சி செய்துக் கொண்டிருந்தேன்.

ஒரு நபர் அல்லது சூழ்நிலையில் நீங்கள் மோசமான அல்லது அசாதாரணமான எதிர்வினையை எதிர்கொண்டிருக்கும் போது, அதை விரைவாக கடந்து செல்வதற்கு பதிலாக அதைப் பற்றி சிந்திக்க நேரம் ஒதுக்குங்கள் மற்றும் நீங்கள் ஏன் அப்படி நடந்துகொண்டீர்கள் என்பதைப் புரிந்துகொள்ள உதவும்படி தேவனிடம் கேளுங்கள் என்று நான் பரிந்துரைக்கிறேன். இதைச் செய்வது என் வாழ்வில் உள்ள பிரச்சனைகளின் மூலத்தை/வேரை சரிசெய்ய எனக்கு பெரிதும் உதவியது.

## பகுத்தறிவு

கிறிஸ்தவ சூழலில், பகுத்தறிவு என்பது ஆவிக்குரிய வழிநடத்துதல் மற்றும் புரிதலின் நோக்கத்துடன் ஒன்றை உணர்வதாகும். நடைமுறைக்கேற்ற விளக்கமாவது, காரியங்கள் தோன்றும் விதத்திற்கு அப்பால் அவை உண்மையாக இருப்பதைப் பார்ப்பதாகும். நாம் நம்மைப் புரிந்து கொள்ள வேண்டும், அதற்கு, வெறும் நடத்தையை விட, நடத்தைகளுக்குப் பின்னால் உள்ள நோக்கத்தைக் கண்டறிய நேரம் ஒதுக்க வேண்டும்.

சமீபத்தில், ஒரு சூழ்நிலையில் எனக்கு ஒரு தவறான மனப்பான்மை இருந்தது. அதில் ஒன்றை கூட நான்

வெளிகாட்டவில்லை, ஆனால் அவையெல்லாம் என் இருதயத்தில் இருந்தது, தேவன் அங்கிகரிக்கும் வகையில் என் மனப்பான்மை இல்லை என்பதை அறிந்திருந்தேன். அதனால் நான் சற்று தரித்திருந்து, நான் ஏன் அப்படி உணர்ந்தேன் என்பதைக் காட்டும்படி தேவனிடம் கேட்டேன். சில நொடிகளிலே பொறாமை என்ற வார்த்தையை என் இருதயத்திலே கேட்டேன். முதலில் நான் பிறர் மேல் பொறாமைப்படுகிறேன் என்பதை நம்ப விரும்பவில்லை. ஆனால் அது உண்மை என்பதை நான் எதிர்கொண்டேன், மேலும் அத்தகைய மன நிலை எனக்குள் இல்லாமலிருக்கும் அளவு நான் வளர எனக்கு உதவுமாறு தேவனிடம் கேட்டேன். நான் கண்டுபிடித்தது என்னை கண்டனம் செய்யவில்லை, ஆனால் நான் அதை கண்டுபிடித்ததால் உண்மையில் நிம்மதி அடைந்தேன். நீங்கள் எதையாவது பற்றி கண்மூடித்தனமாக இருந்தால் அதைப் பற்றி எதுவும் செய்ய முடியாது என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள். தேவனுடன் வெளிச்சத்தில் நடக்க பயப்பட வேண்டாம். அவர் உங்களுக்கு உண்மையை / சத்தியத்தை வெளிப்படுத்துவாராக.

> *நான் தேவனுக்கு முன்பாக ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே நடக்கும்படி, நீர் என் ஆத்துமாவை மரணத்துக்கும்என்கால்களைஇடறலுக்கும்தப்புவியாதிருப்பீரோ? (சங்கீதம் 56:13).*

நாம் உண்மையை எதிர்கொள்ளவில்லை என்றால், நம் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் திருடும் விஷயங்களிலிருந்து நாம் விடுபட மாட்டோம். நமக்கு பகுத்தறிவதற்கு தேவை, நம் நடத்தைகளின் மூலத்தை அடைவது என்பது நாம் தரித்திருந்து ஆழமாகச் சிந்திப்பதேயாகும். நாம் செய்வதை ஏன் செய்கிறோம் என்பதைக் கண்டுபிடிப்பது மிகவும் விலைமதிப்பானது. சில சமயங்களில் நம்மை எழுப்புவதற்கும், மற்றவர்கள் நம்மில் என்ன பார்கிறார்களோ அதை நாம் நம்மில் பார்க்க உதவுவதற்கும் ஒரு நெருக்கடி தேவைப்படுகிறது.

> தேவனோடு ஒளியில் நடக்க பயப்பட வேண்டாம்.

எனது குழந்தைப் பருவத்தில் நான் அனுபவித்த துஷ்பிரயோகம் காரணமாக எனது நடத்தை பல ஆண்டுகளாக நன்றாக இருக்கவில்லை. டேவுக்கும் எனக்கும் திருமணமாகி ஏழு வருடங்களுக்குப் பிறகு ஒரு நாள் காலையில் அவர் வேலைக்குத் தயாராகிக் கொண்டிருந்தார், அவர் செய்ய விரும்பிய சில காரியத்தைப்பற்றி நான் மிகவும் முரட்டுத்தனமாகவும், அவமரியாதையுடனும் நடந்துகொண்டேன். அந்த வகையான நடத்தை எனக்கு அசாதாரணமானது அல்ல. ஆனால் அன்று காலை அவர் தாங்கிக் கொள்ளத் தயாராக இருந்த வரம்பை அடைந்துவிட்டார், மேலும் அவர் கூறினார், “ஜாய்ஸ், நீ என்னை எப்படி நடத்துகிறாய், என்னுடன் எப்படி பேசுகிறாய் என்ற அடிப்படையில் நான் ஒரு மனிதனாக என் மதிப்பை நான் கொண்டிருக்காதது ஒரு நல்ல விஷயம் என்று நான் நினைக்கிறேன். நீ தொடர்ந்து இப்படி நடந்து கொண்டால், எதிர்காலத்தில் நான் என்ன செய்வேன் என்பதைப் பற்றி என்னால் உறுதியாக சொல்ல முடியாது என்று சொல்லிவிட்டு வேலைக்குச் சென்றுவிட்டார்.” அது எனக்கு ஒரு நெருக்கடியான காரியமாக இருந்தது, ஏனென்றால் டேவ் சும்மா மிரட்டல் விடுகிறவர் அல்ல. எங்களுக்கு மூன்று குழந்தைகள் இருந்தனர், நான் டேவை நிச்சயமாக காதலித்தேன். அவர் என்னை விட்டு விட்டுப் போவதை நான் விரும்பவில்லை, எனவே மாறுவதற்கான முயற்சியை செய்ய நான் முடிவு செய்தேன்.

தேவனிடம் உதவி கேட்காமல் மாற முயற்சிப்பதை நான் பரிந்துரைக்கவில்லை, ஏனென்றால் அது இல்லாமல் நீங்கள் வெற்றி பெற மாட்டீர்கள். பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்த நாம் அனுமதிக்க வேண்டும். ஏனென்றால் அவர் நமக்கு ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் இருக்கிறார். நான் தேவனிடம் உதவி கேட்டேன், அவர் எனது பிரச்சினைகளின் மூலத்தைப் பற்றிய பகுத்தறிவை அல்லது நுண்ணறிவைக் கொடுக்கத் கூடிய வளங்களை என் கைகளில் வைக்கத் தொடங்கினார்.

எனக்கு மிகவும் உதவியாக இருந்த ஒன்று, மக்கள் கொண்டிருக்கும் பல்வேறு ஆளுமைகளைப் பற்றிய புத்தகங்களைப் படித்ததாகும்.

என்னைப் பற்றி மட்டுமல்ல, மற்றவர்களைப் பற்றியும் நான் பெற்ற நுண்ணறிவைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். இதே மாதிரியான சில விஷயங்களைப் படிக்க நேரம் ஒதுக்குங்கள், மேலும் ஆளுமைத் தேர்வையும் கூட எடுத்துக் கொள்ளுங்களென்று. நான் உங்களுக்கு பரிந்துரைக்கிறேன். இதனை சோதனை செய்யும் சோதனைகள் பல இணையத்தில் கிடைக்கின்றன, மேலும் இது உங்களைப் புரிந்துகொள்வதற்கும் குணமடைவதை நோக்கிய உங்கள் பயணத்தில் உங்களுக்கு உதவக்கூடும் என்று நினைக்கிறேன்.

இருதயம் உடைந்தவர்களை குணப்படுத்துவது பற்றிப் பேசும்போது, ஆள்தத்துவத்தில் / ஆளுமையில் உடைந்தவர்களைக் குணப்படுத்துவது பற்றிப் பேசுகிறோம் என்று நினைக்கிறேன். ஆளுமை என்பது நம் பிறவியில் கொண்டிருக்கும் இயற்கையான மனோபாவம் மற்றும் நம் வாழ்வில் குறிப்பாக நாம் உருவாகும் ஆண்டுகளில்.நமக்கு ஏற்படும் நிகழ்வுகளின் கலவையாகும். நான் ஒரு வகை A, அல்லது ஒரு கோலரிக் ஆளுமையைக் கொண்டிருக்கிறேன், நான் எடுத்த அந்த சோதனையின் படி அந்த ஆளுமை வகையின் குணாதிசயங்கள் என்னை முழுமையாக விளக்கியது மற்றும் எனக்கு மிகவும் உதவியாக இருந்தது.

நான் படித்த முதல் புத்தகம் டிம் லாஹேயின் ஆவியினால் நடத்தப்படும் ஆளுமை பற்றியது. (அவரிடம் இப்போது புதுப்பிக்கப்பட்ட தலைப்பில் இந்த புத்தகங்கள் உள்ளன.) அவரது புத்தகத்தின் படி எனக்கு என் பலவீனங்கள் மற்றும் பலங்களை உள்ளடக்கிய, ஒரு பிறவி குணாதிசயம் இருந்தாலும், மக்களுக்கும், வாழ்க்கைக்கும் நான் கொடுக்கும் பிரதிக் கிரியைகளில் ஆவியானவரால் நடத்தப்பட கற்றுக் கொள்ளலாம்.

எனது குணத்தின் பலவீனங்களில் ஒன்று மக்களையும் பொருட்களையும் கட்டுப்படுத்தும் ஆசையாகும். கோலரிக் நபர் ஒரு தலைவர்; அவர்கள் எந்த சூழ்நிலையையும் கட்டுப்படுத்தி, என்ன செய்ய வேண்டும் என்று மற்றவர்களுக்குச் சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறார்கள். நான் ஏதாவது ஒரு பொறுப்பில் இருந்து, வழிநடத்த வேண்டும் என்றால் இந்த பண்பு நல்லது, ஆனால் எனக்குரியதல்லாததை நான் கட்டுப்படுத்த முயற்சித்தால் அது நல்லதல்ல என்பதை நான் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

நம் வாழ்நாள் முழுவதும் தேவனின் கொள்கைகளைப் பின்பற்றக் கற்றுக் கொள்ளும் வரை, நம்முடைய மிகப் பெரிய பலமே சில சமயம் நம் மிகப்பெரிய பலவீனங்களாகவும் இருக்கலாம் என்பதை அறிந்து கொள்வது சுவாரஸ்யமானது.

> உங்களைப் பற்றி உங்களால் முடிந்த அனைத்தையும் கற்றுக்கொள்வது நீங்கள் உண்மையான நபராக மாற உதவும்.

உங்களைப் பற்றி உங்களால் முடிந்த அனைத்தையும் கற்றுக் கொள்ளுவது, நீங்கள் உண்மையான நபராக மாற உதவுகிறது. நம் எல்லோருக்கும் ஒரு பாசாங்கு இருப்பதாக நான் நினைக்கிறேன், நாம் உலகிற்கு முன் நிறுத்தும் நம் ரூபம், ஆனால் தேவன் நம்மை, உண்மையான சுய ரூபத்தை கொண்டிருக்க விரும்புகிறார், அவர் நம்மைப் படைத்த நபராக இருக்க விரும்புகிறார்.

குணப்படுத்துதல் மற்றும் முழுமைக்கான உங்கள் பயணத்தைத் தொடங்க உங்கள் வாழ்க்கையில் ஒரு நெருக்கடிக்காக நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லை. நீங்கள் எவ்வளவு விரைவாக தொடங்குகிறீர்களோ, அவ்வளவாய் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

நான் சமீபத்தில் இந்தப் புத்தகத்தை எழுதுவதற்குத் தயாரான போது ஒரு தொழில்முறை ஆலோசகரிடம் பேசினேன். காயமடைந்த ஆத்துமாக்களுக்கு அவள் எப்படி உதவுகிறாள் என்பதைப் பற்றி கேட்டேன். அவர்கள் செய்ய வேண்டுமென்று அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்ட முதல் விஷயம் அவர்களுக்கு ஆளுமை சோதனை செய்வதைப் பற்றி தான் என்று அவள் சொன்னாள். நான் தொழில்முறை ஆலோசனையைப் பெறவில்லை என்றாலும், பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆலோசகரிடம் இருக்கும் அதே விஷயத்திற்கு என்னை வழிநடத்தினார் என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

## உங்கள் பாதையைக் கண்டறிதல்

நம் ஆத்துமாவை குணப்படுத்தும் காரியத்திலே, ஒரே இலக்கை நோக்கி நம்மை அழைத்துச் செல்லும் பல்வேறு சாலைகள்

உள்ளன. நமக்குத் தேவையான குணப்படுத்துதலைக் கண்டுபிடிக்க நாம் அனைவரும் ஒரே பாதையில் செல்ல வேண்டியதில்லை. ஏனென்றால் நாம் தனிப்பட்ட நபர்கள், தேவன் நம்மை தனிப்பட்ட முறையில் வழிநடத்துவார். ஆனால் உங்களுக்கு உதவக்கூடிய சில பரிந்துரைகளை நான் செய்ய விரும்புகிறேன். அவற்றில் சில பேச்சுவார்த்தைக்குட்பட்டவை, சில பேரம் பேச முடியாதவை.

நம் வாழ்வில் குணமடைய உதவும் முதல் விஷயம் தேவனுடனான தனிப்பட்ட உறவும், அவரது வார்த்தையை ஜாக்கிரதையாக வாழ்நாள் முழுவதும் ஆய்வு செய்வதுமாகும். இது பேரம் பேச முடியாதது. என் கருத்துப்படி, ஆரோக்கியமான ஆத்துமாவைத் தேடும் எவரும் தேவனுடைய வார்த்தையிலும் அவருடைய உதவியாலும் மட்டுமே அதைக் கண்டுபிடிக்க முடியும்.

உங்களால் முடிந்தவரை அடிக்கடி படிக்க பரிந்துரைக்கிறேன். வேதாகமக் கொள்கைகளின் அடிப்படையில் எழுதப்பட்ட புத்தகங்களைப் படியுங்கள், கிறிஸ்தவ மனநல மருத்துவர்கள் மற்றும் உளவியலாளர்கள் எழுதிய புத்தகங்களையும் படியுங்கள். நான் கிறிஸ்தவ எழுத்தாளர்களை விரும்புகிறேன். ஏனென்றால் அவர்கள் பொதுவாக தங்கள் உள்ளடக்கத்தை தெய்வீகக் கண்ணோட்டத்தில் வழங்குகிறார்கள். நிச்சயமாக, நீங்கள் நிறைய கற்றுக் கொள்ளக்கூடிய மற்ற எழுத்தாளர்கள் உள்ளனர். ஆனால் உங்கள் ஆத்துமாவில் நீங்கள் எதை எடுத்துக்கொள்கிறீர்கள் என்பதைக் கவனிப்பது புத்திசாலித்தனமானது. ஏதோவொன்று, ஏதோ ஒரு புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதால் அது உண்மையாகிவிடாது.உணர்ச்சி ரீதியாக குணமடைவதைப் பற்றிய நிறைய புத்தகங்களைப் படித்திருக்கிறேன். நான் கற்றுக்கொண்டவற்றில் பெரும்பாலானவை எனக்கு மிகவும் உதவியாக இருந்தன, ஆனால் எப்போதாவது நான் தேவனுடைய வார்த்தைக்கு உடன்படாத ஒன்றைப் படிப்பதுண்டு. அதிர்ஷ்டவசமாக, அந்த ஆலோசனையைப் பின்பற்ற கூடாதென்று என்று எனக்குத் தெரியும்.

நீங்கள் மதிக்கும் ஒரு மனோதத்துவ நிபுணர் அல்லது ஆவிக்குரிய தலைவரின் ஆலோசனை உங்களுக்குத் தேவைப்படலாம் அல்லது அதை தேர்வு செய்யலாம்.

இவ்விரண்டிலும், தொடங்கும் முன் ஒருவரிடமிருந்து நல்ல பரிந்துரையைப் பெறுவது சிறந்தது என்று நான் நினைக்கிறேன். சிகிச்சை உதவியாக இருக்கும். ஏனென்றால் நிறைய பேர் தங்கள் உணர்வுகளைப் பற்றி பேசுவதற்கும், அந்த உணர்வுகள் எங்கே வேரூன்றியுள்ளன என்பதைப் புரிந்து கொள்வதற்கும்.அவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது.

ஆனால் நீங்கள் அதைச் செய்ய விரும்பவில்லை என்றாலோ அல்லது சரியான நபரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றாலோ, நீங்கள் தவறி விடுவீர்கள் என்று சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. தேவன் எனக்கு செய்ததைப் போலவே உங்களுக்குத் தேவையானதைத் தந்து, உங்களுக்கு உதவும் விஷயங்களுக்கு உங்களை அழைத்துச் செல்வார்.

மக்கள் பல்வேறு வழிகளில் உதவியைப் பெறுகின்றனர். இந்தப் புத்தகத்தைத் தயாரிக்கும் போது நான் பேசிய பெண்களில் ஒருவர், அவரது கணவர் ஆபாசப் படத்திற்கு அடிமையானவர். அவர் ஒரு கிறிஸ்தவராக இருந்தாலும், அவரது குழந்தைப் பருவத்திலே அவருக்கு ஆபாசப் படங்கள் அறிமுகமானது அதிலிருந்து ஒருபோதும் விடுபட முடியமலிருந்தார். இது நிச்சயமாகவே என் நண்பருக்கு பேரிடியாக இருந்தது. அவளுக்கு மிகவும் உதவியாக இருப்பது எது என்று நான் அவளிடம் கேட்டபோது, "பச்சாதாபம்" என்று பதிலளித்தாள். இயேசு உண்மையாகவே அவளை புரிந்துக்கொள்கிறார் என்பதை அறிந்துக் கொண்டது அவளுக்கு ஆறுதலின் முக்கிய ஆதாரமாக இருந்தது.

அவளுக்கு இன்னொரு பெண்ணையும் தெரியும், அவளும் அவளது திருமணத்திலும் அதே விஷயத்தை அனுபவித்தவள், அவளுடன் பேசும் போது, அந்தப் பெண்ணுக்கு உண்மையான பச்சாதாபம் இருப்பதை அறிந்தது அவளை ஆறுதல்படுத்தியது.

ஆப்கானிஸ்தானில் பணியாற்றும் போது ஒரு குண்டுவெடிப்பின் விளைவாக மூளை காயம் அடைந்த ஒருவரின் மனைவியிடம் பேசினேன். அவர்கள் தங்கள் திருமணத்தில் பெரும் சிரமங்களை அனுபவித்து வந்ததாக அவர் கூறினார் அவர்களை போன்றே மிகவும் ஒத்த விஷயங்களை அனுபவித்த தம்பதிகளை சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை தீர்க்க வழிகளைக் கண்டுபிடிக்கும்

வரை சிரமத்தை அனுபவித்துக் கொண்டிருந்தனர் என்று அவள் சொன்னாள். அந்த தம்பதியினர் தேவனிடமிருந்து கிடைத்த ஒரு முழுமையான பரிசு, ஏனென்றால் அவர்கள் என்ன அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். கூட்டாக அவர்கள் அதை நன்றாக புரிந்து கொள்ள உதவியாக இருந்தது.

பலர் நம் வலியைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யலாம், ஆனால் நாம் என்ன அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அனுபவித்த ஒருவரை விட வேறு யாரும் அதைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளான ஒருவரிடம், புற்றுநோய் இருக்கும் ஒருவரிடம், துரோகத்தால் விவாகரத்து செய்யப்பட்டவருடன் அல்லது வேறு பல விஷயங்களை அனுபவித்தவருடன், நான் மிகுந்த பச்சாதாபம் கொண்டிருக்க முடியும், ஆனால் போதைப் பழக்கத்திற்கான அடிமைத்தனத்தை நான் ஒருபோதும் அனுபவித்திராததால், அதை அதற்கு அடிமையாகியுள்ள ஒருவர் என்ன அனுபவிக்கின்றார் என்பதை என்னால் உண்மையில் அறிந்துக் கொள்ள முடிகிறதில்லை.

யாரிடமாவது இதைப் பற்றி பேசுங்கள். அது ஒரு ஆலோசகராக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் நீங்கள் நம்பும் ஒருவருடன் உங்கள் கடந்த காலத்தை வெளிப்படுத்துவது, உங்கள் மீது அது கொண்டிருக்கும் அதிகாரத்தை திருடி விடும். துரதிர்ஷ்டவசமாக, நாம் அநேக வேளைகளில் நம் வலியை ரகசியமாக வைத்திருக்கிறோம், நாம் முற்றிலுமாக செயலிழக்கும் வரை. அது நம் ஆத்துமாவை சீர்குழைத்து விடுகிறது.

செயலிழந்து இருப்பது என்பது நாம் வாழும் உலகில் செயல்படவில்லை என்று அர்த்தமல்ல. ஆனால் நாம் சரியாக செயல்படவில்லை என்று அர்த்தமாகும். நான் என் குழந்தை பருவத்தில் ஏற்பட்ட பாலியல் துஷ்பிரயோகத்தை ரகசியமாக வைத்திருந்தேன், அது என்னை அடிமைத்தனத்திலே வைத்திருந்த விஷயங்களில் ஒன்றாக இருந்தது. எனது இருபத்தி மூன்றாம் வயதில் டேவுடன் திருமணம் நடக்கும் வரை என் அம்மாவைத் தவிர யாரிடமும் சொன்னதில்லை. எனக்கு என்ன நடந்தது என்று யாராவது தெரிந்து கொள்வார்களோ என்ற பயம் என் எண்ணங்களையும் செயல்களையும் ஆண்டு கொண்டு என்னை

செயலிழந்த வழிகளில் நடந்து கொள்ள செய்தது. என் ஒன்பது வயதில் என் அப்பா எனக்கு செய்து கொண்டிருந்ததை என் அம்மாவிடம் சொன்ன போதிலும், அவள் என்னை நம்பவில்லை, அதனால் வேறு யாரும் என்னை நம்ப மாட்டார்கள் என்று நினைத்தேன்.

மக்கள் நம் கடந்த காலத்தை அறிந்தால், நம்மை நிராகரிப்பார்கள், குற்றம் சாட்டுவார்கள் அல்லது கடுமையாக தீர்ப்பளிப்பார்கள் என்று நாம் நினைக்கலாம், ஆனால் அவர்கள் அவ்வாறு செய்தால், நம்மை விட அவர்களுக்கு பெரிய பிரச்சனைகள் இருக்கும். உங்களுக்கு ஒரு ஏமாற்றமான அனுபவம் இருந்தால், அந்த ஏமாற்றம் உங்களை மோசமாக உணர வைக்கும் இரகசியங்களுக்கு அடிமைப்படுத்த அனுமதிக்காதீர்கள். மனந்திறந்து பேசுவதற்கு ஒருவரைக் கண்டுபிடியுங்கள். நிச்சயமாவே, இயேசு எப்போதுமே இருக்கிறார், அவர் உங்களை முழுமையாக புரிந்துகொண்டு பரிவு காட்டுகிறார்.

நீங்கள் பொறுமையாக இருக்கவும், உங்களை ஊக்குவிக்க விரும்புகிறேன். நமது சில பிரச்சனைகள் நம் ஆத்துமாவில் ஒரு சிக்கலான குழப்பத்தை ஏற்படுத்திவிடுகின்றன அதை அவிழ்க்க நேரம் எடுக்கும். குணப்படுத்துதல் பொதுவாக வெவ்வேறு அளவுகளில் வருகிறது, கொஞ்சம் கொஞ்சமாக நடக்கின்றது. எனக்கு அப்படியாகத்தான் ஏற்பட்டது. தேவன் தாம் செய்ய வேண்டியதை விரைவாகச் செய்வதை விட சரியாகச் செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதால், அவசரப்படுவது இல்லை. நாம் மிகவும் பொறுமையற்று அவசரப்பட்டால் தேவனுடன் உறவில் இருப்பது மிகவும் வெறுப்பாக இருக்கும், ஏனென்றால் அவருடைய வாக்குறுதிகள் விசுவாசம் மற்றும் பொறுமையின் மூலம் பெறப்படுகின்றன.

ஒருபோதும் கைவிட்டு விடாதே! சரியானதைச் செய்வதில் சோர்வடைய வேண்டாம், சரியான நேரத்தில் நீங்கள் அறுவடை செய்வீர்கள் (கலாத்தியர் 6:9). செயலில் ஈடுபடும் நபராக இருங்கள், தேவன் உங்களுக்குக் காட்டுவதை உடனடியாகச் செய்ய எப்போதும் தயாராக இருங்கள். என்ன செய்ய வேண்டுமென்பதை தெரிந்தும் அதை செய்யாமலிருப்பது, மருந்து

சீட்டிலுள்ள மருந்துகளையெல்லாம் வாங்கி வைத்துக் கொண்டு அதை உட் கொள்ளாமலிருந்தால் பயன் அளிக்காதது போன்றாகிவிடும்.

வாழ்நாள் முழுவதும் கற்பவராக இருங்கள், குறிப்பாக உங்களைப் பற்றி. உங்களுக்குள்ளிருந்து ஒரு அற்புதமான நபர் வெளியே வர காத்திருக்கிறார்!

உங்களுக்குள்ளிருந்து ஒரு அற்புதமான நபர் வெளியே வர காத்திருக்கிறார்!

## அதிகாரம் 6

# நீங்கள் தேவனுக்கு பிரியமானவர்கள்

*பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.*

*- 1 யோவான் 3:2*

நிபந்தனையற்ற அன்பை மக்கள் விரும்புகிறார்கள். நாம் நாமாக இருப்பதற்காக அல்லது நாமாக இருந்தாலும் நேசிக்கப்படுகிறோம் என்பதை அறிவதே வாழ்க்கையில் மிகப் பெரிய மகிழ்ச்சி .தேவன் நம்மை நேசிக்கப்படும்படி படைத்தார், அந்த அன்பு இல்லாமல் நாம் நன்றாக செயல்பட மாட்டோம். என் கருத்துப்படி, எந்த ஒரு நபரும், அவர்கள் எவ்வளவு நல்லவர்களாகவும், அன்பானவர்களாகவும் இருந்தாலும், முழுமையான நிபந்தனையற்ற அன்பை நமக்கு அளிக்க முடியாது. தேவனால் மட்டுமே அது முடியும். “தேவன் எப்பொழுதும் போலவே இந்த நேரத்திலும் உங்களை நேசிக்கிறார்” என்று நான் உங்களிடம் சொன்னால், நீங்கள் என்ன நினைப்பீர்கள்?

எனது மாநாடுகளில் கலந்துகொள்பவர்களிடம் நான் அநேக வேளைகளில் இப்படியாக சொல்வதுண்டு, அவர்களின் குழப்பமான மற்றும் சந்தேகத்திற்கிடமான தோற்றத்திலிருந்து அவர்கள் அதை நம்புகிறார்களாக என்று உறுதியாக அவர்களுக்கு தெரியவில்லை

என்பதை என்னால் பார்க்க முடிகிறது. நம்மில் பெரும்பாலோருக்கு, நிபந்தனையற்ற அன்பு என்ற சித்தாந்தம் நம் எண்ணங்களுக்குள் பொருந்துகிறதில்லை. ஆனால் நாம் என்ன செய்கிறோம் என்பதன் அடிப்படையில் தேவன் நம்மை நேசிப்பதில்லை, ஆனால் அவர் யார் என்பதன் அடிப்படையில் தேவன் நம்மை நேசிக்கிறார் என்பதை நான் விளக்கும்போது, அவர்கள் அதை புரிந்துக் கொள்கிறார்கள். இருப்பினும், தேவனுடைய அன்பை சம்பாதிப்பதற்காக அவர்கள் எதையும் செய்ய முடியாது என்று மக்களை நம்ப வைக்க எனக்கு இன்னும் சிறிது காலம் ஆகும். இது ஒரு இலவச பரிசு மேலும் அதை விசுவாசத்தால் மட்டுமே பெற முடியும்.

தேவன் நம்மீது வைத்திருக்கும் அன்பில் நம்பிக்கை வைக்குமாறு அப்போஸ்தலன் யோவான் கூறுகிறார் (1 யோவான் 4:16). நாம் முதலில் அதை விசுவாசத்தால் மட்டுமே முழுமையாகப் பெறுகிறோம். பின்னர் நாம் அதை தொடர்ந்து நம்பினால் நாளடைவில் நாம் நேசிக்கப்படுகிறோம் என்பதை உணர தொடங்குவோம். நன்மையான ஏதோ ஒன்றை எதுவும் செய்யாமல் சம்பாதிக்கலாம் என்ற கருத்து நமக்கு அந்நியமானதாக இருக்கின்றது. தேவன் நம்மை நேசிப்பது மட்டுமல்ல, நாம் அவருக்கு பிரியமானவர்கள்.

> நாம் தேவனுக்கு பிரியமானவர்கள்.

தேவனுக்குப் பிரியமானவர் என்றால் என்ன? இது பாசம் மற்றும் அன்பின் சொல், மேலும் இது ஏங்குவது என்றும் பொருள்படும். மரியாதையுடன் பாசமாக மதிப்பது என்றும் பொருள்படும். பிரியமானவர் என்ற வார்த்தையை நான் ஆழ்ந்து யோசித்த போது, அது நேசிக்கப்படுகிறோம் அல்லது ஒவ்வொரு தருணத்திலும் நேசிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருப்பது என்ற அர்த்தம் கொண்டிருக்கிறது என்று உணர்ந்தேன். சற்று யோசித்துப் பாருங்கள்: நீங்கள் இப்போதும், ஒவ்வொரு கணத்திலும் நேசிக்கப்படுகிறீர்கள். நீங்கள் பரிபூரணமாக நேசிக்கப்படாத ஒரு தருணம் இருந்ததில்லை மற்றும் இருக்காது.

*நீங்கள் படிப்பதை நிறுத்திவிட்டு, கண்களை மூடிக்கொள்ளுங்கள், உங்கள் ஆத்துமா அமைதியாகட்டும். இப்போது உரக்கச் சொல்லுங்கள், "நான் தேவனுக்கு பிரியமானவள்" என்று சில முறை சொல்லுங்கள், அது உங்கள் ஆத்துமாவை பாதிக்கட்டும். குறிப்பாக நீங்கள் நேசிக்கப்படுவதாகவும் அல்லது நேசிக்கப்படுவதாக ஒருபோதும் உணராதிருப்பீர்களென்றால் இந்த பயிற்சி மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன், பிதாவாகிய தேவன் இயேசுவைத் தம்முடைய பிரியமான குமாரன், அவரில் அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார் என்று குறிப்பிட்டார் (மத்தேயு 3:17). சங்கீதக்காரன் தாவீதின் பெயர் தேவனுக்கு பிரியமானவர் என்று பொருள்படும். தானியேல் மூன்று முறை தேவதூதர்களால் தேவனுக்கு பிரியமானவர் என்று குறிப்பிடப்பட்டார். மேலும் பவுல், சில சமயங்களில் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளை பிரியமானவர்கள் என்று குறிப்பிட்டார். மேலும், அப்போஸ்தலன் யோவான் தன்னை இயேசுவுக்கு அன்பான சீஷனாக அல்லது இயேசு நேசித்த சீஷனாக குறிப்பிட்டார். நிச்சயமாக யோவான், தேவன் அவர் மீது கொண்டிருந்த அன்பைப் பற்றிய ஒரு ஆழமான வெளிப்பாட்டை அனுபவித்த ஒரு மனிதர், அவ்வாறு சொல்லும் அளவுக்கு தைரியம் கொண்டிருந்தாரென்றால் எவ்வளவு நம்பிக்கை அவருக்கு இருந்திருக்கும்!*

தேவனுடைய அன்பு காயப்பட்ட நம் ஆத்துமாக்களுக்கு சுகத்தை கொண்டு வருவது மட்டுமல்லாமல், நம்பிக்கையையும் தைரியத்தையும் தருகிறது. பரிபூரண அன்பு பயத்தை விரட்டுகிறது என்றும், இன்னும் பயம் இருந்தால், நாம் தேவனுடைய அன்பிலே முழுமை அடையவில்லை என்றும் அப்போஸ்தலனாகிய யோவன் கூறினார்.

> *அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல. 1 யோவான் 4:18.*

நான் ஒரு இளம் விசுவாசியாக வேதாகமத்தை வாசித்து அதை முற்றிலும் தவறாகப் புரிந்துகொண்டது எனக்கு நினைவிருக்கிறது.

என்னால் மற்றவர்களை முழுமையாக நேசிக்க முடிந்தால், என் வாழ்க்கையில் எனக்கு எந்த பயமும் இருக்காது என்பது தான் இதற்கு அர்த்தம் என்று நினைத்தேன். நான் மற்றவர்களை நேசிக்க மிகவும் கடினமாக முயற்சித்தேன் ஆனால் எப்போதும் தோல்வியடைந்து சுயநலத்திற்குத் திரும்புவது போல் தோன்றியது. இறுதியில், நான் வேறு ஒருவரை நேசிப்பதற்கு முன் எனக்கு வழங்கப்படும் தேவனுடைய பரிபூரண அன்பை நான் பெற்றுக் கொண்டு என்னை நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும், அப்போதுதான் நான் பிறரை சரியாக நேசிக்க முடியும் என்பதைக் கற்றுக்கொண்டேன்,

நாம் தேவனுடைய அன்பைப் பெற்று அனுபவிக்கும்போது, நம் வாழ்வில் பிற மக்களை அனுமதிக்கவும், நம்மையே அவர்களுக்கு கொடுக்கவும் நாம் பயப்படுவதில்லை. எவ்வித ஒதுக்கீடும் இல்லாமல் நாம் அவர்களை நேசிக்க முடியும், ஏனென்றால் நாம் பயன்படுத்திக் கொள்ளப்படுவோம் என்ற பயத்துடன் வாழ மாட்டோம். தேவனுடைய பரிபூரண அன்பு பயத்தை விரட்டுகிறது.

தேவனால் நிபந்தனையின்றி நேசிக்கப்படுவதைப் பற்றிய எண்ணத்தை நீங்கள் முழுமையாகப் புரிந்துகொள்ள சிறிது காலம் எடுக்குமென்றால் சோர்வடைய வேண்டாம். மக்களின் மனநிலையை அடிப்படையாக வைத்து அன்பு பொங்கும் அல்லது அடங்கும் என்றும், பிறர் நம்மிடம் விரும்புவதை நாம் அவர்களுக்கு கொடுக்கிறோமா இல்லையா என்பதை பொருத்தது அன்பு என்று நம் அனுபவம் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறது. மக்களை சந்தோஷப்படுத்துவதின் மூலமும், நாம் அவர்களைப் பிரியப்படுத்தாவிட்டால் அவர்களின் அன்பை நாம் இழந்துவிடுவோம் என்ற பயத்தால் நாம் பிறரின் அன்பைப் பெற்றுக் கொள்ள ஒரு குறிப்பிட்ட வடிவத்துக்குள் விழுந்துவிடுகிறோம். மக்கள் நம்மை பூரணமாக நேசிக்கிறதில்ல, ஆனால் தேவனுடைய அன்பு பரிபூரணமானது, ஏனென்றால் அவர் பரிபூரணமானவர். அவர் அன்பாயிருக்கிறார், எனவே அவர் நிபந்தனையின்றி நம்மை நேசிப்பதை விட வேறு எதையும் செய்ய இயலாது.

தேவனின் அன்பு பூரணமானது, ஏனென்றால் அவர் பரிபூரணமானவர்.

நாம் எவ்வளவு அதிகமாக இயேசுவோடு ஐக்கியம் கொண்டு அவருடைய குணதிசயத்தைப் பற்றி,அவருடைய நன்மைகளை, கிருபைகளை, இரக்கங்களை நாம் அனுபவிக்கின்றோமோ, அவ்வளவு ஆழமாக அவருடைய அற்புதமான அன்பை அறிந்து கொள்கிறோம். நாம் தேவனுடைய அன்பிலே அதன் குணப்படுத்தும் விளைவை உணரத் தொடங்குவதற்கு முன் நீண்ட, நீண்ட காலத்திற்கு அவரின் அன்பில் மூழ்கியிருக்க வேண்டிய அளவு நம் ஆத்துமா மிக ஆழமாக காயமடைந்திருக்கலாம். ஆழமான காயங்கள் குணமடைய நேரம் எடுக்கும், எனவே பொறுமையாக இருங்கள்.

## நான் அவர்களை நேசிக்கிறேன் என்று சொல்லுங்கள்

ஐந்து வருடங்களாக ஒவ்வொரு செவ்வாய் மாலையும் என் வீட்டில் ஒரு வேத பாட வகுப்பு நடத்தினேன். நாளடைவில், என் தேவாலயத்தில்

வியாழக் கிழமை காலை நேரங்களில் வேத பாட வகுப்பு நடத்த நான் அழைக்கப்பட்டேன். அதை நான் முதலில் பேசிய பொது மேடை வாய்ப்பு என்பதாய் குறிப்பிடுகிறேன், நான் உண்மையிலே அது மிக நன்றாக இருக்க வேண்டும் என்று விரும்பினேன். கர்த்தர் நான் என்ன கற்பிக்க வேண்டுமென்று விரும்புகிறார் என்பதைப் பற்றி அறிந்துக் கொள்ள நான் விடாமுயற்சியுடன் ஜெபித்தேன், அப்போது அவர் மக்களை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை நான் சொல்ல வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதை உணர்ந்தேன். நான் முதலில் எதிர்த்தேன் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும், அவர் அவர்களை நேசிக்கிறார் என்பது அனைவருக்கும் தெரியும். எல்லாவற்றிற்கும் மேலாக, குழந்தைகளாய் நம்மில் பலர் இதைப் பற்றிப் பாடியிருக்கிறோம்: "இயேசு எந்தன் நேசரே, கண்டேன் வேத நூலிலே" என்று தேவனிடம் கூறினேன்.

அவர் அவர்களை நேசிக்கிறார் என்று நான் அவர்களிடம் சொல்ல வேண்டும் என்பதில் கர்த்தர் மிகவும் தெளிவாக இருந்தார்.

அவர் அவர்களை எவ்வளவாக நேசிக்கிறார் என்பதை மக்கள் அறிந்திருப்பார்களேயென்றால், அவர்கள் பயத்தால் துன்புறுத்தப்பட மாட்டார்கள் என்று கூறினார். அதற்கு கீழ்ப்படிந்து, நான் தேவனுடைய அன்பைப் பற்றி கற்பித்தேன், செய்தி அற்புதமான முறையில் பெற்றுக் கொள்ளப்பட்டது. அந்த வெளிப்பாடு மக்களுக்கு மட்டுமல்ல, எனக்கும் தேவை என்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. தேவன் அவர்களை நேசிக்கிறார் என்று நாம் மற்றவர்களிடம் சொல்லலாம், இருப்பினும் நம்மேல் அவர் கொண்டிருக்கும் அவருடைய அன்பைப் பற்றிய வெளிப்பாடு நமக்கு இல்லாமல் இருக்கலாம்.

தேவன் அவர்களை எவ்வளவாக நேசிக்கிறார் என்பதைப் பற்றி மற்றவர்களுக்குக் கற்பிக்க நான் தயாராகிக்கொண்டிருந்த போது, எனக்கும் அதே செய்தி தேவை என்பதை நான் கண்டுபிடித்தேன். தேவன் என்னை நேசிக்கிறார் என்று நான் நம்பினேன். ஆனால் அவர் என் மீது கொண்டிருந்த அன்பு நிபந்தனைக்குட்பட்டது என்று நான் ஒப்புக்கொண்டிருந்தேன். பல ஆண்டுகளில், அவருடைய அன்பில் என் நம்பிக்கை அதிகமாக வளர்ந்தது, ஆனாலும் இப்போதும் நான் சரியாக நடந்து கொள்ளாதபோதும் தேவன் என்னை நேசிப்பதை நிறுத்திக் கொள்ளவில்லை என்பதை நான் அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்கிறேன்.

தேவன் நம்மை எவ்வளவு நேசிக்கிறார் என்பதைப் பற்றி வேதம் என்ன கற்பிக்கிறது என்பதையும், என் வாழ்க்கையில் அவரது அன்பைக் கவனிக்க கற்றுக் கொள்ளவும் நான் ஜாக்கிரதையுடன் படித்து, தியானித்தபோது, இறுதியாக நேசிக்கப்படுவதை உணர ஆரம்பித்தேன். இது ஒரு ஆரம்பம், ஆனால் நிச்சயமாக என் பயணத்தின் முடிவு அல்ல. நான் தேவனின் அன்பைப் பற்றி நினைத்தேன். தேவனின் அன்பைப் பற்றி நான் கண்ட ஒவ்வொரு வேத வாக்கியத்தையும் ஒரு குறிப்பேட்டில் எழுதி வைத்திருந்தேன். தேவனின் அன்பைப் பற்றிய புத்தகங்களையெல்லாம் படித்தேன். தேவன் என்னை நேசிக்கிறார் என்று என் ஜெப நேரத்தில் சத்தமாக அறிக்கையிட்டேன். ஒருவேளை, நீங்கள் விரும்பபடாதவர் என்று நீங்கள் உறுதியாக நம்பிக் கொண்டிருக்கலாம், தேவன் உங்கள் மீது கொண்டிருக்கும் அன்பைப்பற்றிய வெளிப்பாட்டை நீங்கள் பெறுவதற்கு நான் செய்த மாதிரியான விடாமுயற்சி தேவைப்படும்.

நம் வாழ்வில் ஆழமாக காயப்பட்டிருப்பவர்களுக்கு, தேவனுடைய அன்பைப் பெற்றுக் கொள்வது மிகவும் கடினமாக இருக்கலாம். ஆனால் நாம் தேவனின் அன்பைப் பெற்றுக் கொள்ள ஆரம்பித்தவுடன், நம் ஆத்துமாவை குணப்படுத்த தேவையான தைலமாக அது இருப்பதை நாம் காண்போம்.

தேவன் தங்களை நேசிக்கிறார் என்பதை மக்கள் அறிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை அப்போஸ்தலன் பவுல் அறிந்திருந்தார். அவர்,

> விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, (எபேசியர் 3:17).

தேவனுடைய அன்பிலே ஆழமாக வேரூன்றி இருக்கும்படி விசுவாசிகளை பவுல் ஊக்குவித்தார் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஆழமாக வேரூன்றியிருக்கும் எந்த மரமும் புயலடிக்கும் போது விழுந்து விடுவதில்லை அல்லது அழிக்கப்படுவதுமில்லை. மேலும் தேவன் நம்மீது கொண்டிருக்கும் ஆழமான அன்பின் வெளிப்பாட்டை நாம் கொண்டிருக்கும் போது, அது வாழ்க்கையின் சோதனைகளில் உறுதியாக நிற்க நமக்கு உதவுகிறது.

நமக்கு நிகழும் பல விஷயங்கள் நியாயமற்றவை மற்றும் வேதனையானவை. மேலும் இது அடிக்கடி பழைய வழிகளுக்கு திரும்பத் தூண்டுகிறது. அந்த சமயங்களில் பழைய வழிகளுக்கு திரும்பி விடலாமென்று தோன்றுகிறது, மற்றும் தேவன் நம்மை நேசிக்கவில்லை அல்லது அவர் நம்முடன் இல்லை என்று நினைக்க ஆரம்பிக்கின்றோம், ஆனால் அது முற்றிலும் உண்மை இல்லை.

தேவன் நம் வாழ்வில் உள்ள அனைத்தையும் கவனித்துக் கொண்டிருக்கிறார், நம்முடைய கஷ்டங்களில் நாம் அவரை நம்பினால், இறுதியில்

அவை அனைத்தையும் அவர் நம் நன்மைக்காக மாற செய்கிறார் என்பதைப் பார்ப்போம் (ரோமர் 8:28).

விசுவாசிகள் தேவனுடைய அன்பை தாங்களாகவே அனுபவிக்க வேண்டும் என்று பவுல் ஜெபித்தார் (எபேசியர் **3:18**). அந்த எண்ணமும் **1** யோவான் **4:16**ல் காணப்படும் மற்றொன்றும் என் கவனத்தை ஈர்த்தது. அவை, அவதானிப்பதன் மூலம் தேவனின் அன்பை அங்கீகரித்து உணர்ந்து கொள்ளுங்கள் என்று அறிவுறுத்துகிறது. இந்த இரண்டு வசனங்களையும் ஒன்றாகக் பார்க்கும் போது நம் வாழ்வில் தேவனின் அன்பைக் கவனிக்க ஊக்குவிக்கிறது. ஏனெனில் அதை பல்வேறு வகைகளில் பார்க்கவும் அனுபவிக்கவும் முடியும்.

இந்த பயிற்சி பல ஆண்டுகளாக தனிப்பட்ட முறையில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. என் வாழ்க்கையில் நடக்கும் எந்த ஆசீர்வாதத்தையும் தற்செயலாக நடந்தது என்று எடுத்துக் கொள்ளாமல், சிறிதானதைக் கூட, அதில் தேவனுடைய அன்பைப் பார்க்க நான் என்னை பயிற்றுவித்திருக்கிறேன். இதற்கு நான் கண்டுபிடித்த ஒரு வழி, தேவனுடனான என் அன்றாட உறவில் நான் குழந்தையைப் போன்று இருக்க வேண்டும். சிறிது காலத்திற்கு முன்பு நான் ஒரு குறிப்பிட்ட நண்பரைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன். அந்த என் எண்ணங்கள் இவ்வாறாக இருந்தன: அவள் என்னை நேசிக்கிறாள் என்று அவள் என்னிடம் ஒருபோதும் சொன்னதில்லை அல்லது அவளுடன் நேரம் செலவழிக்கும்படி என்னிடம் கேட்கவில்லை என்பதாக இருந்தது. ஓரிரு நாட்களில், அவளிடமிருந்து எனக்கு இந்த குறுஞ்செய்தி வந்தது: "நான் உன்னை நேசிக்கிறேன்!" அதன் பிறகு ஒரு நாள் அவள் என்னை மதிய உணவிற்குச் அழைத்துச் செல்ல திட்டமிட்டிருந்தாள். ஆனால் நான் ஏற்கனவே வேறொன்றை திட்டமிட்டிருந்தேன், அதனால் செல்ல இயலவில்லை. இந்த இரண்டு நிகழ்வுகளும் தேவனிடமிருந்து எனக்கு கிடைத்த "கண்ணடிப்புகள்" என்பதாக நான் எடுத்துக் கொண்டேன். அவர் என்னிடம் சொன்ன விதம், "ஜாய்ஸ், உன் தேவைகளை நான் அறிவேன்; நீ என்னில் மகிழும் போது, உன் இருதயத்தின் விருப்பங்களை உனக்குத் தருவேன்" (சங்கீதம் **37:4**).

இது போன்ற பல விஷயங்களுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே. இது நம் அனைவருக்கும் நடக்கும் என்று நான் நம்புகிறேன், ஆனால் இவையெல்லாம் தேவனுடைய அன்பின்

*அடையாளங்களென்று அவற்றை எதிர்பார்க்கவும், அங்கீகரிக்கவும் தவறிவிட்டால், நாம் அவைகளை இழக்க நேரிடும். இது உங்களுக்கு முட்டாள்தனமாகத் தோன்றுகிறதா? ஒருவேளை நீங்கள் ஜாய்ஸ், ஒரு நபர் உங்களைப் பற்றி எப்படி உணருகிறார் என்று நீங்கள் யோசித்துக்கொண்டிருப்பதால், நீங்கள் ஒரு குறுஞ்செய்தியை பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதை உறுதிசெய்வதை விட, தேவனுக்கு முக்கியமான காரியங்கள் உள்ளன என்பதாக யோசித்துக்கொண்டிருக்கலாம். ஒருவேளை தேவனுடனான இந்த வகையான உறவு உங்களுக்கு குழந்தைத்தனமானதாக தோன்றலாம், ஆனால் நாம் சிறு குழந்தைகளைப் போல அவரிடம் வர வேண்டும் என்று இயேசு சொன்னார் (மத்தேயு 18:3).*

> *எதிரி எடுத்துக் கொண்டதை தேவன் நமக்குத் திருப்பித் தருகிறார்.*

பாலியல் துஷ்பிரயோகம், வன்முறை மற்றும் பயம் ஆகியவற்றிக்கு நான் என் குழந்தைப் பருவத்தை இழந்தேன். கவலையற்ற, நம்பிக்கை மிகுந்த குழந்தையாக இருக்க எனக்கு ஒருபோதும் வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் தேவன் மறுசீரமைக்கும் தேவன், மற்றும் அவர் எதிரி நம்மிடமிருந்து என்ன எடுத்துக் கொண்டானோ அதை திரும்ப கொடுக்கிறார். தேவனுடன் உங்கள் உறவை ஒரு சிறு குழந்தையைப் போல அணுக கற்றுக்கொள்ளுங்கள், அவரை நம்பி, எல்லாவற்றிற்கும் அவரை சார்ந்து இருப்பதைக் கற்றுக் கொள்ளுங்கள்.

நான் எழுதிய முதல் புத்தகம் சில பக்கங்களை மட்டுமே கொண்டது. அதின் தலைப்பு நான் அவர்களை நேசிக்கிறேன் என்று அவர்களிடம் சொல்லுங்கள் என்பதே. ஏறக்குறைய நூறு மொழிகளில் அந்த புத்தகம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, தேவன் இன்றும் அதை தொடர்ந்து பயன்படுத்துகிறார். அது, இந்த அத்தியாயத்தில் நான் உங்களுடன் என்ன பகிர்ந்து கொள்கிறேனோ அதனுடைய எளிமையான பதிப்பாகும் நான் அதற்கு பிறகு பல புத்தகங்களை எழுதியுள்ளேன், அவற்றில் எல்லாம் தேவன் நம்மை எவ்வளவு நேசிக்கிறார் என்பதைப் பற்றி கற்பிக்கும் சில பகுதிகள்

அடங்கியிருக்கும் என்று நான் நம்புகிறேன். நான் புதிதாக எதுவும் சொல்ல முடியாததால் அப்படி எழுதவில்லை, ஆனால் தேவனுடைய நிபந்தனையற்ற அன்பைப் பெற்றுக் கொள்ளவும், நாம் தேவனுக்கு பிரியமானவர்கள் என்பதை உணரவும் நாம் கற்றுக் கொள்ளும் வரை, நம்மை வேறு எதுவும் திருப்திப்படுத்தாது.

## பெற்றுக் கொள்ளக் கற்றுக்கொள்ளுங்கள்

நீங்கள் ஒருவேளை இவ்வாறாக நினைக்கலாம். ஆனால் தேவன் ஏன் என்னை நேசிக்க வேண்டும்? அவர் உங்களை நேசிக்க தெரிந்துக் கொண்டதால் நேசிக்கிறார், அவர் நேசிக்க விரும்புவதால், அவருடைய சொந்த தீவிர ஆசையை திருப்திப்படுத்துவதற்காக தேவன் நேசிக்கிறார். தேவன் அன்பாயிருக்கிறார். மேலும் அன்பு ஊற்றி விடப்பட வேண்டும்; அது தன்னை பொழிய யாரையாவது கண்டுபிடிக்க வேண்டும். அது உயிருள்ள சக்தியாக இருப்பதால் அது செயலற்ற நிலையில் இருக்க முடியாது. நமக்காக மரிக்கவும், நம்முடைய பாவங்களினிமித்தம் கிரயம் செலுத்தவும், அவர் நம்மீது வைத்திருக்கும் மகாபெரிய, அற்புதமான தீவிர அன்பை திருப்திப்படுத்துவதற்காகவும் தேவன் தம் குமாரனை அனுப்பினார் (எபேசியர் 2:4-5). தேவன் நம்மை நேசிக்கிறார் என்பதற்கான சாத்தியமான காரணத்தை உங்களால் அல்லது என்னால் கண்டுபிடிக்க முடியாது, ஆனால் உண்மை என்னவென்றால், அவர் நேசிக்கிறார், விசுவாசத்தின் மூலம் அவருடைய அன்பைப் பெறுவது அல்லது வெறுமையான, நிறைவேறாத, திருப்தியற்ற, உடைந்த வாழ்க்கையைத் தொடருவது நம் கையில் உள்ளது. பெற்றுக் கொள்வதென்பது, கொடுக்கப்படுவதை பெற்றுக் கொள்ளும் ஒரு பாத்திரமாக மாறுவதாகும். இன்று அதைச் செய்ய முடியுமா? காயப்பட்ட ஆத்துமாவை திறந்து, இப்போது உங்கள் மீது ஊற்றப்படும் தேவனின் அன்பை வெறுமனே சுவாசித்து உட்கொள்ளுவீர்களா? நீங்கள் தான் பிரியமானவர் - இந்த நேரத்தில் தானே நீங்கள் நேசிக்கப்படுகிறீர்கள்.

தேவனுடனான நம் உறவில் நாம் பலவற்றை இழக்கிறோம், ஏனென்றால் விசுவாசத்தால் நாம் பெற்றிருக்க வேண்டுமென்று

*அவர் விரும்புவதை ஏற்றுக் கொள்வதற்கு பதிலாக, அதை பெற்றுக் கொள்ள முயற்சி செய்கிறோம். பெற்றுக் கொள்வது என்பது ஏதாவதொன்றை போராடி, முயற்சி செய்து பெற்றுக் கொள்வதாகும். தேவன் நம்மை நேசிக்க நாம் முயற்சி செய்து நம்மை நேசிக்க செய்ய முடியாது, ஏனென்றால் அவர் ஏற்கனவே நம்மை நேசிக்கிறார். அவர் எப்போதும் நேசிப்பார். அவர் உங்களை நித்திய நேசத்துடன் நேசிக்கிறார் என்று அறிக்கையிடுகிறார் (எரேமியா 31:3). அது ஒரு முடிவுக்கு வர முடியாத நேசம். எனவே தயவுசெய்து தேவனின் அன்பை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் பெரிய தவறுகளை அல்லது பெரிய பிரச்சனைகளை சந்திக்கும் அந்த நாட்களில் உங்கள் ஆத்துமாவின் எதிரியான சாத்தான் தேவனின் அன்பிலிருந்து உங்களைப் பிரிக்க முயற்சி செய்யும் போது, உங்கள் வேதத்தை திறந்து, இந்த வசனங்களைப் படியுங்கள்:*

> *உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், (ரோமர் 8:35).*

> *மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் (ரோமர் 8:38-39).*

*உங்கள் வாழ்க்கையில், உங்களை காயப்படுத்தி, உங்கள் இருதயத்தை உடைத்து விடும்படி, என்ன நடந்திருந்தாலும், அது உங்களை தொடர்ந்து துன்புறுத்த தேவையில்லை. ஊழல் குழியிலிருந்தும், ஒன்றுமில்லாமையிலிருந்தும் உங்கள் வாழ்க்கையை மீட்டு எடுக்கும் அளவுக்கு உங்களை நேசிக்கிறேன் என்று தேவன் தமது வார்த்தையிலே கூறுகிறார் (ஏசாயா 38:17). இருதயம் உடைந்தவர்களை குணப்படுத்தவும், அவர்களுடைய காயங்களைக் கட்டவும், அவர்களுடைய காயங்களைக் குணப்படுத்தவும் இயேசு*

*அனுப்பப்பட்டார் (ஏசாயா **61:1**). அவருடைய அன்பு உங்களுடைய காயப்பட்ட உள்ளத்தில் செய்ய நினைக்கும் வேலையைச் செய்யத் தொடங்கட்டும்!*

## அத்தியாயம் 7

# காயப்படும் மக்கள், மக்களை காயப்படுத்துவர்

*பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்.*

*-ரோமர் 12:19*

நீங்கள் குணப்படும் பயணத்தில், தேவன் உங்களிடம் கேட்கும் மிகவும் கடினமான விஷயம் உங்களை காயப்படுத்திய மக்களை மன்னிப்பதாகும். இது நிச்சயமாகவே எனக்கு மிகவும் சவாலாக இருந்தது. காயப்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் மற்ற மக்களை காயப்படுத்துவர் என்பதை தேவன் எனக்கு காட்டியது எனக்கு மிகவும் உதவிய விஷயங்களில் ஒன்றாகும். நாம் பொதுவாக எவ்வளவு துன்புறுத்தப்படுகிறோம் என்று மட்டுமே நினைத்துக் கொண்டு நம்மை காயப்படுத்தியவர்களிடம் கோபப்படுகிறோம், ஆனால் பெரும்பாலான நேரங்களில் அவர்களும் புண்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

யாரோ அல்லது ஏதோவொன்று அவர்களை காயப்படுத்தியிருக்கிறது. மேலும் அவர்கள் தங்கள் சொந்த வலியின் விளைவாக செயல்படுகிறார்கள். அவர்களின் செயல்கள் மற்றவர்களை காயப்படுத்துகின்றன என்பதை உணராமலே செயற்படுகிறார்கள். இறுதியாக என் தந்தை எண்பது வயதாக இருந்த போது என் குழந்தை பருவத்தில் என்னை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியதற்காக வருந்துவதாக என்னிடம்

சொன்னார். மேலும் அவர், "நான் செய்வது உன்னை மிகவும் மோசமாக புண்படுத்தும் என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை." என்று கூறினார். சில வழிகளில் இது அபத்தமானது. அவர் என்னை காயப்படுத்துவதை எப்படி அறியாமல் இருந்திருக்க முடியும்? அவர் செய்வது தவறு என்று அவருக்குத் தெரியும் இல்லையெனில் அதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று என்னிடம் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்க மாட்டார். ஆனால் அவர் தனது சொந்த காம ஆசைகளில் மிகவும் மூழ்கியிருந்ததால், அவருடைய செயல்கள் என்னை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை அவர் ஒருபோதும் உணரவேவில்லை.

நாளடைவில் என் தந்தை தகாத உறவுமுறைகளில் ஈடுப்பட்டுக் கொண்டிருந்த ஒரு குடும்பத்தில் இருந்து வந்தவர் என்பதை நான் இறுதியில் கண்டுபிடித்தேன்., நான் சிறுமியாக இருந்த போது அவரது தந்தையும், (என் தாத்தா) என் மாமாக்கள் இருவரும் என்னைத் தவறாக பயன்படுத்திக் கொள்ள முயன்றனர். எனவே பாலியல் துஷ்பிரயோகத்தின் பண்புகள் அந்த குடும்பத்தில் இருந்தன என்று எனக்குத் தெரியும் பின்னிணைப்பு I-ல் நான் அளித்துள்ள புள்ளிவிவரங்களைப் படித்தால், அமெரிக்காவில் 1 மில்லியன் பெண்கள் தந்தை-மகள் உறவில் ஈடுபடுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொள்வீர்கள். துரதிர்ஷ்டவசமாக, நாம் உணர்ந்ததை விட இது மிகவும் பொதுவானதொன்றாக உள்ளது.

என் தந்தை எப்போதும் தனது தந்தையிடம் கசப்பாக இருந்தார். ஏன் என்று எங்களுக்கு ஒருபோதும் தெரியவில்லை, ஆனால் அதன் மூலத்தை கற்பனை செய்வது எளிது. அவர் காயப்பட்டுக் கொண்டிருந்தார், ஆனால் அவர் அடிமைத்தனமான நடத்தைகளில் தனது சொந்த வலியை மூழ்கடித்தார். அவரது தெய்வபக்தியற்ற செயல்கள், அவரது வலி மற்றும் அவரது சிறுவயதில் எதிர்கொண்ட துஷ்பிரயோகம் ஆகியவற்றின் விளைவு என்பதை அவர் எப்போதாவது உணர்ந்தாரா என்பதை தீவிரமாக சந்தேகிக்கிறேன்.

என் தந்தை மிகவும் கோபமானவராக, கசப்பானவராக இருந்தார். யாரேனும் அவரை எதற்காகிலும் கோபப்படுத்தினால், அவர் மன்னிக்க கூடாதென்று என்று தீர்மானமாக இருந்தார். என்

அப்பா என் அம்மாவை திருமணம் செய்வதற்கு முன்பே என் அம்மாவிடம் வன்முறையாய் நடந்து கொண்டார் என்பதை நான் அறிந்தேன். எனவே அவர் சிறுவயதிலேயே கோபம் மற்றும் ஆத்திரம் நிறைந்தவர் என்று முடிவு செய்வது நியாயமானது. அவர்கள் திருமணம் செய்து கொண்டபோது, என் அம்மாவுக்கு பதினேழு வயது, அவர் எண்பத்து மூன்று வயதில் இறக்கும் வரை அவருடன் இருந்தார். ஆனால் அவர்களது அறுபது வருடத்திற்கும் மேலான திருமண வாழ்வில் பல்வேறு சமயங்களில் அவர் அம்மாவை அடித்தார். அறைந்தார், ஏதாவது பிரச்சனை கொடுத்தால் அடித்து விடுவதாக மிரட்டினார்.

என் அம்மா என் தந்தைக்கு பயந்து வாழ்ந்தார் மற்றும் அவரது ஆதிக்க ஆளுமையின் கீழ் பயந்துக் கொண்டிருந்தார். அவள் அதிக தைரியமானவராக இருந்திருந்தால், நான் சிறுமியாக இருந்தபோது, என் தந்தை எனக்கு என்ன செய்துக் கொண்டிருந்தார் என்பதை சொன்ன போதே அவர் அவரை விட்டு விலகியிருப்பார். அவர் தன்னையும், என் சகோதரனையும், என்னையும் துஷ்பிரயோகம் செய்யப்படுவதிலிருந்து தடுத்திருந்திருக்கலாம். ஆனால் அவர் தைரியமாக இல்லை. அவர் அவருடன் தங்கினார். பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர் என்னிடம் அந்த அவமான செயலை தன்னால் எதிர்கொள்ள முடியாது என்றும், அவர் தன்னையும், என்னையும், என் சகோதரனையும் ஆதரிக்க முடியும் என்று அவர் நினைக்கவில்லை என்றும் கூறினார். அவரது சொந்த எண்ணங்களே அவரை தோற்கடித்து விட்டது என்ற உண்மையை உணர்ந்துக் கொண்டேன். அவரால் முடியாது என்று நினைத்தார், அதனால் அவரால் முடியவேயில்லை.

என் தந்தை தனது சொந்த வலியின் விளைவாகவும், காமம் மற்றும் பேராசையால் செயல்படுகிறார் என்பதை உணர்ந்தவுடன், அவரை மன்னிக்கும் எண்ணம் கொஞ்சம் எளிதாகிவிட்டது. அப்படியென்றால் அவரது செயல்களுக்கு அவர் பொறுப்பல்ல என்பது அர்த்தமல்ல, ஏனென்றால் அவர் தான் அதற்கு பொறுப்பு, ஆனால் தொடர்ந்து அவரை இகழ்ந்து, அவர் மீது கோபப்படுவது எனக்கு எவ்விதத்திலும் உதவவில்லை, அல்லது அவரை மாற்றவும் உதவவில்லை. உங்களை காயப்படுத்திய ஒருவருடன் நீங்கள் கோபமாக இருப்பீர்கள் என்றால், உங்கள் நினைவுகள் மற்றும்

கசப்புகளின் மூலம் மீண்டும் மீண்டுமாக உங்களை அவர்கள் தொடர்ந்து காயப்படுத்த நீங்கள் அவர்களுக்கு அனுமதி வழங்குகிறீர்கள்.

நான் என் தந்தையையும் என் அம்மாவையும் மன்னிப்பது எளிதாக இருந்ததால் மன்னிக்கவில்லை, ஆனால் நாம் அவ்வாறு செய்ய வேண்டும் என்பது தேவனின் கட்டளையாய் இருப்பதால் மன்னித்தேன். நம்முடைய எதிரிகளை நாம் மன்னிக்க வேண்டும் என்றும், தேவனே நம்மை நியாயப்படுத்துபவர் என்றும் வேதம் பல இடங்களில் நமக்குக் கற்பிக்கிறது.

பல பெண்களுக்கு, கோபத்தை விடாமல் பிடித்துக் கொண்டு, தங்களை காயப்படுத்தியவர்களை மன்னிக்க மறுப்பதே அவர்கள் குணமடைய தடையாக நிற்கிறது என்று நான் நம்புகிறேன். கடந்த காலத்தை கசப்புடன் பிடித்துக் கொண்டிருந்தால் நாம் முன்னோக்கி செல்ல முடியாது.

## நீங்கள் செய்யக்கூடிய மிகவும் சக்திவாய்ந்த ஒரு விஷயம்

நம்மைக் காயப்படுத்தியவர்களை மன்னிப்பதே நாம் செய்யும் மிக சக்திவாய்ந்த ஒரு செயல் என்று நான் நம்புகிறேன். அது நம்மை

உணர்ச்சி ரீதியான வேதனையிலிருந்து நம்மை விடுவித்து, வாழ்க்கையைத் தொடர நம்மை விடுவிக்கிறது. மன்னிக்கும் செயல்முறை பெரும்பாலும் கடினமாக இருந்தாலும், நீங்கள் உண்மையிலேயே மன்னிக்க முடிவெடுக்கும் போது, நீங்கள் பிறர் மேல் கொண்டிருக்கும் கசப்பு, கோபம் மற்றும் வெறுப்பை விட்டு விடும் போது, பல வருட துன்பங்களிலிருந்து அது உங்களைக் காப்பாற்றும். கேள்வி என்னவென்றால், நீங்கள் எப்படிப்பட்ட வாழ்க்கையைப் பெற்றிருக்க விரும்புகிறீர்கள்: இலவசமான, சுவாரஸ்யமான ஒன்றையா, அல்லது கசப்பான கடந்த காலத்துடன் உங்களை இணைக்கும் ஒன்றையா?

> நீங்கள் உண்மையிலேயே மன்னிக்க முடிவெடுத்தால், பல வருட துன்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

இந்நூலைப் படிக்கும் எவரொருவர் தன் காயம்பட்ட ஆத்துமா குணமடைய வேண்டுமென்றிருக்கிறாரோ, அவர் தேவனின் இந்த கட்டளையை தீவிரமாக எடுத்துக்கொள்வது மிகவும் அவசியம். இந்த அத்தியாயத்தை துரிதமாக கடந்து செல்ல முடிவு செய்ய வேண்டாம், ஏனென்றால் உங்களை காயப்படுத்தியவர்களை மன்னிக்க முடியாது. அது மிகவும் கடினமானது என்று நீங்கள் ஏற்கனவே முடிவு செய்துள்ளீர்கள். மறுசீரமைப்புக்கான தேவனின் வாக்குறுதியை அனுபவிக்க விரும்பும் எவருக்கும் நமது எதிரிகளை மன்னிப்பது பேச்சுவார்த்தைக்கு இடமின்றி ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இது நாம் செய்ய தேவன் நமக்கு கற்றுக்கொடுக்கும் ஒன்று, இது, இயேசு தமது சொந்த வாழ்க்கையில் முன்மாதிரியாகக் காண்பித்த ஒன்று. இயேசு சிலுவையில் பாடுபடுட்டுக் கொண்டிருந்தபோது, தம்மை சிலுவையில் அறைந்த மக்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்று ஜெபித்தார். அவர்கள் தங்கள் சொந்த காயத்தினாலும், குழப்பத்தினாலும் அவரை காயப்படுத்துகிறார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார்.

தேவன் இரக்கமுள்ளவர், இரக்கம், எப்போதும் யாரோ ஒருவர் என்ன செய்தார் என்பதை தாண்டி அவர்கள் ஏன் செய்தார்கள் என்ற காரணத்தை பார்க்கிறது. எப்போதுமே ஏன் என்று ஒன்று இருக்கிறது. நான் காயப்பட்டதால், நான் என் குழந்தைகளிடமும் என் கணவரிடமும் தவறு செய்தேன். நாம் தொடர்ந்து நம் கடந்த காலத்தின் வலியுடன் வாழ்ந்து, தலைமுறை தலைமுறையாக பிறரை காயப்படுத்தி, இயேசு மரித்து அவர்களுக்குக் கொடுத்ததை அனுபவித்து மகிழ்வதை தடுப்பதே பிசாசின் திட்டமாகும். ஆனால் இயேசு நாம் எப்படி பிசாசை தோற்கடிக்க முடியும் என்றும் நமது வரலாறு நமது தலைவிதியாக மாற வேண்டியதில்லை என்பதைப் பற்றிய அறிவுரைகளையும் இயேசு கொடுத்தார்.

## விட்டு விடுங்கள்

மத்தேயு **6:12**லே, நாம் நம் கடனாளிகளுக்கு மன்னித்ததைப் போல (கடன்களை மன்னித்து, தள்ளுபடி செய்து, அவர்களுக்கு எதிரான மனக்கசப்பைக் கைவிட்டது போல) நாமும் நம்முடைய பாவங்களை மன்னிக்கும்படி தேவனிடம் கேட்க வேண்டும் என்று

இயேசு போதித்தார். மன்னிப்பது என்றால் எதையாவது பிடித்துக் கொண்டே இருப்பதற்கு பதிலாக அதை விட்டு விடுவதாகும். நாம் பற்றி கொண்டிருக்கும் காயங்களும் வலிகளும் சுமக்க பெரும் சுமையாக மாறும். அதை விட்டு விடுவதற்கான முடிவை எடுக்கும் வரை நாம் அதை தொடர்ந்து சுமந்துக் கொண்டிருக்கிறோம். பல மன ரீதியான மற்றும் உடல் ரீதியான நோய்கள் மற்றும் கோளாறுகளுக்கு இந்தச் சுமைகளைச் சுமப்பது மூலக் காரணமாக இருக்கலாம். நாம் பாரத்தோடு இருக்க தேவனால் படைக்கப்படவில்லை, மாறாக நம்மைச் பாரப்படுத்தும் விஷயங்களை விட்டு விட்டு, அவர் நம்மைக் கவனித்துக்கொள்ள அவரை நம்ப நம்மை அழைக்கிறார். நம்முடைய எல்லா பாரங்களையும், கவலைகளையும் அவர் மீது வைக்க வேண்டும். என்னை அடிக்கடி ஊக்கப்படுத்திய இரண்டு வேத வசனங்கள் இங்கே உள்ளன, அவை உங்களையும் ஊக்கப்படுத்தும் என்று நம்புகிறேன்.

> அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் (பாசமாக, கவனமாக) உங்கள் கவலைகளையெல்லாம் (உங்கள் கவலைகள், உங்கள் விசாரங்கள், அனைத்தையும், ஒரே முறையாக) அவர் மீது வைத்துவிடுங்கள்.
>
> கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு [அதன் எடையை கட்டவிழ்த்துவிடு] அவர் உன்னை ஆதரிப்பார்; அவர் நீதிமான்களை ஒருபோதும் தள்ளாட (நழுவவோ, விழவோ அல்லது தோல்வியடையவோ) விடமாட்டார். (சங்கீதம் 55:22).

உங்களால் எதுவும் செய்ய முடியாத ஒன்றைப் பிடித்துக் கொண்டிருக்காதீர்கள். யாராவது உங்களை மோசமாக காயப்படுத்தினால் மனரீதியாகவும் உணர்ச்சிப்பூர்வமாகவும் அதைப் பற்றிக்கொண்டிருப்பீர்களென்றால், அது உங்களை தொடர்ந்து நாளுக்கு நாள் காயப்படுத்த அனுமதிக்கிறீர்கள். அதை விட்டு விட்டு உங்களுக்கு நீங்களே உதவி செய்துக்கொள்ளுங்கள்! நிச்சயமாக, உங்கள் மனதோ “இது நியாயமில்லை” என்று கூக்குரலிடுகிறது. யாரோ ஒருவர் உங்களை துஷ்பிரயோகம்

செய்ததற்காக அல்லது தவறாகப் பயன்படுத்தினதற்காக அவரை மன்னிப்பதில் நியாயமில்லை தான், ஆனால் இயேசு நம் பாவங்களுக்காக மரித்ததும் நியாயமில்லை தானே.

அவர் நம்மை மன்னித்ததை விட அதிகமாக நாம் யாரையும் மன்னிக்க வேண்டும் என்று தேவன் ஒருபோதும் கேட்க மாட்டார். ராட்டல் பாம்பு என்ற ஒரு வகையான சீறல்- பாம்பை அது தப்பிக்க இயலாத வகையில் ஓரங்கட்டப்படும் போது, அது மிகவும் கோபமடைந்து தன்னைத்தானே கடித்துக் கொள்ளும். மற்றவர்களுக்கு எதிராக நாம் வெறுப்பையும் கசப்பையும் வளர்க்கும்போது அப்படிதான் நடக்கும். நாம் நம்மை "கடித்து" விஷமேற்றிக்கொள்கிறோம். காழ்ப்புணர்ச்சி மற்றும் வெறுப்பைப் பிடித்துக் கொண்டு மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கிறோம் என்று நினைக்கிறோம், ஆனால் ஆழமான தீங்கை உண்மையில் நமக்கு நாமே செய்துக்கொள்கிறோம்.

நம்மைப் புண்படுத்திய ஒருவரை மன்னிப்பதை நாம் ஒருபோதும் செய்ய விரும்புவதில்லை. ஆனால் அதைச் செய்ய நாம் முடிவு செய்யலாம். தேவன் நமக்கு உதவுவார். உங்கள் எதிரிகளை விடுவித்து விடுங்கள், அதனால் தேவன் அவர்களுடன் கிரியை செய்ய தொடங்குவார். நாளடைவிலே என் தந்தையைப் போலவே அவர்களும் அவரது இடைவிடாத அன்பிற்கு பிரதிக்கிரியை செய்து, அவரை தங்கள் வாழ்க்கையில் அனுமதிப்பார்கள் என்று நம்புகிறேன், ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால், துரதிர்ஷ்டவசமாக, அவர்கள் விதைத்ததை அறுவடை செய்வார்கள்.

விட்டு விடுவது என்பது மக்கள் செய்த காரியங்களைப் பற்றி சிந்திப்பதையும் பேசுவதையும் நிறுத்த உறுதியாக இருப்பதை உள்ளடக்குகிறது. ஒருவேளை நீங்கள் ஆலோசனை பெற்றுக் கொண்டிருந்தாலோ அல்லது ஒருவருக்கு உதவுவதற்காக உங்கள் வெற்றியைப் பகிர்ந்து கொண்டிருந்தாலோ அதைப் பற்றி பேச தேவையில்லை. சில நேரங்களில் மக்கள் துரோகம், துஷ்பிரயோகம் அல்லது நிராகரிப்பு போன்ற தருணங்களை தங்கள் மனதில் மீண்டும் மீண்டும் திரையிடுகின்றனர். அவர்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ, அவ்வாறு செய்யும் போது அது அவர்களை அடி

மைத்தனத்திற்குள்ளாக்குகின்றது. நம் மனம் நம் உணர்ச்சிகளை பாதிக்கிறது. நாம் துஷ்பிரயோகத்தையோ, முறைகேடான நிகழ்வுகளையோ மீண்டும் மீண்டும் ஒத்திகை பார்க்கும்போது, அது தற்போதைய நிகழ்வைப் போன்ற வலியை மீண்டும் கொண்டுவருகிறது.

நம்முடைய சொந்த கசப்பு அல்லது மனவேதனைக்கு நாம் சிறைப்பட்டு வாழ்வதை தேவன் விரும்பவில்லை. மாறாக, நாம் அவரிடம் இந்த எதிர்மறை உணர்வுகளைக் கொடுக்க வேண்டும், நம்மை காயப்படுத்தியவர்களை மன்னிக்க வேண்டும், நமக்கு நேர்ந்த காரியத்திலிருந்து நன்மையைக் கொண்டு வந்து நம்முடைய முன்னாள் வலிக்கு இரட்டிப்பு பிரதிபலனைக் கொண்டு வருவார் என்று நாம் நம்ப வேண்டும் என்று அவர் ஏங்குகிறார்.

> உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்; இலச்சைக்குப் பதிலாகத் தங்கள் பாகத்தில் சந்தோஷப்படுவார்கள்; அதினிமித்தம் தங்கள் தேசத்தில் இரட்டிப்பான சுதந்தரம் அடைவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும். (ஏசாயா **61:7**).

நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால், அவர் எப்போதும் ஒரு வெகுமதியைக் கொடுக்கிறார்.

> நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால், அவர் எப்போதும் ஒரு வெகுமதியைக் கொடுப்பார்.

விட்டு விடுவது கடினமாக இருக்கலாம், ஆனால் உங்களுக்காக காத்திருக்கும் வெகுமதியை எதிர்பார்ப்பது அதை எளிதாக்கும். சார்லோட் ப்ரோன்டே என்ற புத்தக ஆசிரியர் தன்னுடைய ஜேன் ஐயர் என்ற புத்தகத்தில் இவ்வாறு கூறினார், "விரோதத்தை பேணிக்கொண்டும் தவறுகளை பதிவு செய்துக் கொண்டும் வாழ வாழ்க்கை மிகவும் குறிகியதாக எனக்கு தோன்றுகிறது." நம்முடைய பாவங்களுக்காக கிரயம் செலுத்த தம்முடைய குமாரனிடம் கேட்டதைப் போன்று கடினமான காரியங்களைச் செய்யும்படி தேவன் நம்மிடமும் கேட்கலாம், ஆனால் அதைச் செய்வதற்கான

திறனை நமக்குத் தராமல் அவர் ஒருபோதும் நம்மிடம் செய்யும் படி கேட்கமாட்டார்.

மன்னிக்கும் சக்திக்கு ஒரு சிறந்த உதாரணம் நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கையில் இருக்கிறது. ஒரு நிருபர் இந்த கதையை பகிர்ந்து கொண்டார்:

> மண்டேலா சிறையிலிருந்து ஒரு பிரமாண்டமான, நேர்த்தியான, கண்ணியமான வெளியேற்றத்தை பெற்றிருந்தார், அது இந்த உலகம் பார்க்க வேண்டிய அளவு மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. ஆனால் அந்த தூசி நிறைந்த சாலையில் அவர் நடந்து செல்வதை நான் பார்த்துக்கொண்டிருந்தபோது, அவர் கடந்த 27 வருடங்களை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாரா, அவர் மீண்டும் கோபப்பட்டாரா என்று நான் ஆச்சரியத்தோடு நினைத்துக் கொண்டிருந்தேன். பின்னர், பல ஆண்டுகளுக்குப் பிறகு, அவரிடம் அதைப் பற்றி கேட்க எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. நான் அவரிடம், “நீங்கள் ஒரு பெரிய மனிதர், உங்கள் பதவியேற்பு விழாவுக்கு உங்கள் சிறைச்சாலை அலுவலர்களை அழைத்தீர்கள்.” நீங்கள் அரசாங்கத்தின் மீது வழுக்கட்டாயமாக சில நிபந்தனைகளை வைத்தீர்கள். ஆனால் உண்மையைச் சொல்லுங்கள். நீங்கள் மறுபடியும் கோபமாக இருந்தீர்களா இல்லையா?" என்று கேட்டேன். அதற்கு அவர், “ஆம், நான் கோபமாக இருந்தேன். மேலும் நான் கொஞ்சம் பயப்பட்டேன் தான். நான் இவ்வளவு காலம் விடுதலையோடு இருக்கவில்லையே. ஆனால், அந்த கோபம் எனக்குள்ளே எழும்புவதை நான் உணர்ந்தபோது, நான் சிறைச்சாலை வாயிலுக்கு வெளியே வந்த பிறகும் நான்அவர்களை வெறுத்தால் அவர்கள் என்னை இன்னும் சிறையிலேயே வைத்திருப்பார்கள் என்பதை உணர்ந்தேன்.” அவர் சிரித்துக்கொண்டே, “எனக்கு சுதந்திரமாக இருக்க வேண்டும், அதனால் நான் அதை விட்டு விடுகிறேன்.” என்றார்.[16]

கசப்பு சிறியதாக தொடங்குகிறது. ஒரு மனவருத்தம் நம் இருதயத்தில் நுழைகிறது. நாம் அதை நம் மனதில் மீண்டும் திரையிடுகிறோம், அது நாம் மீண்டும் கட்டியெழுப்ப கடினமாக இருக்கும் ஆழமான சுவடுகளை உருவாக்குகிறது, ஆனால் நாம் தேவனிடம் கேட்டால், அவர் நம்மை வழி நடத்தும்படி நாம் அனுமதித்தால் அவர் நமக்கு உதவுவார். தேவனை வழிநடத்த அனுமதிப்பது என்பது நாம் எப்படி உணர்ந்தாலும் அவருடைய கட்டளைகளைப் பின்பற்றுவதாகும். நாம் செய்ய வேண்டும் என்று அவர் கேட்பதெல்லாம் நம் நலனுக்காகவும், நாம் யாரோடு வாழ்கிறோமோ அவர்களின் நலனுக்காகவும் தான்.

## அடக்கப்பட்ட கோபமும் ரகசியங்களும்

நமது இரகசியங்கள் நம்மை உள்ளுக்குள் நோயுறச் செய்கின்றன. அவை நம் ஆத்துமாவிலே ரணமாகி சீர்குலைந்து, நம் நடத்தையில் ஊடுருவுகின்றன. சில நேரங்களில் ஒரு நபர் கோபமாக இருக்கிறார் என்று நம்மால் சொல்ல முடியும், ஏனென்றால் அவர்களின் விஷயங்கள் அவர்கள் வழியில் நடக்காத போது அவர்கள் கோபம் வெடிக்கத்தொடங்கி விடும், ஆனால் மற்ற நேரங்களில் நாம் அந்த கோபத்தை நேரடியாக பார்க்க முடியாது. நம் பிரச்சனைகளினின்று மறைந்து கொள்வதிலும், ஏமாற்றமான வாழ்க்கையைப் பற்றிய கோபத்தை அடக்கிக் கொள்வதில் நாம் பெரும்பாலும் வல்லவர்களாகி விடுகிறோம். குறைந்த பட்சம் நாம் அதை மறைக்கிறோம் என்று நினைக்கிறோம். ஆனால் உண்மையில் அது ஒரு கடற்கரை பந்து போன்றது - நாம் அதை மூழ்கடிக்க முயற்சி செய்கிறோம், ஆனால் நாம் எவ்வளவு கடினமாக முயற்சி செய்தாலும், அது மீண்டும் மீண்டும் வெளியே தோன்றும். சில வழிகளில் அடக்கப்பட்ட கோபம் வெளிப்படுத்தப்பட்ட கோபத்தை விட மோசமானது. நாம் கோபத்தை வெளிப்படுத்தினால், குறைந்த பட்சம் நாம் கோபமாக இருப்பதை அறிவோம், ஆனால் நாம் அதை அடக்கி, உண்மையில் நாம் நன்றாக இல்லாதபோது நன்றாக இருப்பதைப்போன்று காட்டிக் கொள்ளும்போது, கோபம் பல வழிகளில் நம் ஆத்துமாவைத் தின்றுவிடும். நாம் வேண்டுமென்று விரும்பும் வாழ்க்கைத் தரத்தை திருடிவிடும்.

கோபமானது, மனச்சோர்வு, பதட்டம், மனநிலைக் கோளாறுகள், உணவுக் கோளாறுகள், குடிப்பழக்கம், போதைப் பழக்கம், வன்முறை மற்றும் பல விதங்களில் வெளிப்படும். கோபத்தை விட்டு விடுவதைத் தவிர அதை கொண்டு அர்த்தமுள்ள வேறு ஏதையும் நாம் அதிகம் செய்ய முடியாது. அதனால்தான் தேவன் அதை விட்டு விடும்படி நமக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஒருவேளை நீங்கள் சமாளிக்கும் சில பிரச்சனைகளுக்கு, என்றுமே முற்றிலும் மறைந்துபோகாத அறிகுறிகளுக்கு தொடர்ந்து சிகிச்சையளித்துக் கொண்டிருப்பதற்கு பதிலாக அதன் மூல காரணத்தை கண்டறிந்து அதை சரி செய்ய வேண்டிய நேரம் இதுவாக இருக்கலாம். நமது பிரச்சனைகளின் மூலத்தை அடைவதுதான் ஆத்துமா குணப்படுதலாகும். நாம் தேவனுக்கு நம் மனதைத் திறந்து, அவரை நம் வாழ்வின் எல்லா பகுதிகளிலும் அனுமதித்து, அவரே நம்மை நம் மறுசீரமைப்பு மற்றும் முழுமையின் செயல்முறைக்குள் நம்மை வழிநடத்த அவரை நம்ப வேண்டும். காரியங்கள் வெளிச்சத்திற்குள் வரும் போது, அவை நம் மீது கொண்டிருக்கும் அதிகாரத்தை இழந்து விடுகிறது. எந்த ஒரு விஷயமும் வெளிச்சத்தால் அம்பலப்பட்டு கண்டிக்கப்படும்போது, அது தெளிவடைகிறது என்று வேதம் சொல்கிறது. (எபேசியர் 5:13).

உங்கள் எதிரிகளை மன்னிக்க முடிவெடுப்பது முதல் படியாகும், நீங்கள் அதைச் செய்யும்போது உங்களுக்கு நடந்த அநியாய காரியங்களால் உங்களுக்கு ஏற்பட்ட கோபத்தை நீங்கள் கையாளத் தொடங்குவீர்கள். நாம் கசப்பையும், கோபத்தையும் விட்டுவிட்டு அதற்கு பதிலாக. தேவன் மீது நம்பிக்கையும், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையையும் கொண்டிருக்கலாம்.

## உங்கள் எதிரிகளுக்காக ஜெபித்து அவர்களை ஆசீர்வதியுங்கள்

மன்னிக்க முடிவெடுப்பது முதல் படியாகும், ஆனால் மன்னிப்பதில் தேவன் நமக்கு அறிவுறுத்தும் மற்றொரு மிக முக்கியமான விஷயம் ஒன்று இருக்கிறது. நாம் நம் எதிரிகளுக்காக ஜெபிக்கவும்

ஆசீர்வதிக்கவும் வேண்டுமென்பதே தேவன் நமக்குக் கொடுக்கும் அறிவுறுத்தலாகும். ஆஹா! தேவா, நீர் வேடிக்கை காட்டுகின்றீர். யார் ஒருவர் ஆசீர்வதிக்கப்பட கூடாதென்று நான் விரும்புவது உண்மையாக இருக்கும் போது அவர்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்று எப்படி ஜெபிக்க முடியும்? நமது எதிரிகள் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று நாம் ஜெபிக்கும்போது, நாம் அவர்களை விடுவிக்கிறோம், அதனால் தேவன் அவர்களை அவர்களின் தவறான இயல்பிலிருந்து விடுவிக்கும் ஆற்றல் கொண்ட உண்மையை அவர்களுக்கு காண்பிப்பதால் அவர்களை ஆசீர்வதிப்பார். அவர்கள் உண்மையை அறிந்து தேவனை அவர்கள் இரட்சகராகவும் தேவனாகவும் பெற்றுக் கொள்ள அவர்கள் கண்களைத் திறக்க தேவனை வேண்டுகிறோம்.

நம்மைக் காயப்படுத்தியவர்களுக்குத் தேவைப்படும்போது நடைமுறை ரீதியாக உதவுவதற்கு நாம் மனந்திறந்திருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்றும் நான் நம்புகிறேன். என் பெற்றோர்கள் வயது முதியவர்களாக அவர்களுக்கு உதவி தேவைப்பட்டபோது ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகள் அவர்களின் அன்றாடத் தேவைகளுக்கு நான் உதவி செய்ததின் மூலம் அவர்களுக்கு அவ்வாறாக உதவி செய்ய அவர் எனக்கு கிருபை அருளினார். அதைச் செய்ய நிறைய நேரமும் பணமும் தேவைப்பட்டது, மேலும் இது நான் ரசித்து செய்த ஒன்றல்ல என்பதை ஒப்புக்கொள்வேன், ஆனால் அப்படி செய்வது தான் சரியானது என்று எனக்குத் தெரியும், அதனால் நான் அதைச் செய்தேன். நான் மீண்டும் சொல்கிறேன்: உங்கள் எதிரிகளை மன்னிப்பது நீங்கள் செய்யக்கூடிய மிக சக்தி வாய்ந்த காரியங்களில் ஒன்றாகும். இது உங்கள் வாழ்க்கையில் அமைதி, மகிழ்ச்சி மற்றும் தேவனின் வெகுமதி உட்பட்ட பல ஆசீர்வாதங்கள் நமக்கு கிடைக்க பல கதவுகளைத் திறந்து விடுகிறது.

நான் என் பெற்றோரை மன்னித்து, தேவனுக்கு கீழ்ப்படிந்து அவர்களுக்கு உதவினேன், நான் அதை அனுபவிக்கவில்லை என்றாலும் தேவனால் மட்டுமே அப்படி செய்ய எனக்கு உதவ முடியும் என்றும் நான் இறுதியாக பிசாசின் மீது வெற்றி பெற்றேன் என்பதை அறிந்தும் மகிழ்ந்தேன். தேவன் என் கீழ்ப்படிதலை ஆசீர்வதித்தார். இதன் விளைவாக, கடந்த காலத்தின் வலியை

மீண்டும் என் வாழ்க்கையில் கொண்டு வருவதில் பிசாசு ஒருபோதும் வெற்றிபெற மாட்டான்.

தேவனுடைய வார்த்தையின்படி, தீமையை நன்மையால் வெல்வோம் (ரோமர் 12:21). உங்களுக்குச் செய்யப்பட்ட தீய செயல்களை, கசப்பையும், கோபத்தையும் விட்டு விட விரும்புவதின் மூலமாகவும், உங்கள் எதிரிகளுக்காக ஜெபித்து ஆசீர்வதிப்பதன் மூலமாகவும் வெல்ல முடியும். நீங்கள் அவர்களுக்கு உதவுகிறீர்கள் என்பது போல தோன்றலாம். ஆனால் உண்மையில், நீங்கள் உங்களுக்கே உதவிக் கொள்கிறீர்கள். நாம் நம் எதிரிகளை மன்னித்து, பின்னர் அவர்களுக்காக ஜெபித்து, அவர்களை ஆசீர்வதிக்கும் போது, பரலோகத்திலுள்ள நம் பிதாவைப் போல நாம் நடந்துகொள்கிறோம் என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது. நாம் நூற்றுக்கணக்கான முறை படித்து தியானிக்க வேண்டிய இரண்டு வேத வசனங்களை உங்களுக்கு விட்டுச் செல்ல விரும்புகிறேன். இந்த அத்தியாயத்தில் நான் கற்பிக்கும் விஷயங்களைச் செய்ய எனக்கு அவைகள் உதவியது, அவைகள் உங்களுக்கும் உதவ வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்கிறேன்.

உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்;
உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்.
(லூக்கா 6:28).

உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்,
நன்மைசெய்யுங்கள், கைம்மாறுகருதாமல் கடன்
கொடுங்கள், அப்பொழுது உங்கள் பலன்
மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள்
பிள்ளைகளாயிருப்பீர்கள், அவர் நன்றியறியாதவர்களுக்கும்
துரோகிகளுக்கும் நன்மைசெய்கிறாரே. (லூக்கா 6:35).

இந்த வசனங்கள் உங்களைப் பலப்படுத்துவதோடு, உங்களைக் காயப்படுத்திய அல்லது எப்போதாவது உங்களைத் காயப்படுத்தப் போகிறவர்களை மன்னிக்க உங்களுக்கு உதவட்டும்.

## அத்தியாயம் 8

# குற்ற உணர்ச்சியையும், அவமானத்தையும் இறக்கி விடுங்கள்

*பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை; நாணாதே, நீ இலச்சையடைவதில்லை; உன் வாலிபத்தின் வெட்கத்தை நீ மறந்து, உன் விதவையிருப்பின் நிந்தையை இனி நினையாதிருப்பாய்.*

- *ஏசாயா 54:4*

*குற்ற உணர்வும் அவமானமும்: காயப்படும் மக்களை மிகவும் வேதனைபடுத்தும், துன்புறுத்தும், அழிவுண்டாக்கி பலவீனப்படுத்தும் இரண்டு விஷயங்களாகும். ஆனால் அவை இரண்டிலிருந்தும் முழுமையான விடுதலையையும் சுதந்திரத்தையும் தேவன் நமக்கு வாக்களிக்கிறார். குற்ற உணர்வும், அவமானமும் நம்மை அழுத்தும் ஒரு சுமையை உருவாக்குகின்றது. நாம் என்ன செய்தோமோ அதைப் பற்றியும், நமக்கு என்ன செய்யப்பட்டதோ அதை பற்றியும் வருத்தப்படுவதிலே நம் நாட்கள் உறிஞ்சப்படுகின்றன.*

*பிசாசு தனது பொய்களை நம் மனதில் ஊதுகிறான்: உங்களுக்கு என்ன நடந்ததோ அது உங்கள் தவறினால் தான். நீங்கள் நன்றாக இருந்திருந்தால், இந்த அடி உங்களுக்கு கிடைத்திருக்காது. நீங்கள் வலுவாக இருந்திருந்தால், உங்கள் தந்தையை உங்களுடன் உடலுறவு கொள்ள அனுமதித்திருக்க மாட்டீர்கள். நீங்கள் அத்தகைய கோழையாக இருந்திராவிட்டால், உங்களை துஷ்பிரயோகம் செய்தவரின் பயமுறுத்துதலுக்கு அடிபணிந்ததற்கு பதிலாக நீங்கள் எதிர்த்து நின்றிருந்திருப்பீர்கள். நீங்கள்*

புத்திசாலியாக இருந்திருந்தால், நீங்கள் நிராகரிக்கப்பட்டிருக்க மாட்டீர்கள். நீங்கள் அழகாக இருந்திருப்பீர்கள் என்றால் தேர்வு செய்யப்பட்டிருப்பீர்கள். நீங்கள் இன்னும் கவனமாக இருந்திருந்தால், உங்கள் குழந்தை இறந்திருக்காது. நீங்கள் அறிகுறிகளை விரைவிலேயே கண்டு பிடித்து, மருத்துவரிடம் சென்றிருந்தால், நீங்கள் கீமோவை எதிர்கொள்ள வேண்டியிருந்திருக்காது. ஆனால் அது உங்கள் தவறு அல்ல என்பதை இன்று நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன்.

> உடைந்த மக்கள் அவர்கள் சுமக்கும் குற்றத்தையும் அவமானத்தையும் இறக்கி வைக்கும் வரை முற்றிலும் மீட்கப்பட முடியாது.

உங்களிடம் ஏதோ தவறு இருப்பதால் மக்கள் உங்களை துஷ்பிரயோகம் செய்யவோ, தவறாகப் பயன்படுத்தவோ அல்லது தவறாக நடத்துவதோ இல்லை; அவர்களிடம் ஏதோ தவறு இருப்பதால் தான் அவர்கள் அதைச் செய்கிறார்கள். அவர்கள் காயப்படுவதால் அவர்கள் நம்மை காயப்படுத்துகிறார்கள். மனம் உடைந்து காயம்பட்டுக்கொண்டிருக்கும் மக்கள், அவர்கள் சுமக்கும் குற்ற உணர்ச்சியையும், அவமானத்தையும் இறக்கி வைக்கும் வரை முற்றிலுமாக மீட்கப்பட முடியாது.

நாம் அனைவருமே வாழ்க்கையில் தவறுகளை செய்துள்ளோம், நாம் அனைவரும் வெட்கப்படும் படியான காரியங்களை செய்துள்ளோம், ஆனால் நாம் செய்த ஒன்றுக்காக, அல்லது நமக்குச் செய்யப்பட்ட ஒன்றுக்காக வெட்கப்படுவது, அவமானம் மற்றும் வெட்கத்தை உள்வாங்கிக் கொண்டு நம்மைக் குறித்து நாமே வெட்கப்படுவதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

எங்கள் குடும்பத்திலிருந்த தவறான உறவைப் பற்றிய என் அம்மாவின் அவமான உணர்வுகளின் சுமையை அவர் சுமந்துக்கொண்டிருந்ததே அவர் அதை எதிர்கொள்ளாததற்கும் அம்பலப்படுத்தாததற்கும் காரணமாக இருந்தது. துரதிர்ஷ்டவசமாக, அவர் அதை உள்வாங்கிக் கொண்டார், எண்பத்தி ஒன்பது வயதிலும், அவர் இறப்பதற்கு சற்று முன்பு கூட, அவர் பலமுறை அவர் சொல்ல நான் கேட்டேன்: “உன் தந்தை உனக்கு செய்ததற்காக நீ என்னைக் குறை கூறுகிறாய் என்பது எனக்குத்

தெரியும்!" பல வருடங்களுக்கு முன்பு நான் அவரை மன்னித்திருந்தாலும், அவரால், என் தாயால் அந்த குற்ற உணர்வை மேற்கொள்ளவே முடியவில்லை. அவர் தன்னை மன்னிக்கவே இல்லை.

அவர் பிரச்சனையை நேருக்கு நேர் எதிர்கொண்டிருந்தால் என் அப்பா உட்பட எங்கள் அனைவருக்கும் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.

ஆனால் அதற்கு பதிலாக, அந்த நேரத்தில் அவருக்கு எளிதான பாதையாக தோன்றியதை அவர் தெரிந்துக் கொண்டார், அதுவோ கடைசியில் கடினமான பாதையாகிவிட்டது, ஏனெனில் அது அவரால் ஒருபோதும் மீள முடியாத ஒன்றாகிவிட்டது. பிரச்சனைகளிலிருந்து ஓடுவது ஒருபோதும் பலனளிப்பதில்லை, ஏனென்றால் எப்படியாவது அவை நம்மை மிஞ்சிவிடும். அவற்றைக் கடப்பதற்கான வழி தேவனின் உதவியால் அவற்றை எதிர்கொள்ளுவது தான்.

என் அம்மா மனநோயால் பாதிக்கப்பட்டார், அது அவர் செய்த தேர்வுகளின் விளைவாக ஏற்பட்ட அவமானம் மற்றும் குற்ற உணர்ச்சியினால் ஏற்பட்டதென்றே நான் நம்புகிறேன். என் தந்தை எனக்கு செய்தது என் அம்மாவின் தவறு அல்ல, ஆனால் அதை எதிர்கொள்ள வேண்டியது அவருடைய பொறுப்பு. நாம் நமது பொறுப்புகளில் இருந்து ஓடி, நாம் என்ன செய்ய வேண்டும் என்று நமக்குத் தெரிந்ததைச் செய்யாமல் இருக்கும் போது, அதன் விளைவுகளிலிருந்து ஓடிவிட இயலாமலாகிவிடுகிறது. நீங்கள் உங்கள் கடந்த காலத்தை எதிர் கொண்டு சமாளிக்கும் வரை அதிலிருந்து விடுபட்டுவிட முடியாது.

நீங்கள் குற்ற உணர்ச்சியாலும் அவமானத்தாலும் நிரம்பியிருந்தால், நீங்கள் ஒரு நிலைப்பாட்டை எடுத்து மணலில் ஒரு கோடு வரைய வேண்டிய நேரம் இது. அப்படியென்றால், நீங்கள் வாழ்ந்துகொண்டிருந்த விதத்தை தொடர மறுப்பதாகும். கடந்த காலத்தில் நடைப்பெற்ற ஏதேனும் ஒன்றுக்காக நீங்கள் மனஸ்தாபப்படுவீர்களென்றால், மனந்திரும்பி, தேவனிடமிருந்து உங்கள் மன்னிப்பைப் பெற்று, உங்கள் வாழ்க்கையைத் தொடருங்கள். நீங்கள் ஏதேனும் வகையில் துஷ்பிரயோகம்

செய்யப்பட்டிருந்தால், உங்களை காயப்படுத்தியவர்களை மன்னித்து விட்டு உங்கள் வாழ்க்கையை தொடருங்கள். ஆனால் குற்ற உணர்ச்சியோடும், வெட்கத்தோடும் மட்டும் தொடர வேண்டாம். ஒரு புதிய தொடக்கத்திற்கான நேரம் இது. நீங்கள் அதை அனுமதித்தாலொழிய உங்கள் கடந்த காலத்திற்கு உங்கள் தற்போதைய தருணத்தின் மீது எந்த சக்தியும் இல்லை.

குற்ற உணர்வு என்பது நம் மீது நாமே கொள்ளும் கோபமாகும். நாம் என்ன செய்தோமோ அல்லது நமக்கு என்ன நடந்ததோ அதற்காக நம் மீது கோபம் கொள்கிறோம். தேவனுடைய கிருபையால் நம் குற்றங்கள் நீங்கிவிட்டாலும், நாம் நம்மை மன்னிக்கும் வரை அதனால் துன்புறுகிறோம். நாம் கிறிஸ்துவுடன் ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்கும் போது, கடந்த காலத்தின் அனைத்து விஷயங்கள் முடிந்து, ஒரு புதிய வாழ்க்கை நமக்கு காத்திருக்கிறது. ஆனால் நாம் சாத்தானை அனுமதித்தால், அவன் நம் குற்ற உணர்வைத் தொடரச் செய்வான். நம்மை அடிமைத்தனத்திலே வைத்திருக்க அவன் கையாளும் வழி இது. அந்த குற்ற உணர்வு, தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் அனைத்து ஆற்றலையும் திருடி விடுகிறது. ஒரு நிலையான குற்ற உணர்வானது நம்மை சோர்வடையச் செய்து, உடல் நலக்குறைவையும் ஏற்படுத்திவிடுகிறது.

> குற்ற உணர்வு என்பது நம் மீது நாமே கொள்ளும் கோபமாகும்.

## குற்றத்தின் இரண்டு வழிகள்

குற்ற உணர்வு உங்கள் ஆத்துமாவில் குடியேறி உங்களை வேதனைப்படுத்த இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன. முதலாவது, நீங்கள்

ஏதோ தவறு செய்திருந்து மன்னிப்பு கேட்கவில்லை என்றாலோ, இரண்டாவது நீங்கள் கேட்டிருந்தும் தேவன் நமக்கு வழங்கும் இரக்கத்தையும், மன்னிப்பையும் பெற்றுக்கொள்ளவில்லை என்றாலோ குற்ற உணர்வினால் துன்புத்தப்படுவீர்கள். பாவம் மன்னிக்கப்படும் போது, கிழக்கிலிருந்து மேற்கு எவ்வளவு தூரம்

இருக்கிறதோ அவ்வளவாக அது அகற்றப்படுகிறது. (சங்கீதம் 103:12) அதனால் குற்ற உணர்ச்சிக்கு அங்கு இடம் எதுவும் இல்லை; எனவே, எந்த குற்ற உணர்வும் எதிர்க்கப்பட வேண்டும். அந்த உணர்வு உண்மையானதாக இருக்கலாம், ஆனால் அது ஒரு பொய்யை அடிப்படையாகக் கொண்டது, உண்மை அல்ல. தேவன் நம்மை மன்னிக்கும்போது, அவர் நம் பாவத்தை நினைவுகூரமாட்டார் (ஏசாயா 43:25), அவர் நம் தவறை மறக்க முடியுமானால், நிச்சயமாகவே நம்மாலும் முடியும். இயேசு நம்முடைய மீறுதலையும், குற்றத்தையும் அவர் மீது ஏற்றுக்கொண்டார் என்று வேதம் மிகத் தெளிவாகக் கூறுகிறது, அவர் அவற்றை எடுத்துக் கொண்டதால், அவை இனி நம்மிடம் இல்லை.

> நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 53:5).

தேவனுடைய வார்த்தையில் நாம் காணும் இந்த வேத வாக்கியமானது மிகவும் சக்திவாய்ந்த ஒன்றாகும். இயேசு நம்முடைய வேதனையையும், பாவங்களையும், குற்றங்களையும் எடுத்துக் கொண்டார், நம் காயங்களுக்காக அவர் காயப்படும்படி தம்மை அனுமதித்தார். அதன் பின் அந்த வாக்குத்தத்தம் வருகிறது: அவர் செய்த தியாகத்தின் மூலம், நாம் குணமடைந்து முழுமையடைகிறோம். இது ஏற்கனவே முடிந்துவிட்டது.

யாரோ ஒருவர் நமக்கு செய்த குற்றத்திற்காகவும், நாம் குற்ற உணர்ச்சியை உணரலாம். அவர்களின் செயல்களைத் தடுக்க நாம் ஏதாவது செய்திருக்க வேண்டும் அல்லது செய்திருக்கக் கூடும் என்று நினைக்கிறோம். உதாரணமாக, பல குழந்தைகள் தாங்கள் சிறப்பாக நடந்துகொண்டிருந்தால்,அவர்களின் பெற்றோர் விவாகரத்து செய்திருக்க மாட்டார்கள் என்று உணர்கிறார்கள். இந்த வகையான சிந்தனை நிச்சயமாக தவறானது தான், ஆனாலும் அது வேதனையளிக்கிறது, அழிவை ஏற்படுத்துகின்றது. இப்படியாக

*என் தலையில் பல வருடங்களாக ஒலித்த ஒரு பதிவு இது: என்னில் என்ன தவறு? என்னிடம் என்ன தவறு? என்னில் என்ன தவறு? என் தந்தை என்னிடம் இப்படி செய்ய விரும்புகிறதற்கு நான் என்ன செய்கிறேன்?*

என்னிடம் ஏதோ தவறு இருக்கிறது, அதனால்தான் என் தந்தை என்னை தன் மகளாக ஏற்றுக் கொண்டு நேசிப்பதற்குப் பதிலாக தன்னுடைய காமத்தை வெளிப்படுத்த என்னைப் பயன்படுத்த விரும்பினார் என்று நான் உறுதியாக நம்பினேன்.

ஆத்துமாவிலே காயமடைந்திருப்பவர்கள் தங்களுக்கு ஏதோ தவறு இருப்பதாக உணர்ந்து ஆழ்ந்த துன்பத்தை அனுபவிப்பதோடு குற்ற உணர்வையும் அவமானத்தையும் உணரலாம். ஆனால் தேவன் அவர்களை விடுவிக்க முடியும்! நீங்கள் அப்படிபட்ட நபர்களில் ஒருவராக இருந்தால், தேவனால் உங்களை விடுவிக்க இயலுவதோடு, அவர் உங்களை விடுவிக்க விரும்புகிறார் என்பதில் உறுதியாக இருங்கள். எனது சுதந்திரம் உடனடியாக இருக்கவில்லை, உங்களுடையதும் அவ்வாறாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நான் தேவனுடைய வார்த்தையினால் என் மனதைத் தொடர்ந்து புதுப்பிக்கும்போது, என் உணர்வுகள் படிப்படியாக ஆனால் நிச்சயமாக மாற ஆரம்பித்தன.

> நீங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்தாலோ, நிராகரிக்கப்பட்டிருந்தாலோ அல்லது கைவிடப்பட்டிருந்தாலோ அது உங்கள் தவறு அல்ல.

அப்படியே உங்களுக்கும் நடக்கும். யாராவது உங்களை துஷ்பிரயோகம் செய்தாலோ, நிராகரித்தாலோ அல்லது கைவிட்டாலோ அது உங்கள் தவறு அல்ல என்று மீண்டும் சொல்கிறேன். உங்களுக்காக நீங்கள் எழுந்து நின்று, எதிரியின் பொய்கள் உங்களை கட்டுப்படுத்த அனுமதிப்பதை நிறுத்த வேண்டிய நேரம் இது.

சாத்தான் நம்மை மதிப்பற்றவர்களாகவும், மதிப்பிழந்தவர்களாகவும் உணர வைக்க முயல்கிறான், அதற்குச் சிறந்த வழி, நம் மேல் பொய்யான குற்ற உணர்வையும் நச்சான அவமானத்தையும்

சுமத்துவதுதான். நாம் செய்த ஏதோ தவறானது அல்லது நமக்கு செய்யப்பட்ட ஏதோ தவறானதைப் பற்றி வெட்கப்படுவதில் ஆச்சரியம் ஏதும் இல்லை; அது உண்மையில் மிகவும் சாதாரணமானது. ஆனால் என்ன நடந்ததோ அதனால் நம்மைக் குறித்து வெட்கப்படுவது, அவமானத்தையும், குற்ற உணர்ச்சியையும் ஆபத்தான நிலைக்கு கொண்டு செல்கிறது. அது நம் வாழ்வின் அனைத்து பகுதிகளையும் விஷமாக்கத் தொடங்குகிறது. அந்த அவமானத்திலிருந்து விடுபட வேண்டிய நேரம் இது!

## அவமானத்தை கையாள்வது

வெட்கப்படுதல் என்பது குழப்பமடைவது, புரிதலில்லாமலிருப்பது, உலர்ந்திருப்பது, ஏமாற்றமடைந்தோ நிறுத்திவிடப்பட்டோ இருப்பதாகும். குழப்பமடைந்திருப்பது என்பது வெட்கமடைந்து, குழப்பத்துடன், தோற்கடிக்கப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்டது என்று அர்த்தமாகும். அது அழிந்து போவது அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்பட்டது என்றும் பொருள்படும். குணப்படுத்தப்பட வேண்டிய, காயப்பட்ட ஆத்துமாவுடன் நாம் வாழ்க்கையில் செல்லும்போது நாம் சந்திக்கும் பல பிரச்சனைகளை இது விவரிக்கிறது. எதுவும் நமக்கு சாதகமாக நடக்கவில்லை, நாம் வறண்டு, உயிரற்றதைப் போன்று உணர்கிறோம், குழப்பமே நம் துணையாகிறது, முடிவுகளை எடுப்பதில் நமக்கு அடிக்கடி சிரமம் ஏற்படுகிறது, பொதுவாக வாழ்க்கை மிகவும் ஏமாற்றமளிக்கிறது.

இந்த நோய்களுக்கு நான் பலவிதமான மருந்துகளை முயற்சித்தேன், ஆனால் நான் படித்த ஒரு புத்தகத்தின் மூலம் நான் அடிப்படையில் யாராக இருக்கிறேன் என்பதை தேவன் எனக்குக் காண்பிக்கும் வரை எனக்கு உண்மையான உதவி எதுவும் கிடைக்கவில்லை. நான் யாராக இருந்தேனோ அதைக் குறித்து நான் வெட்கப்பட்டேன். அவமானம் என் எண்ணங்களை, உணர்ச்சிகளை மற்றும் வாழ்க்கைத் தேர்வுகளை விஷமாக்கி இருந்தது. வறண்ட மற்றும் ஏமாற்றம் என்பதே நான் சாதாரணமாக எப்படி உணர்ந்தேன் என்பதற்கான நல்ல விளக்கம். நான் வெறுமனே சந்தோஷமாக இல்லை. அவமானம் கையாளப்பட

*வேண்டியிருந்தது. அதற்கு என் எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகளால் நான் தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்டிருப்பதற்குப் பதிலாக, தேவனை அவருடைய வார்த்தையின்படி ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. இறுதியாக நான் விடுதலையானேன்.*

*அவமானம் என்ற பிரச்சனையைப் பற்றிக் கேள்விப்படுவதற்கு முன்பே நான் குற்றம் மற்றும் கண்டனத்தைப் பற்றி கற்றுக்கொண்டேன். ஆம் நிச்சயமாகவே, என் தந்தை எனக்கு செய்ததைப் பற்றி நான் வெட்கப்பட்டேன், அதுவே எனது கடந்த காலத்தை நான் நீண்ட காலம் ஒரு ரகசியமாக வைத்திருந்ததற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக இருந்தது. எனக்கு என்ன நடந்தது என்பதை நினைத்து நான் வெட்கப்பட்டேன் என்று எனக்குத் தெரியும், ஆனால் நான் என்னைக் குறித்தும், அதன் காரணமாக நான் யார் என்பதை குறித்தும் வெட்கப்பட்டேன் என்று எனக்குத் தெரியவில்லை. நான் இதை அறிந்துக் கொண்டவுடன் எனக்கு பல விஷயங்கள் புரிய ஆரம்பித்தன. நான் உள்வாங்கி என் அடையாளமாக எடுத்துக்கொண்டிருந்த அந்த அவமானமானது, இயேசு எனக்காக மரித்து எனக்கு அளித்த நல்ல வாழ்க்கையை வாழவிடாமல் தடுக்கிறது என்பதை அறிந்துக்கொண்டேன்.*

*என்னிடம் என்ன தவறு என்று நான் எப்போதுமே யோசித்துக் கொண்டிருப்பதுண்டு. ஒருவேளை நீங்களும் அப்படியாக இருக்கலாம். ஆனால் எல்லாவற்றையும் போலவே, நம் வாழ்வில் இருக்கும் தவறான மற்ற காரியங்களைப் போன்றே, நம்முடைய தவறுக்கும், குற்ற உணர்வு மற்றும் அவமானத்திற்கும் இயேசுவிடம் ஒரு பரிகாரம் இருக்கிறது. அவர் நமக்கு சரியான தன்மை அல்லது நீதியை வழங்குகிறார், அப்படியென்றால், அது தேவனுடனான சரியான நிலைப்பாட்டை குறிக்கிறது (2 கொரிந்தியர் 5:21). அவர் நம் பாவத்தை எடுத்துக்கொள்கிறார். அவருடைய நீதியை நமக்குத் தருகிறார். இயேசுவின் மேல் நீங்கள் கொண்ட உங்கள் விசுவாசத்தின் மூலம் நீங்கள் தேவனின் நீதியாக ஆக்கப்பட்டீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?*

*என்னிடம் நேர்மை (நீதி) இருக்கிறது என்பதை அறிந்தவுடன், அந்த உண்மையை எப்படி என் வாழ்க்கையில் ஒரு நிஜம் ஆக அனுமதிப்பது என்று கற்றுக்கொள்ள பல வருடங்கள்*

தேவைப்பட்டது. நாம் நீதியை அணிந்து கொள்ள வேண்டும் என்று வேதம் கூறுகிறது (எபேசியர் 6:14). “அணிந்து கொள்வதென்பது” அதை உறுதியாக நம்புவதும், அவருடைய விலைமதிப்பற்ற, மதிப்புமிக்க பிள்ளையாக உங்களுக்கு தேவன் அருளியிருக்கும் கண்ணியத்துடன் நடக்க கற்றுக்கொள்வதும் ஆகும். நாம் நம்மிலும், நம்மாலும் நீதியுள்ளவர்கள் அல்ல, ஆனால் விசுவாசத்தின் மூலம் நாம் நமக்கு வழங்கப்படும் வேறு எந்த பரிசையும் பெற்று அனுபவிப்பதைப் போலவே தேவனுடைய நீதியையும் பெற்றுக் கொள்ள முடியும். உங்களைப் பற்றி நீங்கள் மோசமாக உணர்ந்துக் கொண்டும், நீங்கள் உங்களை பிறருடன் ஒப்பிட்டுக்கொண்டும் உங்களிடம் தவறாக இருக்கிறதாக நீங்கள் நினைக்கும் அனைத்தையும் தொடர்ந்து பதிவு செய்து கொண்டும் இருப்பது தேவனுடைய விருப்பம் அல்ல.

> தேவன் தம்முடைய விலைமதிப்பற்ற பிள்ளையாக உங்களுக்கு வழங்கும் கண்ணியத்துடன் நடக்க கற்றுக்கொள்ளுங்கள்.

நாம் இருக்கும் இடத்தில் தேவன் நம்மைச் சந்திக்கிறார் என்பதையும், நாம் எங்கே இருக்க வேண்டுமோ அங்கே சென்றடைய தேவன் உதவுவார் என்பதையும் அறிந்தவர்களாக, உங்களை நீங்கள் ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியடைய கற்றுக்கொள்ளுங்கள்.

நீங்கள் தேவனுடன் சரியான நிலைப்பாட்டை கொண்டிருப்பதைப் பற்றி வேதாகமம் கூறுவதை அறிந்திருப்பதாலோ அல்லது யாரோ ஒருவர் தேவனுடைய நீதியைப் பற்றி கற்பிப்பதைக் கேட்டிருப்பதாலோ உங்கள் வாழ்க்கையில் அது உண்மையாகிவிட்டது என்று அர்த்தமல்ல. தேவனுடைய சத்தியங்கள் நம் வாழ்வில் செயல்படுவதை நாம் காணும் வரை அவற்றை முழுமையாக அறியவோ அல்லது அதைப் பற்றிய வெளிப்பாட்டையோ நாம் கொண்டிருக்கவில்லை என்று நான் அடிக்கடி மக்களிடம் சொல்கிறேன். கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலம் நீங்கள் தேவனுடன் சரியாகிவிட்டீர்கள் என்று நீங்கள் உண்மையிலேயே நம்பும்போது, நீங்கள் குற்றவாளியாக,

*ஆக்கினைக்குட்பட்டவர்களாக, அவமானப்பட்டவர்களாக உணர்வதை நிறுத்திவிடுவீர்கள்.*

*குற்ற உணர்வு மற்றும் அவமானம் போன்ற உணர்வுகளுடன் நீங்கள் இன்னும் அதிகமாக கஷ்டப்படுகிறீர்கள் என்றால், நீங்கள் கிறிஸ்துவுக்குள் யாராக இருக்கிறீர்கள் என்பதைப் பற்றி இன்னும் அதிகமான வெளிப்பாடு உங்களுக்கு வேண்டும். அதற்கு எவ்வளவு காலம் எடுத்தாலும் தயவு செய்து மனம் தளர்ந்து விட்டுவிடாதீர்கள். நீங்கள் விட்டுவிட வேண்டும் என்று தான் சாத்தான் விரும்புகிறான். ஆனால் நீங்கள் அவருடைய சத்தியத்திற்குள் அழுத்திக் கொண்டே இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். தேவனுடனான உங்கள் சரியான நிலையைப் பற்றி தொடர்ந்து படித்து, அதை அடிக்கடி அறிக்கையிடுங்கள், பின்னர் ஒரு நாளில் அதன் உண்மை உங்கள் தலையிலிருந்து உங்கள் இருதயத்திற்குள் நுழைந்துவிடும். அது உங்களில் உறுதியாக நிலைநிறுத்தப்பட்டவுடன், பிசாசு உங்களுக்கு எதிராக வந்தாலும், அவன் ஒருபோதும் உங்களை தோற்கடிக்க மாட்டான்.*

*நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக தேவனுடைய வார்த்தையைப் படித்து, கற்பித்த பிறகும், நான் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதி என்று ஒவ்வொரு நாளும் அறிக்கையிடுகிறேன். அவ்வாறு செய்வது இயேசுவில் நான் யார் என்பதை நினைவூட்டுகிறது, அவருடைய வார்த்தையை அறிக்கையிடுவது, சாத்தானின் பொய்களிலிருந்து என்னை காக்கிறது மற்றும் பாதுகாக்கிறது.*

*நீங்கள் தேவனுடனான உங்கள் நடையில், நீங்கள் இருக்க விரும்பும் இடத்தில் இல்லாவிட்டாலும், நீங்கள் குற்ற உணர்ச்சியும் வெட்கமும் அடைய வேண்டியதில்லை. நீங்கள் ஓரளவு முன்னேற்றம் அடைந்துவிட்டீர்கள் என்று மகிழ்ச்சியடையலாம். உங்களுக்குள் ஒரு நல்ல வேலையை ஆரம்பித்த இயேசு அதை நிறைவேற்றுவார். கிறிஸ்து திரும்பி வரும் நேரம் வரையில் அவருடைய கிரியையைத் தொடர்ந்து வளர்த்து, பூரணப்படுத்துவார் (பிலிப்பியர் 1:6). குற்ற*

> *தேவன் இப்போது உன்னில் கிரியை செய்துக் கொண்டிருக்கிறார்!*

உணர்வுடனும், அவமானத்துடனும் பிசாசு உங்களைத் தாக்கும்போது, "நான் இருக்க வேண்டிய இடத்தில் நான் இல்லாமல் இருக்கலாம், ஆனால் நான் முன்பு இருந்த இடத்தில் நான் இல்லை, தேவனுக்கு ஸ்தோத்திரம், தேவன் இப்போது என்னில் கிரியை செய்துக் கொண்டிருக்கிறார், ஒவ்வொரு நாளும் நான் மேலும், மேலும் முன்னேறி வருகிறேன்!" என்று சொல்லுங்கள்.

சமூகம் சரியானது அல்லது தவறானது என்று சொல்லும் விதத்தில் நடந்து கொள்ள முடியவில்லை என்று உங்களைப் பற்றி மோசமாக உணர்ந்து, உங்களிடம் என்ன தவறு இருக்கிறது என்று யோசித்து எவ்வளவு நேரத்தை வீணடிக்கிறீர்கள்? அது எவ்வளவு நேரமாக இருந்தாலும் அது அதிகமான நேரம் தான். நீங்கள் மீண்டும் ஒருபோதும் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாத வீணடிக்கப்பட்ட விலைமதிப்பற்ற நேரம் அது. உலகம் உங்களை எப்படிப் பார்க்கிறது என்பதற்குப் பதிலாக, தேவன் உங்களைப் பார்க்கும் வழியில் உங்களை நீங்கள் பார்க்க கற்றுக்கொள்ளுங்கள். உலகம் உங்களை பாதிக்கப்பட்டவர் என்று அழைக்கலாம், ஆனால் தேவன் உங்களை வெற்றியாளர் என்று அழைக்கிறார். உலகம் உங்களை சேதமடைந்த பொருட்கள் என்று அழைக்கலாம், ஆனால் தேவன் உங்களை அவரது மகள் என்று அழைக்கிறார்.

நீங்கள் கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டு, அவருடைய வார்த்தை உங்கள் சிந்தனையைப் புதுப்பிக்கத் அனுமதித்தால், படிப்படியாக நீங்கள் உங்களைப் பற்றி நன்றாகவும், சிறப்பாகவும் உணருவீர்கள், அது உங்கள் வாழ்க்கையை நீங்கள் அனுபவிக்க உங்களுக்கு உதவும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். நீங்கள் எவ்வளவு தூரம் இன்னும் போக வேண்டும் என்று தொடர்ந்து சிந்திப்பதற்குப் பதிலாக, உங்களுக்கு ஏற்பட்ட முன்னேற்றம் சிறியதாகத் தோன்றினாலும் அதை அனுபவிக்க கற்றுக்கொள்ளுங்கள்.

## குற்றம் சாட்டுபவர்

நீங்கள் கவனமாகக் கேட்டால், குற்றஞ்சாட்டும் எண்ணங்கள் உங்கள் மனதைத் தாக்குவதை அடிக்கடி நீங்கள் கேட்கலாம். நீங்கள் தவறு என்று குற்றம் சாட்டும் எண்ணம் இருப்பதால்

*நீங்கள் ஏதோ சில தவறான செயல்கள் செய்துவிட்டோம் என்று குற்ற உணர்வைக் கொண்டிருக்கிறீர்களா? முற்றிலுமாக இல்லை! பிசாசு ஒரு பொய்யன், அவன் நம்மை தோற்கடிக்க முயற்சிக்கும் போர்க்களம் நம் மனமே. ஏதேன் தோட்டத்திலே, ஏவாளிடம் பொய் சொல்லி ஏமாற்றியது போல நம்மிடமும் பொய் சொல்லி நம்மை ஏமாற்ற முயற்சிக்கிறான். நாம் நம்மை நேசித்து, மதிப்பதை தடுப்பதே அவனது முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக இருக்கிறது. அதில் அவன் வெற்றி பெற முடிந்தால், அவனது பொய்கள் மூலம் நம் வாழ்க்கையை அவன் கட்டுப்படுத்துவதில் வெற்றி பெறுவான்.*

> மனம் என்பது பிசாசு நம்மைத் தோற்கடிக்க முயலும் போர்க்களம்.

*சாத்தான் தேவனுடைய பிள்ளைகளை குற்றஞ்சாட்டுகிறவன். (வெளிப்படுத்துதல் 12:10). அவன் நமக்கெதிராக இரவும் பகலும் நம்மீது குற்றஞ்சாட்டுகிறான். ஆனால் நாமோ முடிவில்லாமல் நம் மனதில் மிதந்துக் கொண்டிருக்கும் எண்ணங்களை நம்புவதை விட தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்புவதன் மூலம் அவனை தோற்கடிக்க முடியும். உங்களுடைய ஒவ்வொரு எண்ணமும் உண்மையாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்பதை தயவுசெய்து உணருங்கள். தேவனுடைய வார்த்தையே உண்மை.*

*கிறிஸ்துவின் இரத்தத்தினாலும், தேவனுடைய வார்த்தையினாலும், நம்முடைய சாட்சியினாலும் நாம் சாத்தானை ஜெயிக்கிறோம் (வெளிப்படுத்துதல் 12:11). உங்கள் சாட்சி என்ன? அவற்றில் சில இன்னும் உருவாகிக்கொண்டிருக்கும் நிலையில் இருக்கலாம், ஆனால் அதன் ஒரு பகுதியாக நீங்கள் மீட்கப்பட்ட, சக்திவாய்ந்த, சாத்தியக் கூறுகள் மற்றும் ஆற்றல் நிறைந்த தேவனுடைய பிள்ளைகள். நீங்கள் உண்மையில் உருவாகிக் கொண்டிருக்கும் ஒரு அதிசயம்! நீங்கள் இன்னும் பாவத்தில் இருந்த போது இயேசு உங்களுக்காக மரித்தார், எனவே நீங்கள் மன்னிக்கப்பட்டு அவருடன் நடக்க ஆசையாக இருக்கும் போது அவர் என்ன திட்டமிட்டிருப்பாரென்று கற்பனை செய்து பாருங்கள். உங்கள் கற்பனை எவ்வளவு ஆக்கப்பூர்வமாக இருந்தாலும், உங்கள் வாழ்க்கைக்கு அவர் வைத்திருக்கும் அற்புதமான திட்டத்தை*

முழுமையாக உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியாது என்று நான் உறுதியளிக்கிறேன்.

நாளுக்கு நாள் நாம் அவருடன் நடக்கும்போது தேவனின் திட்டம் என்ன என்பதை நாம் கண்டுபிடிப்போம். தேவன் என்னுடைய வாழ்க்கையில் செய்ததைக் கண்டு நான் தொடர்ந்து திகைத்துக்கொண்டிருக்கிறேன்.

அவர் என்னை முழு துயரத்திலிருந்தும் தோல்வியிலிருந்தும் ஒரு மகிழ்ச்சியான, நிறைவான மற்றும் உபயோகமான நபராக கொண்டு வந்தார். ஆம், அது ஒரு நீண்ட பயணம், அது எளிதானதாக இருக்கவில்லை, ஆனால் நான் அதை எதற்காகவும் விட்டுக் கொடுக்க மாட்டேன். முன்னோக்கி தொடர்ந்து செல்வது மிகவும் கடினமாகத் தோன்றும் நாட்களில், நீங்கள் மேன்மையான விஷயங்களுக்கு நேராக செல்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

பிசாசு ஒரு பொய்யன் என்பதை உங்களுக்கு நினைவூட்டிக் கொண்டே இருங்கள், மேலும் அவனுடைய பொய்களை தேவனுடைய வார்த்தையால் மாற்றுங்கள். நீங்கள் அப்படி செய்யும் ஒவ்வொரு முறையும், நீங்கள் ஒரு சிறிய போரில் வெற்றி பெறுகிறீர்கள், அது உங்கள் வாழ்க்கைக்கு எதிராக அவன் தொடங்கிய போரில் உங்களை இறுதியில் வெற்றியாளராக மாற்றும்.

குற்றவுணர்வு மற்றும் அவமானத்தின் வேதனையுடன் நீங்கள் வாழ வேண்டியதில்லை. நீங்கள் இயேசுவின் மூலம் - அவர் உங்கள் குற்றத்தையும் அவமானத்தையும் பழியையும் ஏற்றுக்கொண்டார் என்ற உண்மையால் தேவனுடன் சரியான நிலைப்பாட்டை அனுபவிக்க முடியும். தேவனுடைய பிள்ளையாக அவரை பிரியப்படுத்த ஆழமாக விருப்பங்கொண்டிருக்கும் நீங்கள், செய்த தவறுகளுக்காக வெட்கப்படும் நேரங்கள் இருக்கும், ஆனால் அந்த உணர்வுகளை மனந்திரும்புவதின் மூலமாகவும் தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலமாகவும் உடனடியாக சரி செய்துக்கொள்ள முடியும்.

## அத்தியாயம் 9

# உங்கள் உண்மையான சுயத்தைக் கண்டறிதல்

*இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.*

*-2 கொரிந்தியர் 5:17*

*நாம் உண்மையில் யார் என்று தெரியாமல் இருப்பது குழப்பத்தையும், நிறைவின்மையையும், உணர்ச்சித் துயரத்தையும் ஏற்படுத்துகிறது. பலர் தவறான அடையாளங்களை உருவாக்கி, அவர்கள் இல்லாத ஒருவரைப் போன்று நடிக்கிறார்கள். உதாரணமாக, நாம் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்க பயப்படுகிறோம் என்றால் நாம் பலவீனமானவர்கள் அல்லது தேவையில் இருப்பவர்கள் என்று யாரும் நினைத்துவிடக் கூடாதபடி ஒரு கடினமான வெளிப்புறத்தை உருவாக்கிக் கொள்ளலாம். மக்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்ற பயம் மற்றும் அவர்களின் ஒப்புதலுக்கு ஏங்குவது நாம் நாமாக இருப்பதனால் ஏற்படும் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு பதிலாக பிறர் நாம் எப்படி இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்று நாம் நினைக்கிறோமோ அப்படியாக மாற முயலுவது நம் ஆளுமையையே மாற்றுவதற்கு காரணமாக இருந்துவிடலாம்.*

*பச்சோந்திகள் ஒருவிதமான பல்லி இனமாகும். அவை அவற்றின் சுற்றுப்புறங்களுடன் ஒன்றியிருப்பதற்காக வண்ணங்களை மாற்றும் திறனைக் கொண்டுள்ளன. அது அவர்களை வேட்டையா-*

டுபவர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அப்படி செய்கின்றன. நம்மால் நிறங்களை மாற்ற முடியாவிட்டாலும், சில சமயங்களில், நாம் நிராகரிப்பு அல்லது மறுப்பு ஆகியவற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் நம்பிக்கையில் தவறான அடையாளங்களை உருவாக்கிக் கொள்கிறோம்.

> நாம் நாமாக இருப்பதில் சுதந்திரமாக இருக்கும் வரை நாம் ஒருபோதும் சுதந்திரமாக இருக்க முடியாது.

நிராகரிப்புக்கு அஞ்சும் காயம்பட்டவர்கள், மக்களை மகிழ்விக்கிறவர்களாகி, தங்கள் வாழ்க்கையை தங்கள் உண்மையான சுயத்தை கண்டுபிடித்து வாழ்வதற்கு பதிலாக மற்றவர்கள் அவர்கள் என்னவாக இருக்க வேண்டும், செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்களோ அதைப் பொறுத்து வாழ்வது மிகவும் பொதுவானது. நாம் நாமாக இருப்பதில் சுதந்திரமாக இருக்கும் வரை நாம் ஒருபோதும் சுதந்திரமாக இருக்க முடியாது.

அவர்கள் அங்கீகரிக்கும் ஒரு குறிப்பிட்ட பிம்பத்தில் பொருந்துமாறு உலகம் நம்மை அழுத்துகிறது. நாம் என்ன அணிய வேண்டும், எவ்வளவு எடையுடன் இருக்க வேண்டும், நம் தலைமுடியை எப்படி ஸ்டைல் செய்வது, நாம் அறிவாளியாக இருக்க வேண்டிய கல்வி நிலை, ஒவ்வொரு சூழ்நிலையிலும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள் என்ற இந்த பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. அப்படி இல்லை என்றால், எப்போதும் சொல்லப்படுவதைப் போல, இந்த அச்சுகளுக்கு நாம் பொருந்தவில்லை அதனால் நாம் ஏற்றுக்கொள்ளப்படக் கூடாதவர்களாக இருப்போம், எனவே, நிராகரிக்கப்படுவோம் என்பதை நாம் நன்கு அறிவோம். நாம் பெரும்பாலும் உறவுகளில் ஆரோக்கியமான இணைப்புகளை உருவாக்குவதை விட நிராகரிக்கப்பட கூடாதென்பதற்காக முயன்றே அதிக நேரத்தை செலவிடுகின்றோம்.

வேதவாக்கியங்களின்படி நாம் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் போது, நாம் மறுபடியும் பிறக்கிறோம் அல்லது

புதிதாகப் பிறக்கிறோம். நம் வாழ்க்கையிலே பழைய எதையும் விட்டு விட்டு, உலகத்துடனான நம் அனுபவத்திற்கு முன், பாவம் நம்மை காயப்படுத்தியதற்கு முன் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று தேவன் முதலில் நினைத்து உருவாக்கிய அற்புதமான நபராக மாறும்படி அழைக்கப்படும் தருணம் இது. நம்முடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டது. தேவனின் நிபந்தனையற்ற அன்பையும், இரக்கத்தையும் பெற நமக்கு இருக்கும் ஒரு வாய்ப்பு இது. நாம் புதிதாக உருவாக்கப்படுகிறோம். வாழ்க்கை சாத்தியத்தால் நிறைந்திருக்கிறது. நாம் புதிய ஆவிக்குரிய களிமண்ணாக மாறுகிறோம் என்று நான் சொல்ல விரும்புகிறேன், உலகத்திற்கு பதிலாக பரிசுத்த ஆவியானவர் நம்மை வடிவமைக்க அனுமதிப்பதன் மூலம் நாம் உண்மையான நாமாக மாறலாம்.

## நீங்கள் ஒளிவு மறைவில் சலிப்படைந்திருக்கிறீர்களா?

பாசாங்கு செய்வது ஒரு வகையான ஒளிவு மறைவு. நாம் உண்மையில் யாராக இருக்க விரும்புகிறோம் என்பதை மறைத்து, நாம் நம்மைப் பாதுகாக்கும் என்று நம்பும் எதையாவது போலவும் அல்லது நம்மிடம் எதிர்பார்க்கப்படும் என்று நாம் நினைக்கும் ஒன்றைப் போலவும் நடிக்கிறோம். “தி மாஸ்க் பிஹைண்ட் தி மாஸ்க்” என்ற புத்தகத்தில் அந்த வாழ்க்கை வரலாற்றாசிரியர் பீட்டர் எவன்ஸ் கூறுகையில், நடிகர் பீட்டர் செல்லர்ஸ் என்பவர் பல வேடங்களில் நடித்திருப்பதால், சில சமயங்களில் அவர் தனது சொந்த அடையாளம் என்ன என்பதையே அறியாதிருக்கிறார். ஒருமுறை அவரை அணுகிய ஒரு ரசிகர், “நீங்கள் பீட்டர் விற்பனையாளரா ?” என்று கேட்டார். செல்லர்ஸ் விறுவிறுப்பாக “இன்று இல்லை,” என்று பதிலளித்துவிட்டு நடந்து சென்றுவிட்டார்.[17]

ஆழமாக என் உள்ளத்திலே, நான் எப்போதும் மற்ற பெண்களை விட சற்று வித்தியாசமானவளாக உணர்ந்தேன், அதனால் நான் உண்மையில் யாராக இருக்க விரும்பினேனோ அதை மறைத்து, என்னைச் சுற்றியிருந்த மற்ற பெண்கள் என்ன செய்தார்களோ

அப்படி செய்தால் என்னை ஏற்றுக்கொள்வார்களென்று நினைத்து அவர்கள் செய்ததைச் செய்ய முயற்சித்தேன். நமது உண்மையான அடையாளம் நாம் என்ன செய்கிறோம் என்பதில் இல்லை, நாம் தனிப்பட்டவர்களாக யாராக இருக்கிறோம் என்பதில் உள்ளது என்பதை நான் இன்னும் உணர்ந்திருக்கவில்லை. தனிநபர்களாக நாம் யாராக உள்ளோம் என்பதே நாம் என்ன செய்கிறோம் என்பதை விட முக்கியமானது.

நான் மென்மையாகவும், சாந்தமாகவும் இருக்க முயற்சித்தேன். ஏனென்றால் நான் அப்படி இருக்கும் பெண்களை அறிந்திருந்தேன். அவர்களை ரசித்தேன். அவர்கள் என்னை விட வாழ்க்கையை எளிதாக வாழ்வதைப் போன்று தோன்றியது. நான் எப்பொழுதுமே எதையாவது எதிர்த்துப் போராடுவது போலவே தோன்றியது. மற்ற பெண்களெல்லாம் பிறர் என்ன செய்ய விரும்பினார்களோ அதை எவ்வித சிரமமுமின்றி எளிதாக செய்த போது நான் மட்டும் எப்போதுமே கடினமாகவும், பொறுப்பேற்றுக் கொண்டு இருக்கவும் முயன்றுக் கொண்டு இருந்தேன்.

அதிர்ஷ்டவசமாக, நான் தேவனால் பின்பற்றுவதற்கல்ல, வழிநடத்துவதற்குப் படைக்கப்பட்டேன் என்பதை இப்போது உணர்கிறேன். அதனால் என்ன நடந்தாலும் அதை ஏற்றுக் கொண்டு அதனுடன் செல்ல என்னால் இயலவில்லை. ஏதாவது மாற்றப்பட வேண்டியிருந்ததென்றால், நான் தான் முதலில் நின்று அதை மாற்ற முயற்சிப்பேன்.

நான் வழிநடத்த பிறந்தேன், ஆனால் எனக்கு நிச்சயமாக பரிசுத்த ஆவியானவரின் வடிவமைத்தல் தேவைப்பட்டது. அவர் நம்மை இயேசு கிறிஸ்துவின் சாயலாக மாற்றுகிறார். பின்னர் நாம் நம்முடைய தனித்துவமான வரங்கள் மற்றும் குணங்கள் மூலம் இயேசு பிரகாசிக்கும்படி அனுமதிக்க கற்றுக்கொள்கிறோம். என்னிடம் நிறைய கரடுமுரடான விளிம்புகள் என்று குறிப்பிடப்படும் காரியங்கள் இருந்தது. மேலும் என்னை மென்மையாக்குவதற்கும் என்னுடன் பிறர் இருப்பது எளிதாய் இருப்பதற்கும் நிறைய பரிசுத்த ஆவியானவரின் மணற்காகிதங்கள் தேவைப்பட்டது.

ஒரு "வழக்கமான பெண்ணாக" இருக்க வேண்டும் என்ற முயற்சியில்–அது எதுவாக இருந்தாலும் - நானும் தையல் கற்றுக் கொள்ள முயற்சித்தேன், அதனால் நான் என் குடும்பத்தினருக்கு சில ஆடைகளை உருவாக்கி கொடுக்க முடியும். அந்த முயற்சியில் நான் வெற்றிபெறாததற்கு அவர்கள் இன்னும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். நான் தோட்டம் வைத்திருந்த சில பெண்களைப் போலவே இருக்க முயற்சித்து நான் என் கணவரிடம் தோட்டம் போட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பேசி, ஒரு தோட்டத்தை ஏற்படுத்தினேன். ஆனால் நான் எவ்வளவு கடினமாக காய்கறிகளை வளர்க்க முயற்சித்தும், அவை எப்போதுமே காய்ந்து, செத்துபோய்விடும். தேவன் சொல்லாத ஒன்றை அல்லது நமக்கு வரமளிக்காத ஒன்றை செய்ய நமக்கு உதவ மாட்டார். தையல் மற்றும் தோட்டக்கலை போற்றத்தக்க திறமைகள் என்றாலும், தேவன் எனக்கு கொடுத்த நேரத்தில் நான் அதை செய்ய அவர் விரும்பவில்லை. அதனால் அவர் என் முயற்சிகளை ஆசீர்வதித்து அவற்றை வெற்றியடையச் செய்ய மாட்டார்.

இந்த முயற்சிகளில் நான் எவ்வளவு தோல்வியுற்றேனோ அவ்வளவாக, என்னைப் பற்றி நான் மோசமாக உணர்ந்தேன். நான் நானாக இருப்பதில் தைரியமாக இருக்க கற்றுக் கொள்ளும் வரை காரியங்களை செய்ய முயன்று, தோற்று போகும் சுழற்சி தொடர்ந்துக்கொண்டேயிருந்தது. அனைத்து முயற்சிகளும் தோல்விகளும் என்னை விரக்தியடையச் செய்தன. நிச்சயமாகவே, அந்த விரக்தியை நான் மிகவும் நேசித்த மக்கள் மீது காண்பித்தேன்: என் குடும்பம். இறுதியாக, நான் தையல் மற்றும் தோட்டக்கலையை வெறுக்கிறேன் என்று என்னிடமே ஒப்புக்கொண்டேன். மேலும் நான் என்ன விரும்பினேன், என்ன செய்ய விரும்புகிறேன் என்று நேர்மையாக என்னிடம் கேட்க ஆரம்பித்தபோது, நான் பைபிளைப் படிக்கவும் அதைக் கற்பிக்கவும் விரும்புகிறேன் என்பதை உணர்ந்தேன். இது நான் என் உண்மையான நானாக மாறுவதற்கான ஒரு மாபெரும் படியாக இருந்தது.

நீங்கள் வேறொருவராக இருக்க தேவன் ஒருபோதும் உங்களுக்கு உதவமாட்டார். நீங்கள் விசேஷமாக ஏதாவது செய்ய உங்களுக்கு திறனை அளித்துள்ளார். ஆனால் அது மற்றவர்கள் என்ன

செய்கிறார்களோ அது போன்று இல்லாமல் இருக்கலாம். சிறிது நேரம் எடுத்து, நீங்கள் விரும்புவதைக் கண்டறிய உங்கள் இருதயத்தை ஆராயுங்கள். பின்னர் அதைச் செய்ய கிறிஸ்துவில் தைரியத்தைக் கண்டறியுங்கள். நீங்கள் செய்ய விரும்புவது, இதுவரை செய்யாத காரியமாக இருந்தாலும், எப்பொழுதும் எல்லாவற்றிலும் முதன்மையானவர் ஒருவர் இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நீங்கள் வேறொருவராக இருக்க தேவன் ஒருபோதும் உதவமாட்டார்.

என் வாழ்க்கையிலே நான் நானாக இல்லாத ஒருவளாக இருக்க முயற்சித்து, அதன் செயல்பாட்டிலே என் சொந்த ஆசைகள் என்னவென்று கூட எனக்கு தெரியாமலிருந்தது. நான் யார்? நான் என்ன செய்ய விரும்பினேன்? தேவனுடைய மகத்துவமான திட்டத்திலே நான் எங்கே பொருந்தினேன்?

உங்கள் உண்மையான சுயத்தை நீங்கள் கண்டறியும் போது, நீங்கள் உங்களுடன் வசதியாக இருக்கும் ஒரு இடத்தைக் காண்டுபிடிப்பீர்கள். வாழ்க்கையில் நீங்கள் தேர்ந்தெடுக்கும் அந்த பாத்திரத்தில்/ பங்கில் நீங்கள் எளிதாக செயல்படுவீர்கள். நீங்கள் நல்ல பலனைத் தருவீர்கள். நீங்கள் உண்மையில் இல்லாத ஒன்றைப் போல் இருக்க நடிப்பது, மிகவும் இறுக்கமான ஆடைகளை அணிவது போன்றது. நீங்கள் அவற்றை அணிந்திருக்கிறீர்கள், ஆனால் நீங்கள் ஒருபோதும் வசதியாக உணருவதில்லை. நீங்களாக இருப்பது உங்களுக்கு மிகவும் வசதியான ஆடைகளை அணிந்து, உங்களுக்கு பிடித்த சவுகரியமான மெத்து, மெத்தான நாற்காலியில் உட்கார்ந்து கொள்வது போன்றது. நீங்கள் எப்போதும் வசதியாக இருக்கக்கூடிய ஒரே பாத்திரம் நீங்கள் உண்மையான நீங்களாக இருப்பதேயாகும்.

வாழ்க்கையில் உங்களுடைய இனிமையான இடத்தைக் கண்டுபிடித்துவிட்டீர்களா? நீங்கள் நீங்களாக இருப்பதில் வசதியாக இருக்கிறதா? உங்களை நீங்கள் எவ்வளவாக மற்றவர்களுடன் ஒப்பிடுகிறீர்கள். ஒருவேளை நீங்கள், நீங்களாக இல்லாத ஒருவராக மாற முயற்சித்துக் கொண்டிருக்கிறீர்களா? இந்தக் கேள்விகளைக்

கேட்பது தான் உங்கள் உண்மையான சுயத்தைக் கண்டுபிடித்து, தேவன் உங்களை எப்படி இருக்கவேண்டுமென்று படைத்தாரோ அப்படியாக மாறுவதற்கானஆரம்பமாக இருக்கலாம்!

## சுய ஏற்றுக்கொள்ளுதல்

நாம் அனைவருமே ஏற்றுக்கொள்ளப்பட விரும்புகிறோம். ஆனால் நமது தனித்துவத்தை ஏற்றுக்கொள்வதுதான் நமக்கு இருக்கும் மிகப்பெரிய தேவை என்பதை நான் கண்டுபிடித்தேன். நான் என்னை ஏற்றுக்கொள்ள எவ்வளவாக கற்றுக்கொண்டேனோ அவ்வளவாக மற்றவர்களும் என்னை ஏற்றுக்கொள்கிறார்கள். நாம் நம்மை நிராகரித்து நாம் இல்லாத ஒருவனாக இருக்க முயற்சி செய்து நம் நேரத்தை வீணடிக்கும்போது, மற்றவர்கள் நம்மை அநேகந்தரம் நிராகரிக்கிறார்கள். நாம் எதை நம்புகிறோமோ அதையே நாம் பெறுகிறோம் என்று வேதம் சொல்கிறது (மத்தேயு 8:13) மற்றும் நம் எண்ணங்கள் நம் யதார்த்தமாக மாறுகிறது (நீதிமொழிகள் 23:7).

நாம் எதை நம்புகிறோமோ அதன்படியே நடந்துகொள்கிறோம், நம் நடத்தை மற்றவர்கள் நம்மைப் பற்றி எப்படி உணருகிறார்கள் என்பதை பாதிக்கிறது. நாம் நம்பிக்கையுடன் செயல்பட்டால், மற்றவர்களும் நம் மீது நம்பிக்கை வைக்க இது காரணமாகிறது. ஆனால் நாம் நம்பிக்கையுடன் செயல்படவில்லை என்றால், அது மற்றவர்களுக்கு நம் மீது நம்பிக்கை இழக்க செய்கிறது. ஒரு முதலாளியாக நான் இரண்டு வகையான மக்களையும் அனுபவித்தறிந்திருக்கிறேன்.

எனக்கு ஒருமுறை ஒரு நிர்வாக உதவியாளர் இருந்தார், அவர் ஒரு அருமையான பெண்ணாக இருந்தார். ஆனால் அவளுக்கு நம்பிக்கை இல்லை, இறுதியாக அவள் இருந்த நிலையில் என்னால் அவளை வைத்திருக்க முடியவில்லை., ஏனென்றால் அவளுடைய நம்பிக்கையின்மை, நான் அவள் செய்ய வேண்டுமென்று விரும்பிய வேலையை அவளால் செய்ய முடியாமல் தடுத்தது. அவளுக்கு திறமை இருந்தது, ஆனால் அதைச் செய்வதற்கான தன்னம்பிக்கை அவளுக்கு இல்லை.

*மக்கள் உங்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டுமெனில், முதலில் உங்களுக்கு உங்கள் மீது நம்பிக்கை இருக்க வேண்டும். தியோடர் ரூஸ்வெல்ட், "உங்களால் முடியும் என்று நம்புங்கள், நீங்கள் பாதி தூரம் சென்றுவிட்டீர்கள்" என்றார்.*[18]

*தேவனுடைய பிள்ளையான உங்களுடன் அவர் எப்போதும் இருக்கிறார். வாழ்க்கையில் நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ அதற்கு. உங்களுக்கு உதவ தயாராக இருக்கிறார் என்பதை அறிந்தவர்களாக கிறிஸ்துவில் நம்பிக்கையுடன் இருக்க முடியும்,*

## சுய நிராகரிப்பு

*நீங்கள் உங்களை ஏற்றுக்கொள்வதற்கு முன், நீங்கள் உங்களை நிராகரிப்பதை நிறுத்த வேண்டும். ஹென்றி நௌவென், நன்கு அறியப்பட்ட ஊழியரும், ஆசிரியரும், தனது உண்மையான சுயத்தை கண்டுபிடிக்க முயன்று போராடினார். மேலும் அவர் கூறினார், "பல ஆண்டுகளில், நம் வாழ்வின் மிகப் பெரிய வெற்றி, புகழ் அல்லது அதிகாரம் அல்ல, மாறாக சுய நிராகரிப்பே என்று உணர்ந்தேன் என்றார்."*[19] *மேலும் அவர், "சுய நிராகரிப்பே ஆவிக்குறிய வாழ்க்கையின் மிகப்பெரிய எதிரி, ஏனென்றால் அது நம்மை பிரியமானவர் என்று அழைக்கும் அந்த பரிசுத்தமான குரலுக்கு முரணானதாக இருக்கிறது" என்றார்.*[20]

*நம்முடைய உண்மையான சுயம் தேவனுக்குப் பிரியமான ஒருவர். மற்ற எல்லா அடையாளங்களும் தவறானவை. நாம் தேவனுக்கு பிரியமானவர்கள் என்று அறிந்தால் நாம் நமது உண்மையான விதியில், அது எதுவாக இருந்தாலும், அதில் அடியெடுத்து வைப்பதற்கான நம்பிக்கையை அளிக்கிறது. அது தையலோ அல்லது தோட்டம் வளர்ப்பதாக இருக்கலாம், அல்லது உலகம் முழுவதும் பயணம் செய்து சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக இருக்கலாம். ஆனால் நமது உண்மையான விதி எதுவாக இருந்தாலும், அதில் நாம் வசதியாக இருப்பதை விட, அது அவ்வளவு முக்கியம் இல்லை. நம் ஆத்துமாவிற்கு சுகத்தைக் கண்டுபிடிக்க இந்த உலகம் நம்மை வரையறுக்க அனுமதிப்பதை விட தேவனுடைய வார்த்தை நம்மை வரையறுக்க அனுமதிப்பது முக்கியம். இந்த உலகில் நமது நேரம் ஒரு முடிவுக்கு*

வரும்போது முக்கியமான ஒரே ஒரு கருத்து தேவனுடையதே. எனவே மற்றவர்கள் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி அதிகம் கவலைப்பட்டு உங்கள் வாழ்க்கையை வீணாக்காதீர்கள்.

காயம்பட்டவர்கள், துஷ்பிரயோகம் செய்யப்பட்டவர்கள், துரோகம் செய்தவர்கள், விவாகரத்து பெற்றவர்கள், கலகம் செய்தவர்கள், பாதிக்கப்பட்டவர்கள், சேதமடைந்தவர்கள் போன்ற குறியீடுகளை இந்த உலகம் மக்கள் மீது வைக்கிறது. மேலும் பல முறை, இந்த உலகின் அடையாளங்கள் நம் அடையாளமாக மாற அனுமதித்து நம்மை வரையறுக்கத் தொடங்குகிறோம். தேவன் நம்மைப் பற்றி என்ன கூறுகிறார் என்பதை அறியாதவர்களாகவோ அல்லது மறந்தவர்களாகவோ. மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன சொன்னார்கள் என்பதை நாம் ஒருவேளை நம்புகின்றோம்.

தேவன் நம்மை எப்படி பார்க்கிறார் என்பதை குறித்த சில வேத வாக்கியங்கள் இங்கே உள்ளன:

> *நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். (1 பேதுரு 2:9).*

ஒருவேளை நீங்கள் நிராகரிக்கப்பட்ட ஒரு இனத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம், ஆனால் இப்போது நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் நீங்கள் சிறப்பு வாய்ந்தவர்கள், அவருடைய அற்புதமான செயல்களையும் பரிபூரணங்களையும் காட்ட அவர் உங்களைப் பயன்படுத்தப் போகிறார் என்று தேவன் கூறுகிறாார.

> *இந்த உலகத்தில் உள்ளவைகளில் அல்லாமல் மேலானவைகளில் (உயர்ந்த விஷயங்களில்) உங்கள் மனதை நிலைநிறுத்திக் கொள்ளுங்கள்.*

*ஏனெனில் [இந்த உலகத்தைப் பொறுத்த வரை] நீங்கள் மரித்துவிட்டீர்கள், உங்கள் [புதிய, உண்மையான] வாழ்க்கை கிறிஸ்துவுடன் தேவனில் மறைந்திருக்கிறது (கொலோசெயர் 3:2-3).*

நீங்கள் அதை பார்க்கிறீர்களா? உங்கள் புதிய உண்மையான வாழ்க்கை கிறிஸ்துவுடன் தேவனில் மறைக்கப்பட்டுள்ளது! உங்களிடம் ஒரு உண்மையான வாழ்க்கை இருக்கிறது, ஒரு உண்மையான சுயம் உள்ளது, ஆனால் அது கிறிஸ்துவில் மட்டுமே காணப்பட முடியும். நீங்கள் புதிதாக பிறந்து(இயேசுவை உங்கள் இரட்சகராகப் பெறுதல்) தேவனுடைய பிள்ளையாக மாறும்போது அந்த உண்மையான சுயத்தின் பிறப்பு ஏற்படுகிறது.

*மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். (எபேசியர் 4:24).*

இப்போது, தேவன் நீங்கள் இருக்கும்படியாக உங்களை அழைக்கும் புதிய நபரை அணிந்து கொள்ளுங்கள். அவரில் விசுவாசம் கொண்டவர்களாக பழைய அனைத்து பெயர் குறிப்புகளையும் உதறிவிட்டு முன்னோக்கி செல்லுங்கள். தேவனுக்கு பிரியமானவர், நம்பிக்கையுள்ளவர், ஏற்றுக்கொள்ளப்பட்டவர், அவரில் வலிமையானவர் என்று உங்களை அழைத்துக் கொள்ளுங்கள்.

## அடையாள இழப்பு

தேவனுக்கு பிரியமான பிள்ளை என்ற நம் அடையாளத்தை நாம் ஒருபோதும் அறிந்திருக்ககூடாதென்றோ அல்லது நம் வாழ்க்கைப் பயணத்தில் எங்கோ அந்த உண்மையின் உணர்வை இழந்துவிடவேண்டுமென்பதை உறுதிப்படுத்தவோ சாத்தான் கடுமையாக உழைக்கிறான். இது மறதி நோய்க்கு சமம். டேவும், நானும் சில சமயங்களில் மறதி நோய் உள்ளவர்களுக்கு எப்படி இருக்கும் என்று பேசிக்கொள்வோம். இப்படியாக கற்பனை

செய்து பாருங்கள், நீங்கள் ஒரு மருத்துவமனையில் இருக்கிறீர்கள், நீங்கள் ஒரு விபத்தில் சிக்கிவிட்டீர்கள் என்று கூறப்பட்டது, உங்கள் பெயரைக் கேட்டால், நீங்கள் யார் என்று தெரியவில்லை.

தி பார்ன் ஐடெண்டிட்டியில், மாட் டாமன் என்பவர் ஜேசன் பார்னாக நடிக்கிறார் - மறதி நோயால் பாதிக்கப்பட்ட ஒரு சிறப்புப் படை வீரர் அவர். அவர் உண்மையில் யார் என்பதைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறார். அவரது பயணத்தின் அடிப்படைகள் நம்முடைய பயணத்திலிருந்து மிகவும் வேறுபட்டவை அல்ல.

சுவிட்சர்லாந்தின் மலைப்பகுதியில், ஜேசன் மேரி என்ற இளம் பெண்ணுடன் பாரிஸுக்கு சவாரி செய்கிறார். அவர் காவல்துறையினரிடமிருந்து ஓடுகிறார்- ஆனால் ஏன் என்று கூட அவருக்குத் தெரியவில்லை. விரக்தி அவரை மேற்கொள்ளும் வரை அவர் தனது நிலைமையைப் பற்றி அமைதியாக இருக்க முயற்சிக்கிறார். இறுதியாக, அவள் ஒரு எளிய கேள்வியைக் கேட்டதற்கு, அவர் அவளிடமாய் திரும்பி, அவநம்பிக்கையுடன், “நான் யார் என்றும், எங்கு செல்கிறேன் என்றும் தெரியவில்லை.” என்று கூறுகிறார்.

ஜேசன் பார்ன் யாருக்கும் அல்லது எதற்கும் பயப்படாமல் இருக்க தேவையான அனைத்து திறன்களையும் கொண்டிருந்தார், ஆனால்

அவர் யார் என்று அவருக்கு தெரியாததால், அவர் பயத்திலும், விரக்தியிலும் செயல்பட்டார். இது உங்களையோ அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவரையோ விவரிக்கிறதா? அது நிச்சயமாகவே ஒரு காலத்தில் என் வாழ்க்கையிலே என்னைப் பற்றிய நல்ல விளக்கமாக இருந்திருக்கும். எனக்கு ஆவிக்குறிய மறதி இருந்தது - நான் தேவனில் யாராக இருந்தேன் என்று எனக்குத் தெரியவில்லை. நான் அவருக்கு பிரியமானவள் என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

நம்மில் பலர் ஏதோவொன்றிலிருந்து எங்காவது ஓடிக்கொண்டிருக்கிறோம் - ஆனால் நாம் யார் என்பது தெரியாவிட்டால், நாம் எங்கு செல்கிறோம் என்பதை அறிவது சாத்தியமாகாது. நம் வாழ்நாள் முழுவதிலும் தேவனுடைய கைரேகைகள் உள்ளன, நாம் அவரைத் தேடும்போது,

ஆங்காங்கேயிருக்கும் துண்டுகளெல்லாம் சரியான இடத்தில் விழ தொடங்குகின்றன. இறுதியாக, நமது உண்மையான சுயத்தை-நமது உண்மையான அடையாளத்தை-கிறிஸ்துவில் மட்டுமே இருப்பதைக் காண்கிறோம். அப்போதுதான் நாம் நம் வாழ்க்கையிலே எங்கு செல்கிறோம் என்பதை கண்டுபிடிக்கிறோம்.

அல்சைமர் நோயாளிகளைப் பார்க்க முதியோர் இல்லத்திற்குச் சென்ற பிரபல பிரசங்கியார் ஒருவரைப் பற்றிய ஒரு கதையை நான் ஒருமுறை கேட்டேன். அவரைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்த மக்களை வாழ்த்தும்படி அவர் சுற்றிச் சென்று கொண்டிருந்தார். அவர் ஒரு பெண்ணிடம் சென்று, “நான் யார் என்று உங்களுக்கு தெரியுமா?” என்று கேட்டார். அவள், “இல்லை, ஆனால் நீங்கள் வரவேற்பறையிலுள்ளவரிடம் சென்று கேட்டால், அவர்கள் உங்களுக்குச் சொல்வார்கள்.” என்று சொன்னாள்.

இது உங்கள் கதையாக இருக்கிறதா? நீங்கள் யார் என்று மற்றவர்களிடம் நீண்ட காலமாக கேட்டுக் கொண்டிருந்தால், உண்மையான உங்களைக் குறித்த பார்வையை தொலைத்துவிட்டீர்களா? உங்களுக்கு மறதி நோய் இருப்பது போலவும், நீங்கள் யார் என்பதை கண்டுபிடிக்க தீவிரமாக முயற்சிப்பதாகவும் உணர்கிறீர்களா? இதில் ஏதேனும் உங்களை விவரிக்கிறது என்றால், நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். என் வாழ்க்கையிலே, ஒரு சமயத்திலே, நான் பல்வேறு விதமானவளாக இருக்க முயன்றுக் கொண்டிருந்து, நான் எதை ரசித்தேன், நான் என்ன செய்ய விரும்பினேன், என்ன செய்ய வேண்டும் என்று நான் உணர்ந்தேன் என்பதை நான் உண்மையிலேயே இழந்துவிட்டிருந்தேன் என்பது எனக்கு நினைவிருக்கிறது. எனக்கு தெரிந்திருந்ததெல்லாம்

நான் மகிழ்ச்சியில்லாமல் இருந்தேன். மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அவர்களைப் பிரியப்படுத்தும் முயற்சியில், நான் என்னைப் பற்றிய பார்வையையே இழந்துவிட்டிருந்தேன்.

நான் இந்த அத்தியாயத்தை முடிக்கும்போது, நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய சிருஷ்டி என்பதையும், நீங்கள் அவருக்கு பிரியமானவர்- தனித்துவமான, பொக்கிஷமான, மதிப்புமிக்க

தேவனால் விரும்பப்பட்டவர் என்பதையும் உங்களுக்கு நினைவூட்டுகிறேன். நீங்கள் பாவியாக இருந்தபோதும், உங்களது பாவங்களுக்கான எல்லா தண்டனையையும் ஏற்றுக்கொண்டு உங்கள் இடத்திலே மரிக்கும் அளவுக்கு அவர் உங்களை நேசித்தார். இந்த பூமியிலே நீங்கள் தான் ஒரே நபராக இருந்திருந்தாலும், அவர் உங்களுக்காக அப்படி செய்திருப்பார். அடுத்த முறை நீங்கள் ஒருவரைச் சந்திக்கும் போது, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று அவர்கள் உங்களிடம் கேட்கும்போது (மக்கள் அடிக்கடி அப்படி செய்வதுண்டு), உங்கள் வேலை என்ன என்பதை நீங்கள் அவர்களிடம் சொல்லலாம், ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதை விட நீங்கள் மிகவும்அதிகமானவர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள் - நீங்கள் தேவனுக்கு பிரியமானவர்கள்!

## அத்தியாயம் 10

# எந்த நேரத்திலும் நிறுத்தக் கூடாது

*அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு.*

*- யாத்திராகமம் 14:15*

ஒரு நாள் நான் காரில் சென்றுகொண்டிருந்தபோது, தெருவில் எந்த நேரத்திலும் வாகனங்களை நிறுத்தக்கூடாது என்று எழுதப்பட்டிருந்த பலகைக்கு என் கவனம் ஈர்க்கப்பட்டது. உடனே நான், நம் வாழ்க்கையை நம் வலி அல்லது ஏமாற்றம் என்னும் இடத்திலே நிறுத்தி, அங்கேயே இருக்க வேண்டாம் என்பதை நினைவூட்ட, நம் அனைவருக்கும் இது போன்ற ஒரு அடையாளம் தேவை என்று நினைத்தேன்.

கடந்த காலத்தில் ஏதோ ஒன்று அல்லது யாரோ ஒருவர் உங்களை காயப்படுத்தியதால், நீங்கள் இந்தப் புத்தகத்தைப் படித்துக்கொண்டிருக்கலாம். நீங்கள் வலி ஏற்பட்ட இடத்திலேயே நின்றுவிட்டு உங்கள் வாழ்க்கையையும், கனவுகளையும், நோக்கங்களையும் விட்டுவிட வேண்டாமென்று உங்களை ஊக்குவிக்க நான் விரும்புகிறேன். முன்னோக்கி சென்று கொண்டிருங்கள். தேவன் நம்மை எப்போதும் முன்னேறிச் செல்லும் மனிதர்களாகப் படைத்தார். எதிலும் வெற்றி பெறுவது என்பது ஒரு முறை செய்யும் சாதனை அன்று, மாறாக ஒரு தொடர்ச்சியான நிலை.

> எதிலும் வெற்றி பெறுவது என்பது ஒரு முறை சாதனை செய்யும் அல்ல, மாறாக ஒரு தொடர்ச்சியான நிலை.

எவ்வளவு சிரமமானாலும் முன்னேறிச் சென்றவர் என்பதற்கு அப்போஸ்தலன் பவுல் ஒரு சிறந்த உதாரணம். பவுல் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள தேவனால் அனுப்பப்பட்டார். ஆனால் அவர் நிறைய எதிர்ப்பை சந்தித்தார். கப்பல் விபத்து, பாம்புக்கடி, சிறைவாசம் அல்லது அவருடைய கூட்டாளிகளாகவும் நண்பர்களாகவும் இருந்தவர்களால் கைவிடப்படுதல் போன்ற வடிவங்களில் சோகம் ஏற்பட்ட போதும், "மாம்சத்தில் முள்" என்று அழைத்ததை அனுபவித்த போதும் கூட ஒருபோதும் கைவிட்டுவிடக் கூடாதென்பதற்கு உருவகமாக பவுல் இருந்தார். அவர் தனது வலியின் கட்டத்தில் நிறுத்தியிருந்தால், தேவன் அவரைக் கொண்டு எழுதிய புதிய ஏற்பாட்டின் மூன்றில் ஒரு பங்கை நாம் இழந்திருப்போம். உங்களுக்கு வலி ஏற்படும் இடத்திலேயே நீங்கள் நின்று விட்டால், தேவன் உங்களைக் கொண்டு செய்ய விரும்புவதை இந்த உலகம் இழந்துவிடும்.

பவுல் தேவனுடனான தனது தினசரி நடைப்பயணத்தில் பரிபூரணத்தை தவற விடுவதைப் பற்றி பேசினார். ஆதனால் அவர் செய்த ஒரு காரியத்தை பற்றியும் அவர் கூறினார், அதாவது பின்னானவைகளை விட்டு விட்டு தனது இலக்கை நோக்கி தொடர்ந்து முன்னோக்கி அழுத்தி செல்வதே ஆகும். (பிலிப்பியர் 3:12-13).

தோல்வி அல்லது பிரச்சனை வரும்போது, முன்னோக்கி நகர்வது எப்பொழுதும் எளிதானது அல்ல, ஆனால் அதைத்தான் நாம் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். வேலை இழப்பு, விவாகரத்து, நோய், அநீதி, நேசிப்பவரின் மரணம், நிச்சயமற்ற தன்மை மற்றும் குழப்பம் ஆகியவற்றை நாம் அனுமதிப்போமேயென்றால் நம் தடங்களில் நம்மை நிறுத்திவிடக்கூடும். ஆனால் இந்தக் காலகட்டங்களில் தான், நீங்கள் சில நேரங்களில் முன்னேறுவது சில அங்குலங்கள் தான் என்பது போல் உணர்ந்தாலும், தொடர்ந்து முன்னேறுவது மிகவும் முக்கியம். அந்த அங்குலங்கள் இறுதியில் நிறைய முன்னேற்றத்தை சேர்க்கும். தொடர்ந்து செல்லாமல் விட்டு விடுவது எளிது, ஆனால் தனிப்பட்ட வலிகளுக்கு மத்தியில் தொடர்ந்து முன்னேறுவதற்கு நிறைய தைரியம் தேவை.

எனது குழந்தைகளில் ஒருவர் சிக்கலில் இருந்த நேரத்தை நான் நினைவு கூருகிறேன், அது வாழ்க்கையையே மாற்றும் அளவுக்கு தீவிரமாக இருந்திருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை. இயல்பாகவே, நான் மிகவும் கவலைப்பட்டேன், உணர்ச்சி ரீதியாகவும், மனரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்டேன். நான் படுக்கையில் இருந்து எழுந்திருக்க விரும்பாத நாட்கள் கூட இருந்தன. ஆனால் தேவன் என்னை எழுந்து ஒவ்வொரு அடியாக, அடி மேல் அடி முன்னால் வைக்கும்படி வற்புறுத்தினார்.

அந்த சமயத்தில், நான் ஒரு மாநாட்டில் கற்பிக்க திட்டமிடப்பட்டிருந்தேன். ஒவ்வொரு அமர்வுகளுக்கும் இடையில், நான் என் அறைக்கு சென்று அழுதேன். ஆனால் அடுத்த அமர்வுக்கான நேரம் வந்த போது, நான் அடி மேல் அடி வைத்து முன் சென்றேன். அப்படி நான் செய்த போது, நான் என்ன செய்ய வேண்டி இருந்ததோ அதை செய்ய தேவன் எனக்கு உதவினார். இறுதியில், அந்த நிலைமை ஒரு நல்ல முடிவைப் பெற்றது. ஒரு பேரழிவாக இருந்திருக்க வேண்டியது, ஒரு ஞானத்தின் பாடமாக மாறியது. இது என் பிள்ளை தன் வாழ்க்கையிலே சிறந்த தேர்வுகளை செய்ய உதவியது.

> தேவன் உங்களை முன்னோக்கி செல்ல அழைக்கிறார்; எதுவும் உங்களைத் தடுத்து நிறுத்த வேண்டாம்.

வாழ்க்கையின் பெரும் முரண்பாடுகளையும், பின்னடைவுகளையும் கடந்து வந்தவர்களால் வரலாறு நிரம்பியுள்ளது. ஹெலன் கெல்லர் தனது பார்வை மற்றும் செவித்திறனை இழந்தார். ஆனால் அந்த குறைபாடுகள் இருந்தபோதிலும் அவர் பெரிய விஷயங்களைச் சாதித்தார். பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தார். அது அவரைத் தோற்கடித்திருக்கலாம், ஆனால் அவர் முன்னேறிச் சென்று நாட்டின் மிக உயர்ந்த பதவியாகிய ஜனாதிபதி பதவியை வகித்தார்.

அசாதாரணமான காரியங்களைச் செய்து சாதித்த சாதாரண மனிதர்களின் கதைகளால் வரலாறு நிரம்பியுள்ளது ஏனென்றால் அவர்கள் வலி ஏற்பட்ட கட்டத்தில் தங்கள் வாழ்க்கையை நிறுத்திவிடவில்லை.

"நீ ஒருபோதும் எதையும் செய்ய மாட்டாய்" என்று என் தந்தை என்னிடம் சொன்னது எனக்கு தெளிவாக நினைவிருக்கிறது, ஆனால் தேவனுடைய உதவியால் அந்த வார்த்தைகளை நான் மேற்கொண்டேன்.

தடைகளை கடக்க நம் அனைவருக்கும் ஒரே விதமான வாய்ப்பு உள்ளது. அதற்கு தேவயானதெல்லாம் தேவன் மீது உறுதியான நம்பிக்கையும், அதிக அளவிலான மன உறுதியுமே ஆகும். இது நீங்கள் உங்கள் வாழ்க்கையை எப்படி அமைக்க போகிறீர்கள் என்பதைப் பொறுத்து இருக்கிறது. தேவன் உங்களை முன்னோக்கி அழைக்கிறார், எனவே உங்களை எதுவும் தடுத்து நிறுத்த அனுமதிக்க வேண்டாம் என்று நான் ஊக்குவிக்கிறேன்.

தேவனின் மகளாக, நீங்கள் ஒரு புதிய சிருஷ்டி. பழையவைகள் அனைத்தும் மறைந்துவிட்டன, எல்லாமே புதிதாயின. (2 கொரிந்தியர் 5:17). தேவனுடைய வார்த்தையில் காணப்படும் அந்த உண்மையை உங்கள் புதிய இயல்பாக ஏற்றுக்கொண்டு, வலி ஏற்பட்ட அந்த இடத்திலே நின்றுவிட மறுத்துவிடவும்.

நீங்கள் வேதாகமத்தைப் படித்திருந்தால், ஆபிரகாமைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். தேவன் அவருடன் உடன்படிக்கை செய்து கொண்டார். அவர் மூலம் பெரிய காரியங்களைச் செய்தார். அதனால் நாம் அனைவரும் இன்னும் பயனடைகிறோம். ஆனால் தேவன் முன்பு, ஆபிரகாமின் தகப்பனாகிய தேராகுவை, கல்தேயரின் ஊரை விட்டு கானான் தேசத்திற்குச் செல்லும்படி சொன்னார் என்பதை நீங்கள் அறியாமல் இருக்கலாம். தேராகு அவரது பயணத்தை ஆரம்பித்திருந்தாலும், அவர் அதை முடிக்கவில்லை, எனவே தேவன் பின்னர் ஆபிரகாமை அதற்கு பதிலாக செல்லுமாறு கூறினார் (ஆதியாகமம் 11-12). தேவன் தமது பிள்ளைகளுக்கு கொடுக்க விரும்பிய வாக்குத்தத்தத்தின் தேசமாக கானான் இருந்தது, ஆனால் அவருக்கு வேலை செய்ய ஒருவர் தேவைப்பட்டார்.

கானானுக்குச் செல்லும்படி தேவன் தேராகுவை அழைத்தபோது, அவர் அறிவுறுத்தியபடியே புறப்பட்டார், ஆனால் அவர் ஆரான் என்ற ஒரு இடத்திற்கு வந்தபோது, அங்கேயே குடியேறிவிட்டார்.

தேராகு வழியிலே எங்காவது குடியேறுவதற்குப் பதிலாக தொடர்ந்து சென்றிருந்தால், ஒருவேளை தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையை அவருடன் செய்திருக்கலாம் என்று நான் அடிக்கடி யோசித்திருக்கிறேன். நிச்சயமாக அப்படி இருந்திருக்கும் என்று தெரியாது, ஆனால் அது நிச்சயமாக சாத்தியமாக இருந்திருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. அவருடன் ஏதாவது ஒரு பெரிய காரியத்தைச் செய்து வெற்றியை நோக்கிச் செல்லும் ஒருவரைக் கண்டுபிடிப்பதற்கு முன் தேவன் எத்தனை பேரை அழைக்கிறார்?

தேவன் அவர் போக வேண்டும் என்று விரும்பிய இடத்திற்குச் செல்வதற்குப் பதிலாக, தேராகு ஏன் வழியில் ஏதோ ஒரு இடத்திலே குடியேறினார் அல்லது நின்று விட்டார்? ஒருவேளை அந்த வழி கடினமாகி விட்டிருக்கும், அல்லது அவர் பயணம் செய்வதில் சோர்வடைந்திருக்கலாம். அது நமக்கு ஒருபோதும் தெரியாது என்று நினைக்கிறேன். ஆனால் தேராகு 205 ஆண்டுகள் வாழ்ந்து ஹாரானில் இறந்தார் என்று வேதம் கூறுகிறது என்பதை நான் அறிவேன் (ஆதியாகமம் 11:31-32). அவர் தன்னை நிறுத்திக் கொண்ட இடத்திலே இறந்தார்.

தேராகு தனது வாழ்க்கையிலே தேவனுடைய சிறந்ததை விட குறைவானவற்றிலே தன்னை நிறுத்திக் கொண்டார். அது உங்களுக்கு நடக்க விடாதீர்கள். தேவன் எப்பொழுதும் உங்களுக்காகவும் உங்கள் வாழ்க்கைக்காகவும் ஒரு நல்ல திட்டத்தை வைத்திருக்கிறார் (எரேமியா 29:11), உங்களை காயப்படுத்திய விஷயங்கள் அதை தாமதப்படுத்தியிருக்கலாம், ஆனால் அவற்றை நீங்கள் நிறுத்தாத வரை அவைகளை நிறுத்த முடியாது. முன்னோக்கி நகர்வதை நிறுத்தாதேயுங்கள்!

பின்னர், தேராகு மரித்தபின், தேவன் ஆபிரகாமைப் பிரயாணம் செய்ய அழைத்தார், மேலும் அவர் தேவனோடு முடியு பரியந்தம் சென்று. யூத வம்ச முற்பிதாவானார். தேவன் அவர் மூலம் ஒரு பெரிய ஜாதியை உருவாக்குவேன் என்று வாக்கு பண்ணினார், அப்படியே அவர் செய்தார். ஆபிரகாமின் விசுவாசம் சோதிக்கப்பட்ட போதிலும், அவர் தனது சோதனைகளில் தேர்ச்சி பெற்றார். இயேசு கிறிஸ்துவின் வம்சாவழியிலும் ஒரு பங்கைப் பெற்றார்.

> தேவன் உங்கள் பட்சமாக இருப்பதால் வெற்றியை அனுபவிக்க உங்களுக்கு என்ன தேவையோ அது உங்களிடம் உள்ளது!

ஒருவேளை நீங்கள் இப்போது உங்கள் வாழ்க்கையில் ஒரு சோதனை காலத்தை எதிர்கொண்டிருக்கலாம், தொடராமல் விட்டுவிடுவதற்கும் விட்டுக் கொடுத்து விடுவதற்கும் பலமாக சோதிக்கப்படலாம். இதை அறிந்து கொள்ளுங்கள்: தேவன் உங்கள் பட்சமாக இருப்பதால், வெற்றியை அனுபவிக்க உங்களுக்கு என்ன தேவையோ அது உங்களிடம் உள்ளது!

நாம் அடிக்கடி நம் பிரச்சனைகளைத் தாண்டிச் செல்ல முயற்சிக்கிறோம் அல்லது அவற்றைச் சுற்றிச் செல்வதற்கான வழியைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறோம், அதனால் அவற்றைச் சமாளிக்க வேண்டியதில்லை என்று நினைக்கிறோம். ஆனால் அது நம் வாழ்வில் நல்ல பலனைத் தராது. நீண்ட காலத்திற்கு அவற்றை எதிர் கொண்டு சமாளிப்பதை நாம் தவிர்க்கலாம். ஆனால் நாம் அவற்றைக் கடந்து செல்ல நமக்கு தைரியம் கிடைக்கும் வரை அது நம் வழியிலே இருக்கும். நம் கனவுகள் நிறைவேறும் என்று நம்பினால், நம் பாதையைத் தடுக்கும் விஷயங்களைக் கடந்து செல்ல வேண்டும். நாம் ஒரு பகுதி மட்டும் கடந்து சென்று, பின்னர் வாழ்க்கை கடினமாக இருக்கும்போது நிறுத்தி விடக்கூடாது.

> நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான
> ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய
> பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப்
> பின்பற்றுகிறவர்களாயிருந்து, (எபிரெயர் **6:11**).

## வேனில் வாழ்ந்த பெண்

தங்களுக்கு வலி ஏற்படும் இடத்தில்லே மக்கள் நிறுத்திக்கொள்ள கூடாது என்று அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று தேவன் எனக்கு யோசனை கொடுத்த கொஞ்ச காலத்திலேயே வேனில் பெண்மணி என்று அழைக்கப்பட்ட ஒரு திரைப்படத்தை நான் பார்த்தேன். இது என்னுள் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

லண்டனில் ஆலன் பென்னட் என்பவரின் டிரைவ்வேயில் நிறுத்தப்பட்டிருந்த மஞ்சள் வேனில், பதினைந்து ஆண்டுகள் வசித்து வந்த மிஸ் ஷெப்பர்ட்என்ற ஒரு வீடற்ற பெண் பற்றிய உண்மைக் கதையை அடிப்படையாகக் கொண்டு இப்படம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஏன்? அவள் தன்னுடைய இளம் வயதில் காயப்பட்டதால், அவள் மனம் உடைந்து, வாழ்க்கையில் ஏமாற்றம் அடைந்தாள். அவள் தன்னை ஒரு தோல்வியாக உணர்ந்தாள், அவள் வேனை ஓட்டி சென்ற போது தற்செயலாக ஒரு மனிதனை கொன்றுவிட்டதால், தன் வாழ்நாளில் பயங்கரமான குற்ற உணர்சியை அனுபவித்தாள். இவையனைத்தும் அவள் வாழ்க்கையிலே நம்பிக்கையை கைவிட வைத்தது. அவள் வேனை நிறுத்தினாள், அவள் மரிக்கும் வரை நகரவே இல்லை.

மிஸ் ஷெப்பர்ட் ஒரு காலத்தில் ஒரு திறமையான, விரும்பப்பட்ட கச்சேரி பியானோ கலைஞராக இருந்தார். தன் வாழ்விலே தேவனை சேவிக்க வேண்டுமென்று விரும்பினாள். அதைச் செய்ய அவளுக்குத் தெரிந்த ஒரே வழி ஒரு கான்வென்ட்டில்[கன்னியாஸ் திரிகளின் இருப்பிடம்] நுழைந்து கன்னியாஸ்திரியாக வேண்டுமென்பதே. அந்த கான்வென்ட்டில் ஒரு பியானோ இருந்தது, மாலை நேரங்களில் அதை அவள் வாசித்து, மகிழ்வதுண்டு. இருப்பினும், சில காரணங்களால் மதர் சுப்பீரியருக்கு [தலைவர்] மிஸ் ஷெப்பர்ட் பிடிக்கவில்லை, ஒருவேளை அவளுடைய பியானோ வாசிக்கும் திறமையைக் கண்டு பொறாமைப்பட்டிருக்கலாம். மேலும் அவள் அவளிடம், அவள் பியானோ வாசிப்பதை அதிகமாக விரும்புகிறதாகவும், தேவன் தம் மீதுள்ள அவளது அன்பை நிரூபிக்க அவள் பியானோவை தியாகம் செய்ய வேண்டும் என்றும் சொன்னார். அவள் அதற்கு கீழ்ப்படிந்தாள், ஆனால் அது அவளுடைய இருதயத்தை உடைத்தது. அவள் தன் ஆத்துமாவிலே காயம் அடைந்தாள். அந்த காயங்கள் அவளை மற்றவர்களிடமிருந்தும் தன்னை விலக்கிக் கொள்ள செய்தது, அதனோடு மற்ற தனிப்பட்ட நடத்தைகளை நிரூபிக்கவும் செய்தது. அவள் இறுதியில் கான்வென்ட்டை விட்டு வெளியேற வேண்டியிருந்தது, நிராகரிக்கப்பட்டவளாக, கைவிடப்பட்டவளாக, தனிமையாக உணர்ந்து அவ்விடம் விட்டு வெளியேறினாள்.

இந்த நிகழ்வுகளின் வலி அவளது மனம் மற்றும் உணர்ச்சி ஆரோக்கியத்தை பாதித்தது. நாளடைவில் அவள் ஒரு மனநிலையில் குன்றியோர் மேம்படும் இடத்திலே வைக்கப்பட்டாள். அங்கிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு, அவள் மஞ்சள் நிறத்தில் வண்ணம் பூசப்பட்ட பழைய, தேய்ந்து போன வேனில் வாழ்ந்து முடித்தாள். அதை பல்வேறு இடங்களில் நிறுத்துவதுண்டு ஆனால் ஒவ்வொரு இடத்தினின்றும் அவளை நகர்த்த சொல்லிவிடுவார்கள். இறுதியில் அவள் ஆலன் பென்னட் என்பவரிடம் அவரது வாகனப் பாதையில் சிறிது நேரம் நிறுத்துவதற்கு அனுமதி கேட்டாள், ஆனால் அவள் அங்கிருந்து வெளியேறவே இல்லை. பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, அவள் நிறுத்திய இடத்திலே மரித்தாள்.

அந்த படத்திலே, அவள் பரலோகத்திற்குச் சென்றபோது, அவள் முதலில் சந்தித்த நபர், அவள் கொன்றதாக நினைத்த மனிதனைத்தான்.

அவர் உடனே அவளிடம், “என் மரணம் உன் தவறல்ல; நான் வேண்டுமென்றே தான் உன் வேனின் முன்னால் வந்து என் வாழ்க்கையை முடித்துக் கொண்டேன்.” என்றான்.

நான் இந்தப் படத்தைப் பார்த்த சில நாட்களுக்கு அதைப் பற்றி தான் யோசித்துக்கொண்டிருந்தேன், இறுதியாக நான் அந்த செய்தியின் முழு தாக்கத்தையும் பெற அதை இரண்டாவது முறையாகப் பார்த்தேன். திரைப்பட தயாரிப்பாளருக்கு, இது ஒரு நல்ல கதையாக இருந்திருக்கலாம், ஆனால் எனக்கோ, நம் ஆத்துமா ஆழமாக காயப்படும்போது நம் சொந்த வாழ்க்கையில் நாம் என்ன செய்கிறோம் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. நாம் நம் வலி ஏற்படும் இடத்திலேயே நிறுத்தி விடுகிறோம். இதனால் இயேசு கிறிஸ்துவின் மூலம் நமக்குக் கிடைக்கும் சிறந்த வாழ்க்கையை நாம் இழந்துவிடுகிறோம்.

## குணப்படுத்துதல் மற்றும் மறுசீரமைப்பு பற்றிய தேவனின் வாக்குறுதி

நம் வாழ்க்கையிலே நாம் சந்திக்கும் நம் ஆத்துமாவை

காயப்படுத்தும் வலியை நம்மால் தவிர்க்க முடியாமல் போகலாம், ஆனால் அது நம் வாழ்வின் எஞ்சிய பகுதியை அழித்துவிட அனுமதிக்காமல் இருக்க நாம் தேர்வு செய்யலாம். ஒரு சந்தர்ப்பத்திலே சிக்கிக் கொள்ளாதீர்கள். நமக்கு என்ன நேர்ந்தாலும் வாழ்க்கை தொடர்ந்து சென்றுக் கொண்டேதான் இருக்கும், நாம் அதனுடன் செல்லலாம் அல்லது நமது வலியிலும் கசப்பிலும் சிறைப்பட்டு பின் தங்கிவிடலாம்.

தேவன் நம்மை குணப்படுத்தி மீட்டெடுப்பதாக வாக்களிக்கிறார். ஆனால் அது நம் பங்கில் எந்த செயலும் இல்லாமல் மாயமாக நடக்காது. தேவனுடைய வாக்குறுதிகளை நாம் நம்புகிறோம், முன்னோக்கி செல்வது எவ்வளவு கடினமாக இருந்தாலும், நாம் தொடர்ந்து செல்கிறோம்.

நாம் பின்தங்கி, பயத்தால் ஒடுங்கி விடாமல் இருக்க பவுல் நம்மை ஊக்குவிக்கிறார் (எபிரெயர் 10:38). மிகுந்த துன்பத்தில் இருந்த எபிரேயர்களிடம் பவுல் சொன்னது, இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினால் அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை காப்பாற்றிக் கொள்வார்கள். காப்பாற்றுவது என்றால் எதையாவது பாதுகாப்பாக வைத்திருப்பதாகும்.

> நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம். (எபிரெயர் 10:39).

பின்வாங்காதே, பயத்தில் சுருங்காதே, ஒரு காலசந்தர்ப்பத்தில் சிக்கிக் கொள்ளாதே, வலியுள்ள இடத்திலே நிறுத்திவிடாதே. நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு விசுவாச அடியும் முழுமை மற்றும் குணப்படுத்துதலுக்கு நேரான மற்றொரு படியாகும்.

எட்டு ஆண்டுகளாக படுத்த படுக்கையாக இருந்த ஒரு மனிதனைக் குணப்படுத்த அப்போஸ்தலன் பேதுரு தேவனால் பயன்படுத்தப்பட்டார் (அப்போஸ்தலர் 9:33-34). அவர் அவனிடம், “ஐனேயா, இயேசு கிறிஸ்து (மேசியா) [இப்போது] உன்னை சுகமாக்குகிறார்” என்றார். ஆனால் அவனிடம்

வேறொன்றையும் சொன்னார், அதையும் நாம் பார்க்க வேண்டும், அவர், "நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள்!" என்றார். இந்த நோயுற்ற மனிதன் வாழ்க்கையிலே கீழே தள்ளப்பட்டான், எழுந்திருக்கவேயில்லை என்பதை பார்கிறீர்கள். பேதுரு அவனிடம் எழுந்திருக்க வேண்டிய நேரமாகிவிட்டது என்றார். இயேசுவும் இதேபோன்ற சூழ்நிலையை எதிர்கொண்டார். அவர் சந்தித்த மனிதர் முப்பத்தெட்டு ஆண்டுகளாக ஒரு அதிசயத்திற்காகக் காத்திருந்தான் என்பதை தவிர இதைப் போன்ற சூழ்நிலை தான். யாராவது வந்து அவருடைய பிரச்சனையை சரி செய்ய வேண்டும் என்று அவன் காத்திருந்தான்.

இயேசு அவனிடம், அவன் எழுந்து, படுக்கையை (தூங்கும் திண்டு) எடுத்துக்கொண்டு நடந்து செல்ல வேண்டுமென்று சொன்னார் (யோவான் 5:5-8). இயேசு அவனிடம் சாத்தியமற்றதை செய்யும்படி சொன்னார். அவன் நீண்ட காலமாக எதுவும் செய்ய இயலாதவனாக இருந்தவனை இப்போது எழுந்திருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டான். ஒருவேளை இந்த புத்தகத்தை நீங்கள் படிக்கும்போது அந்த இயலாதவனைப் போன்று உணரலாம். ஜாய்ஸ், நீங்கள் என்னை சாத்தியமற்ற விஷயங்களைச் செய்யச் சொல்கிறீர்கள் என்று நீங்கள் நினைக்கலாம், அவை மிகவும் கடினமானவை! ஆனால் உண்மை என்னவென்றால், எல்லாமே தேவனால் சாத்தியம்.

அவர் நம்மிடம் செய்ய சொல்வதை செய்வதற்கு நாம் அவருடைய பலத்தைப் பயன்படுத்தி அவருடைய பலத்தினால் செய்வோமென்றால் எதுவுமே கடினமாக இராது.

இயேசு நம்மை குணப்படுத்துகிறவர், ஆனால் அவருடனான நம் பயணத்தில் அவர் நம்மிடம் கேட்கும் காரியங்கள் இருக்கும், அதை நாம் செய்யாவிட்டால், அவர் அளிக்கும் சுகத்தை நாம் அனுபவிக்க மாட்டோம். மிஸ் ஷெப்பர்ட் மஞ்சள் வேனில் இருந்து வெளியேறி தனது வாழ்க்கையை மேம்படுத்த எத்தனை பேர் ஊக்குவித்திருப்பார்களோ என்று எனக்கு தெரியாது, ஆனாலும் அவள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவளுக்கு எப்படியோ அந்த வேனிலிருந்து, இறங்கி முன்னோக்கி செல்வதை விட வேனின் அவல நிலை நன்றாக இருந்தது.

## தாமதமில்லை

*பிசாசு உங்களிடம் சொன்ன பொய்களில் ஒன்று உங்களுக்கு மிகவும் தாமதமாகிவிட்டது என்பது தான் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இருப்பினும், யாரையும் குணப்படுத்தி மீட்க தேவனுக்கு ஒருபோதும் தாமதமில்லை. அந்த திமிர்வாதக்காரன் முப்பத்தெட்டு ஆண்டுகளாக அந்த நிலையிலே இருந்தான், அவன் எழுந்தான் முழுமையாக்கப்பட்டான்.*

*உங்கள் கனவுகளை தூசி தட்டி முன்னேறிச் செல்ல இது ஒருபோதும் தாமதமில்லை. ஒருவேளை மிஸ் ஷெப்பர்ட்க்கு முயற்சி செய்ய தைரியம் இருந்திருந்தால் இன்னும் அழகாக பியானோ வாசித்திருந்திருக்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.*

*புதிய தொடக்கங்களும், புதிய ஆரம்பங்களும் தேவனிடம் ஒருபோதும் பற்றாக்குறையாக இருக்காது. நீங்கள் மறக்கப்பட்டுவிட்டதாகவும், தொய்ந்து போய்விட்டதாகவும் உணரலாம். ஆனால் தேவன் உங்களை மறக்கவில்லை. புதிய, அற்புதமான விஷயங்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. உங்கள் புதிய வாழ்க்கையைத் தொடங்குவதற்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் எழுந்து, சென்று கொண்டே இருப்பது தான். இதோ உங்களுக்காக தேவனுடைய வாக்குறுதி. திரும்பிப் பார்க்காமல் இதையே பற்றிக் கொண்டிருங்கள்!*

*முந்தினவைகளை நினைக்கவேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்கவேண்டாம்.*

*இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்.*

> *முந்தினவைகளை [ஆவலாக] நினைவுகூராதே; பழைய விஷயங்களையும் கருத்தில் கொள்ள வேண்டாம். இதோ, நான் இருக்கிறேன்*
>
> *புதிய காரியம் செய்கிறேன்! (ஏசாயா **43:18-19**; முக்கியத்துவம் என்னுடையது).*

> புதிய தொடக்கங்கள் தேவனிடம் ஒருபோதும் ஒரு பற்றாக்குறையாக இருக்காது.

வேதத்தில் நாம் படிக்கும் ரூத் என்ற பெண் தன் வலியின் நிலையிலே நிண்று விட மறுத்துவிட்டாள் அல்லது பரிதாபமான ஒரு வாழ்க்கைக்கு திரும்பவில்லை. அவளுடைய கணவன், மைத்துனர், மாமனார் அனைவரும் இறந்துவிட்டார்கள். மேலும் அவள் ஒரு முடிவை எடுக்க வேண்டியிருந்தது. அவர்களை பராமரிக்க வழியில்லாமலிருந்த மிகவும் ஏழ்மையான தனது மாமியாருடன் முன்னோக்கி செல்வதா, அல்லது அவள் முன்பு சிலைகளை வணங்கிய அவளுடைய சொந்த நாட்டுக்கு திரும்பிச் செல்லவதா.

அவள் ஒரே உண்மையான தேவனை நம்ப தொடங்கியிருந்தாள், அவளுடைய சொந்த இடத்தை விட, அவருடனான (நகோமி) வாழ்க்கை, சில கடினமான நேரங்கள் இருந்த போதிலும் சிறப்பாக இருப்பதைக் கண்டாள். அவளுடைய மாமியார் தன்னால் அவளைக் காப்பாற்ற இயலாது என்பதை அவளுக்கு நினைவூட்டி அவளைத் திரும்பிச் செல்லும்படி வற்புறுத்தினார். ஆனால் ரூத்தோ திரும்பிச் செல்ல மாட்டேன் என்று சொன்னாள். இருவரும் முன்னோக்கி சென்றனர், ரூத் இறுதியில் போவாஸ் என்ற பெரும் செல்வந்தரை மணந்தாள். ரூத் தாவீதுடைய கொள்ளு பாட்டி ஆனாள். மத்தேயு அதிகாரம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள இயேசுவின் வம்சவரலாற்றில் ஐந்து பெண்களில் ஒருவளாக பெயரிடப்பட்டுள்ளாள்.

அந்த நேரத்திலே, அவளுடைய முடிவு அவளை மகத்துவமாக நிலைநிறுத்தும் என்று ரூத்துக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் அதன் விளைவோ அவளுடைய முடிவை சார்ந்திருந்தது. எல்லாவற்றையும் இழந்த ஒரு பெண் ஒரு புதிய தொடக்கத்திற்கு மிகவும் தாமதமாகிவிட்டது என்று நம்ப மறுத்தாள்! (ரூத்தின் முழு கதைக்கு, பைபிளில் ரூத்தின் புத்தகத்தைப் பார்க்கவும்.)

நீங்களும் மகத்துவத்திற்காக நிலைநிறுத்தப்பட்டவர்கள் என்று நான் நம்புகிறேன். சரியான முடிவை எடுங்கள் - உங்கள் வலியைக் கடந்து சென்று தேவன் உங்களுக்காக திட்டமிட்டுள்ள அனைத்தையும் அனுபவிக்க முடிவு செய்யுங்கள்.

## அத்தியாயம் 11

# நீங்கள் சேதமடைந்த பொருள் அல்ல

*மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.*

*- கொலோசெயர் 2:10*

*நான் ஒன்பது வயது சிறுமியாக கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டேன். என் உறவினர்களைப் பார்க்க சென்றபோது என்னை அவர்களுடன் தேவாலயத்திற்கு அழைத்துச் சென்றனர். என் பாவங்களை மன்னித்து என்னைக் காப்பாற்றும்படி நான் இயேசுவிடம் கேட்டதன் விளைவாக என் வாழ்க்கை பெரிதாக மாறவில்லை, ஆனால் நான் இளம் வாலிப வயதில் ஒரு டீன் ஏஜராக இரவில் படுக்கையில், ஒருநாள் நான் ஒரு பெரிய காரியத்தை செய்யப் போகிறேன் என்று நினைத்துக்கொண்டிருந்ததை நான் இப்போது நினைத்துப்பார்க்கிறேன். அது என் புதிய, மறுபடியும் பிறந்த ஆவி பேசினது என்று உணர்கிறேன். என் இருதயம் மாறிவிட்டது, முன்பு நான் நம்பிக்கையற்றவனாக இருந்தேன், ஆனால் இப்போதோ நான் அனுபவித்த துஷ்பிரயோகம் என்றாவது ஒரு நாள் தீரும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது.*

*எனக்கு நேர்மறையாக இல்லாத வேறு எண்ணங்கள் இருந்தன. ஒரு வாலிப பெண்ணாக, நான் உயர்நிலைப் பள்ளியை முடித்து பதினெட்டு வயதை அடைந்தவுடன் வீட்டை விட்டு வெளியேற விரும்பினேன். நான் என் வாழ்க்கையைப் பற்றியும் நான் என்ன செய்யலாம் அல்லது எனக்கு என்ன நடக்கலாம் என்பதைப்*

பற்றியும் யோசித்தேன். என் அப்பா என்னை துஷ்பிரயோகம் செய்ததால் எனக்கு எப்போதுமே இரண்டாம் தர வாழ்க்கை தான் இருக்கும் என்று நினைத்தேன். நான் என்னை சேதமடைந்த பொருளாகவே பார்த்தேன், என் வாழ்க்கையில் எனக்கு எது கிடைக்குமோ அதை கொண்டு திருப்தி அடைந்து கொள்ள வேண்டுமென்று நினைத்தேன். நான் உண்மையில் இரண்டாம் தர வாழ்க்கையைப் பெற திட்டமிட்டேன், அது வருத்தமாக இருக்கிறது.

மறுபடியும் பிறந்த என் ஆவியிடமிருந்து நான் கேட்ட செய்திகள், நான் பெற்ற எதிர்மறையான, மூழ்கடிக்கக்கூடிய செய்திகளை தோற்கடித்தன என்று சொல்ல விரும்புகிறேன். ஆனால் அவை அப்படி செய்யவில்லை–குறைந்தபட்சம் இன்னும் பல வருடங்களுக்கு செய்யவில்லை. எப்போதாவது, எனக்கு நம்பிக்கை மினுமினுத்தது. ஆனால் என் மனதில் இருந்த எதிர்மறை எப்போதுமே அதை மூழ்கடித்து விட்டது. ஒருவேளை நீங்களும், காரியங்கள் நன்றாக நடக்கும் என்று நம்பலாம், பின்னர் அவை எப்போதாவது நடக்குமா என்று சந்தேகப்படலாம். இப்படியாக முன்னும் பின்னுமாக நினைத்துக் கொண்டிருக்கலாம். விரக்தியடைய வேண்டாம்; தேவன் நீங்கள் இருக்கும் இடத்தில் உங்களைச் சந்தித்து, நீங்கள் இருக்க வேண்டிய இடத்திற்குச் செல்ல உங்களுக்கு உதவுவார்.

> நீங்கள் இருக்க வேண்டிய இடத்தை அடைய தேவன் உங்களுக்கு உதவுவார்.

நான் வீட்டை விட்டு வெளியேறினேன். சீக்கிரத்திலேயே, அழகான, என்மேல் கவனம் செலுத்திய ஒரு பையனை நான் சந்தித்தேன். சில மாதங்களுக்கு ஒருவரையொருவர் அறிந்த பிறகு அவரை திருமணம் செய்து கொள்ளும்படி அவர் என்னிடம் கேட்டார். அவரது கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டாமென்ற எச்சரிக்கையையும், சமாதானக் குறைவையும் நான் உணர்ந்தபோதும் நான் ஏற்றுக் கொண்டேன். அந்த முடிவு ஏற்கனவே நொறுக்கப்பட்ட, காயமடைந்திருந்த ஆத்துமாவிற்கு மேலும் மேலும் வலியை சேர்த்தது.

நான் முன்பு அனுபவிக்காத வகையில் அடுத்த ஐந்து வருடங்கள் அவர் என்னை துஷ்பிரயோகம் செய்தார். அவர் தொடர்ந்து துரோகம் செய்துக் கொண்டிருந்தார். அவர் அதிகமாக எந்த வேலையிலும் நிலைத்திருக்கமாட்டார். அதனால் நண்பர்களுடன் சென்று உல்லாசமாக இருக்க நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் திருடிய குட்டித் திருடனாக மாறினான்.

ஒரு நாள் இரவு நான் எழுந்த போது,அவர் என் திருமண மோதிரத்தை என் விரலில் இருந்து கழற்ற முயன்றுக் கொண்டிருந்தார் என்பதை உணர்ந்தேன். அது அவ்வளவு விலைமதிப்பு பெற்றிருக்கவில்லை ஆனாலும் அவர் அதை விற்க விரும்புகிறார் என்பது எனக்குத் தெரிந்தது. எங்களுக்கு ஒரு குழந்தை இருந்தது, நான் கர்ப்பமாக இருந்தபோது, நான் சுமந்தக் கொண்டிருந்த குழந்தை அவருடையது இல்லை என்று கூறிக் கொண்டு. அவர் மற்றொரு பெண்ணுடன் வாழ்ந்துக்கொண்டிருந்தார். நான் கர்ப்ப காலத்தில் தனியாக வாழ்ந்தேன். இனி என்னால் வேலை செய்ய முடியாது என்ற நிலை வரை வேலை செய்தேன். ஒரு சமயத்தில், வாழ பணமோ, இடமோ இல்லாத நிலையில் நான் இருந்தேன். அதிர்ஷ்டவசமாக, என் தலைமுடியை வெட்டி ஸ்டைல் செய்த எனக்கு தெரிந்த ஒரு பெண், கருணை கொண்டு நான் என் மகனைப் பெற்றெடுக்கும் வரை அவளுடனும், அவள் தாயுடனும் நான் இருக்கும் படி எனக்கு இடம் கொடுத்தாள். நான் என் மகனைப் பெற்றெடுத்தப் பிறகு, என் கணவர் மருத்துவமனைக்கு வந்து, நாங்கள் மீண்டும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். நானும் வழக்கம் போல அவரை திரும்ப அழைத்துக் கொண்டேன். அவர் மற்ற பெண்களுக்காக என்னைக் கைவிட்டு விட்டு, இறுதியில் திரும்பி வந்து அவர் எவ்வளவு வருந்துகிறார் என்று என்னிடம் கூறுவதும், நான் அவரை திரும்ப ஏற்றுக் கொள்வதும் மிகவும் பொதுவானதாக இருந்தது.

இத்தகைய நடத்தை காயப்பட்ட ஆத்துமாக்களைக் கொண்ட பெண்களிடம் பொதுவாக காணப்படுகிறது. ஏனென்றால் அவர்கள் தங்களை சிறந்த எதற்கும் தகுதியற்றவர்களாகக் கருதுகிறார்கள், அல்லது அவர்கள் தங்கள் வாழ்க்கையில் தனியாக இருக்க பயப்படுகிறார்கள். அவர்கள் தங்களுக்காக ஆண்களிடம் எதிர்த்து நிற்பதற்குப் பதிலாக அவர்களை வெவ்வேறு வழிகளில் துஷ்பிரயோகம் செய்ய அனுமதிக்கிறார்கள்.

டேவிட் என்று நான் பெயரிட்ட எங்கள் மகனுடன் நானும் அவனும் மருத்துவமனையை விட்டு வெளியேறியபோது, எங்களுக்கு செல்ல இடம் இல்லை. நான் தெருவிலோ அல்லது காரிலோ தூங்கவில்லை என்றாலும், அந்தக் காலக்கட்டத்தில் நான் வீடு இல்லாமல் இருந்தேன். எனக்கு உதவிய மற்றவர்களின் கருணையை சார்ந்திருக்க வேண்டியிருந்தது. எனது கணவருக்கு முன்னாள் மைத்துனி ஒருவர் இருந்தார், அவர் அவரது சகோதரனிடமிருந்து விவாகரத்து பெற்றிருந்தார். அவள் ஒரு அன்பான, கிறிஸ்தவப் பெண், நான் வேலைக்குச் செல்லும் வரை அவள் எங்களை அவளுடைய வீட்டில் ஒரு அறையில் வாழ அனுமதித்தாள். நாங்கள் சென்ற சிறிது காலத்திலேயே, என் கணவர் மீண்டும் வேறொரு பெண்ணுடன் வெளியேறினார், அந்த சமயத்தில், அதற்கு மேல் என்னால் தாங்க முடியாமல் விவாகரத்துக்கு விண்ணப்பித்தேன்.

என் வாழ்க்கையில் அந்த நேரத்தில், நான் அடுக்கடுக்கான உணர்ச்சி ரீதியான வலியாலும், எதிர்காலத்தைப் பற்றிய பயத்தினாலும் புதைக்கப்பட்டிருந்தேன், அதனால் நான் முற்றிலும் நம்பிக்கையற்றவளாக உணர்ந்தேன். என்றாவது ஒரு நாள் நான் மகிழ்ச்சியாக இருக்கவும், என்னை உண்மையாகவே நேசிக்கும் ஒருவரை எனக்குக் கொடுக்கும்படி தேவனிடம் நான் வேண்டிக்கொண்டது எனக்கு நினைவிருக்கிறது. ஒரு வருடம் கழித்து அவர் அந்த ஜெபத்திற்கு பதிலளித்தார். நான் டேவை சந்தித்தேன், எங்களுக்கு திருமணமாகி ஐம்பது வருடங்களுக்கு மேல் ஆகிறது. அந்த திருமணத்தின் முதல் இருபது வருடங்கள் மிகவும் கடினமாக இருந்தது.

என் ஆத்துமா பாதிக்கப்பட்டிருந்தது. நான் சரியாக நினைக்கவில்லை, உணரவில்லை அல்லது நடந்துகொள்ளவில்லை. நம் ஆத்துமாக்கள் காயப்பட்டு இருக்கும் போது அதுதான் நமக்கு நடக்கும். நாம் எல்லாவற்றையும், நம் உடைந்து போன, வலி மிகுந்த லென்ஸ் மூலம் பார்க்கிறோம், வாழ்க்கையில் எதுவும் சிறப்பாக மாறும் என்று நம்புவது கடினம். எனக்கு பலவிதமான பயங்கள் இருந்தன. ஆனாலும் எதுவும் என்னை பயமுறுத்தாதது போல் நடந்து கொண்டேன். ஒரு போலி தைரியத்துடன் வாழ்ந்தேன். அது உண்மையிலே என்னைச் சுற்றியுள்ள

அனைவரையும் அவர்கள் என்னைக் காயப்படுத்தாதபடி கட்டுப்படுத்த முயற்சிப்பதில் வெளிப்பட்டது. நான் தைரியமாக இருப்பதாக நினைத்தேன், ஆனால் நான் உண்மையில் முரட்டுத்தனமாகவும் இரக்கமற்றவளாகவும் இருந்தேன்.

நான் பாதுகாப்பற்றவளாக இருந்தேன், ஆனால் நான் அப்படி இல்லாதது போன்று பாசாங்கு செய்ய முயற்சித்தேன். நான் என்னிடமும் மற்ற அனைவரிடமும், நேர்மையற்றவளாக இருந்தேன். என் வாழ்க்கை பெரும்பாலான நேரங்களில் சில காரியங்களில் போலியானதொன்றாக மாறிவிட்டது. ஒருமுறை நான் எப்படி இருந்தேன் என்பதை நினைவில் கொள்வது, நம் தேவன் எவ்வளவு பெரியவர் என்பதை எனக்கு நினைவூட்டுகிறது. உண்மையாகவே அவர் பல பிரச்சனைகளில் இருந்து என்னை விடுவித்து, என் காயப்பட்ட ஆத்துமாவை குணப்படுத்தியிருக்கிறார்.

## முழுவதும் முழுமையும்

தேவனுடைய குணப்படுத்தும் கரங்களில் நாம் நம்மை கொடுக்கும் போது, நாம் உடைந்து, சேதமடைந்து இருந்திருக்கலாம், ஆனால் நாம் சிதைக்கப்பட்டிருந்தோம் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லாத அளவு நாம் முழுமையாகிறோம். நான் முன்பு இருந்ததைப் பற்றி பேசும்போது, நான் என்னைப் போலவே ஒரு காலத்தில் இருந்த எனக்குத் தெரிந்த ஒருவரைப் பற்றி நான் பேசுகிறேன் என்பதாக உணர்கிறேன். அது இப்போது தெளிவற்ற நினைவாக மட்டுமே இருக்கிறது.

நாம் கிறிஸ்துவில் முழுமையடைந்துள்ளோம் என்பதை நாம் உணர்ந்தால், நாம் ஒருபோதும் சேதமடைந்துள்ளோம், உடைந்துவிட்டோம் அதனால் நாம் வாழ்க்கையில் இரண்டாவது சிறந்ததைத் தான் பெற்றுக் கொள்வோம் என்று நம்ப வேண்டியதில்லை. கிறிஸ்துவில் முழுமையடைவது என்றால், நம்மிடம் என்ன குறையிருந்தாலும், அதை அவர் நிறைவாக்குகின்றார். அவருடைய பலம் நம்முடைய பலவீனத்தில் வெளிப்படுகிறது **(2 கொரிந்தியர் 12:9);** நமது பாவம் அவருடைய கருணையாலும், மன்னிப்பினாலும் விழுங்கப்படுகிறது. அவர் நமக்கு வழங்கும் புதிய வாழ்க்கையின் வெளிச்சத்தில் நமது கடந்த காலம் மறைந்துவிடுகிறது.

நாம் மறுபடியும் பிறக்கும்போது, நாம் தேவனுடைய ஆவியைப் பெறுகிறோம். நமது ஆவி முழுவதும், முழுமையாகவும், முற்றிலும் புதியதாகவும் ஆக்கப்படுகிறது. ஆனாலும் இன்னும் நம் ஆத்துமாவில் வேலை செய்யப்பட வேண்டும். தேவன் தம்முடைய வார்த்தையையும், அவருடனான நமது ஐக்கியத்தையும் பயன்படுத்தி அவர் தொடங்கிய பணியை தொடர்ந்து, உள்ளிருந்து வெளியே செய்கிறார். படிப்படியாக, தேவன் தமது கிருபையால் நம் ஆவியில் செய்த முழுமையான, பரிபூரணமான காரியத்தை நம் ஆத்துமாவுக்குள் கொண்டு வருகிறார். நாம் அவரில் முழுமையானவர்களாகவும், முழுமையாகவும் இருக்கிறோம் என்று நான் கூறும்போது, அது ஒரு உண்மையான உண்மை. அது கிறிஸ்துவில் நாம் யாராக இருக்கிறோம் என்பதே. அது நடந்துவிட்டது, ஆனால் நாம் எப்போதும் முழுமையாய் இருப்பது போல் நினைக்கவோ, உணரவோ அல்லது நடந்துகொள்ளவோ முடிகிறதில்லை–ஆனால் நாம் விசுவாசத்துடன் முன்னேறிச் செல்லும் போது அப்படியாக நடக்கும்.

எனது கருத்தை தெளிவுபடுத்த உதவும் ஒரு எடுத்துக்காட்டு இங்கே. சமீபத்தில், எனக்கு முழு இடுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. என் மருத்துவரின் வார்த்தையின் படி, அந்த அறுவை சிகிச்சை மிகவும் காட்டுமிராண்டித்தனமானது. அறுவை சிகிச்சை குழுவினரால் இடுப்பு மூட்டுக்கு செல்லும் தசைகள் இழுக்கப்பட்டு நீட்டப்படுகின்றன, அவர்கள் அப்படி செய்யும் போது, அவர்கள் காலில் உள்ள தொடை எலும்பிலிருந்து மூட்டை அகற்ற ஒரு ரம்பம் பயன்படுத்துகின்றனர். புதிய மூட்டு உரிய இடத்தில் வைக்கப்பட்டு இணைக்கப்படுகிறது, அறுவை சிகிச்சையின் வெட்டு மூடப்பட்டு, சுகம் பெறுதல் தொடங்குகிறது. நான் அதே நாளில் ஒரு வாக்கர் மீது சாய்ந்து கொண்டு என் காலால் நடக்க முடிந்ததென்றாலும் படிப்படியாகத் தான் குணமடையும். நான் தொடர்ந்து மேம்பட்டுக்கொண்டிருந்தேன். ஆனால் சில நாட்கள் அல்லது ஒரு வாரம் முழுவதும் கூட, நான் முன்னேற்றம் அடையவில்லை என்று உணர்ந்தேன். அந்த சமயங்களில், நான் பொறுமையாக இருக்குமாறு டேவ் எனக்கு நினைவூட்டினார். இப்போது நான் எந்த வலியும் இல்லாத நிலையில் இருக்கிறேன். ஆனால் என் காலின் முன் தசைகள்

இன்னும் வலிக்கிறது. ஆனால் இன்னும் சிறிது காலம் கழித்து, நான் அறுவை சிகிச்சை செய்தேன் என்று என்னால் சொல்ல கூட முடியாது.

அந்த எடுத்துக்காட்டைப் பயன்படுத்தி, சிலரால் துஷ்பிரயோகம் அல்லது புண்படுத்தப்பட்டதால் ஏற்படும் உணர்ச்சிக் காயங்களைப் பற்றி சிந்திப்போம். நாம் மறுபடியும் பிறக்கும்போது (இயேசுவை நம் இரட்சகராகப் பெறுவது), அவர் நம்மை நம் ஆவியில் முழுமையடையச் செய்கிறார், முழுமையாக்குகிறார். ஆனால் நாம் இன்னும் முழுமையாக மீட்டெடுக்கப்படாத நம் உணர்ச்சிகள், சிந்தனை முறைகள் மற்றும் நடத்தை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தொடருவதை கவனிக்கலாம்.அதைச் சொல்வதற்கான ஒரு வழி: "இயேசு நம் காயங்களைக் குணப்படுத்துகிறார், ஆனால் சில சமயங்களில் சிராய்ப்பு நீண்ட காலம் இருக்கிறது." நான் ஒரு புதிய இடுப்புடன் வீட்டிற்கு வந்தேன். ஆனால் எனது முழு இடுப்பும் அதைச் சுற்றியுள்ள பகுதியும் மிகவும் காயப்பட்டிருந்து.

நம் ஆத்துமா குணப்படுதல் என்று வரும் போது, நம் வாழ்வில் மாற்றம் எதுவும் இல்லை என்று நம்பி ,பழுதுபார்க்க முடியாத அளவுக்கு சேதமடைந்துவிட்டோம் என்ற உணர்வுக்கு திரும்பிச் செல்லாமலிருப்பது மிகவும் முக்கியம். இயேசு உங்கள் வாழ்க்கைக்குள் வரும்போது நீங்கள் உள்ளே புத்தம் புதியவராக உருவாக்கப்படுகிறீர்கள், அந்த மாற்றம் உள்ளே இருந்து வெளியே வருகிறது. அங்கே தேவன் உங்களில் செய்த அற்புதமான வேலையை எல்லோரும் பார்க்க முடியும். பொறுமையாய் இருங்கள்.

## இருந்தால் மட்டும்

உங்கள் வாழ்க்கையிலே நீங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாலோ அல்லது தவறாகப் பயன்படுத்தப்பட்டதாலோ காரியங்கள் உங்களுக்கு வித்தியாசமாக இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்குமோ அப்படியாக ஒருபோதும் முடியாது என்று பிசாசு உங்களை நம்ப வைக்க அனுமதிக்க வேண்டாம். இருந்திருந்தால், என்ற அந்த எண்ணத்தில் வாழாதீர். உங்கள் கடந்த காலத்தை நீங்கள் பொருட்படுத்தாமல் இருந்தால் அது

முக்கியமானதே இல்லை. நான் கடந்து வந்த சோகமான விஷயங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டேன், ஆனால் இன்று என் வாழ்வில், நான் சேதம் அடைந்ததற்கு எந்த ஆதாரமும் இல்லை. தேவன் ஒன்றை புதிதாக உருவாக்கினால், அது முற்றிலும் புதியது!

ஒரு கிறிஸ்தவளாக மாறிய பிறகும், இதுபோன்ற எண்ணங்களால் நான் பல வருடங்களை வீணடித்தேன்: காரியங்கள் எனக்கு நன்றாகத்தான் இருக்கிறது ஆனால் நான் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் இருந்திருந்தால் அவை மிகவும் நன்றாக இருந்திருக்கும். என்னை சரியாக நேசித்த பெற்றோருடன் நான் சாதாரணமானகுழந்தைப்பருவத்தைக்கொண்டிருந்தேனேயென்றால் எனக்கு இப்போது இருக்கும் சில பிரச்சனைகள் இருக்காது என்று நினைத்தேன்.

நான் பத்து வருடங்களுக்கும் மேலாக ஒரு தேவாலயத்திற்குச் சென்றேன். சில மதிப்புமிக்க விஷயங்களைக் கற்றுக்கொண்டேன். ஆனால் அவர்கள் துஷ்பிரயோகத்திற்குப் பிறகு மக்கள் அனுபவிக்கும் மன உளைச்சல் அல்லது உணர்ச்சி குணமடைதலைப் பற்றி எனக்கு எதுவும் கற்பிக்கவில்லை. நானே தேவனை தேடி, அவருடைய வார்த்தையை படிக்க ஆரம்பித்த போது தேவனுடைய குணப்படுத்தும் வல்லமையை அனுபவிக்க ஆரம்பித்தேன். சில சமயங்களில் நான் எனது முந்தைய தேவாலயம் மட்டும் எனக்கு சிறப்பாகக் கற்பித்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் என்று நினைத்ததுண்டு.

நாம் அந்த பாதையில் சென்றால், இருந்திருந்தால் என்பதைப் பற்றி சொல்ல கூடிய விஷயங்கள் இல்லாமல் இருக்காது. நாம் திரும்பிச் சென்று காரியங்கள் எப்படி இருந்ததோ அதை மாற்ற முடியாது. ஆனால் நாம் முன்னோக்கி செல்லலாம், திரும்பிப் பார்க்க வேண்டியதில்லை. இது அல்லது அது வேறு மாதிரியாக இருந்தால் நன்றாக

> காரியங்கள் இருந்த விதத்தை நம்மால் மாற்ற முடியாது, ஆனால் நாம் முன்னோக்கி செல்லலாம், ஒருபோதும் திரும்பிப் பார்க்க தேவை இல்லை.

*இருந்திருக்கும் என்று சொல்வதற்குப் பதில், "என்ன நடந்ததோ அதை தேவன் எடுத்து, அதை என் நன்மைக்காகவும், அதனால் என்னை ஒரு சிறந்த நபராக உருவாக்கவும் அவரை நம்புகிறேன்" என்று சொல்லுங்கள்.*

## ஆதாரம் எங்கே?

*நீங்கள் ஒரு காலத்தில் காயமடைந்திருக்கலாம் அல்லது சேதமடைந்திருக்கலாம், ஆனால் அது நடந்ததற்கான ஆதாரமே இல்லாதிருக்கும் ஒரு நேரம் வரும். இப்போது யாரும் என் வாழ்க்கையைப் பார்க்கும் போது, நான் ஒரு சமயம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டேன், கைவிடப்பட்டேன், விவாகரத்து செய்தேன், கிட்டத்தட்ட வீடற்றவளாக இருந்தேன் என்பதற்கான எந்த ஆதாரத்தையும் பார்க்க கூடும் என்று நான் நினைக்கவில்லை. எண்ணற்ற மற்றவர்களும் தங்கள் வாழ்க்கையிலே இதையே சாட்சியாகக் கூற முடியும். நீங்கள் இன்னும் அங்கு இல்லாவிட்டாலும், நீங்கள் கைவிட்டுவிடாமலிருந்தால் அங்கே இருப்பீர்கள்.*

*தானியேல் புத்தகத்தில் மூன்று இளைஞர்களைப் பற்றிய ஒரு கதை உள்ளது. அவர்கள் தேவனைத் தவிர வேறு யாரையும் வணங்குவதை விட அக்கினி சூளையில் போடப்படுவதை தெரிந்துக் கொண்டனர். யாரேனும் ராஜாவுக்கு தலை வணங்காவிட்டால் அக்கினி சூளையிலே போடப்படுவார்கள் என்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது, அவர்கள் அங்கே இறந்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நேகோ தலைவணங்க மறுத்து, சூளைக்குள் போனார்கள். அவர்களின் செயல்கள் ராஜாவாகிய நேபுகாத்நேச்சரை மிகவும் கோபப்படுத்தியது, அதனால் சூளையை வழக்கத்தை விட ஏழு மடங்கு அதிக வெப்பமாக்க உத்தரவிட்டார். அது மிகவும் சூடாக இருந்தது. அதில் இருந்து தீப்பிழம்புகள் சூளையைக் கையாளுபவர்களை பொசுக்கியது! மூன்று இளைஞர்கள் தீப்பிழம்புகள் மத்தியில் சூளையில் இருந்தனர், ஆனால் ராஜா உள்ளே பார்த்த போது அவர் ஆச்சரியப் படும் விதமாக நான்கு மனிதர்களைக் கண்டார், மேலும் நெருப்பு சாத்ராக், மேஷாக்*

*மற்றும் அபேத்நேகோவுக்கு தீங்கு விளைவிக்கவில்லை என்பதையும் கண்டார். சூளையிலிருந்த நான்காவது மனிதன் இயேசுவின் வெளிப்பாடான கர்த்தருடைய தூதன் எனற சத்தியத்தை நாம் அறிவோம்.*

*ராஜா உலையைத் திறந்து மூன்று பேரும் வெளியே வந்தபோது, அவர்களுக்கு எந்த தீங்கும் ஏற்படவில்லை என்று வேதம் கூறுகிறது.. தானியல் **3:27** கூறுகிறதாவது, "தேசாதிபதிகளும், அதிகாரிகளும், தலைவரும், ராஜாவின் மந்திரிகளும் கூடிவந்து, அந்தப் புருஷருடைய சரீரங்களின்மேல் அக்கினி பெலஞ்செய்யாமலும், அவர்களுடைய தலைமயிர் கருகாமலும், அவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும், அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும் இருந்ததைக் கண்டார்கள்."*

*நீங்கள் வாழ்க்கையின் அக்கினி சூளையிலிருந்து வெளியே வரலாம். நீங்கள் அதில் இருந்ததற்கான எந்த ஆதாரமும் இருக்காது. அல்லது நீங்கள் வாழ்ந்த வாழ்க்கையின் வாசனை கூட உங்களைப் பற்றிக் கொண்டிருக்காது. நீங்கள் சேதமடைந்த பொருட்கள் அல்ல, நீங்கள் அவ்வாறு நினைக்க வேண்டாம் என்று நான் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இரண்டாம் நிலை வாழ்க்கைக்குத் திட்டமிடாதீர்கள், மாறாக நீங்கள் அற்புதமான விஷயங்களைச் செய்யும் அற்புதமான வாழ்க்கையைத் திட்டமிடுங்கள்.*

> *நீங்கள் அற்புதமான விஷயங்களைச் செய்யும் அற்புதமான வாழ்க்கையைத் திட்டமிடுங்கள்.*

## இராஜாவின் மேஜையிலே எப்போதும் சாப்பிடுங்கள்

*சவுல் ராஜாவுக்கு மெபிபோசேத் என்ற பேரன் இருந்தான். அவன், சவுலுக்குப் பிறகு அரசரான தாவீதுடன் உடன்படிக்கை உறவில் இருந்த யோனத்தானின் மகன். விவிலிய உடன்படிக்கை உறவுகள் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்பட்டன. சவுலும்,*

யோனத்தானும் இறந்த நீண்ட காலத்திற்குப் பிறகு, தாவீது, தான் யோனத்தானுடன் செய்து கொண்ட தனது உடன்படிக்கையை கனப்படுத்த அவருடைய இரத்த வம்சத்தில் யாராவது இருகிறார்களா என்று தேடிக்கொண்டிருந்தார்.

> *யோனத்தான்நிமித்தம் என்னால் தயவுபெறத்தக்கவன் எவனாவது சவுலின் வீட்டாரில் இன்னும் மீதியாயிருக்கிறவன் உண்டா என்று தாவீது கேட்டான். (2 சாமுவேல் 9:1).*
>
> *அப்பொழுது ராஜா: தேவன்நிமித்தம் நான் சவுலின் குடும்பத்தாருக்குத் தயைசெய்யும்படி அவன் வீட்டாரில் யாதொருவன் இன்னும் மீதியாய் இருக்கிறானா என்று கேட்டதற்கு, சீபா ராஜாவைப் பார்த்து: இன்னும் யோனத்தானுக்கு இரண்டு கால்களும் முடமான ஒரு குமாரன் இருக்கிறான் என்றான் (2 சாமுவேல் 9:3).*

அந்த சிறுவன் லோ-தேபார் என்ற ஊரில் வசித்து வந்தான், அந்த பெயர் "மேய்ச்சல் இல்லாமல்" என்று பொருள்படும். அது ஒரு உலர்ந்த, பரிதாபமான இடம் போல் தோன்றியது. நாம் வறண்ட, பரிதாபமான இடங்களில் வாழ்ந்தாலும் இயேசுவின் பொருட்டு யாரையாவது ஆசீர்வதிக்க தேவன் விரும்புவதால் நம்மைத் தேடுகிறார். தேவன் நாம் அதற்கு தகுதியானவர்கள் என்பதால் நம்மை ஆசீர்வதிப்பதில்லை. ஆனால் அவரை விசுவாசிக்கிற அனைவரையும் அவர் ஆசீர்வதிப்பார் என்று அவர் இயேசுவிடம் சொன்னதால் நம்மை ஆசீர்வதிக்கிறார். மெபிபோசேத் தனது வாழ்க்கையில் மாற்றத்தை நாடவில்லை, ஆனால் தாவீது அவனைத் தேடிக்கொண்டிருந்தார். அவர் முன்னாள் மன்னரின் பேரன், அவனது தந்தைக்கும், தாவீது ராஜாவுக்கும் இடையே இருந்த உடன்படிக்கை உறவின் காரணமாக ராஜாவின் மேஜையில் தொடர்ந்து சாப்பிட்டு கொண்டிருக்க முடியும் என்ற போதிலும் அவன் ஒரு பரிதாபமான சூழ்நிலையில் வாழ்ந்துக் கொண்டிருந்தான்.

மேபிபோசேத் தாவீதின் முன் கொண்டுவரப்பட்டபோது, அவன் பயந்து பதிலளித்தான். தாவீது அவனிடம் பயப்படாதே என்று கூறினார். ஏனென்றால், அவர் அவனது தந்தையின்

*பொருட்டு அவனுக்கு இரக்கம் காட்டி அவனுக்குச் சொந்தமான அனைத்தையும் மீட்டுக்கொடுப்பார். அவன் எப்போதும் தனது மேஜையில் சாப்பிடுவான் என்றும் சொன்னார்.*

*சற்று யோசித்துப் பாருங்கள் - நீங்கள் இழந்த அனைத்தையும் தேவன் மீட்டுக்கொடுக்க விரும்புகிறார்! அவர் உங்களைத் தேடி வந்து நீங்கள் எப்போதும் அவருடைய ஆசீர்வாதமும் மகிழ்ச்சியுமான மேஜையில் சாப்பிட வேண்டுமென்று அழைக்கிறார்.*

*தாவீதின் முன்மொழிவுக்கு மெபிபோசேத் பதிலளித்த விதம், அவன் ஏன் அவனது பரம்பரை உரிமைக்குக் கீழே வாழ்ந்தார் என்பதை நமக்குச் காட்டுகிறது.*

> *அப்பொழுது அவன் வணங்கி: செத்த நாயைப்போலிருக்கிற என்னை நீர் நோக்கிப்பார்க்கிறதற்கு, உமது அடியான் எம்மாத்திரம் என்றான். (2 சாமுவேல் 9:8).*

*நீங்கள் இதை பார்க்கிறீர்களா? அவர் தன்னைப் பழுதடைந்த பொருளாகக் கருதியதால் இரண்டாம் நிலை வாழ்க்கை வாழ்ந்தார். செத்த நாய் என்பதாய் அவனுக்கு அவனைப் பற்றிய ஒரு உருவம் இருந்தது. ஆஹா. நாம் இதை அனுமதித்தால் இது நமக்கு ஒரு பெரிய பாடத்தை கற்றுத்தரும். நீங்கள் ஒரு தாழ்ந்த சுய உருவத்தைக் கொண்டிருப்பதால் ஒரு தாழ்ந்த வாழ்க்கை வாழ்கிறீர்களா?*

*நீங்கள் பயனற்றதாக, சேதமடைந்ததாக உணர்கிறீர்களா... உங்களுக்கு மிகவும் தாமதமானது போல் இருக்கிறதா? அப்படியானால், லோ-டெபாரிலிருந்து (வறண்ட மற்றும் பரிதாபகரமான இடம்) வெளியேறி ராஜாவின் கோட்டைக்குள் செல்ல வேண்டிய நேரம் இது!*

*அன்று முதல் தாவீது மேபிபோசேத்துக்கும் அவனுடைய இளம் மகன் மீகாவுக்கும் தேவையான அனைத்தையும் வழங்கினார். இரண்டு கால்களும் ஊனமாக இருந்தபோதிலும், அவர் ராஜாவின் மேஜையில் தொடர்ந்து சாப்பிட்டார் என்று வேதம் கூறுகிறது (2 சாமுவேல் 9:13). நான் அதை விரும்புகிறேன். நாம் முடமாக*

இருந்தாலும் (பலவீனங்கள் இருந்தாலும்) நம் இயேசு ராஜாவின் மேஜையில் சாப்பிடலாம் என்பதை உணர இது எனக்கு உதவுகிறது.

தரையில் விழும் துணிக்கைகளால் திருப்தியடைய, மேசைக்கு அடியில் தவழ்ந்துக் கொண்டிருகின்றீர்களா? நீங்கள் தேவனுடைய சிறந்ததை விட குறைவானதில் நின்று விட்டீர்களா? நீங்கள் ஒரு அற்புதமான உணவைத் தயாரித்து உங்கள் பிள்ளைகளை சாப்பிடும்படி அழைக்கும் போது அவர்கள் அனைவரும் மேசைக்கு அடியில் இறங்கி, அவர்கள் எவ்வளவு பயனற்றவர்கள் என்றும் அவர்கள் மேஜையில் உட்கார தகுதியற்றவர்கள் என்றும் உங்களிடம் சொல்லத் தொடங்கினால் நீங்கள் எப்படி உணருவீர்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். நாம் அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற மறுக்கும் போது தேவன் அப்படித்தான் உணர்கிறார். ஏனென்றால் நாம் சேதமடைந்துள்ளோம், அதனால் எதற்கும் பயன் இல்லை என்று நாம் நம்புகிறோம். நம்முடைய சுகப்படுத்துதலுக்காகவும், மறுசீரமைப்புக்காகவும் இயேசு சிலுவையில் மரித்தபோது அதிக விலை கொடுத்தார், எனவே அவர் நமக்காக தியாகம் செய்து வாங்கிய நன்மைகளை அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள ஆரம்பிக்கலாம்.

இனி நீங்கள் தியாகம் செய்ய வேண்டியதில்லை, ஏனென்றால் இயேசு அதை உங்களுக்காகச் செய்தார் - இப்போது நீங்கள் மேஜையில் உட்கார்ந்து ராஜாவுடன் சாப்பிடலாம்!

அத்தியாயம் 12

# பாவத்தின் காயங்கள்

*என் மதிகேட்டினிமித்தம் என் புண்கள் அழுகி நாற்றமெடுத்தது.*

*- சங்கீதம் 38:5*

*மற்றவர்கள் நமக்கு செய்யும் பயங்கரமான செயல்களால் நம் ஆத்துமா காயமடைகிறது. ஆனால் பெரும்பாலும் நாம் நம்முடைய சொந்த பாவத்தால் காயப்படுகிறோம். சில நேரங்களில் நம் ஆத்துமாவின் ஆழமான காயங்கள் தனிப்பட்ட பாவத்தின் விளைவினாலும், அது நம் மனம், உணர்ச்சிகள் மற்றும் பொதுவாக நாம் நம்மை எப்படிப் பார்க்கிறோம் என்பதின் மீது ஏற்படுத்திய விளைவினாலும் ஏற்படுகின்றது. நாம் குற்ற எண்ணங்கள் மற்றும் குற்ற உணர்வுகளில் சிக்கி அதனால் சுய நிராகரிப்பு அல்லது சுய வெறுப்பை அனுபவிக்கலாம்.*

*நம்முடைய பாவங்கள் நம்மை காயப்படுத்துவது மட்டுமல்லாமல், நாம் நேசிக்கும், அக்கறை கொண்டிருக்கும் நபர்களையும் காயப்படுத்துகின்றன. காயமடைந்திருக்கும் வயது வந்த குழந்தைகளின் தாய் ஜூலி, அவர்களை காயப்படுத்தியது அவள்தான். அவள் ஒரு குடிகாரியாக இருந்தாள், அவள் வீட்டில் இருக்க மாட்டாள் அல்லது நினைவின்றியிருப்பாள் அல்லது அவர்களுடன் இல்லாமல் இருப்பாள். பல சமயங்களில் அவள் குடிபோதையில் வன்முறையைக் காட்டினாள். அவளுடைய குடிப்பழக்கத்தின் விளைவாக, அவளும் அவரது கணவரும் விவாகரத்து செய்தனர். அவள் நாளடைவில் ஒரு சிகிச்சை மையத்திற்கு சென்றாள், ஆனால் அதற்குள் அவளுடைய மகன் கோபமாக நடந்து கொள்ள தொடங்கினான். அவளுடைய மகள் மனச்சோர்வடைந்து பின்வாங்கினாள். ஜூலி இப்போது என்ன*

செய்ய வேண்டும்? அவள் அவர்களுக்கு ஏற்படுத்திய வலிக்காக அவள் உண்மையிலேயே வருந்துகிறாள், அவள் அப்படியாக அவர்களிடம் சொன்னாள், ஆனால் அதற்குள் ஜூலி உட்பட அனைவரின் ஆத்துமாவிலும் காயங்கள் ஏற்பட்டுவிட்டன.

அவள் பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியே செல்வதற்கு முன், ஜூலி இயேசுவை ஏற்றுக் கொண்டு தேவாலயத்திற்கு தவறாமல் சென்றாள்.

அவர்கள் அவளுடன் கலந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினாள், ஆனால் அதற்குள் அவர்கள் டீன் ஏஜ் வயதின் பிற்பகுதியில் இருந்தார்கள். அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. அவர்கள் கல்லூரிக்கு சென்றார்கள், பின்னர் திருமணம் செய்து கொண்டனர். சொந்த குழந்தைகளைப் பெற்றனர், ஆனால் ஜூலியுடன் அவர்களது உறவுகள் தூரமானதாகவே இருந்தன. அவர்கள் மனக்கசப்பு நிரம்பியவர்களாக இருந்தனர் என்பது தெளிவாகத் தெரிந்தது. மேலும் அவர்கள் தங்கள் தாயுடன் எவ்வளவு குறைந்த நேரம் செலவிட கூடுமோ அவ்வளவு குறைவாகவே செலவிட்டனர்.

இப்போது ஜூலி தனது குழந்தைகளை காயப்படுத்தியதால் ஏற்பட்ட காயத்தையும், அவர்களால் நிராகரிக்கப்பட்ட உணர்வின் காயங்களையும் தனது ஆத்துமாவிலே கொண்டிருக்கிறாள். அவர்கள் ஏன் அப்படி உணர்கிறார்கள் என்பதை அவள் புரிந்து கொண்டாலும், அது தொடர்ந்து வேதனையளிக்கக் கூடியதாகவே இருக்கிறது. அவளால் என்ன முடியும்? அத்தகைய காயங்களை எது குணப்படுத்த முடியும்? வேதத்தை அடிப்படையாகக் கொண்ட சில வேதவாக்கியங்களை உங்களுக்கு பரிந்துரைக்கிறேன், அது உங்களுக்கு உதவும்:

முதலில் செய்ய வேண்டியது, உங்கள் கடந்த காலத்தைப் பற்றி தேவனிடம் வெளிப்படையாகப் பேசுவது, எதையும் மறைக்காமல். எல்லாவற்றையும் சொல்லுவது. தாவீது ராஜா பத்சேபாளுடன் விபச்சாரம் செய்ததன் மூலமும், அவன் செய்ததை மறைக்க அவளது கணவனான உரியாவைக் கொலை செய்ததன் மூலமும் பெரும் பாவம் செய்தான். பின்னர் தாவீது அவளை மனைவியாக்கிக் கொண்டான். தாவீது எப்படியோ தன் பாவத்தை ஏறக்குறைய

ஒரு வருடம் வரை அலட்சியப்படுத்தினான். ஆனால் அது இறுதியாக அவன் அதை எதிர்கொள்ளும் அளவுக்கு அவனை நிர்பந்தத்திற்குள்ளாக்கியது.

தாவீது சொன்னதை என் சொந்த வார்த்தைகளில் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நான் என் பாவத்தை ஒப்புக்கொண்டு அதை அறிக்கை செய்வதற்கு முன்பு, அதைப் பற்றி அமைதியாக இருந்தபோது, நான் வீணாகிக் கொண்டிருப்பதை போல் உணர்ந்தேன், நாள் முழுவதும் என் உள்ளம் புலம்பியது. தேவனே, நீர் பிரியமாயிருக்கவில்லை என்றும், நீர் என்னுடன் தொடர்ந்து இடைப்பட்டுக் கொண்டிருப்பதையும் உணர்ந்தேன். கோடை காலத்திலே நான் வறட்சியில் வாழ்வது போல் என் உள்ளம் உணர்ந்தது. நான் இறுதியாக என் பாவத்தை ஒப்புக்கொள்கிறேன் -நான் எதையும் மறைக்கவில்லை, எல்லாம் வெளிப்படையாக இருக்கும் வரை நான் ஒப்புக்கொண்டேன். நான் அப்படி செய்த போது, நீர் என் அக்கிரமத்தையும் குற்றத்தையும் உடனடியாக மன்னித்தீர். (சங்கீதம் 32:3-5 இன் வசனம்).

எல்லா நேரங்களிலும் நாம் செய்யும் அனைத்தையும் தேவன் ஏற்கனவே அறிந்திருந்தாலும், நம் தவறை முழுமையாக ஒப்புக்கொள்வது நமக்கு முக்கியம் ஏனெனில் அது நம் ஆத்துமாவிலிருந்து அதை சுத்தப்படுத்த உதவுகிறது. எந்த நேரத்திலும் தேவனிடம் எதைப் பற்றியும் பேசலாம், நாம் ஒருபோதும் தீர்ப்பையோ நிராகரிப்பையோ அனுபவிக்க மாட்டோம் என்பதை அறிந்து கொள்ளலாம். இருளில் மறைந்திருக்கும் விஷயங்களைப் பற்றி பேசுவதே அநேக சமயங்களில் அவற்றிடமிருந்து நம்மை விடுவிக்கும் விஷயமாக இருக்கிறது. தேவன் நம் உள்ளந்திரியங்களில் சத்தியத்தை விரும்புகிறார் (சங்கீதம் 51:6).

நீங்கள் இருளிலே இருக்கத் தேர்ந்தெடுக்கும் அளவுக்கு ஒளியைக் கண்டு பயப்படாதீர்கள். தாவீது, நீண்ட காலமாக தன் பாவத்தை அலட்சியம் செய்திருந்தாலும், அவரது வாக்குமூலத்திலிருந்து அவர் அதன் எடையை உணர்ந்துக்கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது. ஒருவேளை

அதைச் சமாளிக்க வேண்டியதில்லாத அளவுக்கு அவர் மிகவும் பிஸியாக இருந்திருக்கலாம் அல்லது அவர் அதற்கு சாக்குப்போக்கு கூறியிருந்திருக்கலாம்-குறைந்த பட்சம் நான் அதைத்தான் அடிக்கடி எனது சொந்த தவறான நடத்தையை கையாள்வதை தவிர்க்க செய்திருக்கிறேன் என்று எனக்குத் தெரியும். கடந்த காலத்தில். நம்முடைய பாவத்தை கையாள்வதை தவிர்க்கக்கூடிய மற்றொரு வழி வேறொருவர் மீது பழி போடுவது. அவர்கள் செய்ததை அவர்கள் செய்யாமல் இருந்திருந்தால், நாம் செய்ததை செய்திருக்க மாட்டோம் என்று நம்மை நாமே உறுதியாக நம்ப வைத்துக் கொள்ளலாம். அத்தகைய சிந்தனையில் உண்மை இருக்கலாம் என்றாலும், நாம் செய்த

> நீங்கள் இருளில் வாழத் தேர்ந்தெடுக்கும் அளவுக்கு ஒளியைக் கண்டு பயப்பட வேண்டாம்.

பாவத்திற்கான பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டு அதை வெளியே கொண்டு வராதவரை, நம் பாவத்தின் பாரத்திலிருந்து நம்மால் விடுதலையடைய முடியாது. முதலாவது தேவனுடன், பின்னர் தேவைப்பட்டால் மனிதர்களுடன்.

அடுத்து செய்ய வேண்டியது, நீங்கள் கேட்ட மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதுதான். அதை விசுவாசத்தால் பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய உணர்வுகள் உடனடியாக மாறாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவனுடைய மன்னிப்பைப் பற்றிய, அவருடைய அற்புதமான கருணையைப் பற்றிய. வேதவாக்கியங்களைக் கற்று அந்த உண்மைகள் உங்கள் வாழ்க்கையில் வெளிப்படும் வரை தியானியுங்கள். அது நடந்தவுடன், உங்கள் உணர்வுகள் தேவனுடைய வார்த்தையின் உண்மையுடன் இணைந்து கொள்ளும். தாவீது தன் பாவத்தை மனந்திரும்பிய இருதயத்துடன் ஒப்புக்கொண்டவுடன், தேவன் அவரை உடனடியாக மன்னித்தார் என்பது நினைவிருக்கிறதா. நம்முடைய பாவங்களுக்காக இயேசு ஏற்கனவே கிரயம் செலுத்திவிட்டார், நாம் அதை விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டால் மன்னிப்பு கிடைக்கும்.

நீங்கள் காயப்படுத்தியவர்களுடன் வெளிப்படையாகப் பேசுங்கள். நீங்கள், நான் வருந்துகிறேன், மன்னித்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதை விட இன்னும் கொஞ்சம் அதிகமாக சொல்ல வேண்டியிருக்கலாம். நீங்கள் அவர்களை காயப்படுத்திய நேரத்தில் நீங்கள் என்ன அனுபவித்துக் கொண்டிருந்தீர்கள் என்பதையும், நீங்கள் அப்படி செய்ததற்காக எவ்வளவு வருந்துகிறீர்கள் என்பதையும் அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் தாழ்மையுடன் உங்களை மன்னித்து இன்னொரு வாய்ப்பு தருமாறு அவர்களிடம் கேளுங்கள். சாக்கு போக்கு சொல்லாதீர்கள், ஏனென்றால் நீங்கள் அப்படி செய்தால், அது உங்கள் மன்னிப்பின் தாக்கத்தைக் குறைத்துவிடும்.

அவர்கள் உடனடியாக உங்களை மன்னிக்க விரும்பாமலோ அல்லது மன்னிக்க முடியாமலோ இருந்தால், நீங்கள் அவர்களை புரிந்துக் கொள்கிறீர்களென்று அவர்களிடம் சொல்லுங்கள், அவர்களுக்காக வழக்கமாக ஜெபியுங்கள். உங்களை மன்னிக்கும் கிருபையை அவர்களுக்குக் தேவன் கொடுக்கும்படி அவரிடம் கேளுங்கள், ஏனென்றால் அவர் தான் உண்மையிலேயே அதைச் செய்யக்கூடியவர். அவர்களுடைய ஆத்துமாக்களில் உள்ள காயங்களைக் குணப்படுத்தும்படி அவரிடம் கேளுங்கள்.

வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் அவர்கள் மீது தொடர்ந்து அன்பைக் காட்டுங்கள். அன்பு சகல பாவங்களையும் மூடும். (1 பேதுரு 4:8). கடினமான இருதயத்தைக் கூட உருக்கும் திறன் கொண்டது. நாம் தொடர்ந்து நமக்கு எதிராக கடினமாக உள்ளவர்களிடம்,அன்பாகவும் கனிவாகவும் இருக்கும் போது, அது இறுதியில் அவர்கள் மீது ஒரு அற்புதமான குணப்படுத்தும் விளைவை ஏற்படுத்தும்.

நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். ஏனென்றால் நாம் காயப்படுத்தியவர்கள், நாம் உண்மையிலேயே மாறிவிட்டோம், வருந்துகிறோம் என்பதை நம்புவதற்கு காலம் எடுக்கும். நம் காயங்கள் குணமடைய நேரம் எடுத்தது போலவே, அவர்களுடையதும் குணமடைய காலம் எடுக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

## பழியின் எடையுடன் வாழாதீர்கள்

நாம் செய்த ஏதோவொரு காரியம் யாரையாவது காயப்படுத்தியிருந்தாலும், நாம் குற்ற உணர்வுகளுடனும் பழியுடனும், நித்தமும் வாழ வேண்டும் என்று அர்த்தமாகாது. நாம் மனந்திரும்பி, மற்றவர்களுக்கு நாம் ஏற்படுத்திய எந்த வலியையும் மன்னிக்கும்படி கேட்டவுடன், நாம் பழியை விட்டுவிட வேண்டும். பழி சொல்லுவது என்பது குற்றம் சாட்டுவது அல்லது கண்டனம் செய்வது என்று அர்த்தம், எனவே கடந்த கால தவறுகளுக்கு உங்களை நீங்களே குற்றம் சாட்டுவதை நிறுத்துவது முக்கியம். கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு எந்த ஆக்கினைத்தீர்ப்பும் இல்லை என்று தேவனுடைய வார்த்தை உறுதியளிக்கிறது. (ரோமர் 8:1). இயேசு இந்த உலகத்தை கண்டிக்க அல்ல, மாறாக இதை இரட்சிக்க வந்தார் (யோவான் 3:17).

எனது மூத்த மகன் டேவிட், ஒரு பதின்பருவத்தினனாகவும், இளைஞனாகவும் பல ஆண்டுகள் கோபமான இளைஞனாகவும் மிகவும் கலகக்காரனாகவும் இருந்தான். நான் அவனுடைய நடத்தையை சரி செய்ய முயற்சித்த ஒரு நாள் எனக்கு நினைவுக்கு வருகிறது, அவன் சொன்னான், "நீங்கள் என்னை நடத்திய விதத்தில் என்னை நடத்தாதிருந்திருப்பீர்களேயென்றால் நான் இப்படி இருக்க மாட்டேன்." என்றான். ஐயோ! அவனுடைய வார்த்தைகள் என்னை குட்டி உணர்த்தியது நான் கண்டனத்திற்கு ஆளாகி அங்கிருந்து சென்றேன்.

> இயேசு இந்த உலகத்தை ஆக்கினைத்தீர்க்கும்படி வராமல் அதை இரட்சிக்க வந்தார்.

அவன் என்ன சொன்னான்? என் குழந்தை பருவத்தில் ஏற்பட்ட துஷ்பிரயோகம் காரணமாக, நான் கோபமாக இருந்தேன், என்னை பிரியப்படுத்துவது மிகவும் கடினமாக இருந்தது, என் வாழ்க்கையில் இருந்த சில கோபம் மற்றும் செயலிழந்த நடத்தையின் விளைவை பெற்றுக் கொள்ளும் நிலையில் டேவிட் இருந்தான். நான் என் மீதும் குழந்தைகள் மீதும் கோபம் கொண்டு மிகவும் கத்தி கூச்சலிட்டேன், தேவன் அவர்கள் எப்படி இருக்க வேண்டுமென்று

விரும்பினாரோ அப்படி அவர்கள் மாற அவர்களுக்கு உதவுவதற்குப் பதிலாக நான் அவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்பினேனோ அப்படியாக அவர்கள் மாற வேண்டுமென்று அழுத்தம் கொடுத்துக்கொண்டிருந்தேன். டேவிட் ஒரு இளம் இளைஞனாக மாறின போது, நான் என் வாழ்க்கையில் ஒரு சிறந்த இடத்தில் இருந்தேன், ஆனால் அவன் இன்னும் கடந்த காலத்தைப் பற்றி வெறுப்புடனும்,கோபமாகவுமே இருந்தான்.

நான் அவனிடம் உண்மையாகவே நான் தவறாக நடந்துக் கொண்டேன் என்னை மன்னித்துக்கொள் இனி நமக்கிடையிலே நல்ல உறவு இருக்க விரும்புகிறேன் என்று விளக்கினாலும், அவன், "நான் இப்படி இருப்பது உங்கள் தவறு" என்று என்னைக் குறை கூறுவான். அவன் தன் நடத்தைக்கு பொறுப்பேற்பதற்கு பதிலாக என்னை குறை கூறிக்கொண்டிருந்தான். ஒரு நாள் அவனுடைய மோசமான நடத்தைக்கு நான் தான் காரணம் என்று அவன் என்னை குற்றம் சாட்டிய பிறகு மிகுந்த குற்ற உணர்வுடன் அவன் அறையை விட்டு வெளியே சென்றது எனக்கு தெளிவாக நினைவிருக்கிறது. ஆனால் தேவன் என் இருதயத்திலே தெளிவாக பேச ஆரம்பித்தார். என்னால் முடிந்ததைச் செய்துவிட்டேன் என்றும், பழியைச் சுமப்பது ஒருபோதும் பிரச்சனையை சரி செய்யாது என்றும் அவர் எனக்குக் காட்டினார் கடந்த காலத்தில் ஏற்பட்ட காயங்களிலிருந்து குணமடைய எனக்கு கிடைத்த அதே வாய்ப்பு எனது மகனுக்கும் இருப்பதாக அவர் என்னிடம் கூறினார். அதைக் கொண்டு குணமடைய அவன் மறுத்தால், பிறகு நான் தேவனிடம் அவனை ஒப்படைப்பதைத் தவிர என்னால் வேறு எதுவும் செய்ய முடியாது என்றார்.

அது எனக்கு மிகவும் உதவிகரமாக இருந்தது, மேலும் என்னால் அந்த நிலைமையை தேவனிடம் கொடுக்க முடிந்தது. சுவாரஸ்யமாக, டேவிட், அவன் கோபமாகவும், கலகம் பண்ணுகிறவனாகவும் இருப்பது என் தவறு என்று அவன் மீண்டும் ஒருபோதும் என்னிடம் கூறவே இல்லை. எங்கள் உறவு தொடர்ந்து வளர்ந்தது, இப்போது அவனுக்கு ஐம்பது வயதுக்கு மேல் ஆகிறது, அவன் என்னை எவ்வளவு நேசிக்கிறான், மதிக்கிறான் என்று அடிக்கடி என்னிடம் கூறுகிறான்.

அந்த சூழ்நிலையில் தேவன் வேலை செய்வதற்காக பழியைச் சுமப்பதை நிறுத்துவது எனக்கு முக்கியமாக இருந்தது என்று நான் நம்புகிறேன். கடந்த காலத்தில் நீங்கள் செய்த ஒரு செயலால் பழியை சுமந்துக் கொண்டிருப்பீர்களென்றால், நீங்கள் அதை விடுவித்து விட்டு, மற்றவரைப் புண்படுத்தும் வகையில் நீங்கள் செய்ததை பின்னோக்கிச் சென்று செயலிழக்க செய்ய முடியாது என்றாலும், தேவனால் செய்ய முடியாதது என்று எதுவும் இல்லை என்று நீங்கள் உணர்ந்துகொள்ளும்படி நான் உங்களை வலியுறுத்துகிறேன். நீங்கள் காயப்படுத்தியவரின் இருதயத்தை அவர் மாற்ற முடியும். உங்கள் இருவருக்குள்ளும் உள்ள காயங்களைக் குணப்படுத்த முடியும்.

நாம் ஒருவரை ஆழமாக காயப்படுத்தியிருந்தால், நமது செயல்களின் சுமையை விடுவிப்பது மிகவும் கடினம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் வாழ்க்கையைத் தொடர நாம் செய்யக்கூடிய ஒரே விஷயம் அதுதான்.

## நான் விரும்புகிறேன் - ஆனால் இது மிகவும் கடினம்

பிறர் நமக்கு என்ன செய்தார்களோ அல்லது நாம் பிறருக்கு என்ன செய்தோமோ அதனால் ஏற்பட்ட வலியிலே நாம் நின்று விடக்கூடாது. அப்படிச் செய்வது நம்மை காயப்பட்ட ஆத்துமாவுடன் விட்டுவிடும். ஆனால் தேவன் நமக்கு ஒரு புதிய தொடக்கத்தை வழங்குகிறார், அப்படியென்றால் நாம் கடந்த காலத்தை பின்னால் வைத்து விட வேண்டும். திரும்பிப் பார்க்கக்கூடாது. கடந்த காலத்தின் அனைத்து பழி, அவமானம் மற்றும் குற்ற உணர்ச்சிகளை விட்டு விட்டு, தேவன் நம் வாழ்விலே பலமானவராக காட்ட அனுமதிக்க வேண்டும்.

கலப்பையில் கைவைத்து திரும்பிப் பார்ப்பவர் எவரும் தேவனுடைய ராஜ்யத்திற்குத் தகுதியற்றவர் என்று இயேசு கூறினார் (லூக்கா **9:62**). நாம் திரும்பிப் பார்ப்பதை நிறுத்தாவிட்டால், கடந்த காலத்தில் நாம் செய்த தவறுகள் அனைத்தையும் திரும்பி பார்ப்பதை விட்டு விடவில்லையென்றால் தேவன் வழங்கும் அற்புதமான வாழ்க்கையை நாம் அனுபவிக்க முடியாது என்று நான் நம்புகிறேன். கடந்த காலத்தை விட்டுவிடுவது கடினமாக

இருக்கலாம், ஆனால் ஒவ்வொரு நாளும் அதில் மீண்டும் வாழ்வதை விட இது மிகவும் சிறந்தது.

தேவன் உங்களிடம் செய்யும்படி சொல்லும் காரியங்கள் மிகவும் கடினமானவை என்று நினைப்பதற்கும், சொல்வதற்கும் கவனமாக இருங்கள். தேவன் கடினமான காரியங்களைச் செய்யவும், தேவன் இல்லாமல் வாழ்பவர்கள் தங்கள் வாழ்க்கையில் செய்ய முடியாத விஷயங்களைச்கூட செய்யவும் அவருடைய ஆவியை நமக்குத் தருகிறார்.

"தேவன் நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறார் என்று எனக்கு தெரியும், ஆனால் அது மிகவும் கடினம்." என்று மக்கள் சொல்வதை நான் அடிக்கடி கேட்கிறேன். அவர்கள் தொடர்ந்து தங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சியற்றும், நிறைவற்றும் வாழ்கின்றனர் என்பதையும் பார்க்கிறேன்.

தேவனுடைய சித்தத்தைச் செய்வது மிகவும் கடினமானது என்று உறுதியாக நம்புவது பெரும்பாலும் மக்கள் கிறிஸ்துவுடனான தங்கள் உறுதிப்பாட்டிலிருந்து பின்வாங்கச் செய்கிறது. ஒரு காலத்தில் அவர்கள் முழுமையாக தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று எண்ணினர். ஆனால் அவர் அவர்களிடம் ஏதோ கடினமானதொன்றைச் செய்யும்படி கேட்கும் போது, அது மிகவும் கடினமானது என்று முடிவு செய்து, தங்கள் பழைய வாழ்க்கை முறைக்குத் திரும்பினார்கள். ஒருமுறை இயேசுவை பின்பற்றிய சீடர்கள் பலரும் கூட, அவர் அவர்களிடம் செய்யும்படி கேட்ட காரியங்கள் மிகவும் கடினமாக இருப்பதாக உணர்ந்த போது, அவர்களின் பழைய வாழ்க்கை முறைக்குத் திரும்பினார்கள். (யோவான் **6:60-66** பார்க்கவும்). தேவன் ஒன்றை செய்ய நமக்கு வேண்டிய உதவியை கொடுக்காமல் நம்மிடம் அதை செய்யும்படி சொல்வதில்லை, அவர் நாம் விசுவாசித்து விசுவாச அடிகள் எடுக்க வேண்டுமென்று விரும்புகிறார். நாம் அவ்வாறு செய்யும்போது, தேவனால் எல்லாம் சாத்தியம் என்பதைக் கண்டுபிடிப்போம்!

## உங்களை நீங்களே தண்டிப்பதை நிறுத்துங்கள்

முற்றிலும் எல்லாவற்றிற்கும் தேவனை நம்பும் உறவுக்கு நாம் அழைக்கப்படுகிறோம், அவற்றில் ஒன்று கடந்த காலத்தில் நாம்

செய்த நம் தவறுகள் மற்றும் அவற்றிலிருந்து நாம் அனுபவிக்கும் வலிகள் அனைத்தையும் அவர் கவனித்துக்கொள்வார் என்று அவரை நம்ப வேண்டும்.

நீங்கள் என்ன செய்திருந்தாலும், அது எவ்வளவு மோசமாக இருந்தாலும், உங்களுக்கு ஒரு புதிய ஆரம்பம் உள்ளது. அதை நம்புவது தான் உங்கள் புதிய வாழ்க்கைக்கான முதல் படியாகும். பிறரைப் புண்படுத்தும் வகையில் நான் செய்த காரியங்களை முதலில் விட்டுவிட முயன்றபோது, அவற்றை விடுவிப்பதற்காக நான் முயற்சிப்பதற்கு கூட குற்ற உணர்ச்சியுடன் இருந்தேன். நான் குற்றவாளி என்று அறிந்திருந்தேன். நான் தண்டிக்கப்பட வேண்டும் என்று உணர்ந்தேன். நாம் தண்டனைக்கு தகுதியானவர்கள் என்று அடிக்கடி உணர்கிறோம். எனவே தொடர்ந்து பரிதாபமாக உணர்வதன் மூலம் நம்மை நாமே தண்டிக்கிறோம். ஆனால் கிறிஸ்துவின் நற்செய்தி என்னவென்றால் அவர் நம் தண்டனையை ஏற்றுக்கொண்டார். நம்முடைய மீறுதல்களுக்காக அவர் காயமடைந்தார் (ஏசாயா 53:4-5). அவர் உண்மையில் நாம் பெற்றுக்கொண்டிருக்க வேண்டிய தகுதியான தண்டனையின் வலிகளை ஏற்றுக் கொண்டார். எனவே அவர் நம்முடைய பாவங்களுக்காக தண்டிக்கப்பட்டதால், நாம் இனி நம்மை நாமே தண்டிக்க வேண்டியதில்லை - அல்லது தண்டிக்கக் கூடாது. நம்மை நாமே தொடர்ந்து தண்டித்துக் கொண்டிருந்தால், கிறிஸ்து மரித்தது வீணாக இருக்கும். கடந்த காலத்தில் நீங்கள் செய்த தவறுகளுக்காக நீங்கள் உங்களை இன்னும் தண்டித்துக் கொண்டிருக்கிறீர்களா என்று தரித்திருந்து உங்களிடம் நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். ஆம், என்பது உங்கள் பதிலாக இருந்தால், அதை விட்டுவிடுவதற்கான நேரம் இது.

ஒருவர் செய்த குற்றத்திற்காக வாழ்நாள் முழுவதும் சிறையில் இருக்கும் போது, ஜெயிலர் அவர்கள் அறைக்கு வந்து, கதவைத் திறந்து, "யாரோ ஒருவர் உங்கள் தண்டனையை ஏற்றுக்கொண்டு, உங்களுக்கு பதிலாக சிறையிலிருப்பார்கள்" என்று சொன்னால் எவ்வளவு ஆச்சரியமாக இருக்கும். "இல்லை, இல்லை நான் செய்ததை என்னால் விட்டுவிட முடியாது. நான் இங்கு தங்கி துன்பத்தை தொடர்ந்து அனுபவிக்க விரும்புகிறேன். நான் தண்டிக்கப்பட விரும்புகிறேன்." என்று சொல்லுவது எவ்வளவு

முட்டாள்தனமானது. நம்மில் பெரும்பாலோர் அது முட்டாள்தனமானது என்றும், கிட்டத்தட்ட யாரும் அப்படி செய்ய மாட்டார்கள் என்றும் எளிதாக ஒப்புக் கொள்வோம்,. ஆனால் இயேசு நமக்காக செய்ததை நாம் நிராகரித்தால் அப்படியாகவே செய்கிறோம்.

இயேசு நமக்கு மாற்று ஆளாக ஆனார் - அவர் நம் பாவங்களுக்காக துன்பப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கிறார். அவர் நம்முடைய மீறுதல்களுக்காக காயப்பட்டார், அவருடைய காயங்கள் நம் காயங்களை ஆற்றிவிட்டன. ஆனால் நாம் அதை நம்பி, நம் கடந்த காலத்தை விட்டு விடும் போது தான் அது நம் வாழ்வில் நிஜமாகிறது.

உங்கள் கடந்த காலத்தின் அனைத்து தவறுகளிலும் நீங்கள் தேவனை நம்பலாம். அவரால் குணமாக்கவும், காப்பாற்றவும் முடியும் (எபிரேயர் 7:25). யாரும் அவருடைய எல்லைக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல - நீங்களும் அல்ல, நீங்கள் காயப்படுத்திய நபர்களும் அல்ல.

## அத்தியாயம் 13

# உள்ளிருந்து வெளியே வாழ கற்றுக்கொள்வது

*கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.*

*- கலாத்தியர் 2:20*

நாம் கிறிஸ்துவை நம் இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் போது, அவர் நமக்குள் ஒரு அற்புதமான வேலையைச் செய்கிறார். அவர் நமக்குள் வாழ வருகிறார், ஒரு புதிய இயல்பையும், ஒரு புதிய ஆவியையும் கொடுக்கிறார், இவை இரண்டும் அவருடையது. இயேசுவாகிய அனைத்தும் நமக்குள், நம்முடைய மீண்டும் பிறந்த ஆவிக்குள் வாழ்வதற்காகவே வருகின்றன.

நாம் அவருடைய நீதியையும், அவருடைய சமாதானத்தையும், அவருடைய மகிழ்ச்சியையும், அவருடைய ஆவியின் கனியையும் பெற்றுக் கொள்கிறோம். நாம் அவரில் நீதிமான்களாக்கப்படுகிறோம், அவரில் மீட்கப்பட்டோம், அவரில் பரிசுத்தமாக்கப்படுகிறோம். நமக்கு கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறது. நாம் மன்னிக்கப்பட்டு விட்டோம், நாம் பாவத்திற்கு மரித்திருக்கிறோம் -நாம் கிறிஸ்துவில் யாராக இருக்கிறோம், எதையெல்லாம் பெற்றுக்கொண்டிருக்கிறோம் என்று தேவனுடைய வார்த்தை கூறுவதன் ஆரம்பம் தான் இது.

*உங்கள் வாழ்க்கை எப்படி மாறி விட்டது என்று நீங்கள் எப்போதாவது மிகவும் மனச்சோர்வடைந்து, “வேறொருவரின் வாழ்க்கை போன்று எனக்கு இருந்தால் நன்றாக இருந்திருக்கும்” என்று நீங்கள் நினைத்திருக்கிறீர்களா அல்லது சொல்லியிருக்கிறீர்களா? நீங்கள் இயேசுவை உங்கள் இரட்சகராகப் பெற்றும் கொள்ளும்போது அது தான் உங்களுக்கு நடக்கிறது - அவர் உங்கள் பழைய வாழ்க்கையை எடுத்துக்கொள்கிறார். நீங்கள் அவருடைய புதிய வாழ்க்கையை பெற்றுக் கொள்ளுகிறீர்கள். கலாத்தியர் 2:20ல், தான் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டதாகவும், தான் இனி வாழவில்லை என்றும், கிறிஸ்துவே அவரில் வாழ்கிறார் என்றும், அவர் இப்போது வாழும் வாழ்க்கை, அவர் விசுவாசத்தால் வாழ்கிறார் என்றும் பவுல் கூறினார்.*

*பவுல் ஒரு புதிய வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார், அதில் அவர் தன் மீதும், பிறர் மீதும் நம்பிக்கை வைப்பதற்கு பதிலாக இயேசுவில் நம்பிக்கை வைக்க கற்றுக்கொண்டார். அவர் கிறிஸ்துவுக்குள் வாழும் புதிய வாழ்க்கைக்காக தனது பழைய வாழ்க்கையை மாற்றினார். கிறிஸ்துவில் நம்முடையவை என்று தேவனுடைய வார்த்தை கூறும் விஷயங்கள் இங்கே ஒரு பட்டியலிடப்பட்டுள்ளது. இதுதான் நாம் இயேசுவைப் ஏற்றுக் கொள்ளும் போது நமக்குக் கிடைக்கிறது...*

- *எல்லா அதிபதிகளுக்கும் அதிகாரத்திற்கும் தலையாயிருக்கிற அவரில் நாம் முழுமையாக இருக்கிறோம் (கொலோசெயர் 2:10).*
- *நாம் கிறிஸ்துவில் பிழைத்திருக்கிறோம். (எபேசியர் 2:5).*
- *பாவம் மற்றும் மரணத்தின் பிரமாணத்திலிருந்து நாம் விடுபட்டிருக்கிறோம். (ரோமர் 8:2).*
- *நாம் அடக்குமுறையிலிருந்து வெகுவாக விலகி இருக்கிறோம், பயப்பட வேண்டாம், ஏனெனில் பயங்கரம் நம்மை நெருங்காது (ஏசாயா 54:14).*
- *நாம் தேவனால் பிறந்திருக்கிறோம், தீயவன் நம்மைத் தொடுவதில்லை (1 யோவான் 5:18).*

- நாம் அன்பிலே அவருக்கு முன்பாக பரிசுத்தமானவர்களாகவும், குற்றமற்றவர்களாகவும் இருக்கிறோம் (எபேசியர் 1:4; 1 பேதுரு 1:16).
- கிறிஸ்துவின் சிந்தை நம்மிடம் உள்ளது (1 கொரிந்தியர் 2:16; பிலிப்பியர் 2:5).
- எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் நம்மிடம் உள்ளது (பிலிப்பியர் 4:7).
- பெரியவர் நம்மில் வாழ்கிறார்; உலகத்தில் உள்ளவரை விட நம்மில் இருப்பவர் பெரியவர் (1 யோவான் 4:4).
- நாம் நீதியின் வரத்தைப் பெற்று, இயேசு கிறிஸ்துவால் வாழ்க்கையில் ராஜாக்களாக ஆளுகிறோம் (ரோமர் 5:17).
- மேலும் பல! (இன்னும் கூடுதலான அறிவிப்புகளை பின் இணைப்பு 2ல் காணவும்).

கிறிஸ்துவில் நம்முடையதாக மாறும் அனைத்து ஆச்சரியமான விஷயங்களும் மிகவும் பிரமிக்க வைக்கின்றன. அவருடைய வாக்குத்தத்தங்கள் உண்மை என்று நம்பி தான் நாம் தேவனோடு நடக்கத் தொடங்குகிறோம், அப்போது தான் நம் அன்றாட வாழ்வில் அவற்றின் யதார்த்தத்தை நாம் அனுபவிக்கத் தொடங்குவோம். பெரும்பாலான நேரங்களில் மக்கள், “நான் அதைப் பார்க்கும்போது நான் அதை நம்புவேன்” என்று கூறுகிறார்கள். ஆனால் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் முதலில் விசுவாசிக்கப்பட வேண்டும். முதலில் உங்கள் இருதயத்தில் நம்புங்கள் பின்னர் பார்ப்பீர்கள். விசுவாசமும், பொறுமையும் தேவனின் வாக்குறுதிகள் அடங்கிய பெட்டகத்தைத் திறக்கும் திறவுகோல்கள் (எபிரேயர் 6:12).

> விசுவாசமும் பொறுமையும் தேவனின் வாக்குறுதிகள் அடங்கிய பெட்டகத்தைத் திறக்கும் திறவுகோல்கள்.

நாம் ஒரு கிறிஸ்தவராக வெற்றிகரமான வாழ்க்கையை வாழ வேண்டுமானால், கிறிஸ்துவில் நாம் யார் என்பதைக்

கற்றுக்கொள்வது இன்றியமையாதது. நாம் இயேசுவைப் பிடித்துக் கொண்டு முன்னோக்கிச் செல்லும்போது, நாம் நம் கடந்த காலத்திற்கு மரித்துவிட்டோம் என்று நம்ப வேண்டும். அதை விட்டுவிடவேண்டும். நமக்குத் தெரிந்த சிலருக்கு நமது கடந்த காலம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தலாம். ஆனால் அது தேவனுக்கு எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துகிறதில்லை. கிறிஸ்துவுடன் மரித்ததோடு மாத்திரமல்லாமல், அவருடன் புதிய வாழ்க்கைக்கு எழுப்பப்பட்ட புதிய மனுஷராகப் பார்க்கிறார். தேவன் நம்மை பார்ப்பது போல் நாம் நம்மைப் பார்க்கக் கற்றுக் கொள்வதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவைப் ஏற்றுக்கொள்ளும்போது, அவர் நம்முடைய பாவத்தை ஏற்றுக்கொண்டு அவருடைய நீதியை நமக்குத் தருகிறார். தேவன் நம்மை நீதிமான்களாக பார்க்கிறார். நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் போது அப்படியாகத்தான் அவர் நம்மைப் பார்க்க தெரிந்து கொள்கிறார். (2 கொரிந்தியர் 5:21).

நாம் இயேசுவை ஏற்றுக் கொள்ளும்போது, அவர் நம்மில் வாழ வருவது மட்டுமல்லாமல், நாமும் அவருக்குள் வைக்கப்படுகிறோம். அவர் நம்மில் இருக்கிறார், நாமும் அவருக்குள்ளிருக்கிறோம்; நாம் ஒன்றாக ஆக்கப்பட்டோம், அவருடன் ஐக்கியப்பட்டிருக்கிறோம். அவருடனான நம் ஐக்கியத்தின் மூலம் நாம் பலப்படுத்தப்பட வேண்டும் என்று பவுல் கூறினார் (எபேசியர் 6:10).

நாம் அவருக்குள் இருந்தால், அவர் யாராக இருக்கிறாரோ அதெல்லாம் நம்முடையதாகிவிடும். நாம் காலியாக அவரிடம் செல்கிறோம். அவர் நம்மை நிரப்புகிறார். நான் ஒரு வெற்று ஜாடி என்றாலும் நான் ஒரு பீப்பாய் தண்ணீரில் வைக்கப்படுவேனென்றால், அந்த பீப்பாய் போலவே நானும் தண்ணீரால் நிரப்பப்படுவேன். அந்த பீப்பாயில் என்ன இருக்கிறதோ அது என்னுடையதாகிறது. கிறிஸ்துவில் நாம் வைத்திருக்கும் விசுவாசத்தின் மூலம் நாம் கிறிஸ்துவுக்குள் வைக்கப்படும்போது, அவர் நம்மைத் தம்மால் நிரப்புகிறார்.

எண்ணற்ற வேத வசனங்கள் நாம் கிறிஸ்துவில் இருப்பதைப் பற்றி பேசுகின்றன. அவற்றில் ஒன்று பிலிப்பியர் 3:3 இல் காணப்படுகிறது, அது நம்முடைய நம்பிக்கை கிறிஸ்துவில் இருக்க வேண்டும், நம்முடைய சொந்த திறமையில் அல்ல என்று

சொல்கிறது. நம்முடைய சொந்த வேலைகளில் அல்லது நம்மால் என்ன செய்ய முடியுமோ அதிலே நம்முடைய மதிப்பைக் கண்டறியாமல் அவரிலே நம் மதிப்பை கண்டறிய கற்றுக்கொள்ள வேண்டும். நம்பிக்கை முக்கியம். பின்னர் இந்த புத்தகத்திலே, நான் ஒரு முழு அத்தியாயத்தையும் அதற்கு அர்ப்பணித்திருக்கிறேன். நிலையற்ற விஷயங்களில் உங்கள் நம்பிக்கையை ஒருபோதும் வைக்க வேண்டாம் என்று நான் உங்களை ஊக்குவிக்கிறேன். இயேசு தான், நாம் சார்ந்திருக்கக்கூடிய பாறை, அவரே முற்றிலும் நம்பக்கூடியவர்.

## வைப்புத் தொகை

யாராவது உங்கள் வங்கிக்குச் சென்று உங்கள் கணக்கில் பல மில்லியன் டாலர்களை டெபாசிட் செய்தால், உங்கள் வாழ்நாள் முழுவதும் அதிலிருந்து எடுக்க உங்களால் முடியும். அது எவ்வளவு அற்புதமாக இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நன்றியுள்ளவர்களாகவும், மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இருப்பீர்கள், உங்களுக்கு நிறைய இருக்கும் போது நிச்சயமாகவே நீங்கள் எப்படியோ வாழ்ந்தால் போதுமென்று வாழ்க்கையை தொடர மாட்டீர்கள்.

இயேசு தம் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு வைப்புத்தொகையை வைத்துள்ளார். வேதாகமத்தின்படி, நம்முடைய வாழ்க்கைக்கும், தேவபக்திக்கும் தேவையான அனைத்தையும் அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

> *தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, (2 பேதுரு 1:3).*

"எல்லா விஷயங்களும்" நம்மால் அனுபவிக்கப்படுவதில்லை என்பதை தயவுசெய்து கவனிக்கவும். நாம் அவரைப் பற்றி தனிப்பட்ட முறையில் அறிந்திருந்து அவர் நம்மை வாழ

அழைத்திருக்கும் வாழ்க்கையை வாழ நாம் அறிந்திருந்தாலொழிய உண்மையில் அவை நமக்கு சொந்தமானவை என்றாலும் நாம் அவற்றை அனுபவிப்பதில்லை. அவை நம் வாழ்வில் விடுவிகப்படுவதைக் காண்பதற்கு நாம் வாக்குறுதிகளை ஜாக்கிரதையாக பற்றிக் கொண்டு, நமது நம்பிக்கையைப் பிரயோகிக்க வேண்டும்.

நான் மேலே குறிப்பிட்ட உங்கள் வங்கிக் கணக்கில் யாராவது டெபாசிட் செய்திருந்து, அது உங்களுக்குத் தெரியாமல் இருந்தால், பின்னர் நீங்கள் ஒருபோதும் அதிலிருந்து பணத்தை எடுத்து உபயோகிக்க மாட்டீர்கள். இயேசு மரித்து, அவருடைய பிள்ளைகளுக்காக அவர் அளித்திருக்கும் உண்மையான அற்புதமான வாழ்க்கையை வாழ்வதிலிருந்து தேவனுடைய பிள்ளைகளை தடுக்கும் விஷயம் அறிவின்மையே. அது அவர்களின் விருப்பமாக இருக்க கூடும் என்று கூட அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் தங்கள் கடந்த காலத்தை விட்டு விடலாம், திரும்பிப் பார்க்கத் தேவையில்லை, அவர்கள் தங்கள் ஆத்துமாவில் அனுபவித்துக் கொண்டிருக்கும் அனைத்து காயங்களிலிருந்தும் குணப்பட முடியும் என்று அவர்களுக்குத் தெரியாது.

அதேபோல, டெபாசிட் செய்யப்பட்டிருந்தாலும், அந்த நபர் சோம்பேறியாக இருந்ததால், வங்கிக்குச் சென்று தங்களுக்கு தேவையானதை பெற்றுக்கொள்ளவே இல்லையென்றாலும் உண்மையிலே அவர்களுக்கு தேவையானதெல்லாம் இருந்தும் பற்றாக்குறையிலே வாழ்வார்கள்.

இயேசு உங்களை தம்முடைய வீடாக மாற்றுவதன் மூலம் உங்களுக்குத் தேவையான எதையும், எல்லாவற்றையும் உங்களிடம் வைப்புத்தொகையாக வைத்துள்ளார். நமக்குத் தேவையான, நாம் விரும்புகின்ற அனைத்தும் அவரில் உள்ளன; அவர் நம்மில் இருக்கிறார், நாம் அவரில் இருக்கிறோம். அறிவு இல்லாமையால், அல்லது இந்த வாக்குத்தத்தங்களை உங்களுக்கென்று கோருவதில் செயலற்ற நிலையில் இருப்பதால் இந்த உண்மை உங்களுக்கு அளிக்கும் பலனை தயவுசெய்து தவற விட்டுவிடாதீர்கள். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்த விஷயங்களை நான் அறிந்திருந்தாலும், தேவன் நமக்குள் வாழத் தேர்ந்தெடுத்து, அவரில் நாம் வாழ அனுமதித்திருக்கிறார் என்ற இந்த உண்மையைக்

*குறித்து நான் இன்னும் ஆச்சரியப்படுகிறேன். என்னே ஒரு அற்புதமான பாக்கியம்! உங்களால் இதை நம்ப முடிந்தால், உங்களால் பெற்றுக் கொள்ளவும் முடியும்!*

> *நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். (யோவான் 14:20).*

*பவுல் விசுவாசிகளிடம் அவர்கள் பின்பற்றும் தலைவரைப் பற்றி பெருமை பேசுவதை விட்டுவிட்டு எல்லாம் அவர்களுடையது என்று உணரும்படி கூறினார் (1 கொரிந்தியர் 3:21). வேறு வார்த்தைகளில் கூறுவதானால்,*

*நாம் நம்மை இணைத்துக் கொள்ளும் மக்களிடமிருந்து நமக்குத் தேவையானதைப் பெறுவதில்லை அல்லது நம்முடைய நன்மதிப்பையும் மரியாதையையும் கண்டுபிடிப்பதில்லை, ஆனால் நாம் கிறிஸ்துவிலும் அவர் நம்மிலும் இருப்பதிலிருந்தே பெற்றுக்கொள்கிறோம்.*

*இது உங்களுக்கு நன்றாக இருக்கிறது என்று நான் நம்புகிறேன். ஆனால் இது உங்களுக்கு ஒரு வெளிப்பாடாக (உண்மையாக) மாற, நீங்கள் தினமும் இதை தியானிக்க வேண்டுமென்று உங்களுக்கு நான் பரிந்துரைக்கிறேன். "நான் கிறிஸ்துவில் இருக்கிறேன், அவர் என்னில் இருக்கிறார். நான் அவருடைய வீடு, அவர் என் வீடு." என்று சிந்தித்து சொல்லுங்கள். தினமும் அதை நினைவூட்டுங்கள், அதனால் நீங்கள் அதை ஒருபோதும் மறக்க மாட்டீர்கள். நாற்பது வருடங்களுக்கும் மேலாக தேவனுடைய வார்த்தையைப் படித்த பிறகும், நான் இன்னும் ஒவ்வொரு வாரமும் பலமுறை இந்த அற்புதமான வாக்குறுதிகளை எனக்கு நினைவூட்டிக் கொள்கிறேன்.*

## இயேசுவுடன் நெருங்கிய ஐக்கியம்

*இயேசுவின் ஆவியின் மூலம் அவருடன் நெருங்கிய ஐக்கியம் கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறோம். அவர் பரலோகத்திற்கு*

சென்ற பின் தம் சீடர்களிடம், அவர் அவர்களுடன் நெருங்கிய உறவில் இருக்க மற்றொரு தேற்றரவாளனை அனுப்புவார் என்று கூறினார், அதுவும் நமக்குரிய அவருடைய வாக்குறுதியாகும் **(யோவான் 16:7).** இயேசு தொலைவில் இருக்கிறார் என்று நீங்கள் உணர வேண்டியதில்லை, ஏனென்றால் அவர் உங்கள் மூச்சைப் போன்றோ அல்லது உங்கள் இதயத்துடிப்பு போன்றோ உங்களுக்கு நெருக்கமாக இருக்கிறார். அவர் உங்களுக்குள் இருக்கிறார். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் அவருடன் பேசலாம். அவர் உங்களுடன் நெருங்கிய, தனிப்பட்ட உறவை வைத்திருக்க விரும்புகிறார்.

எங்கள் ஊழியம் சமீபத்தில் ஒரு நிகழ்வை நடத்தியது, அதிலே பலருடன் தனிப்பட்ட முறையில் பேச எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. ஒரு பெண்ணும் அவளுடைய கணவரும், நான் பகிர்ந்து கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றிருக்கும் தேவனுடைய வார்த்தை அவர்களுக்கு என்ன செய்திருக்கிறது என்பதை என்னிடம் வெளிப்படுத்த முயன்றபோது இருவரும் அழுததை நான் நினைவில் கொண்டிருக்கிறேன். நான் அவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லச் சொன்னேன். அவர்கள் இருவரும், “எங்களிடம் மதம் சம்பந்தப்பட்ட காரியங்கள் மட்டுமே இருந்தது, எல்லா விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் பின்பற்ற நாங்கள் மிகவும் கடினமாக முயற்சித்தோம், ஆனாலும் நாங்கள் எப்போதும் தோற்றுப் போகின்றவர்களாகவே உணர்ந்தோம். ஆனால் நீங்கள் கிறிஸ்துவில் நாம் யார் என்றும், இயேசு நமக்குள்ளே வாழ்வதால் அவரைத் தேடி வேறே எங்கும் செல்ல வேண்டிய அவசியமில்லை என்றும் நீங்கள் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தீர்கள்.” அவர்களின் கண்ணீர் மற்றும் அவர்களின் நேர்மையான சாட்சியால் நான் மிகவும் தொடப்பட்டேன்.

உள்ளிருந்து வெளியே எப்படி வாழ்வது என்பதை தாங்கள் கற்றுக்கொண்டதாக அவர்கள் உண்மையில் வெளிப்படுத்தினர். அதை பற்றியது தான் இந்த அத்தியாயம். அனைத்து விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பின்பற்ற முயற்சித்து, அதனால் தங்களுக்கு மதிப்பும், மரியாதையும் இருப்பதாக உணருவதற்கு பதிலாக, இயேசு அவர்களுக்காக மரித்து, அவர்களைத் தம் வீடாக மாற்றியதன் மூலம் அவர்களுக்கு மதிப்புக் கொடுக்கப்பட்டது

என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். அவர்கள் அவர் செலுத்திய வைப்புத் தொகையயிலிருந்து இப்போது தினசரி எடுத்துக் கொண்டிருகின்றனர், இதன் விளைவாக, அவர்களுக்கு தேவையான அனைத்தும் போதுமான அளவு வழங்கப்படுகின்றது.

அவர்களுக்கு நம்பிக்கை, பாதுகாப்பு, வலிமை, நீதி, அமைதி, மகிழ்ச்சி, மற்றும் இன்னும் அநேகம் ,பட்டியல் நீண்டுக்கொண்டேசெல்கிறது, அவர்களுக்கு இருக்கின்றது. எந்தத் தேவை எழுந்தாலும், அது ஏற்கனவே இயேசுவில் நிறைவேற்றப்பட்டது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். எனவே அவர்கள் பயத்தோடு வாழ்வதற்கு எந்த காரணமும் இல்லை. இது உங்களுக்கும் எனக்கும் மற்றும் இயேசுவை நம்பும் ஒவ்வொரு நபருக்கும் சொந்தமான சுதந்திரம்.

தேவனின் வீடாக, அவர் உங்களை மிகவும் விசித்திர, வினோதமாக உருவாக்கி வடிவமைத்துள்ளார். யாத்திராகமத்தில், வாசஸ்தலத்தைக் கட்டுவதற்கும் அமைப்பதற்கும் தேவன் மோசேக்குக் கொடுத்த வழிகாட்டுதல்களைப் பற்றி நாம் படிக்கலாம். ஒவ்வொரு தூண்கள், கொக்கிகள், திரைச்சீலைகளை தண்டிலே மாட்டும் வளையங்களைப்பற்றிய மிக துல்லியமான விவரங்களைக் கொண்ட மொத்தம் மூன்று அத்தியாயங்கள் உள்ளன. கிருபாசனம் கட்டுவதற்கும், ஆசரிப்பு கூடாரத்தின் சட்டங்களைப் பற்றியும், பலிபீடத்திற்கும் மற்ற எல்லா பொருட்களுக்கும் பயன்படுத்தப்பட வேண்டிய பொருட்கள், தங்கம் மற்றும் வெள்ளியின் மேற்பூச்சுக்கள் பற்றியும், அவர்கள் பயன்படுத்த வேண்டிய விலையுயர்ந்த கற்கள், எம்பிராய்டரி, ஒவ்வொரு பொருளின் சரியான அளவீடுகள் மற்றும் பிற விவரங்கள் குறித்த அறிவுறுத்தல்கள் உள்ளன. இது மிகவும் விரிவான மற்றும் துல்லியமான பட்டியல்.

நான் யாத்திராகமத்தை வாசித்துக் கொண்டிருந்த போது, அந்த மூன்று அத்தியாயங்களுக்கு வந்த போது, அந்த மூன்று முழு அத்தியாயங்களிலும் ஒன்றன் பின் ஒன்றாக ஒவ்வொரு விவரங்களையும் வாசித்தது என் மனதை அதிக வலுவாக்கியது. ஏனென்றால் தேவனுடைய வார்த்தையை அணுகுவதில் நான் மிகவும் நடைமுறையானவள். நாம் வாசித்து, படிக்கும் ஒவ்வொரு விஷயத்திலும் நமக்கு ஒரு நடைமுறை செய்தி இருப்பதாக நான்

நம்புகிறேன். நான் தேவனிடம், “நான் இதிலிருந்து எதை எடுத்து என் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்த முடியும்?” என்று கேட்டேன். உடனே, தேவன், ஆசரிப்பு கூடாரத்தை கட்டுவது பற்றிய அவருடைய அறிவுறுத்தல்களில் அவர் அவ்வளவு விளக்கமாகவும் துல்லியமாகவும் இருந்தால் நிச்சயமாக அவரது ஒவ்வொரு பிள்ளைகளையும் உருவாக்குவதில் அவர் எவ்வளவு துல்லியமாகவும், விளக்கமாகவும் இருப்பார் என்பதை நான் சிந்திக்க வேண்டும் என்பதை எனக்குக் காட்டினார் என்று உணர்ந்தேன். அவர் நம் ஒவ்வொருவரையும் அவர் வசிக்க பொருத்தமான வீடாக வடிவமைத்துள்ளார். அவர் நம் ஒவ்வொருவரையும் உருவாக்குவதில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார், மேலும் நம் குணாதிசயங்கள், திறமைகள் திறன்கள், நம் முடி மற்றும் கண்களின் நிறம், தோலின் நிறம், நாம் எவ்வளவு உயரமாக இருப்போம் மேலும் நம்மைப் பற்றிய ஒவ்வொரு விவரத்தையும் துல்லியமாக உருவாக்கியிருக்கிறார். நல்ல செய்தி என்னவென்றால் நாம் ஒரு தவறு அல்ல.

என் குரல் சாதாரணமான ஒரு பெண்ணின் தொனியை விட மிகவும் ஆழமாக இருப்பதால், எனக்கு அது பிடிக்கவேயில்லை. நான் வேடிக்கையாக சொன்னேன், “தேவன் நமக்கு குரல் கொடுத்த போது நான் தவறான வரிசையில் நின்றிருந்திருக்க வேண்டும்.” ஆனால் நிச்சயமாக, அது உண்மையல்ல, நீங்களும் தவறான வரிசையில் இல்லை, நீங்கள் ஒன்றாக இணைக்கப்பட்ட விதத்தில் உங்களுக்குப் பிடிக்காத விஷயங்கள் இருந்தாலும், தேவனுக்கு அது பிடித்திருக்கிறது. நீங்கள் உருவாக்கப்பட்ட விதத்தின் அனைத்து அம்சங்களுடனும் நீங்கள் சமாதானம் செய்துக் கொள்ள பரிந்துரைக்கிறேன். உங்களிடம் இல்லாததை விரும்பிக் கொண்டு பரிதாபமாக இருப்பதற்கு பதிலாக, உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களிடம் இருப்பதைக் கொண்டு உங்களால் முடிந்ததைச் செய்ய முடிவு செய்யுங்கள்.

சங்கீதம் **139** என்பது வேதத்திலுள்ள ஒரு அற்புதமான அத்தியாயமாகும். இது தேவன் நம்மை எவ்வளவு கவனமாக உருவாக்கினார் என்பதைப் பகிர்ந்து கொள்கிறது. அவர் உங்களை உங்கள் தாயின் வயிற்றில் அவரது சொந்த கையால் தனிப்பட்ட முறையில் உருவாக்கினார். நீங்கள் விசித்திர, வினோதமாக

உருவாக்கப்பட்டுள்ளீர்கள். சங்கீதம் 139ஐ தயவு செய்து மெதுவாகப் படிக்கவும். அது சொல்வதையெல்லாம் ஆழ்ந்து சிந்தித்து, உங்களைப் படைத்த தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். நீங்கள் தவறாக உருவாக்கப்படவில்லை; நீங்கள் தேவனுடைய அற்புதமான வடிவமைப்பு!

> *நீங்கள் ஒரு தவறு இல்லை; நீங்கள் தேவனின் அற்புதமான வடிவமைப்பு!*

## நல்ல கனி தருதல்

இயேசுவே திராட்சைக் கொடி, நாம் அவரில் வேரூன்றியிருக்கும் கிளைகள். நாம் நல்ல பலனைத் தருவோம். நேர்மையாக வாழ்வோம், மற்றவர்களுடன் அன்பாக நடந்து கொள்வோம், கனிவாகவும், பணிவாகவும் இருப்போம் என்று எதிர்பார்க்கப்படுகிறோம். நாம் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும், பொறுமையாகவும் இருக்க வேண்டும். மேலும் கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் திறன்களை அவருக்குச் சேவை செய்யவும் மக்களுக்கு உதவவும் பயன்படுத்த வேண்டும். நம்மிடம் உற்பத்தி செய்ய எந்தத் திறனும் இல்லை என்றால், எதையும் உற்பத்தி செய்யும்படி தேவன் ஒருபோதும் நம்மிடம் கோரமாட்டார்.

நாம் எதையாவது செய்ய வேண்டும் என்று உணரும் போது, அதைச் செய்ய வேண்டிய தேவையான காரியங்கள் இல்லாமல் இருக்கும் போது, அது பயங்கர விரக்தியை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். நம் வாழ்வில் உற்பத்தி செய்ய அவர் எதிர்பார்க்கும் எல்லாவற்றிக்கும் தேவன் நமக்குள் ஒரு வைப்புத்தொகையை ஏற்படுத்தியிருக்கிறார். அவர் அதை உள்ளே வைக்கிறார். நாம் அதை வெளியே வர அனுமதிக்கிறோம். உதாரணமாக, அவர் முதலில் நம்மை நேசிக்கிறார், எனவே மற்றவர்களை நேசிக்கும் திறன் நமக்கு உள்ளது (1 யோவான் 4:19). இயேசு தம்முடைய சமாதானத்தை நமக்கு வைத்து விட்டு சென்றிருக்கிறார் (யோவான் 14:27) அதனால் வாழ்க்கையிலே நாம் சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் அமைதியாக இருக்க முடியும்.

நாம் அவரில் வாழ்ந்து, வசித்து, நிலைத்திருந்தால், அவருடைய வார்த்தை (இயேசு) நம்முள் வாழவும், வசிக்கவும், நம்மில் நிலைத்திருக்கவும் அனுமதித்தால், நாம் மிகுந்த கனிகளைக் கொடுப்போம் என்று தேவனின் வார்த்தை நமக்கு உறுதியளிக்கிறது (யோவான் 15:5). நாம் கிறிஸ்தவர்களாக மாறும்போது, நம்முடைய நடத்தை மாற்றியமைக்கும் பயணத்தை தொடங்குவதில்லை, ஆனால் இயேசுவோடு வாழக் கற்றுக் கொள்கிறோம். அவரில் வாழ்வது, வசிப்பது, நிலைத்திருப்பது என்பது அவருடன் ஐக்கியம் கொள்வது, அவரை சார்ந்திருப்பது, அவர் மீது நம்பிக்கை வைப்பது, அவர்மீது சாய்ந்துக் கொள்வது, அவருடைய வார்த்தையைக் கற்றுக்கொள்வது மற்றும் அவருடன் எல்லாவற்றையும் பற்றி எல்லா நேரத்திலும் பேசுவது என்பதாகும். அவரே எல்லா நல்ல விஷயங்களுக்கும் ஆதாரமாக இருக்கிறார். அதில் நிச்சயமாக நம் நல்ல நடத்தையும் அடங்கும். உள்ளிருந்து வெளியே வாழ கற்றுக்கொள்ளுங்கள், உங்கள் நடத்தை மேலும் மேலும் இயேசுவைப் போல் மாறும். உங்கள் நடத்தையை மாற்ற போராடுவதை விட நீங்கள் கிறிஸ்துவில் யாராக இருக்கிறீர்கள் என்பதில் அதிக கவனம் செலுத்துங்கள்.

நிச்சயமாகவே, நாம் அனைவரும் நம்மில் மாற்றங்களைக் காண விரும்புகிறோம். மனிதர்களாகிய நாம் குறைபாடுகள் உள்ளவர்கள், உலகம் நம்மில் பெரும்பாலோருக்கு சில கெட்ட பழக்கங்களைக் கற்றுக் கொடுத்திருக்கிறது. நாம் வாழ்வதற்கு ஒரு புதிய வழியைக் கற்றுக்கொள்கிறோம், மாற்றம் என்பது நாம் விரும்ப வேண்டிய ஒன்று. ஆனால் மாறுவதற்கு அல்லது மாற்றப்படுவதற்கு சரியான வழியைக் கற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானது; இல்லையெனில், நாம் விரக்தியடைந்து தோல்வியுற்றவராக உணர்ந்து நம் வாழ்க்கையை செலவழிப்போம்.

ஒழுக்கம் மற்றும் சுயக்கட்டுப்பாடு மூலம் நம் நடத்தையை ஓரளவு மாற்றியமைக்கலாம். ஆனால் நம் இயல்பை/சுபாவத்தை மாற்ற முடியாது–தேவனால் மட்டுமே அதைச் செய்ய முடியும், அவர் செய்தும் இருக்கிறார். அதை நம்புவதும், ஒரு “நல்ல கிறிஸ்தவனாக” இருக்க “முயற்சி” செய்வதற்கு பதிலாக அவர் நமக்குள் வைத்துள்ளதை மொண்டு எடுக்க கற்றுக்கொள்வதுமே நம் பங்காகும். உங்களில் மாற வேண்டிய விஷயங்களை மாற்ற

தேவனை நம்புங்கள். அப்போஸ்தலன் பவுலைப் போலவே பரிபூரணத்தின் அடையாளத்தை நோக்கி முன்னேறி செல்லுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அப்படியாக இருக்க உங்களுக்கு உதவும் தேவனுடைய கிருபை உங்களில் தொடர்ந்து கிரியை செய்ய தேவனை நம்புங்கள். ஏனெனில் அவராலன்றி உங்களால் எதுவும் செய்ய முடியாது (யோவான் 15:5).

உங்களுக்கு அல்லது எனக்கு எப்பொழுதும் தேவைப்படும் அனைத்தும் கிறிஸ்துவுக்குள் நம்மில் உள்ளது - நாம் அவரில் பலவான்களாக இருக்கிறோம், நம்மைப் பலப்படுத்துகிறவராலே நம்மால் எல்லாவற்றையும் செய்ய முடியும் (பிலிப்பியர் 4:13).

## அத்தியாயம் 14

# உங்களுக்கு தேவையானது உங்களிடம் உள்ளது

*என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.*

*- பிலிப்பியர் 4:13 AMP*

தேவன் நமக்குள் வசிப்பதால், உண்மையிலேயே நாம் செய்ய வேண்டிய எதையும் நம்மால் செய்ய முடியும். ஆனால் நம் சொந்த தவறான எண்ணங்களால் நாம் பெரும்பாலும் தோற்கடிக்கப்படுகிறோம். தேவன் நம்மால் முடியும் என்று கூறுகிறார், ஆனால் நாம், நம்மால் முடியாது என்று நினைத்தால், சொன்னால், நாம் செய்ய மாட்டோம். கிறிஸ்துவில் நீங்கள் எவ்வளவு வல்லமையுள்ளவர் என்பதை நினைவூட்ட இந்த அத்தியாயம் வடிவமைக்கப்பட்டுள்ளது. நீங்கள் நம்புவது உங்கள் யதார்த்தமாக மாறும் என்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள்.

இயேசு நமக்காக எத்தனை அற்புதமான காரியங்களைச் செய்திருந்தாலும் அல்லது நம்மில் வைப்பாக வைத்திருந்தாலும், அவை நமக்குரியது என்று உறுதியாக நம்பாதவரை அது நமக்கு உதவாது. பிசாசு ஒரு பொய்யன் என்பதை எப்போதுமே நினைவில் கொள்வோம், அவனுடைய பொய்களை நாம் நம்பினால், நாமும் காலத்தின் தொடக்கத்திலே ஏவாள் ஏமாந்தது போல் ஏமாற்றப்படுவோம். நாம் என்ன நினைக்கிறோம் அல்லது உணர்கிறோம் என்பதை நம்புவதைவிட தேவனுடைய வார்த்தையை அதிகமாக விசுவாசிக்கவும், நம்பவும் கற்றுக்கொள்வதே, நாம் வெற்றியுடன் வாழ்கிறோமா அல்லது தோற்கடிக்கப்படுகிறோமோ என்ற வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது.

உங்களில் பெரும்பாலோரைப் போலவே, சவாலான விஷயங்களை எதிர் நோக்கும் போது, அநேக வேளைகளில் என் முதல் எண்ணம் என்னால் முடியாது என்பதே. ஆனால் என்னுடைய இரண்டாவது எண்ணம் என்னவென்றால், நான் என்ன செய்ய வேண்டுமோ அதை கிறிஸ்துவின் மூலம் என்னால் செய்ய முடியும். நான் செய்ய வேண்டிய அனைத்தும் என்னால் செய்ய முடியும் என்று நம்புவதன் மூலம் நாம் செய்ய வேண்டிய காரியம் எளிதாக்கப்படுகிறது என்பது அதற்கு அர்த்தம் இல்லை, ஆனால் அது அதை சாத்தியமாக்குகிறது. தேவனுடைய வார்த்தையால், நாம் நம் மனதில் சோர்ந்துவிடக்கூடாது என்று நாம் அறிவுறுத்தப்படுகிறோம் (எபிரேயர் 12:3). தேவன் நம்மை செய்யும் படி வழி நடத்தும் அனைத்தையும் நம்மால் செய்ய இயலாது என்று நினைக்கக் கூடாது. நம் எண்ணங்கள் நம் நடத்தைகளாக மாறுகின்றன, எனவே நம்மால் ஒரு காரியத்தை செய்ய முடியாது என்று நினைத்தால், நம்மால் செய்ய முடியாத அளவிற்கு நாம் பலவீனமாகிறோம்.

நீங்கள் நினைப்பதை விட நீங்கள் வலிமையானவர். கிறிஸ்துவின் மூலம் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்யலாம். உங்களை நேசிக்கும் அவரால் நீங்கள் ஜெயங்கொண்டவர்களாக இருக்கிறீர்கள் என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது. (ரோமர் 8:37). "அவர் மூலம்," என்பதை கவனிக்க வேண்டும், உங்கள் சொந்த தீர்மானத்தால் அல்ல. நாம் உறுதியாக இருக்க வேண்டும், கைவிட்டு விட மறுக்க வேண்டும். ஆனால் நாம் தொடர்ந்து நமக்குள் இருக்கும் தேவனின் பலத்திலிருந்து பலத்தை பெறாத வரையில் எவ்வளவு பெரிய அளவு உறுதி இருந்தாலும் இறுதியிலே அது சிதறிவிடும்.

"ஜெயம்கொண்டவர்கள்" என்பதன் அர்த்தம் என்ன? நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு போரையும், அது தொடங்குவதற்கு முன்பே வெல்வோம். என்ற நம்பிக்கையுடன் நாம் வாழ்க்கையை வாழ முடியும் என்று நான் நம்புகிறேன். காரியங்கள் எப்படி மாறும் என்பதை நாம் தீர்மானிக்கும் முன்னே எவ்வளவு பெரிய பிரச்சனை என்பதைப் பார்க்க நாம் காத்திருக்க வேண்டியதில்லை. நம்மால் பல காரியங்கள் சாத்தியமற்றது, ஆனால் தேவனால் எல்லாம் கூடும்!

*எனக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டு இருந்தது, நான் அதிலிருந்து குணமடைந்து மீண்டு வரும் போது, நான் மிகவும் சோர்வாக இருப்பதுண்டு, அத்தருணத்திலே என் பயண அட்டவணை அல்லது என் கூட்டங்களின் அட்டவணையை நான் பார்க்கும் போது, அதனால் நான் கிளர்ச்சியடைவதில்லை. நான் வேறு யாரையும் விட வித்தியாசமானவள் அல்ல-நான், "என்னால் இதைச் செய்ய முடியாது" என்று சிந்திக்கவும், சொல்லவும் சோதிக்கப்படுகிறேன். இருப்பினும், உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் இந்த கொள்கைகளை நானும் என் சொந்த வாழ்க்கையிலே பயன்படுத்துகிறேன். இவை ஒவ்வொரு முறையும் எனக்கு உதவுகிறது. கிறிஸ்து மூலம் நான் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்ய ஏதுவாக்குகிறது. அதன் ஒவ்வொரு காரியத்தைப் பற்றியும் நான் உற்சாகமாக இல்லாமல் இருக்கலாம், ஆனால் நான் அதை செய்கிறேன் - நான் அதை வெல்கிறேன்!*

> *இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?*
>
> *இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. (ரோமர் 8:31, 37).*

## நீங்கள் பலவீனர் அல்ல - நீங்கள் வலிமையானவர்!

*நாம் பலவீனமானவர்கள், திறமையற்றவர்கள் என்று நம்மை நினைக்க வைப்பதில் பிசாசு மகிழ்ச்சியடைகிறான். ஆனால் உண்மை என்னவென்றால், தேவனுடைய அனைத்து பெலனும் நம்மிடம் உள்ளன. நாம் நம்மில் பலவீனமாக இருக்கலாம், ஆனால் நாம் அவரைச் சார்ந்திருக்கும் போது அவருடைய பெலன் நம்மில் மிகவும் பெலனுள்ளதாகக் காணப்படுகிறது.*

*பவுல் தனது வாழ்க்கையில் ஒரு பெரிய பிரச்சனையை கையாண்டார், அதை அவர் "மாம்சத்தில் ஒரு முள்" என்று*

குறிப்பிட்டார் (2 கொரிந்தியர் 12:7). நம் அனைவருக்கும் அவை அவ்வப்போது உள்ளன: ஒரு நபர் அல்லது ஒரு விஷயம் மறைந்து போகாது மற்றும் வலிமிகுந்ததாகவும், சவாலானதாகவும் உள்ளது. அது தன்னிடமிருந்து விலகிச் செல்ல வேண்டும் என்று பவுல் தேவனிடம் கெஞ்சினார். ஆனால் அதற்கு பதிலாக, தேவன் அதைத் தாங்கும் பெலனை அவருக்குக் கொடுப்பாரென்று அவனிடம் சொன்னார்.

> அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன்.
>
> அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். கொரிந்தியர் 12:8-9).

தேவன் நம் வாழ்விலிருந்து எல்லா சிரமங்களையும் நீக்கிவிட்டால், நம் அன்றாட வாழ்வில் அவர் நமக்குத் தேவைப்படமாட்டார் அவர் தன்னை வலிமையாகக் காட்ட ஒரு இடத்தைப் பெறுவதற்காக நம் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு பலவீனத்தை கொடுக்கிறார். அவர் தேவைப்பட விரும்புகிறார், தேடப்பட விரும்புகிறார். நாம் எதைச் செய்ய வேண்டுமோ அதை அவரால் செய்ய முடியும் என்று நாம் நம்ப வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

என் அம்மா தேவனை நம்பினாலும், தேவன், அவருக்கு பலமாக இருக்க அவரை எப்படி நம்புவது என்று தெரியாமலிருந்தார். எங்கள் வீட்டிலிருந்த சூழ்நிலையை என் தந்தையுடன் அவர் எதிர்கொள்ளவில்லை, அவள் அந்த தகாத உறவை தொடர அனுமதித்தாள். ஏனென்றால் என் தந்தை இல்லாமல் என் சகோதரனையும் என்னையும் அவரால் கவனிக்க முடியாது என்று நினைத்ததார். அவர் தன்னை பலவீனமான மற்றும் திறமையற்றவளாக பார்த்ததால் அவள் வலிமையான பெண்ணாக இருக்கவில்லை. நீங்கள் உங்களை பலவீனமாக பார்த்தால், மக்கள் உங்களை தவறாக நடத்த அனுமதிப்பீர்கள், வாழ்க்கையிலே

நீங்கள் எப்போதுமே பின் இருக்கையையே எடுத்துக் கொள்ளுவீர்கள். நாம் அவரில் பலமாக இருக்கிறோம் என்பதை நாம் நம்பாத வரையில் இயேசு நமக்காக மரித்து கொடுத்திருக்கும் அற்புதமான வாழ்க்கையை வாழ முடியாது.

காயம்பட்ட ஆத்துமா குணமடைய வேண்டும் அல்லது நமக்கு நடந்த சோகமான விஷயங்களில் இருந்து மீண்டு வர வேண்டும் என்ற தேவையிலிருப்பவர்கள், நாம் வலிமையானவர்கள், பலவீனமானவர்கள் அல்ல என்று நம்ப வேண்டும். நீங்கள் குணப்படும் பயணத்தின் போது பல தடவைகளில், நீங்கள் எதிர் கொள்ள வேண்டிய பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வலிமை உங்களிடம் இல்லை என்று நினைக்க தூண்டப்படுவீர்கள், அவ்வாறு, நீங்கள் சொல்வது சரிதான். நீங்கள் சொந்தமாக அதை செய்ய நீங்கள் மிகவும் பலவீனமாக இருக்கிறீர்கள், அதைச் செய்ய போதுமான பலம் இல்லை, ஆனால் தேவன் பலவீனமானவர் அல்ல. அவர் பலசாலி. நீங்கள் உங்கள் மனதில் தளர்ச்சியடைந்து, தடுமாறி விட்டு விடாமலிருந்தால், அவருடைய வலிமையைப் பயன்படுத்தி நீங்கள் எதையும் சாதித்துவிடுவீர்கள். என் அம்மா, இந்த மிக முக்கியமான உண்மையை நம்பியிருந்தால், அவருக்கும், எனக்கும் என் சகோதரனுக்கும் ஒரு நல்ல வாழ்க்கை இருந்திருக்கும்.

சங்கீதக்காரனாகிய தாவீது, “சஞ்சலத்தால் என் ஆத்துமா கரைந்துபோகிறது; உமது வசனத்தின்படி என்னை எடுத்து நிறுத்தும்.” (சங்கீதம் 119:28) என்றார். ஏசாயா, “சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்." (ஏசாயா 40:29) மற்றும் “கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.” (ஏசாயா 40:31).

பவுல் சொன்னார், “கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.” (எபேசியர் 6:10). “கடவுள் என் பலம்” என்று மீண்டும் மீண்டும் சொல்லும் எண்ணற்ற வசனங்களில். எனக்கு மிகவும் பிடித்த ஒன்று, “ஆனாலும் கர்த்தாவே, நீர் எனக்குத் தூரமாகாதேயும்;

என் பெலனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரித்துக்கொள்ளும்." (சங்கீதம் **22:19**).

நாம் பலவீனமாக உணரும்போது - நாம் அனைவரும் சில சமயங்களில் அப்படி உணருகிறோம் - நாம் உடனடியாக வேதத்திற்குச் சென்று தேவனுடைய வார்த்தையிலிருந்து வலிமையைப் பெற வேண்டும். எந்த நேரத்திலும் நமக்கு உதவும் அளவு, வேதத்தை எடுத்து வசனங்களைப் பார்க்க கூட தேவையில்லாத அளவு, வேதம் மனப்பாடமாகும் அளவுக்கு நீண்ட காலம் அதை படித்திருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். நாம் நமக்குள் தேவ வார்த்தையை வைத்திருந்தால், பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தேவையான சரியான நேரத்தில் அதை வெளியே கொண்டுவருவார். அவர் தான் அதை நம் நினைவுக்குக் கொண்டுவருகிறார் (யோவான் **14:26**).

உங்கள் வாழ்க்கையில் இப்போது உங்களைப் பெரிதும் பாதிக்கும் எதையாவது நீங்கள் கையாளுகிறீர்களா? உங்களால் முடியாது- அதைச் செய்ய முடியாது அல்லது நிலைமை உங்களுக்கு மிகவும் அதிகமாக இருக்கிறதாக யோசித்திருக்கிறீர்களா? அப்படியானால், இந்த வேத வசனங்கள் தேவன் நீங்கள் எப்படி சிந்திக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அப்படி நீங்கள் சிந்திக்க உங்களுக்கு கற்பிக்கட்டும். கிறிஸ்துவுடன், நீங்கள் வாழ்க்கையிலே எதையெல்லாம் செய்ய வேண்டுமோ நீங்கள் அதை செய்ய முடியும் என்று நம்புங்கள்.

தேவனுடைய வார்த்தை ஒரு ஆயுதம் என்பதால் நாம் போர் செய்ய முடியும். ஒவ்வொரு பலவீனமான, திறமையற்ற, என்னால்-முடியாது-என்ற எண்ணங்கள் நம்மிடம் வரும் போது தேவனுடைய வார்த்தையை தியானிப்பதன் மூலமும் அறிக்கை செய்வதன் மூலம் அவற்றை வீழ்த்தி விடலாம். தேவனுடைய வார்த்தையை தியானிக்கும் பழக்கத்தை உருவாக்க நான் உங்களை ஊக்குவிக்கிறேன். தியானிப்பது என்பது தேவனுடைய வார்த்தையை சிந்திப்பது அல்லது ஆழ்ந்து யோசிப்பது, தேவனுடைய வார்த்தையை முணுமுணுப்பது அல்லது பேசுவதாகும்.

# உன்னில் இருப்பவர் பெரியவர்

*நாம் உண்மையில் பலவிதங்களில் பலவீனர்களாகவும் திறமையற்றவர்களாகவும் இருக்கிறோம், ஆனால் பெரியவரான தேவன் நம்மில் வாழ்கிறார். நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டிய அனைத்தையும் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்! எந்த சூழ்நிலையிலும் பயப்பட தேவையில்லை. என்ன நடக்கும் என்றோ, காரியங்கள் எவ்வளவு கடினமாக ஆகும் என்றோ, வெற்றி உங்களுடையதாக இருப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கலாம் என்றோ, அல்லது என்ன செய்வது என்றோ உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம் - ஆனால் தேவனுக்கு தெரியும், அவர் உங்களில் வாழ்கிறார்! நீங்கள் தொடர்ந்து அவர் மீது நம்பிக்கை வைத்தால், ஒவ்வொரு அடியிலும் அவர் உங்களுக்கு வழிகாட்டுவார். நாம் "தேவன் நமக்குள்ளே இருக்கிறார் என்ற சிந்தை உடையவர்களாய்" இருக்க கற்றுக் கொள்வோம். தேவன் உங்களில் வாழ்கிறார் என்பதை தினமும் உங்களுக்கு நினைவூட்டுங்கள். அவர் எல்லா நேரங்களிலும் உங்களுக்கு நெருக்கமாக இருக்கிறார். உங்களுக்கு உதவ எப்போதும் தயாராக உள்ளார்.*

*நீங்கள் அவரில் யார், அவர் மூலம் நீங்கள் என்ன செய்ய முடியும் என்பது நீங்கள் யார் என்பதன் ஒரு பகுதியாக மாறும் வரை அவற்றைப் பற்றிய தேவனுடைய வார்த்தையில் உள்ள வாக்குறுதிகளைப் பற்றி சிந்தியுங்கள். வெறுமனே வாரத்திற்கு ஒருமுறை தேவாலயத்திற்குச் சென்று, ஐந்து நிமிடங்கள் அல்லது அதற்கும் குறைவாக ஒரு தினசரி தியானத்தை படித்துவிட்டு அதுவே ஒரு வெற்றியாளரை விட அதிகமாக வாழ உதவும். அதுவே போதும் என்று நினைக்க வேண்டாம்.*

*எல்லா நேரங்களிலும் நாம் கிறிஸ்துவுடன் நம்மை அடையாளப்படுத்திக் கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். நாம் அவருடன் மரித்தோம், அவருடன் ஒரு புதிய, வல்லமையுடைய, மேற்கொள்ளும் வாழ்க்கைக்கு எழுப்பப்பட்டிருகிறோம். நாம் தேவனுடைய வீடு, அவர் நம் வீடு. நீங்கள் செய்ய வேண்டிய எதையும் செய்ய தேவையான அனைத்தும் உங்களிடம் உள்ளது!*

நான் பலவீனத்தை ஆதரிப்பவள் அல்ல. அது ஏனென்றால் என் அம்மாவின் பலவீனமான மனநிலை அவளுக்கும், என் சகோதரனுக்கும், எனக்கும் என்ன செய்தது என்பதை நான் நேரடியாக அனுபவித்ததாலும், உலகத்தில் உள்ளவரைவிட என்னில் இருப்பவர் பெரியவர் என்று நான் நம்பக் கற்றுக்கொள்ளவில்லை என்றால் என் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என்று எனக்குத் தெரிந்திருந்ததாலும் தான் என்று நான் உறுதியாக நம்புகிறேன். (1 யோவான் 4:4). நீங்கள் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் மற்றும் உங்கள் திறன்களைப் பற்றி நீங்கள் எப்படி உணருகிறீர்கள் என்பதைப் பற்றி நீங்கள் உண்மையிலேயே சிந்திக்க வேண்டும் என்று உங்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் உங்களைப் பற்றி என்ன நம்புகிறீர்கள் என்பதே மற்றவர்கள் எதை நம்புகிறார்கள் என்பதை விட மிகவும் முக்கியமானது. தேவன் உங்களைப் பற்றி சொல்வதையும், உங்களால் என்ன செய்ய முடியும், செய்ய முடியாது என்று சொல்வதையும் நம்ப கற்றுக் கொள்ளுங்கள்.

> மற்றவர்கள் என்ன நம்புகிறார்கள் என்பதை விட உங்களைப் பற்றி நீங்கள் என்ன நம்புகிறீர்கள் என்பது முக்கியம்.

PassItOn.com என்ற இணையதளத்தில் பெயர் இல்லாமல் வெளியிடப்பட்ட இந்த கதை என்னுடன் உண்மையிலேயே பேசுகிறது:

சில வருடங்களுக்கு முன்பு எனக்கு சுமார் பத்து வயதாக இருந்தபோது, என் தாத்தா மரணப் படுக்கையில் இருந்தார்.

நாங்கள் அவரைப் பார்ப்பது அதுவே கடைசி முறையாக இருக்கும் என்பதை அறியாமல் மருத்துவமனையை விட்டு வெளியேறத் தயாரானோம். அறையைச் சுற்றி நாங்கள் அனைவரும் (ஆம், முழு குடும்பமும் அறையின் சிறிய ஜன்னல் பக்கத்தில்) நின்றுக்கொண்டிருந்தோம். ஒவ்வொருவராகச் சென்று அவரை கட்டிப்பிடித்து விடைகொடுத்தோம். என் முறை வந்ததும், நான் அவரை கட்டிப்பிடிக்க சாய்ந்தேன், அப்படி நான் சாய்ந்த போது

அவர் என் காதில் இவ்வாறு கிசுகிசுத்தார், "நீ ஒரு பெரிய மனிதனாய் இருப்பாயாக." அவருக்கு என்ன நடக்குமோ என்று பயந்து, நாங்கள் மருத்துவமனையை விட்டு வெளியேறும்போது நான் அழ ஆரம்பித்தேன், ஆனாலும் அவர் சொன்னதை நினைத்துப் பார்க்க ஆரம்பித்தேன்.

அந்த வார்த்தைகள் இன்றுவரை என்னை ஊக்கப்படுத்துகின்றன, என்னால் முடிந்தவரை முயற்சி செய்து நான் அப்படி இருக்க முடியும் என்று. என் தாத்தாவுக்கு தெரிந்த அந்த பெரிய மனிதனாக இருக்க வேண்டும் என்று அந்த வார்த்தைகள் என்னை வலியுறுத்துகின்றன. என்னால் முடிந்ததைச் சிறப்பாகச் செய்ய அவர் எனக்கு வலிமையையும் தைரியத்தையும் கொடுத்துள்ளார். அப்படிப்பட்ட முன்மாதிரிகளையும் பார்க்க உதவுகிறார். அவர் எனக்கு உதவியதைப் போல, நானும் எங்காவது சுகாதாரத் துறையில் வேலை செய்து அவருடைய நம்பிக்கையை நிறைவேற்றும் ஒரு நாளை எதிர்நோக்குகிறேன். நன்றி தாத்தா.

இவருடைய தாத்தா சொன்னவற்றால் இந்த நபர் நேர்மறையான வழியில் பாதிக்கப்படுவார் என்றால்,தேவன் சொல்வதால் நாம் எவ்வளவு அதிகமாக பாதிக்கப்பட முடியும்? நான் ஒன்பது அல்லது பத்து வயது சிறுமியாக இருந்தபோது, நான் எப்போதாவது ஒரு பெரிய காரியத்தை செய்ய போகிறேன்! என்று நினைத்துக் கொண்டு படுக்கையில் படுத்திருப்பதுண்டு. என் வாழ்க்கையிலே அந்த நேரத்தில், என்னில் என்ன நடக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டால், நான் அப்படி நினைக்க எந்த காரணமும் இல்லை. ஆனால் நான் என் ஒன்பதாம் வயதில் கிறிஸ்துவை என் மீட்பராகப் பெற்ற பிறகு தான் அந்த எண்ணங்கள் என் மனதில் எழும்ப ஆரம்பித்தன என்பதை இப்போது உணர்கிறேன். இயேசு உள்ளே வரும்போது பலவீனம் வெளியேறுகிறது.

பெரிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று என் மனதிலே எழுந்த எண்ணம், எனக்குள்ளே எவ்வளவு துரிதமாக எழும்பியதோ அவ்வளவு துரிதமாகவே அவை என் மனதில் இருந்து வெளியேறின. அந்த இளம் வயதில், எனது வேதனையான சூழ்நிலையை

மேற்கொள்ளும் சாத்தியங்களைப் பற்றி நான் என்ன நினைத்தேன் என்று எனக்குத் தெரியவில்லை. அந்த நேரத்தில் நான் உயிர்வாழவே முயற்சித்தேன். இருப்பினும், நான் தேவனுடைய வார்த்தையைப் படித்து என் நம்பிக்கையை அவர் மீதும் அவரது வாக்குறுதிகளின் மீதும் வைக்க ஆரம்பித்தவுடன் ஒரு இளம் பெண்ணாக எனக்குள்ளிருந்த அந்த எண்ணத்தை நினைவு கூர்ந்தேன். தேவன் இல்லாமல், நான் இப்போது செய்யும் காரியங்கள் ஒருபோதும் நிஜமாகியிருக்காது. ஆனால் அவரால் அனைத்தும் சாத்தியம்– எனக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் கூட. அதை நம்ப இன்று முடிவெடுப்பீர்களா?

உங்களுக்கு சிறப்புத் தேவையுள்ள குழந்தை இருந்தாலும், நீங்கள் ஒற்றைப் பெற்றோராக இருந்தாலும், சமாளிக்க கடினமாக இருக்கும் வயதான பெற்றோரை கவனித்துக்கொண்டிருந்தாலும், உங்கள் வேலையுடன் இருபது ஆண்டுகளாக நீங்கள் செலுத்திய ஓய்வூதிய நிதியை இழந்திருந்தாலும், நீங்கள் தனியாக இல்லை, நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ அதை நீங்கள் செய்யலாம் என்று நான் உறுதியளிக்க விரும்புகிறேன். நீங்கள் நினைப்பதை விட நீங்கள் வலிமையானவர்!

நீங்கள் சொல்ல முடியாத வழிகளில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு, உங்கள் ஆத்துமா ரணமாக இருந்தாலும் உங்களை நேசிக்கும் கிறிஸ்துவின் மூலம் நீங்கள் மேற்கொண்டவர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் இப்போது அப்படி உணராமல் இருக்கலாம், ஆனால் நீங்கள் அதை நம்பத் தொடங்கினால், நாளடைவில் உங்கள் உணர்வுகள் உங்கள் நம்பிக்கையுடன் இணைந்துக் கொள்ளும். இன்னும் ஒரு நாள் கூட உதவியற்ற, பலவீனமான மற்றும் இயலாமை நிலையில் செலவிட வேண்டாம் என்று நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். செய்ய வேண்டியதைச் செய்ய அனைத்தையும் பெற்றுள்ள தேவனின் சிறப்பான, நல்ல திறமை வாய்ந்த பிள்ளையாக உங்களைப் பாருங்கள்.

## நீங்கள் ஒரு பிழைத்திருப்பவரை விட மேல்

துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்கள் அல்லது அவர்கள் துஷ்பிரயோகத்தில் இருந்து தப்பியவர்கள் என்று மக்கள் கூறுவதை

நாங்கள் அடிக்கடி கேட்கிறோம், ஆனால் நீங்கள் அதற்கும் மேலானவர்கள். நீங்கள் ஒரு வெற்றியாளர்!

> *இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? (1 யோவான் 5:5).*

நாம் பாதிக்கப்பட்டவர்களாக நம்மைப் பார்க்கும் வரை, நாம் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களாக உணர்கிறோம், அநேக வேளைகளில் நம் கடந்த காலத்தைப் பற்றிய மனக்கசப்பைக் கொண்டிருப்போம் என்று நான் நம்புகிறேன். இருப்பினும், கிறிஸ்துவில், நமது கடந்த காலம் நமது எதிர்காலத்தை தீர்மானிக்க வேண்டிய அவசியமில்லை.

அதுபோலவே, நாம் நம்மை வெறும் உயிர் பிழைத்தவர்களாகப் பார்த்தால், வலிமையான ஜெயங்கொண்டவருக்குப் பதிலாக அது யாரோ ஒருவர் சோகத்தின் ஊடே தப்பி பிழைத்து வந்தவர் என்ற எண்ணத்தையே கொடுக்கிறது என்று நான் நம்புகிறேன்.நான் என்னை தகாத உறவுக்கு பலியானவள் அல்லது அதில் இருந்து உயிர் பிழைத்தவள் என்று நான் என்னை ஒருபோதும் குறிப்பிடுவதில்லை. நான் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய சிருஷ்டி, நீங்கள் இயேசுவை நம்பினால் நீங்களும் அப்படித்தான்.

நாம் நம்மை எப்படிப் பார்க்கிறோம், எதை நம்புகிறோம் என்பது மிக முக்கியமானது. ஒரு இளைஞனைப் பற்றிய ஒரு கதை இப்படியாக சொல்லப்படுகிறது. அவனுடைய வேலை மற்றும் பணம் அனைத்தையும் இழந்தான். அவன் ஒரு பூங்காவில் ஒரு இருக்கையிலே மிகவும் மனச்சோர்வுடனும் நம்பிக்கையற்றவனாகவும் அமர்ந்திருந்தான்.

ஒரு வயதான மனிதர் அவனை கவனித்து, அவன் ஏன் இவ்வளவு சோகமாக இருக்கிறான் என்று கேட்டார். அந்த மனிதன் தன் கதையைச் சொன்னான், உடனே பெரியவர் ஒரு காசோலை எடுத்து, அவனுக்கு ஒரு காசோலையை எழுதி, “இன்றிலிருந்து ஒரு வருடத்திற்குபின் இதே இடத்திற்கு நான் உன்னை பார்க்க வருவேன், அதற்குள் நீ எனக்கு திருப்பிச் செலுத்தும் அளவுக்கு

பணம் சம்பாதித்திருப்பாய்" அவன் அந்த காசோலையைப் பார்த்தபோது, அரை மில்லியன் டாலர் என்று எழுதப்பட்டிருந்தது மற்றும் ஜான் ராக்பெல்லர் என்று கையெழுத்திடப்பட்டிருந்தது, அவர் அந்த சமயத்தில் உலகிலிருந்த பணக்காரர்களில் ஒருவராக இருந்தார்.

பூங்காவில் இருந்தவன் காசோலையை தனது பெட்டகத்தில் வைத்தான், அவன் அதை பணமாக்கவில்லை என்றாலும், அது அவனுக்கு மீண்டும் தொடங்க அவன் பயப்படத் தேவையில்லை என்ற நம்பிக்கையை அளித்தது. அவன் மீண்டும் வியாபாரம் செய்யத் தொடங்கி, பணம் சம்பாதிக்கத் தொடங்கினான். தனக்கு பணம் தேவைப்படும் என்றால் பாதுகாப்புப் பெட்டியிலே காசோலை இருக்கிறது என்று எப்போதுமே அறிந்திருந்தான்.

ஒரு வருடம் ஓடியது, அதற்குள் அவனிடம் நிறைய பணம் இருந்தது, காசோலையை கொடுத்து உதவியவரிடம் அதை திருப்பித் தர ஆர்வமாக இருந்தான். மீண்டும் அதே பூங்காவிற்குச் சென்று, அதே பெஞ்சில் அமர்ந்து காத்திருந்தான். விரைவிலேயே அவன் அந்த முதியவர் நெருங்கி வருகிறதை கண்டான், ஆனால் அவருடன் ஒரு செவிலியர் போன்று தோன்றிய ஒருவரும் இருந்தார்.

அசல் காசோலையை அந்த இளைஞன் அவரிடம் கொடுக்க முயன்று, அதை நீட்டிய போது, அவர் அவனுக்கு சரியாக பதிலளிக்கவில்லை, அதை செவிலியர் காசோலையை எடுத்து, அதைப் பார்த்து, "ஐயோ, இது நல்லதல்ல. அவர் பெரும்பாலும் குழப்பத்தில் இருக்கிறார். அவர் தான் ராக்பெல்லர் என்று அடிக்கடி நினைத்துக்கொள்கிறார், ஆனால் அவரல்ல இவர் என்றாள்."

அந்த இளைஞன் தனக்குத் தேவையானதை வங்கியில் வைத்திருப்பதாகவும், எந்த நேரத்திலும் அவனுக்கு தேவைப்படும் போது பணம் எடுக்க முடியும் என்றும் நம்பியதால் வெற்றி பெற்றான், அவனிடம் இருந்தது நிஜமானது கூட இல்லை, ஆனால் அது நிஜமானது என்று நினைத்துக் கொண்டது அவனுடைய இழப்பை சமாளிக்க உதவியது.

*நம்மிடம் இருப்பது மிக மிக அதிகம். சொல்லப்போனால் நமக்கும் வங்கியில் ஏதோ இருக்கிறது, ஏனெனில் இயேசு நமக்குள் வாழுகிறார். நாம் பயமின்றி வாழலாம் மற்றும் பெரிய காரியங்களைச் செய்யலாம், ஏனென்றால் நாம் எப்போது வேண்டுமானாலும், எது வேண்டுமென்றாலும் எடுத்துக் கொள்ளலாம் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். உங்களுக்கு அமைதி தேவைப்பட்டால், நீங்கள் எடுத்துக் கொள்ளலாம், உங்களுக்கு ஞானம், அல்லது வலிமை அல்லது படைப்பாற்றல் தேவைப்பட்டால், நீங்கள் எடுத்துக் கொள்ளலாம், நீங்கள் ஒருபோதும் அதிகமாக எடுத்துக் கொள்ள இயலாது. ஏனென்றால் இயேசுவிடம் உங்களுக்குக் கிடைப்பதற்கு வரம்புகள் இல்லை. நமக்கு இருக்கும் எந்த தேவைக்கும் அவர் எப்போதுமே போதுமானவரிலும் அதிகமானவராயிருக்கிறார்.*

*நான் இந்த அத்தியாயத்தை முடிக்கும்போது இதைச் சொல்ல விரும்புகிறேன்: உங்களுடைய பெலனாக இருக்கிற கிறிஸ்துவின் மூலம் நீங்கள் செய்ய வேண்டிய அனைத்தையும் நீங்கள் செய்யலாம். நீங்கள் பலவீனமானவர் அல்ல; நீங்கள் பலசாளி. நீங்கள் இயேசுவின் மூலம் ஜெயம் கொண்டவர். நீங்கள் ஒரு வெற்றியாளர்!*

## அத்தியாயம் 15

# குணப்படுவதற்கான தடைகள்

*"வழியை உயர்த்தி உயர்த்தி, அதைச் செம்மைப்படுத்தி, இடறல்களை என் ஜனத்தின் வழியிலிருந்து எடுத்துப்போடுங்கள் என்னப்படும்."*

*- ஏசாயா 57:14*

*நாம் காயமடைந்திருக்கும் போது, குணமடைய விரும்புவதுதோடு மட்டுமல்லாமல், நாம் நம்முடனே மிகவும் நேர்மையானவர்களாக இருக்க தயாராகவும் இசைவாகவும் இருக்க வேண்டும். சத்தியம் நம்மை விடுதலையாக்கும் (யோவான் 8:32), ஆனால் உண்மையை எதிர்கொள்வது எப்போதுமே எளிதானது அல்ல. நாம் உண்மையிலிருந்து மறைந்து கொள்ள பல வழிகளை உருவாக்குகின்றோம், அவை நாம் குணமடைவதற்கு தடைகளாகவும், தடங்கல்களாகவும் மாறுகின்றன.*

*என் காயங்களுக்கு நான் காரணம் அல்ல, நான் குணமடைய விரும்பினேன், ஆனால் இறுதியில் நான் அதை உணர வேண்டியிருந்தது நான் குணமடைதலை விரும்பினாலும், அகற்றப்பட வேண்டிய தடைகளை நான் கையாளவில்லை.*

*முப்பத்தி எட்டு வருடங்களாக அவன் சுமந்துக் கொண்டிருந்த காயங்களில் இருந்து குணமடைய வேண்டிய ஒரு மனிதனை இயேசு சந்தித்தபோது, அவன் சுகமடைவதில் தீவிரமாக இருக்கிறானா என்று கேட்டார் (யோவான் 5:6). இது ஒரு வித்தியாசமான, இரக்கமற்ற கேள்வி போல் தெரிகிறது, ஆனால் அது அப்படி இல்லை. ஒரு பொருளை விரும்புவதற்கு உண்மையான முயற்சி தேவையில்லை, ஆனால் ஒருவர் விரும்புவதைப் பெற வேண்டுமென்றால் பெரும்பாலும் வெற்றியின் பாதையில் இருக்கும் பல தடைகளை கடக்க வேண்டும். நாம் வைத்திருப்பதற்கு*

தகுதியான மதிப்புள்ள எதுவும் முயற்சியின்றி அல்லது உறுதியின்றி எளிதில் பெறப்படக்கூடியது அல்ல; எனவே, நீங்கள் குணமடைய விரும்பும் ஒரு காயமடைந்த ஆத்துமாவாக இருந்தால், நான் உங்களிடம் நீங்கள் உண்மையிலேயே நலம் பெற விரும்புகிறீர்களா என்று கேட்க வேண்டும்.

நீங்கள் ஆம் என்று சொன்னீர்கள், நீங்கள் அதை அர்த்தத்துடன் சொன்னீர்கள் என்று நான் நம்புகிறேன், ஏனென்றால் குணமடைவதற்கான உங்கள் பயணம் எவ்வளவு நீண்டதாக இருந்தாலும் அல்லது வேதனையாக இருந்தாலும் சரி, இறுதியில் சுதந்திரமாக இருப்பதன் மகிழ்ச்சியே மதிப்புக்குரியது. ஒரு கட்டத்தில், காயம்பட்ட ஆத்துமா கொண்ட எந்தவொரு நபரும் மோசமாக இருப்பதற்கும், குணமடைவதற்கும், முழுமையாக குணமடைந்து முழுமை பெறுவதற்கும் இடையில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

யாரோ உங்களை ஒரு துன்பக் குழியில் தள்ளிவிட்டார்கள் என்பதற்காக, நீங்கள் உங்கள் எஞ்சிய வாழ்க்கை முழுவதும். அங்கேயே இருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. தேவன் உதவ தயாராக இருக்கிறார். நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?

> பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி, (சங்கீதம் 40:2).

தேவன் நமக்கு உதவி செய்வதாக வாக்குறுதி அளித்திருக்கிறார், ஆனால் நமது குணப்படுதலில் நாம் தேவனுடன் பங்குதாரர்களாக இருக்கிறோம். நாம் நம் பகுதியை செய்ய வேண்டும். தேவன் எப்பொழுதும் நம் வழியில் தடையாக இருக்கும் காரியங்களிலிருந்து நம்மை மாயாஜாலமாக விடுவிப்பதில்லை. ஆனால் நாம் அவைகளை எதிர்கொள்ள தயாராக இருந்தால் அவ்வாறு செய்ய திறனையும், பெலனையும் அவர் எப்போதுமே நமக்குத் தருகிறார்.

## தவிர்த்தல் என்ற தடை

நாம் சமாளிக்க வேண்டிய முதல் தடை, தவிர்த்தல் என்ற தடையாகும். நமது பிரச்சனைகளை நீண்ட காலம் அலட்சியம்

செய்தால், அவை போய்விடும் என்று நம்பி எதார்த்தத்தை புறக்கணித்து, அதை விட்டு ஓடி விடுவதாகும். நான் பதினெட்டு வயதில் வீட்டை விட்டு வெளியேறிய போது, நான் என் எல்லா பிரச்சனைகளையும் விட்டுவிட்டேன் என்று நினைத்தேன். எல்லாவற்றிற்கும் மேலாக, என் தந்தை என்னை துஷ்பிரயோகம் செய்ய முடியாது ஏனென்றால் நான் அவருடைய வீட்டில் வசிக்கவில்லை என்று நினைத்தேன். உண்மையில், அது சரியல்ல. அவரால் இனி என்னை பாலியல் ரீதியாகவோ, உணர்வு ரீதியாகவோ துஷ்பிரயோகம் செய்ய முடியாது என்பது உண்மைதான், ஆனால் அவர் செய்த செயல்களின் விளைவுகளின் வலியை நான் புதைத்து வைத்து, நான் அனுபவித்தவற்றின் விளைவுகளைச் சமாளிக்க மறுத்தால் அது என்னைத் துன்புறுத்திக் கொண்டே இருக்கும்.

நமது ரகசியங்கள்தான் நம்மை நோய்வாய்ப்படுத்துகின்றன என்பதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம், அது என் வாழ்வில் நிச்சயம் உண்மை. நான் வீட்டை விட்டு வெளியேறினேன், விரைவிலேயே நான் யாராலும் நேசிக்கப்படமாட்டேன் என்ற பயத்தால் என் மீது ஆர்வம் காட்டிய முதல் இளைஞனை மணந்தேன். ஆனால் அந்த உறவு இன்னும் ஐந்து வருட உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகமாக மாறியது.

அவரை விவாகரத்து செய்த பிறகு, நான் டேவ் மேயரை சந்தித்து திருமணம் செய்துகொண்டேன், அவர் உண்மையிலேயே என்னை நேசித்தார், ஆனால் நான் மிகவும் காயமடைந்திருந்ததால், தன் அன்பை என்னிடம் காட்ட அவர் எடுத்த எந்த முயற்சியிலிருந்தும் நான் விலகி சென்றேன். நான் பொதுவாக ஆண்கள் மீது சந்தேகம் கொண்டிருந்தேன், ஆண் அதிகாரத்திற்கு எதிராக கலகம் செய்தேன் பாதுகாப்பற்றவளாக இருந்தேன், இதனால் நான் ஏற்றுக்கொள்ளப்பட்டேன் மற்றும் மதிக்கப்பட்டேன் என்று மற்றவர்களிடமிருந்து ஒரு நிலையான வெளிப்புற அடையாளத்திற்காக ஏங்கினேன். நான் நினைத்தபடி மக்கள் என்னை உணர வைக்காதபோது, நான் கோபமடைந்தேன். நான் விரும்பியதை எனக்குத் தராதவர் மீது பழி சுமத்தினேன். இது, நான் அர்த்தமுள்ள, அன்பான உறவுகளைப் பெறுவதற்கு தடையாக, என் ஆளுமையில் எனக்கு இருந்த பிரச்சனைகளின் ஆரம்பமாக

இருந்தன. என்னிடம் என் ஆத்துமாவில் ஆழமாக புதைந்திருந்த ரகசியங்கள் இருந்தன. மேலும் அது குணமடையக் கூடாததாக இருந்தது, ஏனென்றால் நான் பிரச்சினைகளைக் கையாள்வதைத் தவிர்த்தேன். ஒரு சிக்கலைப் புறக்கணித்தல் அதை ஒருபோதும் மறைந்துபோகவிடாது.

> ஒரு பிரச்சனையை புறக்கணிப்பது அதை ஒருபோதும் போக்காது.

என் பிரச்சனைகளில் இருந்து நான் விலகி வந்தால், என் தந்தையின் வீட்டை விட்டு வெளி வந்தது போலவும், என் முதல் கணவரை நான் முதலில் விவாகரத்து செய்தது போலவும், நான் என்ன நடந்தது என்ற என் நினைவுகளை நான் அமுக்கி வைத்துவிட்டு வாழ்க்கையைத் தொடர முடியும் என்று நினைத்தேன். ஆனால் நாம் உயிருடன் புதைக்கும் வலி ஒருபோதும் இறக்காது. அதைத் தோண்டி அதைச் சமாளிக்க தேவன் நமக்கு உதவ அனுமதிக்கும் வரை அது நம்மை காயப்படுத்திக்கொண்டே இருக்கிறது.

டேவுடன் திருமணமாகி தோராயமாக ஐந்து வருடங்கள் ஆன பிறகு, நாங்கள் எங்கள் தேவாலயத்தில் நடைப்பெற்ற ஒரு கருத்தரங்கிற்குச் சென்றோம், அதில் கற்பித்தவர், அவளது தந்தை அவளை பாலியல் வன்கொடுமை செய்ததைப் பற்றிய தன் சாட்சியைப் பகிர்ந்துகொண்டார். அன்று அது தான் தலைப்பு என்று எனக்குத் தெரிந்திருந்தால் நான் கலந்துகொண்டிருப்பேனா என்று சந்தேகிக்கிறேன். ஆனால் எனக்கு தெரியாது, அதனால் நான் அங்கிருந்தேன், என் சொந்த வலியை மேற்பரப்பிற்கு கொண்டு வரும் விஷயங்களைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அந்த சமயத்திற்குள்ளாக, என் தந்தை என்னை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்தார் என்பதை நான் டேவுடன் பகிர்ந்து கொண்டிருந்தேன். ஆனால் நான் குணமடைய உதவும் விதத்தில் நான் அதைப் பகிர்ந்து கொண்டிருக்கவில்லை. எனது அப்போதைய நடத்தைக்கு சாக்கு போக்கு சொல்லும் விதமாகவே எனது கடந்த காலத்தைப் பகிர்ந்து கொண்டிருந்தேன்.

என் அணுகுமுறையானது: நான் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதால் தான் நான் இவ்வாறு நடந்துகொள்ளுகிறேன், என்னால் எதுவும் செய்ய முடியாது என்பதாக இருந்தது. டேவ்,

நான் எனக்கு தேவையான உதவியைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று விரும்பினார். எனவே அந்தப் பெண் எழுதிய புத்தகத்தை எனக்கு வாங்கி கொடுத்தார். மறுநாள் அதைத் திறந்து இரண்டு மூன்று பக்கங்களைப் படித்த பிறகு அதை அறையிலே வீசி எறிந்துவிட்டு சத்தமாக (என்னைத் தவிர வீட்டில் யாரும் இல்லாததால்), “நான் இதைப் படிக்க மாட்டேன்!” என்றேன்.

அவளுடைய அப்பா அவளுக்கு என்ன செய்தார் என்ற அந்தரங்க விவரங்கள் சிலவற்றை நான் வாசித்த போது, நான் புதைத்து வைத்து மறக்க முயற்சி செய்து கொண்டிருந்த உணர்வுகளும், வலியும் மேலே வந்தது. ஆனால் வெளிப்படையாக, அவைகள் இன்னும் என் உள்ளத்தில் உயிருடனே இருந்தது. அவை வெளிப்படத் தொடங்குவதற்குக் காரணமான எதுவும் எந்த நேரத்தில் நடந்தாலும், நான் அவைகளை மீண்டும் ஒருமுறை கீழே அமுக்கி விட்டு, செல்ல முயற்சித்தேன். நான் அனுபவிக்கக்கூடிய வாழ்க்கையை நான் வாழ்வதற்காக அகற்றப்பட வேண்டிய தடைகளை புறக்கணித்துவிட்டு, எப்போதும் போலவே வாழ்க்கையில் முன்சென்று கொண்டிருந்தேன்.

மீண்டும் மீண்டும், எனது பிரச்சினைகளின் மூலத்தைக் கையாள்வதை நான் வெற்றிகரமாகத் தவிர்த்தேன். ஆனால் அவை எப்பொழுதும் மீண்டும் தோன்றின, நான் தொடர்ந்து நிர்பந்தமாக இருந்தேன்.

## இந்த சமயம் வித்தியாசமாக இருந்தது

இந்த சமயம் வித்தியாசமானது, மேலும் கடந்த காலத்தை புறக்கணிக்க முயற்சிப்பது எவ்வித்திலும் உதவப் போவதில்லை என்பதை நான் மிக விரைவிலேயே உணர்ந்தேன். என் வாழ்க்கையில் ஈடுபடும் படியும், அவர் விரும்பும் நபராக நான் இருக்க எனக்கு உதவுமாறும் நான் தேவனிடம் கேட்டிருந்தேன். இருப்பினும், தொடர்ந்து ஓடி ஒளிந்து கொள்வதற்குப் பதிலாக கடந்த காலத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று நான் உணரவில்லை. நான் மெதுவாக ஆனால் உறுதியான இரண்டு வார்த்தைகள் என் ஆவியிலே பேசப்பட்டதை கேட்டேன். “இதுவே சமயம்.” என்று

தேவன் வெறுமனே கூறினார், அவர் அது என்ன என்பதை விளக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை ஏனென்றால் நான் முன்னோக்கி செல்ல கடந்த காலத்தை எதிர்கொள்ள வேண்டும் என்று அவர் என்னிடம் கூறுகிறார் என்பதை நான் உடனடியாக அறிந்தேன். முதல் தடுப்பை அகற்ற வேண்டிய நேரம் வந்தது.

நாம் பல்வேறு வழிகளில் நமது பிரச்சனைகளில் இருந்து ஓடுகிறோம். தேவன் அவனிடம் சொன்னதை யோனா செய்ய விரும்பாத போது, அவர் செல்லும் படி சொல்லப்பட்ட இடத்திற்கு எதிரான திசையில் ஓடினான். யோனா இறுதியில் தேவனின் வழி நடத்துதலைப் பின்பற்றும் வரை சில மிகவும் கடினமான, சங்கடமான சூழ்நிலைகளில் அகப்பட்டுக் கொண்டான். (யோனா *1-3*). அந்த நேரத்தில் தேவன் என் இருதயத்திலே பேசிய அந்த இரண்டு வார்த்தைகளை புறக்கணிக்க தெரிந்து கொண்டிருந்திருப்பேனென்றால், நான் இன்னும் என்னுடைய எல்லா துயரத்தோடும் விரக்தியின் குழியில் தான் இருந்திருப்பேன். அதிர்ஷ்டவசமாக, நான் என் உணர்வுகளுக்குப் பதிலாக தேவனை பின்பற்ற முடிவு செய்தேன், என் குணப்படும் பயணம் தொடங்கியது.

நீங்கள் கடந்த காலத்திலிருந்து ஓடிக்கொண்டிருந்தால், உங்கள் ஆத்துமாவில் குணமடைய விரும்பினால், தேவன் என்னிடம் சொன்னதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். இது தான் சரியான நேரம்! உங்களுடன் நீங்களே எவ்வாறு நேர்மையாக பேசிக்கொள்வது என்பதைக் கற்றுக் கொள்வதற்கும், உங்களுக்கு இருக்கும் தற்போதைய பிரச்சனைகளுக்கு உங்கள் கடந்த காலத்தை குறை கூறுவதை நிறுத்துவதற்குமான நேரம் இது. நாம் விரும்பத் தகாத வழிகளில் நடந்து கொள்வதற்கு நமது கடந்த காலம் நிச்சயமாக காரணமாக இருக்கலாம், ஆனால் நாம் எப்படி இருக்கிறோமோ அப்படி இருக்க அதை ஒரு சாக்குப்போக்காக செய்து விடக்கூடாது. புதைக்கப்பட்ட

> நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அப்படியே இருக்க உங்கள் கடந்த காலத்தை ஒரு சாக்குபோக்காக்கிக் கொள்ளக்கூடாது.

உணர்வுகளுக்கு அவற்றின் சொந்த ஆற்றல்கள் உள்ளன. அவை உயிருடன் உள்ளது, நாம் அவைகளை எதிர்கொண்டு சமாளிக்கும் வரை அவை தொடர்ந்து நம்மை பாதகமான வழிகளில் பாதிக்கின்றன. எவ்வளவு ஆழமாக நாம் அவைகளை நம் ஆத்துமாவிற்குள் தள்ளிவிட்டிருந்தாலும், அவை விரைவிலோ அல்லது பின்னரோ தங்களை வெளிப்படுத்திவிடும். அவைகள் வெறுமனே மறைந்து விடுவதில்லை. அவைகள் கையாளப்பட வேண்டும்.

## யதார்த்தத்தை எதிர்கொள்வது

ஒரு காயமடைந்த நபர் தனது வாழ்நாளின் பல வருடங்களை, எப்படி வாழ வேண்டும் என்று தெரியாத ஒருவரிடமிருந்து எதையாவது பெற முயற்சி செய்து. தங்கள் முழு வாழ்க்கையையும் வீணடிக்கலாம், என்னை உண்மையாக நேசிக்கும் பெற்றோரைப் பெற்றிருக்க விரும்பினேன். ஆனால் அவர்களுக்கே சொந்தமாக பல பிரச்சினைகள் இருந்தன, என்னை எப்படி நேசிக்க வேண்டும் என்று அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. என்ற யதார்த்தத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஒரு நாள் ஒரு முழு நீள கண்ணாடியில் என்னைப் பார்த்து, “என் பெற்றோர்கள் நான் விரும்பும் விதத்தில் என்னை ஒருபோதும் நேசிக்க மாட்டார்கள்” என்று கூறினேன். நான் கண்ணாடியிலிருந்து விலகிச் சென்றபோது சுதந்திரத்தை என்னால் உணர முடிந்தது. எனக்கு நினைவிருக்கிறது அந்த யதார்த்தத்தை வெறுமனே எதிர்கொண்டு இனியும் என் பெற்றோர் சாதாரணமான, அன்பான பெற்றோராக இருந்திருக்க வேண்டும் என்று விரும்புவதன் மூலம் ஏமாற்றத்திற்குள்ளாக மாட்டேன் என்று தீர்மானித்தது என் ஆத்துமாவிற்கு நிம்மதியை கொண்டு வந்தது. அந்த உண்மையை எதிர்கொள்வது புண்படுத்தும் என்று ஒருவர் நினைக்கலாம், ஆனால் அது உண்மையிலே உதவியது. ஒருவரிடம் இல்லாத மற்றும் நமக்கு ஒருபோதும் கொடுக்க இயலாத ஒன்றைப் பெற முயற்சிப்பதை விட மேலான ஏமாற்றம் எதுவும் இல்லை.

என் தாயும், என் தகப்பனும் என்னைக் கைவிட்டாலும் அவர் என்னை சேர்த்துக் கொள்வார் என்ற தேவனுடைய வாக்குறுதியை

நம்ப வேண்டிய நேரம் இது (சங்கீதம் 27:10). நீங்கள் விரும்புவதை தேவன் உங்களுக்கு வழங்காவிட்டாலும், நீங்கள் அவரை நம்பினால் இன்னும் சிறப்பானதொன்றை அவர் உங்களுக்கு கொடுப்பார். தேவன் என் பெற்றோரை என்னை நேசிக்க வைக்க முடியவில்லை ஏனென்றால் நம் ஒவ்வொருவருக்கும் அவர் சுயசித்தத்தைக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவற்றைப் பற்றிய உண்மையையும் அவை ஏற்படுத்திய வலியையும் நான் எதிர்கொள்ளத் தயாராக இருந்து, அதன் காரணமாக கசப்பாக இராமலிருந்தால், பின்னர் அவர் எனக்கு தமது அன்பையும் அங்கிகாரத்தையும் கொடுப்பார். அவர் என் தந்தையாயும், தாயாகவும், சகோதர சகோதரியாகவும், நண்பராகவும் எனக்கு தேவைப்படும் அனைத்துமாகவும் அவர் எப்போதும் இருப்பார். அவர் உங்களுக்கும் அதையே செய்ய விரும்புகிறார்.

கடந்த காலத்தை எதிர்கொள்வது என்பது நாம் அதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று அர்த்தமல்ல. ஏனென்றால் அது மிகவும் அழிவுகரமானதாக இருக்கும். நாம் அதை எதிர்கொண்டு முன்னேற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். தேவன் உங்கள் இருதயத்திலே காரியங்களைக் கொண்டு வந்து, சமாளிக்க வேண்டிய நேரம் இது என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்தும் போது, அதை இனியும் தள்ளி வைக்க வேண்டாம். அதைப் பற்றி ஜெபியுங்கள், நீங்கள் மன்னிக்க வேண்டிய எவரையும் மன்னியுங்கள், பின்னர் அதை விட்டுவிட்டு அதைத் தாண்டி நகருங்கள். இது நீங்கள் அடிக்கடி புதுப்பிக்க வேண்டிய ஒரு முடிவாக இருக்கலாம், ஆனால் ஒவ்வொரு முறையும் நீங்கள் புதுப்பித்துக்கொள்ளும் போது, உங்கள் கடந்த காலத்தின் வலியிலிருந்து இன்னும் கொஞ்சம் சுதந்திரத்தை அனுபவிப்பீர்கள்.

அதிர்ஷ்டவசமாக, ஒரே நேரத்தில் நாம் சமாளிக்க வேண்டிய அனைத்தையும் காட்டுவதன் மூலம் நம் தேவன் நம்மை மூழ்கடிப்பதில்லை. அவர் கருணையும் இரக்கமும் கொண்ட ஒரு அற்புதமான ஆலோசகர், மேலும் அவர் நம்மிடம் செய்யும்படி எதைக் கேட்டாலும் அதற்கான கிருபையை எப்போதும் நமக்கு (வலிமை மற்றும் திறனை) தருகிறார்.

உண்மையை எதிர்கொள்வது வேதனையானது, அதனால்தான்

> இரண்டு வகையான வலிகள் உள்ளன: முன்னோக்கி செல்லும் வலி அல்லது நாம் இருக்கும் இடத்தில் இருப்பதன் வலி.

நம்மில் பலர் அதைத் தவிர்க்கிறோம். ஆனால் அதை எதிர்கொள்ளாதது இன்னும் வேதனையானது. நாம் தேர்வு செய்யக் கூடிய இரண்டு வகையான வலிகள் உண்டு என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு. முன்னோக்கி செல்வதால் ஏற்படும் வலி அல்லது நாம் எங்கிருக்கிறோமோ அங்கேயே தங்கியிருப்பதால் ஏற்படும் வலி. உண்மையை எதிர்கொண்டு முன்னேறுவது வேதனையாக இருந்தாலும், குறைந்தபட்சம் அது நம்மை முன்னோக்கி செல்ல அனுமதிக்கும் ஒரு வகையான வலி, அது எப்போதும் முடிவடையாத வலியை விட சிறந்தது.

மற்றவர்கள் நமக்கு என்ன செய்தார்கள் என்ற உண்மையை எதிர்கொள்வது எவ்வளவு கடினமாக இருக்கிறதோ, அதைவிட மிகவும் கடினம் நாம் செய்தது தவறு என்ற உண்மையை எதிர்கொள்வது தான். இது குறிப்பாக சில சந்தர்ப்பங்களில் மிகவும் உண்மையாக இருக்கிறது. உதாரணமாக, நீங்கள் திருமணம் செய்து கொண்டவர் உண்மையற்றவராக உங்களை நிராகரித்தார் என்ற உண்மையை எதிர்கொள்வது ஒன்று, ஆனால் நீங்கள் துரோகம் செய்து உங்கள் திருமணத்தை அழித்துவிட்டீர்கள் என்பது உண்மையென்றால், அதை எதிர் கொள்வது இன்னும் கடினமாக இருக்கும்.

கொலைக் குற்றத்துக்காக சிறையில் இருக்கும் ஒருவர் தன் வாழ்நாள் முழுவதையும் சிறையில் கழிக்க அதிக வாய்ப்புகள் இருந்தும் இப்போது தேவனுடன் உறவை வளர்த்துக் கொள்ளவும், அவர்களின் கடந்த காலத்திலிருந்து குணமடையவும் முயன்றால் என்னவாகும்? அவர்கள் சுதந்திரமாக இருப்பது கூட சாத்தியமா? ஆம், ஒரு நபர் தன் வாழ்க்கையை சிறையிலே கழித்தாலும் அவர் இன்னும் தன் ஆத்துமாவிலும், ஆவியிலும் சுதந்திரமாக இருக்க முடியும். உண்மையிலே, சமூகத்தில் வாழ்கின்ற எனக்குத் தெரிந்த சிலரை விட சிறையிலே சுதந்திரமாக இருக்கும் ஆண்களையும் பெண்களையும் பார்த்திருக்கிறேன். உண்மையான சுதந்திரம் என்பது நமக்குள்ளேயே இருக்கிறது, நம்மைச் சுற்றியல்ல.

நம்முடைய பாவத்தைப் பற்றிய உண்மையை எதிர்கொள்ள

*நாம் ஒருபோதும் பயப்படக்கூடாது. நாம் காயப்படுத்திய மக்களிடமும், தேவனிடமும் நம்மை மன்னிக்கும்படி கேட்க வேண்டும். அவ்வாறு செய்வது ஒருபோதும் குற்ற உணர்ச்சியாலும் கண்டனத்தாலும் நம்மைத் தாழ்த்துவதற்காக அல்ல, மாறாக நம்மை விடுவிப்பதற்காகவே. தேவன் நம்மை எவ்வளவு மன்னித்திருக்கிறார், அவருடைய இரக்கத்தின் மகத்துவம் நம்மை அவரிடம் நெருங்கி வர செய்கிறது என்பதை உணர வேண்டும். உண்மையாகவே, அவருடைய கிருபை அற்புதமானது!*

*என் தந்தை தனது பாவமான வாழ்க்கையை நினைத்து மனம் வருந்தினார் மற்றும் எண்பத்து மூன்று வயதில் இயேசுவை தனது இருதயத்தில் ஏற்றுக்கொண்டார். அவர் எனக்கும் பலருக்கும் செய்த கொடூரமான மற்றும் வேதனையான காரியங்களுக்குப் பிறகும், தேவன் அவரை முழுமையாக மன்னித்தார் என்று நான் உறுதியாக அறிவேன் என்று சொல்ல முடியும்.*

*சங்கீதக்காரன் தாவீது, தேவனுக்கு மிகவும் நெருக்கமான ஒரு மனிதன். விபச்சாரமும் கொலையும் செய்தார்,மேலும் ஒரு வருடம் அவர் செய்ததையும் அவற்றின் விளைவுகளையும் புறக்கணிப்பதன் மூலம் அவர் தனது செயல்களிலிருந்து ஓடிக் கொண்டிருந்தார். இறுதியாக, நாத்தான் தீர்க்கதரிசி அவரை எதிர்கொண்ட பிறகு, தாவீது உண்மையாக மனந்திரும்பினார் (2 சாமுவேல் 12). நம் நடவடிக்கைகளை நேர்மையாக எதிர்கொண்டு ஒப்புக்கொள்வதும், அது சம்பந்தப்பட்ட அனைவரையும் எவ்வாறு பாதித்தன என்று ஒப்புக் கொள்வதும் மனந்திரும்புதலின் ஒரு பகுதியாகும்.*

*தாவீது ஒப்புக்கொள்வதற்கு முன்பு அறிக்கையிட்டார்(உண்மையை எதிர்கொண்டார்), தனது எலும்புகள் வீணாகிவிடுவது போல உணர்ந்தார், மேலும் அவர் இரவும் பகலும் புலம்பினார். அது தன் ஆத்துமாவில் பரிதாபமாக இருக்கும் ஒரு மனிதனைப் போல் தெரிகிறது. தாவீது அரசனாக இருந்தார்; அவர் விரும்பிய எதையும் அவரால் செய்ய முடியும், அவர் எங்கு செல்ல விரும்பினாலும் செல்ல முடியும், ஆனாலும் அவர் உண்மையை எதிர்கொண்டு, அவரது செயல்களுக்கு பொறுப்பேற்றுக்கொள்ளும் வரை அவர் சுதந்திரமாக இருக்கவில்லை. (சங்கீதம் 32:3-4). ஆனால் அவர் ஒப்புக்கொண்ட பிறகு, அவர் செய்த அனைத்தையும் பற்றிய உண்மையை எதிர்கொண்டார். பிறகு*

தேவன் உடனே அவரை மன்னித்தார், அக்கிரமமும் குற்றமும் தீர்க்கப்பட்டது (சங்கீதம் 32:5).

தாவீது தேவனிடம் அவர் தனது மீறலை உணர்ந்ததாக கூறி, இரக்கத்திற்காக மன்றாடினார். அவர் இனிமேலும் ஒளிந்து கொள்ளவில்லை, ஓடிவிடவில்லை (சங்கீதம் 51:1-3). தேவன் உள்ளத்தில் உண்மையை விரும்புகிறார் என்று கூறினார் (சங்கீதம் 51:6). உண்மையை எதிர்கொள்வது - இது நமக்கு செய்யப்பட்ட ஏதோ ஒன்று அல்லது நாம் வேறொருவருக்கோ, தேவனுக்கோ எதிராக செய்த ஏதோ ஒன்றை பற்றிய உண்மையாக இருக்கலாம் - இதுதான் ஆத்துமா குணப்படுவதற்கும் கடந்த காலத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கும் முக்கியமானது.

நம்மால் மன்னிக்கப்பட முடியாதது என்று எதுவுமில்லை. தேவன் மன்னிக்க எவ்வளவு பெரிய பாவமும் பெரியதல்ல.

> மேலும், மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று. (ரோமர் 5:20).

தேவனுடைய கிருபை-அவருடைய தயவு-நாமோ அல்லது வேறு யாரோ செய்யக்கூடிய எந்த பாவத்தையும் விட பெரியது.

## பழி என்ற தடை

என்னுடைய துயரங்களுக்கும் பிரச்சனைகளுக்கும் பிறரைக் குற்றம் சாட்டுவது எனக்குப் பெரிய தடையாக இருந்தது. குற்றம் சாட்டுவதே, யதார்த்தத்திலிருந்து தப்பிக்கும் முறை. நம்முடைய மோசமான நடத்தைக்காக யாரையும் அல்லது எதையும் நாம் குற்றம் சாட்டும் வரை, அதிலிருந்து நாம் ஒருபோதும் விடுபட மாட்டோம். நமது நடத்தையை நம் உரிமையாக்க வேண்டும். அதைச் சொந்தமாக ஏற்றுக் கொண்டு, பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் அதனால் தேவன் உங்களை அதிலிருந்து விடுவிக்க முடியும்.

ஒவ்வொரு முறையும் நான் விரும்பியது நடக்காத போது நான் கோபமடைந்தேன். நான் மற்றவர்களைக் குறை கூறினேன்,

அவர்கள் நான் என்ன விரும்பினேனோ அதை செய்தால் கோபப்பட மாட்டேன் என்று நினைத்தேன். இப்போது, அதைப் பற்றி நான் நினைக்கும் போது, அது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை நான் உணர்கிறேன். ஆனால் அந்த சமயம் அது நான் உருவாக்கிய ஒரு பொறி போன்று இருந்தது, அது எனது சொந்த பிரச்சனைகளில் இருந்து தப்பித்துக் கொள்ள உதவியது.

இந்த பிறர் மேல் பழி சொல்லும் காரியம் ஏதேன் தோட்டத்தில் தொடங்கியது (ஆதியாகமம் 3) அன்றிலிருந்து ஒருபோதும் நிற்கவில்லை. குற்றம் சாட்டுவதன் மூலம் நாமும் அதே போல் மற்றவர்களும், நமது தவறுகளுக்கான, நடத்தைகளுக்கான பொறுப்பைத் தவிர்க்கிறோம் என்பதைக் கவனிப்பது மிகவும் சுவாரஸ்யமானது.

நான் இருட்டில் ஒரு தரை விரிப்பில் கால் தடுக்கி கீழே விழுந்தால், விளக்குகளை அணைத்ததற்காக நான் டேவைக் குறை கூறலாம். டேவ், பார்க்கிங் இடத்திலிருந்து பின்வாங்கும் யாரோ ஒருவர் வாகனம் மீது கிட்டதட்ட மோதினால், அது எப்போதுமே அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதில் கவனம் செலுத்தாதது அவர்களின் தவறு .இவ்வாறாக நாம் மற்றவர்கள் மீது குற்றம் சாட்டும் பட்டியல் நீண்டுக்கொண்டே போகிறது, பெரும்பாலான நேரங்களில் நாம் என்ன செய்கிறோம் என்பதை அறியாமலேயே நாம் செய்கிறோம். மனிதர்களாகிய நாம் நம்முடைய சொந்த நடவடிக்கைகளுக்கு பொறுப்பை ஏற்காமல் இருப்பதற்கு விரைவாக குற்றம் சாட்டுவது ஒரு சாக்கு போக்காகிறது.

ஒரு கம்பளத்தின் மீது தடுமாறுவது அல்லது பார்க்கிங் இடத்தில் இருந்து பின்வாங்கும் ஒருவர் மீது கிட்டதட்ட மோதுவது போன்ற விஷயங்கள் சிறிய எடுத்துக்காட்டுகள். அவை நம் வாழ்வில் பெரிய பிரச்சனைகளை ஏற்படுத்தாவிட்டாலும், அவை நம் நடத்தை பற்றிய உண்மையை எதிர்கொள்ளாத நிலையில் நம்மை வைத்திருக்கின்றன.

விரிப்புகள் மற்றும் பார்க்கிங் இடங்களை விட நாம் எதிர்கொள்ள வேண்டிய பெரிய பிரச்சனைகள் நம்மில் பெரும்பாலோருக்கு உள்ளன. எனவே நாம் அனைவரும் சத்தியத்தை எதிர்கொள்ளவும், அதன் விளைவாக தேவன் நமக்குக் கொடுக்கும் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கும் உறுதியளிப்போம்.

“அது முற்றிலும் என் தவறு, நான் அதை செய்ததற்கு வருந்துகிறேன்,” என்று சொல்லுவது நம்மை விடுவிக்கிறது, நம் உறவுகளை வளப்படுத்துகிறது.

## சாக்குபோக்குகள் என்ற தடை

நமது தவறான நடத்தைக்கு சாக்குப்போக்குகளை கூறுவது, நமது முன்னேற்றத்தின் பாதையில் நாம் எதிர்கொண்டு, அகற்ற வேண்டிய ஒரு பெரிய தடையாகும். சாக்கு போக்குகள் பொய்களால் நிரப்பப்பட்ட காரணங்கள் என்று நான் ஒருமுறை கேள்விப்பட்டேன். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நம் சாக்கு போக்குகள் நாம் என்ன செய்தோம் அல்லது ஏன் செய்தோம் என்று நமக்கு நாமே பொய் சொல்வதன் விளைவாக நமது நடத்தைக்கு சாக்கு சொல்லுகிறோம். ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர், “தொண்ணூற்று ஒன்பது சதவீத தோல்விகள் சாக்கு போக்குகளை சொல்லும் பழக்கம் உள்ளவர்களிடமிருந்து வருகின்றன.” என்று கூறினார்.[21]

இது ஒரு வெற்று சாக்கு என்ற சொற்றொடரை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். அதே மாதிரி தான் நம் சாக்குப்போக்குகள் கூட. அவற்றில் எந்த உண்மையும் இல்லை, மேலும் அவை தேவனுக்கு ஏற்புடையதன்று. “மன்னிக்கவும், என் நடத்தைக்கு எந்த சாக்குபோக்கும் இல்லை.” என்று எளிமையாகச் சொல்லக் கற்றுக்கொண்டால் உண்மையான விடுதலையைப் பெற்றுக் கொள்வோம். நாம் அதைச் சொல்லவும் அதை அர்த்தப்படுத்தவும் முடியும் போது, அது நம்மை விடுவிக்கிறது. நாம் காயப்படுத்தியவர்கள் நம்மை மன்னிக்க உதவுவதற்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

நம் சாக்குபோக்குகள் முடிவற்றவை. ஆனால் அவை அனைத்தும் நமது செயல்களுக்கான பொறுப்பை எற்றுக்கொள்வதைத் தவிர்ப்பதற்கான வழிகளே, நாம் அதைச் செய்யும் வரை, எந்த குணமடைதலும் ஏற்படாது.

> “என்னை மன்னிக்கவும், என் நடத்தைக்கு எந்த காரணமும் இல்லை” என்று சொல்ல கற்றுக்கொள்ளுங்கள்.

## அத்தியாயம் 16

# சுய பரிதாபம் என்ற தடை

*கிறிஸ்தவர்களாக நாம் ஒருபோதும் நம்மை நினைத்து வருத்தப்படக்கூடாது. நாம் அவ்வாறு செய்யும் தருணத்திலே நாம் நமது ஆற்றலை இழக்கிறோம். போராடும் விருப்பத்தையும் வாழ்வதற்கான விருப்பத்தையும் நாம் இழக்கிறோம், முடங்கி விடுகின்றோம்.*

*- மார்ட்டின் லாயிட்-ஜோன்ஸ்*

ஒரு செரோக்கி *[வட அமெரிக்காவிலுள்ள ஈரானிய மரபைக் கொண்டிருக்கும் இந்தியர்]* தனது பேரனுக்கு ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் நடக்கும் ஒரு போரைப் பற்றிக் கற்பித்துக் கொண்டிருந்தார். அவர் அந்த இளைஞனிடம், "போர் இரண்டு ஓநாய்களுக்கு இடையில் நடைபெறுகிறது. ஒரு ஓநாய் சோம்பலானது, கோழைத்தனமானது, மாயையானது, திமிரானது, சுயபரிதாபம் நிறைந்ததாய், துக்கமானதாய், வருத்தத்துடனும், பொறாமையுடனும் கோபத்துடனும், இருந்தது. மற்ற ஓநாயோ ஜாக்கிரதையாயும், தைரியமும், தாழ்மையும், கருணையும், இரக்கம், மகிழ்ச்சி, பச்சாதாபம் மற்றும் நம்பிக்கை கொண்டதாயும் இருந்தது." என்று கூறினார். பிறகு மௌனம் நிலவியது.

பேரன் ஒரு கணம் ஓநாய்களைப் பற்றி யோசித்துவிட்டு, தாத்தாவிடம், "எந்த ஓநாய் வெல்லும்?" என்று கேட்டான்.

செரோக்கி பெரியவர், "நீ எதற்கு உணவளிக்கிறாயோ அது தான்" என்று பதிலளித்தார்.[22]

உங்களில் சிலரைப் போலவே, எனக்காக வருந்துவதற்கு எனக்கு பல காரணங்கள் இருந்தன. ஆனால் என் சுய பரிதாபம், என் ஆத்துமாவை குணமாக்கி, எனக்கு கிடைத்திருக்கும் சிறந்த

வாழ்க்கையை வாழ ஒரு தடையாக இருந்தது. இது எனக்கு ஒரு பெரிய பிரச்சனையாக இருந்தது (அப்படியே பலருக்கும்), எனவே ஒரு முழு அத்தியாயத்தையும் அதற்கு அர்ப்பணிக்க விரும்புகிறேன். சுய பரிதாபம் தானாக நீங்காது. நாம் அதற்கு உணவளிப்பதை கண்டிப்பாக நிறுத்த வேண்டும், அதாவது நாம் அதற்கு இணங்குவதை நிறுத்த வேண்டும்.

என் எதிரியான பிசாசு என்னை ஒரு பரிதாப விருந்துக்கு அழைத்ததால், நான் கலந்து கொள்ள வேண்டும் என்று அர்த்தமில்லை என்பதை நான் அறிந்தேன். வாழ்க்கையில் நம்மிடம் இல்லாத அனைத்தையும் நினைவுபடுத்துவதன் மூலமும் நம்மை விட சிறந்த வாழ்க்கையைக் கொண்டிருப்பதாகத் தோன்றும் மற்றவர்களுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்க்கத் தூண்டுவதின் மூலமும் நாம் ஏன் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்கான பல காரணங்களை அவன் நமக்கு வழங்குவான்.

இந்த அத்தியாயத்தில் உள்ள விஷயங்களைப் படித்து தியானித்த பின் சுயபச்சாதாபத்தில் சில நாட்களையோ, இன்னுமொரு நாளையோ ஏன் ஒரு மணி நேரத்தைகூட ஒருபோதும் வீணாக்க கூடாதென்று நீங்கள் உறுதியாக முடிவு செய்ய வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்கிறேன். எனக்காக பரிதாப்பட்டுக் கொண்டு வீணடித்த நாட்கள் எண்ண முடியாத அளவுக்கு அதிகம். அவை என்னால் திரும்பப் பெற முடியாத நாட்கள். ஏனென்றால் ஒரு நாள் முடிந்து விட்டால் நாம் ஒருபோதும் திரும்பிச் சென்று அதில் வாழ முடியாது. எவ்வாறாயினும், நமது தவறுகளில் இருந்து நாம் கற்றுக் கொண்டு எதிர்காலத்தில் சிறந்த தேர்வுகளை செய்யலாம்.

## சுய பரிதாபம் உங்களுக்கு எப்போதாவது உதவியிருக்கிறதா?

சுயபச்சாதாபம் எனக்கு ஒரு துளி கூட உதவவில்லை என்பதே உண்மை. எதையும் மாற்றவோ அல்லது முன்னேற்றவோ இது எனக்கு உதவவில்லை. என்னைச் சுற்றியிருந்தவர்களை அது ஒருபோதும் மாற்றவில்லை. அவர்களில் பலர் எனது பரிதாபத்திற்கு

> சுய பரிதாபம் என்பது வாழ்க்கையில் நீங்கள் எவ்வளவு மோசமாக இருக்கிறீர்கள் என்பதைப் பற்றி பெருமையாகப் பேசுவது.

நிச்சயமாகவே ஆதாரமாக இருந்தனர். அது என் ஆற்றலை வடித்துவிட்டது, எதையும் அனுபவிப்பதில் நான் கொண்டிருந்த நம்பிக்கையைத் திருடி, எனக்கு உதவாதபடி தேவனை தடுத்தது. சுய பரிதாபம் நம்மை நம்பிக்கையற்றவர்களாக உணர வைக்கிறது, அது தான் இந்த உலகத்திலேயே மிக மோசமான உணர்வுகளில் ஒன்றாகும். மனச்சோர்வடையச் செய்து நம்மிடம் உள்ள நல்ல விஷயங்களைப் பார்ப்பதிலிருந்து நம்மை முற்றிலும் தடுக்கிறது. சுய பரிதாபம் உண்மையிலே வாழ்க்கையில் நாம் எவ்வளவு மோசமாக இருக்கிறோம் என்பது பற்றி நமக்கு நாமே தற்பெருமைப்பட்டுக் கொள்வதாகும். அது இதுபோன்றது: "எனது வாழ்க்கை எனக்கு தெரிந்த யாரை விடவும் மோசமாயிருக்கிறது. என் நிலை மிகவும் மோசமாக உள்ளது. ஒருவரால் எப்படி இவ்வளவு மோசமாக இருந்து பிழைக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. நான் எப்படி உணர்கிறேன் என்று யாருக்கும் புரியவில்லை, யாரும் கவலைப்படுவதுமில்லை." நல்ல விஷயங்களைப் பற்றி பெருமைப்படவும், கெட்டதைக் கவனித்துக் கொள்ளும்படி தேவனிடம் கேட்க தொடங்கும் நேரம் இது.

சுய பரிதாபம் ஒரு எதிரி, அப்படியாகவே அதை கருத வேண்டும். நாம் தெரிந்தே கதவைத் திறந்து நம் வீட்டிற்குள் திருடனை அழைப்பதில்லை, ஆனாலும் நம் சுய பரிதாபத்தின் மூலம் நம்மை திருடி விடும், அழிவுக்குள்ளாக்கும் மனப்பான்மைக்கு கதவைத் திறக்கிறோம்.

சுய பரிதாபமானது உங்கள் வாழ்க்கையிலுள்ள ஒரு சூழ்நிலையையோ அல்லது சந்தர்ப்பத்தையோ ஏற்றுக்கொள்ள விருப்பமில்லாமல் இருப்பதால் ஏற்படுகின்றது. நாம் விரும்பும் காரியங்களை நாம் பெற்றுக் கொள்ள முடியாததலோ அல்லது நாம் விரும்பாத காரியங்களை அகற்ற முடியாததலோ இந்த உணர்வு உருவாகிறது. ஏதோ ஒன்றினாலோ அல்லது யாரோ ஒருவராலோ பாதிக்கப்பட்டு விட்டோம் என்ற உணர்வை கொண்டிருப்பதாகும். அது உங்கள் சவால்கள், சிரமங்கள், மற்றும்

வாழ்க்கையின் பிரச்சினைகளை மீண்டும் மீண்டும் தியானிப்பதன் மூலமாகவும் உங்கள் வாழ்க்கையை, உங்களை விட சிறப்பாக இருப்பதாக நீங்கள் நினைக்கும் ஒருவருடன் ஒப்பிடுவதன் மூலமாகவும் போஷிக்கப்படுகிறது. நீங்கள் தவறான ஓநாய்க்கு உணவளிக்கிறீர்களா?

தேவனுடைய குழந்தையாக இருக்கும் எவருக்கும் அவர்களின் ஆவியில் நன்மையான மற்றும் சரியான நடத்தையின் விதைகள் உள்ளன. அன்றாட வாழ்க்கையை அனுபவிக்கவும், அவர்களிடம் இல்லாததைப் பற்றி கோபப்படுவதற்குப் பதிலாக அவர்களிடம் உள்ளதற்கு நன்றியுடன் இருக்கக்கூடிய திறனையும் அவர்கள் பெற்றிருக்கின்றனர். நம்மிடம் இயேசு இருக்கிறார், எல்லா நல்ல விஷயங்களும் அவரில் காணப்படுகின்றன. அவர் நம்மில் இருக்கிறார், நாம் அவரில் இருக்கிறோம். ஒரு அற்புதமான வாழ்க்கைக்கான விதைகள் நமக்குள் இருக்கிறது. ஆனால் நாம் அவைகளை சுய பரிதாபம் போன்ற அழித்துவிடும் மனப்பான்மையால் மலராமல் தொடர்ந்து தடை செய்துக் கொண்டிருந்தால் அவை வளரவே வளராது.

நாம் மறுபடியும் பிறக்கும்போது, நித்திய நம்பிக்கைக்குள் பிறக்கிறோம் என்று அப்போஸ்தலன் பேதுரு கூறினார் (1 பேதுரு 1:3). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், நாம் ஒருபோதும் நம்பிக்கையற்றவர்கள் அல்ல. சுய-பரிதாபம் நம்மிடம் வருகை தர முயற்சிக்கும் போது அதை எதிர்க்கும் கருவிகளை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். எந்த நேரத்திலும் நமக்கு நல்லது நடக்கப் போகிறது என்ற நேர்மறையான எதிர்பார்ப்புதான் நம்பிக்கை. அந்த வகையானநேர்மறை மனப்பான்மை சுய பரிதாபத்துடன் இணைந்து இருக்க முடியாது.

கெட்ட ஓநாய்க்கு உணவளிப்பதற்குப் பதிலாக, நல்ல ஓநாய்க்கு உணவளிக்க தெரிந்து கொள்ளலாம். அது நம்மை நன்றியுள்ளவர்களாகவும் மகிழ்ச்சியுள்ளவர்களாகவும் ஆக்குகிறது. மேலும் எல்லா நேரத்திலும் தேவன் நமக்கு எந்த சிரமத்திலும் உதவுவார் என்று நம்பிக்கையுடன் மற்றவர்களுக்கு உதவியாக இருக்கவும் செய்கிறது.

# நீங்கள் பரிதாபத்தை அல்லது வல்லமையைக் கொண்டிருக்கலாம்

*ஒரு ஞாயிற்றுக்கிழமை, டேவ் ஒரு கால்பந்து விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். நிச்சயமாகவே ரசித்துக்கொண்டிருந்தார் குழந்தைகள் வெளியே விளையாடிக் கொண்டிருந்தனர், முற்றத்தில் சிரிப்புச் சத்தங்கள் மங்கலாகக் கேட்க முடிந்தது. என் குடும்பத்தினர் மகிழ்ச்சியாக இருந்ததைக் குறித்து நான் மகிழ்ச்சியாக இருந்திருக்க வேண்டும், ஆனால் அதற்கு பதிலாக நான் வேலை செய்து கொண்டிருந்ததால், அது என் விருப்பமாக இருந்தாலும் எனக்காக வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். நான் சுய பரிதாபத்திற்கு அடிமையாக இருந்தேன். எனவே பரிதாபமாக இருக்க வேண்டும் என்பதற்காக எனக்கு நானே ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வேன்.*

*என் வீட்டைச் சுத்தம் செய்து கொண்டே இப்படியாக நினைத்தேன். உட்கார்ந்து மகிழ்வது அல்லது சூரிய ஒளியில் வெளியில் விளையாடுவது நன்றாக தான் இருக்கும், ஆனால் யாராவது இங்கே வேலை செய்ய வேண்டும் தானே, அது எப்போதுமே நான்தான்! மேலும் அந்த வகையான எண்ணம் என் மனதிற்குள் எவ்வளவாக சுற்றிக் கொண்டிருந்ததோ அவ்வளவாக, கெட்ட ஓநாய்க்கு உணவளித்து விரக்தியின் குழிக்குள் மூழ்கினேன். நான் ஒவ்வொரு நாளும் வீட்டை சுத்தம் செய்தேன், வீடு அழுக்காக இருந்ததால் நான் சுத்தம் செய்யவில்லை.*

*டேவ் என்மீது பரிதாபப்படுவார் என்றும் அதனால் கால்பந்து பார்ப்பதை நிறுத்துவார் என்று நம்பி அப்படி செய்து கொண்டிருந்தேன் என்று உறுதியளிக்கிறேன். விசித்திரமான விஷயம் என்னவென்றால், நான் அதை திரும்பிப் பார்க்கும் போது, அவர் என்ன செய்ய வேண்டும் என்று நான் விரும்பினேன் என்று கூட எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர் தன்னை ரசிக்க நான் விரும்பவில்லை என்று மட்டும் எனக்குத் தெரிந்தது. நீங்கள் இதை கவனியுங்கள், துயரத்தில் இருப்பவர்கள் மற்றவர்களும் துன்பப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். அவர்கள் உண்மையிலே மகிழ்ச்சியாக இருப்பவர்களை வெறுக்கிறார்கள்.*

இது மிகவும் மோசமானது என்று எனக்குத் தெரியும். ஆனால் என் சுய பரிதாபத்தைப் பற்றிய உண்மையையும் அதற்குப் பின்னால் இருந்ததையும் எதிர்கொண்ட போது, இறுதியிலே அதிலிருந்து விடுவிக்கப்பட்டேன். மற்றவர்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதன் விளைவாக, எனக்கு ஒரு பயங்கரமாக காயமடைந்து, அவசியமாக குணமடைய வேண்டிய ஆத்துமா இருந்தது. ஆனால் அதை எப்படி அல்லது எங்கு பெறுவது என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை. என் வாழ்க்கையில் அந்த சமயத்தில் எனக்கு ஒரு பிரச்சனை இருப்பதை நான் முழுமையாக உணர கூட இல்லை என்று நினைக்கிறேன், ஏனென்றால் நான் இன்னும் என் வாழ்க்கையில் "மற்றவர்களைக் குற்றம் சாட்டும்" கட்டத்திலே இருந்தேன்.

இரண்டு மணி நேரம் சுத்தமாக வீட்டைச் சுத்தம் செய்தேன், அலமாரிகளையும், கதவுகளையும் பலத்த சத்தத்துடன் மூடினேன், டேவ், நான் ஏன் அப்படி செய்கிறேன் என்று கேட்பார் என்ற நம்பிக்கையில் அப்படி செய்தேன். ஆனால், அவர் அப்படி கேட்காத போது சுய பரிதாபத்தில் மூழ்கியவளாக நான் குளியலறையில் தரையில் உட்கார்ந்து அழுவதுண்டு. இந்தக் காட்சி புதியது அல்ல. நான் அமர்ந்திருந்த தளம் வெவ்வேறு இடத்தில் அமைந்திருக்கலாம், ஆனால் நிகழ்வோ அதே மாதிரியாகவே இருந்தது. நான் நினைத்தது போல நடக்கவில்லை, அதனால் நான் எனக்காக வருந்தினேன்.

சில சமயங்களில் எனது பரிதாப விருந்துகள் ஒன்றில், என் ஆவியிலே தேவன் பேசுவதைக் கேட்டேன், "நீ பரிதாபமானவளாகவோ அல்லது வல்லமை வாய்ந்தவளாகவோ இருக்கலாம், ஆனால் இருவராகவும் இருக்க முடியாது. நீ எதைத் தேர்ந்தெடுக்கிறாய்?" தேவன் என்னிடம் சொன்ன வார்த்தைகள் அனைத்திலும் இந்த வார்த்தை மிகவும் வல்லமை வாய்ந்ததாக இருந்தது. இன்னும் பல உள்ளன, ஆனால் இது, "குறித்த காலத்தில் சொன்ன வார்த்தைகளில்" முதலிடத்தில் உள்ளது, என்னை விடுவிக்க உதவியது. நான் ஒரு தேர்வை எதிர்கொண்டேன், அது என்னைப் பொறுத்ததாக இருந்தது. நான் எந்த ஓநாய்க்கு உணவளிக்கப் போகிறேன்?

நான் நல்ல ஓநாய்க்கு உணவளிப்பேனா அல்லது கெட்டதுக்கு உணவளிப்பேனா? கதையில் குறிப்பிடுவது போல் நமக்குள்

> நீங்கள் பரிதாபமாகவோ அல்லது வல்லமை வாய்ந்தவராகவோ இருக்கலாம், ஆனால் நீங்கள் இருவருமாக இருக்க முடியாது.

இரண்டு ஓநாய்கள் இல்லை. ஆனால் நம் இயல்புக்கு இரண்டு பக்கங்கள் உள்ளன. பரிசுத்த ஆவியின்றி உணர்வும் பகுத்தறிவும் கொண்ட மாம்ச இயல்பு நம்மிடம் உள்ளது. இது அதிகபட்சமான அளவு சீரழிந்துள்ளது, முற்றிலும் சுயத்தால் நிறைந்துள்ளது. தேவனின் சாயலில் மீண்டும் உருவாக்கப்பட்ட ஒரு புதிய இயல்பும் நம்மிடம் உள்ளது. இது அதிகபட்ச அளவு நல்லது. ஒவ்வொரு நாளும் நாம் ஒன்று அல்லது மற்றொன்றுக்கு உணவளிக்கிறோம். மேலும் நாம் எதற்கு அதிகமாக உணவளிக்கிறோமோ அது வலிமையானதாகிவிடும்.

பரிதாபகரமாக அல்லது வல்லமையாக இருப்பதைப் பற்றி தேவன் என்னிடம் பேசிய போது, நான் ஏற்கனவே ஒரு சிறிய வீட்டு பைபிள் படிப்பை ஒவ்வொரு வாரமும் கற்பித்துக் கொண்டிருந்தேன். தேவனுடனான எனது நடையிலும் உறவிலும் முன்னேற்றம் அடைய நான் உண்மையிலேயே விரும்பினேன். இருப்பினும், என் பாதையிலே நான் அடையாளம் கண்டு சமாளிக்க வேண்டிய பல தடைகள் என்னிடம் இருந்தன. அவை அனைத்தும் அழிவுகரமானவை, ஆனால் சுய பரிதாபமோ எல்லாவற்றையும் விட மிகவும் மோசமானது.

தேவன், நான் செய்ய விரும்பினால் மட்டுமே, எனக்கு என் வாழ்க்கையையே மாற்றும் தேர்வை வழங்கிக் கொண்டிருந்தார். என் வாழ்க்கையிலே அவருடைய வல்லமையை நான் அனுபவிக்க விரும்பினால், அவருடைய உதவியால் நான் சுயபச்சாதாபத்தை கைவிட வேண்டியிருந்தது. தேர்வு வெளிப்படையானதே என்று தோன்றலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, அதிகாரத்தை மாற்றாக வழங்கும்போது சுய பரிதாபத்தை யார் தேர்ந்தெடுப்பார்கள்? ஆனால் மக்கள் ஒவ்வொரு நாளும் அந்தத் தேர்வைச் செய்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் நீண்ட காலமாக அதிலே மூழ்கி இருந்ததால் அவர்கள் அதை வெறுத்தாலும், அவர்கள் அதிலே ஒரு குறிப்பிட்ட ஆறுதலையும் காண்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்று

உங்களுக்குத் தெரிகிறது இல்லையா? உங்களுக்கு மிகவும் மோசமான வாரமோ, மாதமோ, அல்லது வருடமோ, அல்லது ஒரு மோசமான வாழ்க்கையோ கூட இருக்கலாம். உங்கள் குடும்பத்தினர் அனைவரும் விட்டு விட்டு போய்விட்டார்கள், நீங்கள் வீட்டில் தனியாக இருக்கிறீர்கள். ஒரு மலை போல சலவை செய்ய வேண்டிய வேலை உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது. நீங்களே உங்களுக்கு ஒரு கப் காபியை தயாரிக்க வேண்டும், நிச்சயமாக நீங்கள் விரும்பும் கப் கேக்கை உங்களால் சாப்பிட முடியாது ஏனென்றால், பாவம் நீங்கள், எளிதாக எடை அதிகரித்துவிடும், ஏற்கனவே இருபது கிலோ இழக்க வேண்டியிருக்கிறது. ஒப்புக்கொள்ளுங்கள்: உங்கள் கையிலே சூடான கோப்பையுடன் உட்கார்ந்து, வாழ்க்கையில் நீங்கள் எவ்வளவு மோசமாக இருக்கிறீர்கள் என்று யோசிப்பது கொஞ்சம் ஆறுதல் அளிக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, வேறு யாரும் உங்களைப்பற்றி நினைக்கிறது இல்லை... சரிதானே?

இது நம் மாம்சத்தை தற்காலிகமாக நன்றாக உணர வைக்கலாம். ஆனால் அது பயனற்றது மட்டுமல்ல, அது பலவீனப்படுத்துகிறது. அது நம்மை முடக்கி, வாழ்க்கையின் முன்னேற்றத்தையும் தடுக்கிறது. அதுவும் கூட பாவமே.

## சுய பரிதாபம் ஒரு பாவமா?

இப்போது, சுயபச்சாதாபம் ஒரு பாவம் என்பதில் நீங்கள் என்னுடன் உடன்படத் தயாரா என்று உறுதியாகச் சொல்லாமல் இருக்கலாம். அது ஒரு பிரச்சனை என்று உங்களுக்குத் தெரியும், நீங்கள் செய்யக்கூடாத ஒன்று தான், ஆனால் இது ஒரு பாவமா?, ஜாய்ஸ், அது கொஞ்சம் கடுமையாக இல்லையா? பல வருடங்களுக்கு முன்பு நான் இந்த கேள்வியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சுயபச்சாதாபம் என்ற இந்த பாவம் வேதத்தில் எங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று தேடிக்கொண்டிருந்தபோது, எங்கும் அப்படிப் பட்டியலிடப்பட்டதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. பின்னர் தேவன் என்னை கலாத்தியருக்கு அழைத்துச் சென்றார், அங்கே மாம்சத்தின் கிரியைகளின் பட்டியலைக் காண்கிறோம்-அதில் ஒன்று விக்கிரகாராதனை என்பதாகும். இது

*விபச்சாரம், மாந்திரீகம், கோபம், பொறாமை, கொலை மற்றும் சுயநல லட்சியம் ஆகியவற்றுடன் பட்டியலிடப்பட்டுள்ளது. (கலாத்தியர் 5:19-21).*

*தேவன் எனக்கு என்ன காட்டுகிறார் என்று நான் ஆழ்ந்து யோசித்தபோது, நான் அவருடன் சிறிது உடன்படவில்லை. சரி, ஆண்டவரே, விக்கிரகாராதனை என்பது உருவ வழிபாடுதான், சுயபச்சாதாபம் அல்ல. அப்போதுதான் சுயபச்சாதாப பாவத்தின் கொடூரத்தை காண என் கண்கள் திறந்தது. அது விக்கிரக ஆராதனை, ஏனென்றால் நாம் உள்நோக்கித் திரும்பி நம்மை நாமே விக்கிரகமாக்கிக் கொள்கிறோம். நம் வாழ்க்கையில் எல்லாமே நாம் எப்படி மோசமாக நடத்தப்பட்டோம், வாழ்க்கையில் நாம் எவ்வளவு இழந்து கொண்டிருக்கிறோம், வாழ்க்கை நமக்கு எவ்வளவு கடினமாக இருக்கிறது, பிறரிடம் உள்ளது நம்மிடம் இல்லையே என்பதைப் போன்று பல எண்ணங்களைக் கொண்டிருக்கிறோம்.*

*மற்றவர்களின் துன்பத்திலும் துரதிர்ஷடத்திலும் நாம் இரக்கமும், மனதுருக்கமும் காட்ட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். மற்றவர்களின் துன்பத்தை அகற்றுவதற்காக தேவனிடமிருந்து வந்த அந்த அற்புதமான திறனை நான் இருளான, எதிர்மறையான மேகத்திற்குள்ளே உழன்றுக் கொண்டு மற்றவர்களிடமிருந்து என்னை மூடிக்கொண்டு அதை தாறுமாறாக்கி விட்டேன்.*

*ஆம், சுயபச்சாதாபம் மற்ற பாவங்களைப் போலவே ஒரு பாவமாகும். நாமும் அதை ஒப்புக்கொண்டு வருந்த வேண்டும். அப்படியே நான் கொஞ்சம் எழுந்து, எழுதுவதை கொஞ்சம் நிறுத்தி ஒரு கப் காபி தயாரித்தேன், நான் இந்த முறை கப்கேக் சாப்பிடுகிறேன் (குறைந்தது அதில் பாதி, இது ஒரு கேரட் மஃபின் அதனால் அதில் காய்கறி இருப்பதால் ஓரளவு "சட்டபூர்வமானது"). நான் இப்போது அதை சாப்பிட முடியும். ஏனென்றால் எளிதாக என் உடல் எடை அதிகரிப்பதால், இருபது கிலோ குறைக்க வேண்டியிருப்பதால் எனக்காக வருத்தப்பட்டு என் நாளை தொடங்குவதற்கு பதிலாக, நான் இப்போது தினமும் காலையில் ஐந்து மைல்கள் நடக்கிறேன். அப்போது நான் பிரார்த்தனை செய்கிறேன். தேவனுக்குக்கு நன்றி செலுத்துகிறேன். நான் அந்த*

இருபது கிலோவை இழந்துவிட்டேன்! சுய பரிதாபத்தை விட்டு விடுவது, நீங்கள் தவறவிட விரும்பாத அற்புதமான பக்க விளைவுகளைக் கொண்டுள்ளது.

பாவம் செய்வதற்கான சோதனை எப்போதும் வரும், அதனால்தான் தேவன் நமக்கு சுயக்கட்டு என்ற ஆவியின் கனியை கொடுத்துள்ளார் (கலாத்தியர் 5:22-23). நான் ஒரு கடினமான நாளைக் கொண்டிருக்கும்போது என்னைப் பற்றி வருத்தப்பட சில சமயங்களில் நான் இன்னும் சோதிக்கப்படுகிறேன். ஆம்,டேவ் இன்னும் கால்பந்தைப் பார்க்கிறார், ஆனால் காரியங்கள் சிறப்பாக மாறிவிட்டது. அவர் இப்போது உணவு சமைத்த பாத்திரங்களையும் சுத்தம் செய்கிறார். சில சமயங்களில்,நான் உட்கார்ந்து தொலைக்காட்சி பார்க்கும் போது அவர் சலவை கூட செய்கிறார். தேவன் நிச்சயமாகவே ஆச்சரியமான காரியங்களைச் செய்கிறார்! மற்றவர்களைப் போலவே நானும் பாவம் செய்வதற்கான எந்த சோதனையும் எதிர்க்க வேண்டும். சில நாட்களில் நான் மீண்டும் ஒரு முறை வெற்றி பெறும் வரை நான் மீண்டும் மீண்டும் என்னை நினைத்து வருந்துவதற்கான சோதனையை எதிர்க்க வேண்டும். நான் வெகுதூரம் முன்னேறிவிட்டாலும், ஒவ்வொரு நாளும் தொடர்ந்து முன்னேற விரும்புகிறேன்.

சுய-பரிதாப, நோய்க்கான மருந்துகளில் இரண்டு, ஆக்ரோஷ நன்றியுடன் இருப்பதும் மற்றவர்களுக்காக காரியங்களைச் செய்வதுமாகும், ஏனெனில் நாம் இதைச் செய்யும்போது, நம் மனதை நம்மிடமிருந்து விலக்கி வைக்க இது உதவுகிறது. நம் எதிர்பார்ப்புகளைப் பற்றி யதார்த்தமாக இருப்பது மிகவும் உதவியாக இருக்கும். நீங்கள் எல்லாம் பரிபூரணமாக இருக்க வேண்டுமென்று நினைப்பீர்களென்றால், நீங்கள் அதிக ஏமாற்றத்தை எதிர் நோக்கி செல்கிறீர்கள், ஏனென்றால் யாரும் பரிபூரணமானவர்கள் அல்ல, யாருக்கும் பரிபூரணமான வாழ்க்கை இல்லை. நம் அனைவருமே விரும்பத்தகாத காரியங்களைக் கையாள வேண்டியிருக்கும். எல்லாமே வேடிக்கையாகவும், எளிதாகவும் இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது நமக்கு ஏமாற்றத்தை மட்டுமே தருகிறது.

சுய பரிதாபத்திற்கு மற்றொரு அற்புதமான தைலம் வெறுமனே எழுந்து வெளியே சென்று ஏதாவது செய்ய வேண்டும். எளிமையான ஏதாவது ஒன்றை, முற்றத்திற்குச் செல்வது அல்லது கொஞ்சம் நடைப்பயிற்சி செய்வது போன்றவை, அதன் சுழற்சியை உடைத்துவிடும். ஒவ்வொரு முறையும் உதவும் மற்றொரு காரியம் உங்களை சிரிக்க வைக்கும் ஒன்றைக் கண்டுபிடிப்பது. அச்சச்சோ, என்ன ஜாய்ஸ், வேடிக்கை காட்டுகிறீர்களா என்று நீங்கள் இப்போது சிந்திக்கவும் துணியாதீர்கள். என் வாழ்க்கையிலே சிரிக்க எதுவுமே இல்லை.

எல்லா சாக்குப்போக்குகளையும் கைவிட்டு, வாழ்க்கையில் உள்ள தடைகளைத் தட்டி அகற்றி விட்டு, நீங்கள் முன்னேறிச் செல்ல வேண்டிய நேரம் இது. தடைகளின் மறுபக்கத்திலே உங்கள் ஆத்துமாவுக்கு சுகமும், மகிழ்ச்சியான வாழ்க்கையும் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. சுய பரிதாபத்திலிருந்தோ அல்லது நான் குறிப்பிட்டுள்ள வேறு தடைகளிலிருந்தோ சுதந்திரமாக இருப்பது உங்கள் காயம்பட்ட ஆத்துமாவை குணப்படுத்துவதற்கான முழு பதிலாக நிச்சயம் இருக்காது. உங்களுக்கு வேறு உதவியோ அதிக நேரமோ தேவைப்படலாம்- ஆனால் இது நிச்சயமாக ஒரு சிறந்த தொடக்கமாகும், உங்களுக்கான காரியங்களை மேம்படுத்தும். முழு சுகத்திற்காக தேவனை நம்புங்கள், ஏனென்றால் இயேசு காயம் பட்டு வலி அனுபவிக்கும் எவ்விடத்திலும் உங்களை குணப்படுத்த முடியும்!

அத்தியாயம் 17

# உங்களுக்காக எழுந்து நிற்கவும்

*தைரியம் தொற்றிக் கொள்ளும் தன்மையுடையது. ஒரு துணிச்சலான மனிதன் ஒரு நிலைப்பாட்டை எடுக்கும்போது, மற்றவர்களின் முதுகெலும்புகளும் பெரும்பாலும் விறைத்துக்கொள்ளுகின்றன.*

*- பில்லி கிரஹாம்*

*சரித்திரம், சரியென்ற நிலைப்பாட்டை எடுத்து அதன் காரணமாக வரலாற்றையே மாற்றியவர்களின் கதைகளால் நிரம்பியுள்ளது. மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர், எலினோர் ரூஸ்வெல்ட், ரோசா பார்க்ஸ், ஆலிஸ் பால், சூசன் பி. அந்தோனி மற்றும் இது போன்ற இன்னும் பலர். பலருடைய வரலாற்றை மாற்ற நீங்கள் பயன்படுத்தப்படலாம். அப்படி இல்லையெனில், நீங்கள் குறைந்தபட்சம் உங்கள் சொந்த வரலாற்றையாவது மாற்றும் ஒருவராக இருக்கலாம். உங்கள் வலிமிகுந்த கடந்த காலம் உங்கள் விதியாக இருக்க வேண்டியதில்லை - உங்களைத் துன்புறுத்திய மற்றவர்களின் தவறான நடத்தைக்கு எதிராக நீங்கள் ஒரு நிலைப்பாட்டை எடுக்கலாம். மேலும் நீங்கள் அப்படி செய்யும் போது, நீங்கள் ஒரு உதவியற்ற பலியாக உணராமல், பலம் பெற்றவராக உணர்வீர்கள்.*

*துஷ்பிரயோகப்பட்ட அல்லது தவறாக நடத்தப்பட்ட நபர்கள் தைரியமாக இருக்க வேண்டும். தங்களுக்கென்று பேச வேண்டும் மற்றும் தங்களை பாதுகாக்க ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்படும் பெரும்பாலானவர்கள், எதிர்கொள்ளப்படும் போது பின்வாங்கிவிடுவார்கள். பல வருடங்களாக ஒரு வழக்கை நான் அறிந்திருக்கிறேன். அதில் அந்த வீட்டில் உள்ளவன் தன் வழியில், எதிர்பார்த்தபடி காரியங்கள் நடைபெறாத*

போது, பிறரை, கட்டுப்படுத்தி, இழிவுபடுத்தி, சட்டென்று ஆத்திரமடைவதுண்டு. அவரது மனைவியோ சாந்தமான பயந்த சுபாவம் கொண்டவர். எனவே அவர் பல ஆண்டுகளாக அவரது நடத்தையை வெறுமனே பொறுத்துக்கொண்டிருந்தார். அவள் இறுதியாக அவருக்கு எதிராக நிற்கத் தொடங்கினார், அவர்கள் இன்னும் முன்னேற வேண்டியிருந்தாலும், அவர் அவளை ஓரளவு சிறப்பாக நடத்துகிறார். அவரிடம் உள்ள அவரது கோபப் பிரச்சினை குறித்து ஆலோசனை பெற்று வருகிறார். மேலும் அவர் உண்மையில் ஒரு ஆலோசனை அமர்வில், அவள் இனி அவனது மோசமான நடத்தையை பொறுத்துக்கொள்ள விரும்பாதலால், அவனை எதிர்கொள்வதால், அவன் அவளை நன்றாக நடத்துகிறான் என்று ஒப்புக்கொண்டார்.

பெரும்பாலான கட்டுப்படுத்தும் நபர்கள், மற்றவர்கள் எதையெல்லாம் பொறுத்துக் கொள்கின்றனரோ அதையெல்லாம் அவர்களுக்கு செய்வார்கள். அவர்கள் மற்றவர்களை நன்றாக நடத்துவது சரியான காரியம் என்பதால் சரியாக நடத்தினால், அவர்களின் குணத்தைப் பற்றி இன்னும் நல்ல விஷயங்களைச் சொல்ல முடியும் என்றாலும், அவர்கள் அப்படி செய்ய மாட்டார்கள். துஷ்பிரயோகம் செய்பவர்கள் பொதுவாகவே அவர்களின் மோசமான நடத்தையை சாந்தமாக பொறுத்துக்கொள்ளும் நபர்களை அவமதிப்பார்கள். உண்மையிலே அவர்களின் ஒரு பகுதி யாராவது அவர்களை எதிர்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறது. அவர்கள் முதலில் மோசமாக நடந்துகொள்ளலாம், ஆனால்அவர்கள் துஷ்பிரயோகத்தை நிறுத்த, நீண்ட காலத்திற்கு அது நிலைக்க அதுதான் ஒரே வழி.

நிச்சயமாகவே, எதிர்கொள்ளுப்படும் போது இன்னும் அதிகமாக கோபமடைந்து, வன்முறையாக மாறுபவர்களும் இருக்கிறார்கள். அப்படியானால், அவர்களிடமிருந்து விலகிச் செல்வதே சிறந்த வழி. என் அம்மா மட்டும் என் தந்தையை எதிர்கொண்டிருந்திருப்பாரானால் என் வாழ்க்கை எவ்வளவு வித்தியாசமாக இருந்திருக்கும் என்பதை என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. ஆனால் அவர் ஒருபோதும் அப்படி செய்யாததால், அவர் தன்னை மட்டுமல்ல, என் சகோதரனையும், என்னையும் கூட காயப்படுவதற்குட்படுத்தினார்.

அவர் பயப்பட்டார் என்பதுதான் அவரின் ஒரே சாக்கு போக்கு. பயம் என்பது நம்மை முன்னேற விடாமல் தடுக்கும் ஒரு உணர்வு, அல்லது நாம் செய்ய வேண்டும் என்று நமக்குத் தெரிந்ததைச் செய்ய விடாமல் தடுக்கிறது. ஆனால் நாம் “அதை பயந்துக் கொண்டே செய்ய வேண்டும் என்றாலும் கூட, நமக்காக எழுந்து நிற்க கற்றுக்கொள்ளலாம்.”

ஆபிரகாம் லிங்கன், “உங்கள் கால்கள் சரியான இடத்தில் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள், பின்னர் உறுதியாக நிற்கவும்.” என்றார். நாம் ஒரு நிலைப்பாட்டை எடுப்பது முக்கியமானதே, ஆனால் அது சரியான முறையிலே செய்யப்பட வேண்டும். தங்களுக்காக நிற்க வேண்டுமென்ற செயல்பாட்டில், தாங்கள் காயப்பட்டதை விட மற்றவர்களை அதிகமாக காயப்படுத்தியவர்களை நான் அறிந்திருக்கிறேன். என் சொந்த வழியில் செய்யாமல் தேவனுடைய வழியில் காரியங்களை செய்ய நான் கற்றுக் கொள்ளும் வரை சிறிது காலம் நானும் அத்தகையவர்களுள் ஒருவளாக இருந்தேன்.

நான் என் தந்தையிடமிருந்து விலகியவுடன் யாரும் என்னை அவர்கள் இஷ்டத்திற்குப் பயன்படுத்தவோ, துஷ்பிரயோகம் செய்யவோ அனுமதிக்கமாட்டேன் என்று நான் தீர்மானித்திருந்தேன். ஆனால் அந்த செயல்முறையில் நான் கலகக்காரியாகவும், கட்டுப்படுத்துகிறவளாகவும் ஆனேன். நான் நாளடைவில் மாற ஆரம்பித்தேன். ஆனால் அது டேவ் என்னை எதிர்கொள்ள தொடங்கிய பிறகே. அவர், எதிர்கொள்ளும் அளவுக்கு அக்கறை என்பதைப் பற்றி ஒரு புத்தகத்தைப் படித்தார், மேலும் அவர் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை அவருக்குத் தெரியப்படுத்த தேவன் அதைப் பயன்படுத்தினார்.

சரியான நேரம் மிகவும் முக்கியமானது. நாம் எப்போதும் ஜெபிக்க வேண்டும் மற்றும் எதிர்கொள்ள சரியான நேரத்திற்காகவும், இடத்திற்காகவும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். டேவ் பல ஆண்டுகளாக எனக்காக ஜெபித்தார், ஏனென்றால் நான் மோசமாக நடந்துகொண்டிருந்தேன், ஏனென்றால் நான் மிகவும் ஆழமாக காயப்பட்டிருந்தேன். அவருடைய பிரார்த்தனைகள் என் இருதயத்தை மாற்ற உதவியது என்று நான் உண்மையிலேயே

நம்புகிறேன். தேவன் என்னில் கிரியை செய்து எனக்குக் கற்பித்துக் கொண்டிருந்தார்.

நான் உண்மையிலேயே மாற விரும்பும் அந்த நிலைக்கு வந்தேன், ஆனால் டேவ் என்னை எதிர்கொண்டது தான் என் பிரச்சனைகளை தீவிரமாக எடுத்துக் கொள்ளச் செய்து, அவற்றைப் பற்றி ஏதாவது செய்யத் தொடங்க வேண்டும் என்று எனக்கு உணர்த்தியது என்று என்னால் நேர்மையாக சொல்ல முடியும்.

நான் உணர்ந்த ஒரு விஷயம் என்னவென்றால், மற்ற ஆண்களால் எனக்கு செய்யப்பட்ட காரியங்களுக்கான விலையை நான் டேவிடமிருந்து பெற்றுக் கொள்ள முயற்சித்தேன், அது அவருக்கு முற்றிலும் அநீதியானது. நான் அவரை குடும்பத்தின் தலைவராக இருக்க அனுமதித்தால், மற்ற எல்லா ஆண்களும் செய்ததைப் போல அவரும் என்னைப் பயன்படுத்திக் கொள்வார் என்று நான் பயந்தேன். அதை நான் இனி ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று உறுதியாக இருந்தேன். எனது கடந்த காலத்தில் ஏற்பட்ட வலிக்கு தேவனால் மட்டுமே எனக்கு திருப்பிச் செலுத்த முடியும் என்பதையும், என்னை காயப்படுத்திய மற்ற மனிதர்களைப் போல் டேவ் இல்லை என்பதையும் நான் நம்ப வேண்டும் என்பதை நான் இறுதியாகக் கற்றுக்கொண்டேன்.

உங்களுக்காக எழுந்து நில்லுங்கள், ஆனால் அதை சரியான வழியில் செய்யுங்கள். தெய்வ பக்தியற்றவர்களின் நடத்தையை சமாளிக்க முயற்சிக்கும் போது பக்தியற்றவர்களாக மாறாதீர்கள். தனது இருபதுகளிலிருக்கும் ஒரு பெண்ணை நான் அறிவேன், அவள் ஒரு கோபத்தால் வெடிக்கும், மிகவும் கட்டுப்படுத்தும் தந்தையுடன் வளர்ந்தாள். அவள் ஆரம்பத்திலே அவனுடைய கோபத்திற்கு பயந்தாள், அதனால் அவள் பதட்டமாகவும், கவலையாகவும் இருந்தாள். ஏனென்றால் அவள் பாதுகாப்பான சூழலில் இருப்பதாக உணரவில்லை. ஆனால் நாளடைவில் அவள் குரல் கொடுக்க தொடங்கினாள். அவள் நிச்சயமாக யாரையும் அவளைக் கட்டுப்படுத்த அனுமதிக்க

> மற்றவர்களின் தெய்வபக்தியற்ற நடத்தையை சமாளிக்க முயற்சிக்கும் போது தெய்வீகமற்றவர்களாக மாறாதீர்கள்.

மாட்டாள். ஆனால் அவள் தன் மனோபாவத்தில் அளவுக்கு மிஞ்சியவளாக மாறி, மற்ற யாரேனும் அவளை விட வித்தியாசமான கருத்தை தெரிவித்தாலும் கூட அவளை கட்டுப்படுத்த முயற்சிப்பது போல் அடிக்கடி நடந்து கொள்வாள். பொதுவாக பெண்கள் ஓரங்கட்டப்படுகிறதாகவும், பணியிடத்தில் குறைவாக மதிப்பிடப்படுகிறதாகவும் உணர்கிறாள். மேலும் சில தவறுகளை சரிசெய்வதில் அவள் உறுதியாக இருக்கிறாள். அவளுடைய நோக்கம் நல்லதாக இருந்தது, ஆனால் அவளுடைய செய்முறைகள் சரியாக இல்லை. அவள் ஒரு தீவிர பெண்ணியவாதியாக மாறுகிறாள், அவள் பல விஷயங்கள் தவறாக நடத்தப்படுகிறதாகவே காண்கின்றாள், ஆனால் உண்மையில், அது அப்படியிருக்கிறதில்லை. சம உரிமையை விட பெண்களுக்கு சிறப்பு உரிமை வேண்டும் என்பது போல் நடந்து கொள்கிறாள்!

ஒரு பெண் தீவிரமாக தவறாக நடத்தப்பட்டால், காரியங்களையும், மக்களையும் அவள் வலியின் மூலம் அவர்களை நியாயந்தீர்த்துக் கொண்டிருக்கும் வரை சமநிலையாக பார்க்கும் திறன் அவளுக்கு இருக்க வாய்ப்பில்லை. எது சரியோ அதற்குள் நம்மை வழிநடத்த தேவனுடைய வார்த்தை நமக்குத் தேவை. அதற்குக் கீழ்ப்படிந்து, அதை நம் வாழ்வில் எல்லாவற்றிக்கும் மேலான அதிகாரமாகக் கருதும் கீழ்ப்படிதலுள்ள இருதயம் நமக்குத் தேவை. தேவனுடைய வார்த்தையைப் படித்ததின் மூலமே சரியான நடத்தை என்ன என்பதை நான் கற்றுக்கொண்டேன். அது தான் ஒரே வழியாக இருந்தது. நாம் எப்போதுமே என்ன சரியோ அதை செய்ய விரும்புவதில்லை. ஆனால் நாம் செய்ய விரும்புவது அல்லது செய்ய விரும்புவது போல தோன்றுவது தேவனுடைய வார்த்தைக்கு உடன்படவில்லை என்றால், தேவனுடைய வழிகள் எப்போதுமே சரியானவை, சிறந்த பலனைத் தருகின்றன என்பதை அறிந்தவர்களாக நாம் அவருடைய வழிகளுக்கு நம்மை சமர்பிக்கலாம்.

## தேவனைப் பின்பற்றுங்கள், மனிதனை அல்ல

வேதத்திலே, தங்களுக்காக எழும்பி நின்ற ஆண்களையும், பெண்களையும் பற்றிய பல நல்ல உதாரணங்கள் உள்ளன.

தேவனை நம்பி, ஜன்னல்களைத் திறந்து வைத்து தினமும் மூன்று வேளை ஜெபித்த ஒரு இளைஞன் தான் தானியேல். அவரைத் தவிர வேறு கடவுளிடம் யாரும் பிரார்த்தனை செய்ய கூடாது அல்லது அவர்கள் சிங்கக் குகைக்குள் தள்ளப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்று அரசர் உத்தரவு பிறப்பித்தார். தானியேல் தன் அறைக்குள் சென்று ஜன்னல்களைத் திறந்து, முன்பு செய்ததைப் போலவே தொடர்ந்து பிரார்த்தனை செய்தார். அவர் சிங்கங்களின் குகைக்குள் தள்ளப்பட்டார்; இருப்பினும், தேவன் அவருடன் இருந்தார், அவரை பாதுகாப்பாக விடுவித்தார். சிங்கங்கள், தானியேலை சேதப்படுத்தாதபடி சிங்கங்களின் வாயை அடைக்க அவர் ஒரு தூதனை அனுப்பினார். (தானியேல் 6:7-22).

இயேசுவின் நாமத்திலே பிரசங்கித்தால் சிறையில் அடைக்கப்படுவார்கள் மற்றும் அடிக்கப்படுவார்கள் என்று அச்சுறுத்தப்பட்டு அப்போஸ்தலர்களுக்கு பிரசங்கிக்க தடை விதிக்கப்பட்டது, ஆனாலும் அவர்கள் பிரசங்கித்தார்கள். அவர்கள் அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால் அவர்களை அற்புதமாக விடுவிக்க தேவன் ஒரு தூதனை அனுப்பினார், சிறைச்சாலைக்காரனும் அவன் வீட்டாரும் தேவனை விசுவாசித்தனர் (அப் 16). நீங்கள் தேவனுடைய வழியில் காரியங்களைச் செய்தால், நீங்கள் ஒரு காலத்திலே அதே வகையான வலியை அனுபவிக்கும் பலருக்கு உதவ அவரால் நீங்கள் பயன்படுத்தப்படலாம்.

ரோசா பார்க்ஸ் என்ற ஒரு கறுப்பின தையல் தொழிலாளி, சட்டப்படி பேருந்தில் தனது இருக்கையை ஒரு வெள்ளைக்காரனுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் அவள் மறுத்துவிட்டாள். அவளது மறுப்பு அமெரிக்காவில் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் தலைமையிலான சிவில் உரிமைகள் இயக்கத்தைத் தூண்டியது. ரோசா மனுஷர்களின் கோரிக்கைகளுக்குப் பதிலாக தனது இருதயத்தைப் பின்பற்றினார், அவளது துணிச்சலான செயல்களின் முடிவுகள் இன்றும் சாட்சியிடுகின்றன.

# உறுதியுடன் இருப்பது அழுத்தத்தைக் குறைக்கும்

*நான் சமீபத்தில் உறுதியான தன்மையைப் பற்றிய ஒரு சுவாரஸ்யமான கதையைப் படித்தேன். ஒரு சிறிய நூலகத்தின் இயக்குனர் மிட்வெஸ்ட், மார்சியா (அவரது உண்மையான பெயர் அல்ல), அவர் பல ஆண்டுகளாக சாந்தமாகவும் மென்மையாகவும் இருந்தார்.அவர் கூறுகிறார்: "நான் எல்லா விதங்களிலும் பிறர் என்னை அவர்களின் இஷ்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதித்தேன். அதனால் நானும் பல நேரங்களில் மிகவும் மகிழ்ச்சியற்றவளாகவே இருந்தேன்."*

*ஆனால் ஒரு நாள் அவள் தனக்காக எழுந்து நின்றாள், எல்லாம் மாறியது. மார்சியா வேலையில் ஒரு சிறிய பிழையை செய்துள்ளார், அதனால் அந்த நூலக அறங்காவலர், பயமுறுத்துதலுக்கு பெயர் பெற்ற அவர், மார்சியாவின் தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு, நகலெடுக்கும் வகையில், அவளைக் கண்டித்து மின்னஞ்சல் அனுப்பினாள், அதின் நகலை அந்த குழுவிலிருந்த பிறருக்கும் அனுப்பினாள்.*

*மார்சியா தவறை ஒப்புக்கொண்டார். தனது தவறுக்கு மன்னிப்பு கேட்டார். பின்னர் அவர் அந்த அறங்காவலரிடம் தன்னை மோசமாக காட்டுவதற்காக அந்த நகலை மின்னஞ்சலில் முழு குழுவினருக்கும் அனுப்ப வேண்டாம் என்று கேட்டார். சரி, அடுத்த நாள், இந்த கொடுமைக்கார முதலாளி நூலகத்திற்கு வந்து மர்சியாவை அவளுடைய முழு ஊழியர்களின் முன்னிலையிலும் நேரில் கண்டித்தார்.*

*"நான் உடைந்துப் போனேன்," என்றார் மார்சியா. "நான் எழுந்து நின்று, என்னைப் பொறுத்த வரை, இந்த உரையாடல் முடிந்தது. நீங்கள் தவறை முழுமையாக தெளிவுபடுத்தினீர்கள். நான் மன்னிப்பு கேட்டேன். அது முடிந்துவிட்டது. என்றாள்."*

*அப்போதுதான் ஒரு சுவாரஸ்யமான விஷயம் நடந்தது: அந்தப் பெண் பின்வாங்கி, "சரி, இப்போது எங்களுக்கு தெரிந்துவிட்டது." அதாவது மார்சியா இறுதியாக வேலைக்குத் தேவையான உறுதியான தன்மையை வெளிக் காட்டியிருக்கிறார் என்றார்.*

மார்சியா அன்றிலிருந்து முன்னர் மாதிரி இருக்கவில்லை. அவள் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளும் சக்தியைக் கண்டுபிடித்து, கொடுமைப்படுத்தப்படுவதிலிருந்தும், முதுகில் குத்தப்படுவதிலிருந்தும், இஷ்டம் போல பயன்படுத்தப்படுவதிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டாள்.[24]

சாந்தம் என்பது இயேசு வெளிப்படுத்திய ஒரு குணம் என்றாலும், அவர் நம் ஒவ்வொருவரையும் வளர்த்துக்கொள்ள ஊக்குவித்தாலும். உண்மையான தெய்வீக சாந்தம் என்பது உலகம், சாந்தம் என்று அழைப்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. உண்மையான சாந்தம் என்பது கட்டுப்பாட்டிலிருக்கும் பலம். அப்படியென்றால் எதையாவது செய்ய நமக்கு பலம் இருக்கிறது, ஆனால் தேவன் நம்மை வழிநடத்தும் வரை நாம் அவ்வாறு செய்ய மாட்டோம் என்பது அதன் அர்த்தம். சாந்தம் என்று உலகம் அழைக்கும் பெரும்பாலானவை பலவீனம் மற்றும் பயம் மட்டுமே.

சமாதானத்துடன் ஒன்றாகப் பழகுவது உறவுகளுக்கு அமைதியான அணுகுமுறையாகத் தெரிகிறது. அதே சமயம் அது துல்லியமானதாகவும் இருக்கலாம் உண்மையிலே, நமக்குத் தேவைப்படும் போது உறுதியுடன் இருக்கக் கற்றுக்கொள்வது, நமக்கு என்ன வேண்டும் மற்றும் தேவை என்பதை கேட்க வேண்டும், தேவைப் படும் போது வேண்டாம் என்று சொல்ல வேண்டும். நமக்கு உரிய மரியாதையை கோர வேண்டும். இது மிகவும் பயனுள்ள, குறைந்த மன அழுத்தம் கொண்டதாக இருக்கிறது. நமக்காக நாம் ஒரு நிலைப்பாட்டை எடுக்கும்போது, நாம் எல்லைகளை அமைத்துக் கொள்கிறோம்.

நாம் நமக்காக எழுந்து நிற்கும்போது மற்றவர்கள் செய்வதை நாம் கட்டுப்படுத்த முயற்சிக்கவில்லை, மாறாக அவர்கள் நமக்கு என்ன செய்கிறார்களோ அதை நாம் கட்டுப்படுத்துகிறோம். நாம் நமது செயல்களாலும் வார்த்தைகளாலும், அவர்கள் நம்மை கொடுமைப்படுத்தி, இழிவுபடுத்தும் போது நாம் இனியும் செயலற்றவர்களாக

> உங்களுக்காக நீங்கள் ஒரு நிலைப்பாட்டை எடுக்கும்போது, நீங்கள் எல்லைகளை அமைக்கிறீர்கள்.

இருக்க மாட்டோம் என்பதை சொல்கிறோம். நாம் நம்மை மதிக்கிறோம், அவர்களும் நம்மை மதிக்க, எதிர்பார்க்கிறோம் என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்துகிறோம்.

நீங்கள் யாரையாவது ஒரு விஷயத்தைப் பற்றி எதிர்கொள்ளப் போகிறீர்கள் என்றால், அதை மின்னஞ்சலிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அதையே செய்ய நான் பரிந்துரைக்க மாட்டேன். முடிந்தால், நேருக்கு நேர் பார்ப்பது சரி செய்வது தான் சிறந்தது, ஏனென்றால் நம் வார்த்தைகள் கேட்கப்படும் போது, நம் நடத்தை, முகபாவங்கள் மற்றும் உடல் மொழியையும் அவர்கள் காணலாம். உறுதியான ஒன்றை நம் முகத்தில் காட்டுவதை விட புன்னகையுடன் கூறும் போது அதை ஏற்றுக் கொள்வதற்கு எளிதாக இருக்கும். இடுப்பில் கைகளை வைத்து விறைப்பாக நின்று பேசுவதை விட வசதியாக நாற்காலியில் அமர்ந்து கொண்டு பேசுவது மிக பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும். உங்கள் குரல் கனிவாக ஆனால் உறுதியாகவும், தீர்மானத்துடனும் இருக்க வேண்டும். வேதம் சொல்கிறது: “சாந்தமான பதில் கோபத்தைத் தணிக்கும், ஆனால் கடுமையான வார்த்தை கோபத்தைத் தூண்டும்” (நீதிமொழிகள் 15:1).

பொதுவாக நாம் கோபமாக இருக்கும் போது எதிர்கொள்ளாமலோ அல்லது மிகவும் உறுதியுடன் இல்லாமலோ இருப்பது நல்லது. ஏனென்றால் பரிசுத்த ஆவியானவரை விட நாம் உணரும் கோபம் தான் அந்த சமயத்தில் நம்மைக் கட்டுப்படுத்துகிறது. ஒரு சூழ்நிலையை எதிர்கொள்ள காத்திருப்பது எப்போதும் அவ்வளவு சரியாக இருக்காது. ஆனால் எப்போது சாத்தியமோ அப்போது அது சிறந்ததாக இருப்பதை கண்டிருக்கிறேன்.

நாம் தவறாக நடத்தப்படுகிறோம் அல்லது அவமதிக்கப்படுகிறோம் என்பதை அறிந்திருந்தும், நாம் எதுவும் செய்யாமலிருப்பது, மன அழுத்தத்தை உருவாக்குகிறது. ஏனென்றால் அது சரியல்ல என்பதை அறிந்தும், நாம் அதை அனுமதித்துக் கொண்டிருப்பதால் உண்மையில் நம்மை நாம் அதிகம் விரும்புவதில்லை. நம் இருதயம் ஏற்காத காரியங்களை செய்வது எப்போதுமே மன அழுத்தத்தை உருவாக்குகிறது. நாம் தவறு என்று தெரிந்ததைச் செய்தாலும், அல்லது சரி என்று நமக்குத் தெரிந்த ஒன்றைச் செய்யாமல் இருந்தாலும் அழுத்தமே ஏற்படுகின்றது.

## முதல் படி மிகவும் கடினமாக இருக்கலாம்

*நீங்கள் உங்களுக்காக பேசாமல் இருந்த அல்லது சமாதானமாக இருக்கவே பழகி இருந்த வரலாறு உங்களுக்கு இருக்குமென்றால், அதிகமாக உறுதியாக இருப்பதற்கான முதல் படியை எடுப்பதும், உங்கள் குரலை தொனிக்க அனுமதிப்பதும் மிகவும் கடினமாக இருக்கும். நீங்கள் முதல் முறையாக அப்படி செய்யும் போது ஒரு நல்ல பலனைக் கூட பெறாமல் இருக்கலாம்.*

*எனக்கு, மிகவும் கட்டுப்படுத்தும் அதிகாரி ஒருவர் இருந்தார். பல ஆண்டுகளாக அவரை எதிர் கொள்ளாமலிருந்து பின்பு ஒருமுறை அவரை எதிர் கொண்ட போது, அவர் மிகவும் கோபமடைந்து நாங்கள் இருந்த உணவகத்தை விட்டு வெளியேறினார். இந்த தருணத்தில், என்னுடைய எதிர் கொள்ளுதல் அவரை மாற்றவில்லை. ஆனால் நான் வேறொரு இடத்தில் வேலைக்குப் போக வேண்டும் என்று அது என்னை நம்ப வைத்தது. பின்னர் அதைத்தான் நானும் செய்தேன். எனது எதிர் கொள்ளுதல் அவரை மாற்றாமல் இருக்கலாம். ஆனால் அது என்னை மாற்றியது, உண்மையில் என்னை இன்று நான் இருக்கும் ஊழியத்திற்கு என்னை வழிநடத்தி என் வாழ்க்கை பாதையை நிலைநிறுத்தியது.*

*ஒரு நிலைப்பாட்டை எடுப்பதற்கான பயம் உங்களால் இருக்க கூடிய அனைத்திலிருந்தும், உங்களால் செய்யக்கூடிய அனைத்தையும் செய்வதிலிருந்தும் உங்களைத் தடுக்க வேண்டாம். நீங்கள் உங்கள் வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றாவிட்டால் நீங்கள் ஒரு போதும் மன நிறைவுடனும், திருப்தியுடனும் இருக்க மாட்டீர்கள். யாரோ ஒருவர் உங்களை துஷ்பிரயோகம் செய்யவோ, அல்லது தவறாகப் பயன்படுத்தவோ செயலற்ற முறையில் அனுமதிப்பீர்கள். நீங்கள் மிகவும் மதிப்புமிக்கவர். ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய நேரம் இது!*

> *எவரும் உங்களை துஷ்பிரயோகம் செய்ய அனுமதிக்க நீங்கள் மிகவும் மதிப்புமிக்கவர்.*

## அத்தியாயம் 18

# எல்லைகளை அமைக்கவும் - சுவர்களை கட்ட வேண்டாம்

*நீங்கள் பொறுத்துக்கொள்வதை நீங்கள் பெறுவீர்கள்.*

*- ஹென்றி கிளவுட்*

*மக்கள் உங்களை அவர்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று நீங்கள் கருதுவதால் நீங்கள் கோபப்படுகிறீர்களா? ஒருவேளை நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் சில எல்லைகளை நிறுவ வேண்டியது தான். எல்லை என்பது உங்கள் சொத்துக்களை பாதுகாக்கும் வேலி போன்றது. எனக்கு வேலி இல்லை என்றால் அக்கம் பக்கத்தினரின் நாய்கள், தங்கள் காலை நடைப்பயிற்சியில் ஈடுபடும்போது என் முற்றத்தில் கழிவினைக் கழித்தால் நான் நாயைக் குறை சொல்ல முடியாது. ஒன்று நான் புகார் செய்யாமல் அவற்றை சுத்தம் செய்ய வேண்டும் அல்லது வேலி போட வேண்டும்.*

*நான் சொன்ன என்னைக் கட்டுப்படுத்தும் முதலாளியைப் பற்றி நான் தேவனிடம் புகார் செய்தது எனக்கு நினைவிருக்கிறது. ஆனால் தேவனோ, நான், அவர் என்னைக் கட்டுப்படுத்த அனுமதித்ததால், அவரைப் போலவே நானும் குற்றவாளி என்று என்னிடம் கூறிய போது நான் ஆச்சரியப்பட்டேன். ஐயோ! நம் வாழ்வின் அனைத்து பகுதிகளிலும் எல்லைகளை நிறுவுவது முக்கியம். நாம் நிர்ணயிக்கும் சில எல்லைகள் நமக்கானவை: அவை நமது உணவுப் பழக்கம், பட்ஜெட், நாம் எவ்வளவு வேலை செய்கிறோம், எவ்வளவு ஓய்வெடுக்கிறோம் என்பதற்கான எல்லைகளாக இருக்கலாம்.மேலும் மற்ற விஷயங்கள் நமது அன்றாட வாழ்வில் ஆரோக்கியமான ஒழுங்குமுறைகளைக்*

கொண்டிருக்க உதவும். நாம் அமைக்கும் மற்ற எல்லைகள் மக்களுக்கானவை. இந்த எல்லைகள் நம்மை காயப்படுத்துவதைத் தடுக்கின்றன. மேலும் அவைகள் ஒருவர் நம் உறவை விரும்பினால், அந்த உறவில் அவர்கள் நம்மை அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள அவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதை அவர்கள் உணர உதவுகின்றன.

ஒருவேளை நீங்கள் ஒரு கனிவான இருதயம் கொண்ட ஒரு உதவிகரமான நபராக இருக்கலாம். ஆனால் தங்களைக் கவனித்துக் கொள்ள எந்த முயற்சியும் செய்யாத பிறரைக் கவனித்துக் கொள்ளும் பழக்கத்தை நீங்கள் உருவாக்காமலிருக்க கவனமாக இருக்க வேண்டும். உதவியை விரும்பாத ஒருவருக்கு உதவ முயன்று நீங்கள் தேய்ந்து விட்டீர்களா?

நீங்கள் ஒருவருக்கு வேண்டியதையெல்லாம் கொடுத்து உதவியதால் அவர் உங்களை சார்ந்து இருக்க அனுமதித்திருக்கின்றீர்களா? அவர் இப்போதும் உங்களை மிகவும் சார்ந்து இருப்பதை வெறுக்கிறீர்கள் ஆனாலும் தொடர்ந்து அவர்களுக்கு உதவுகிறீர்களா? இந்தக் கேள்விகளுக்கு நீங்கள் ஆம் என்று சொல்வீர்களென்றால், அந்த உறவுகளில் உங்களுக்கு எல்லைகள் தேவை என்று அர்த்தம்.

தேவனுடைய வார்த்தை, நாம் சிந்தனையுடன் இருக்கக் கற்றுக்கொடுக்கிறது, ஆனால் அது ஞானமான சிந்தனையுடன் செயல்பட நம்மைத் தூண்டுகிறது (நீதிமொழிகள் 1:3). அது, புத்திசாலித்தனமான சிந்தனையின் ஒழுக்கத்தை நாம் பயன்படுத்த வேண்டும் என்று உண்மையில் கூறுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நீங்கள் ஒருவருக்கு உதவ விரும்பலாம், ஆனால் உங்களை நீங்களே கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால் உங்கள் இருதயத்தின் ஆழத்திலே நீங்கள் அவர்களுக்கு உதவாமலிருந்தால் அது அவர்களுக்கு நன்மையாக இருக்கும் என்று அறிந்திருக்கிறீர்கள். தங்கள் குழந்தைகளுக்கு அதிகமாக உதவும் பெற்றோர்கள், அவர்களுக்காக அதிகமாக செய்யும் பெற்றோர்கள், அவர்களுக்கு எப்போதெல்லாம் பிரச்சனை ஏற்படுகின்றதோ அப்போதெல்லாம் அவர்களைக் காப்பாற்றுவார்களென்றால், அவர்கள் எதிர்காலத்திற்குத் தயாராக

அவர்களுக்கு உதவுவதில்லை. அவர்கள் உண்மையிலே அவர்களை பொறுப்பற்றவர்களாக்குகிறார்கள்.

யாராவது உங்களிடம் ஏதாவது கேட்டால், அது ஒரு உதவியாக இருந்தாலும், ஒரு திட்டத்திற்கான உதவியாக இருந்தாலும் அல்லது நிதி உதவியாக இருந்தாலும், அவர்கள் அவர்களின் கோரிக்கைக்கு நீங்கள் ஆம் என்று சொல்ல வேண்டும் என்று விரும்புவார்கள், ஆனால் எப்போதுமே அவர்கள் கேட்க விரும்புவதை அவர்களுக்குச் சொல்வது நல்லதல்ல. நாம் அப்படி செய்யும் போது, தேவனை பிரியப்படுத்துவதற்குப் பதிலாக மக்களைப் பிரியப்படுத்துபவர்களாக மாறும் அபாயத்தில் நாம் இருக்கிறோம். நாம் மற்றொருவருக்கு ஏதாவது செய்யும்படி கேட்கப்படும் போது, நாம் இதயப்பூர்வமான, நேர்மையான பதில்களை கொடுக்க வேண்டும்.

நம் இருதயத்தைப் பின்பற்றக் கற்றுக்கொள்ளுவது நம் ஒவ்வொருவருக்கும் முக்கியமானது. அப்படியென்றால் எல்லாவற்றிலும் தேவனுடைய வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும். தேவனுடைய வார்த்தை, நாம் அன்பினால் உண்மையைப் பேச வேண்டுமென்று நமக்குக் கற்பிக்கிறது (எபேசியர் 4:15), ஏனென்றால் நேர்மையற்ற உறவு ஆரோக்கியமற்றது.

தேவன் எவ்வளவு அதிகமாக நம் வாழ்வில் கிரியை செய்து காயப்பட்ட நம் ஆத்துமாக்களைக் குணப்படுத்துகிறாரோ, அவ்வளவு அதிகமாக மற்றவர்களுக்கு உதவுவதில் மகிழ்ச்சி அடைகிறோம், அது நல்லது என்றாலும், மக்கள் நம்மை அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எனக்கு பல ஒருதலைப்பட்ச உறவுகள் இருந்தன, அதில் நான் எல்லாவற்றையும் கொடுத்தேன், மற்ற தரப்பினர் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டிருந்தனர் என்று பல ஆண்டுகளுக்கு முன்பு நான் உணர்ந்தேன். நான் சில எல்லைகளை அமைக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். நான் எப்போதும் தேவைப்படும் நபர்களுக்கு உதவுவேன், ஆனால் அது அதிகமாகி விட்டாலோ அல்லது நான் நேசிக்கப்படாமல், கவனித்துக்கொள்ளப்படாமல்

அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்தப்படுவதாக உணர்ந்தால் நான் நிறுத்திக் கொள்கிறேன். எதையாவது திரும்பப் பெறுவதற்காக நாம் ஒருபோதும் கொடுக்கக்கூடாது, ஆனால் எல்லா உறவுகளும் ஆரோக்கியமாக இருக்க எல்லைகள் தேவை. தேவன் கூட நம்முடனான உறவில்,அவருடன் நேரத்தைச் செலவிடுவதிலோ அல்லது அவருக்குச் சேவை செய்வதிலோ நாம் ஆர்வம் காட்டாமல் இருக்கும் போது, எல்லாவற்றையும் கொடுக்க தயாராக இல்லாத நிலையை அடைகிறார். அவர் ஒரு அன்பான மற்றும் தாராளமான தந்தை, அவர் நம்மை நேசிப்பதை நிறுத்த மாட்டார். மேலும் நாம் அவருடனான உறவில் குழந்தை நிலையில் இருக்கும்போது, அவர் கொடுக்கிறார் மற்றும் கொடுக்கிறார் மற்றும் கொடுக்கிறார், ஆனால் இறுதியில் நாம் திரும்பக் கொடுக்கத் தொடங்காமல் இருப்பது நல்லதல்ல.

உதவி செய்வது மற்றும் கொடுப்பதோடு கூட அன்பு கண்டிக்கிறது, மேலும் சிட்சிக்கின்றது . பிறர் நம்மை அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள நாம் அனுமதித்தால் உண்மையாக நாம் அவர்களை நேசிக்கிறதில்லை. தேவன் நம் சொந்த நன்மைக்காக நம்மை எதிர்கொள்கிறார், அவர் நம்மை நேசிப்பதால் அதைச் செய்கிறார்.

> நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு. வெளிப்படுத்துதல் **3:19).**

ஆரோக்கியமான எல்லைகள், நமக்கும் மற்றவர்களுக்கும் பாதுகாப்பு வலைகளாகும். ஆனால் நாம் உண்மையாகவே எல்லைகளை அமைக்கிறோமா அல்லது சுவர்களைக் கட்டுகிறோமா என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். பெரும்பாலான வேலிகளில் ஒரு வாயில் உள்ளது. அது இல்லையென்றால் அது

> நம்மைப் பயன்படுத்திக் கொள்ள இன்னொருவரை அனுமதித்தால் நாம் உண்மையில் அவரை நேசிக்கவில்லை.

வேலியாகாது, சிறைச்சாலையாகிவிடும். வேலிக்கு வாயில் இருக்கும் போது, நாம் விரும்பினால் வெளியே வரலாம், விரும்பினால் யாரையாவது உள்ளேயும் அனுமதிக்கலாம். ஆனால் சுவர்களுக்கு வாயில்கள் இல்லை. அவை மற்றவர்களை நம் வாழ்க்கையிலிருந்து வெளியேற்றுகின்றன, அவை நம்மையும் சிறைப்படுத்துகின்றன.

உறவுகளில் ஆரோக்கியமான எல்லை இருக்க வேண்டுமென்றால் அதை நாம் இப்படியாக சிந்திக்கலாம்: என் வாழ்க்கையிலே நான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன். எனவே நான் என்னைப் பாதுகாத்துக்கொள்ளவும், பாதுகாப்பான மக்களுடன் ஐக்கியம் வைத்துக் கொள்ளவும் விரும்புகிறேன். எனவே, நான் தொடர்பு கொள்ளும் நபர்களைப் பகுத்தறிகிறேன். ஒரு நபர் என்னைப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கினால், நான் அவர்களை எதிர்கொள்வேன். அவர்கள் அதைத் தொடர்ந்தால், நான் கேட்டைத் திறந்து அவர்களை என் வாழ்க்கையிலிருந்து வெளியேற்றுவேன்.

இதற்கு நேர்மாறாக, ஒரு உறவில் ஒரு சுவர் என்பது நம் சிந்தனையில் இப்படியாகத் தோன்றலாம்: கடந்த காலத்தில் நான் காயப்பட்டேன், யாரும் இனி மீண்டும் என்னை காயப்படுத்தப் போகிறதில்லை. நான் என்னைக் கவனித்துக்கொள்வேன், என்னைக் காப்பாற்றிக் கொள்வேன். யாருடனும் நெருக்கமாக இருக்க மாட்டேன், அதனால் அவர்கள் என்னை காயப்படுத்த முடியாது. இந்த விஷயத்தில், நான் ஒரு எல்லையை நிறுவிவிட்டேன் என்று நினைக்கலாம், ஆனால் உண்மையில் அது ஒரு சுவர்.

என் தந்தையிடம் இருந்து விலகிய பிறகு பல வருடங்களாக நான் செய்த முதல் காரியங்களில் ஒன்று எனக்குத் தெரிந்த யாராவது என்னை காயப்படுத்தாமலிருக்க, என் இருதயத்தில் ஒரு சுவரை விரைவாக எழுப்பினதேயாகும். சுவர்கள் மேலே செல்வதை என்னால் உண்மையிலே உணர முடிந்தது, அவை என்னைப் பாதுகாப்பாக வைத்தன என்று நினைத்தேன். இறுதியாக, தேவனுடைய உதவியால், ஆரோக்கியமான எல்லைகளை நாம் நிறுவ வேண்டுமென அவர் விரும்பினாலும், அவரால் மட்டுமே

நம்மை சுற்றி ஒரு உண்மையான பாதுகாப்பு சுவராக இருக்க முடியும் என்பதை உணர்ந்தேன்.

மற்றவர்கள் உங்களைத் துன்புறுத்தாமல் இருக்க உங்கள் இருதயத்தில் சுவர்களைக் கட்டியிருந்தால், உங்களால் மட்டுமே அவற்றை இடித்துத் தள்ள முடியும். அப்படி நீங்கள் செய்யவில்லை என்றால், நீங்கள் ஒருபோதும் நேசிக்கவோ அல்லது உண்மையில் அன்பைப் பெறவோ முடியாது. நீங்கள் ஒருபோதும் காயமடைய மாட்டீர்கள் என்று என்னால் உறுதியளிக்க முடியாது, ஆனால் நீங்கள் காயமடைந்தாலும், தேவன் உங்களை எப்போதும் குணப்படுத்துவார் என்று என்னால் உறுதியளிக்க முடியும். பரிபூரணமான மனிதர்கள் இல்லை என்பதால், நம் அனைவருக்கும் பலவீனங்கள் இருப்பதால், உறவுகளில் காயமடையாமலிருப்பதோ அல்லது ஏமாற்றத்தை அனுபவிக்காமலிருப்பதோ சாத்தியமில்லை.

## உள் வாக்கு

உடைக்கப்பட வேண்டிய உறுதிமொழிகளை நமக்கு நாமே செய்து கொள்ளலாம். இனி யாரும் என்னை காயப்படுத்த கூடாது, யாரும் என்னை கட்டுப்படுத்தவோ அல்லது நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லவோ கூடாது. யாரும் என்னை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள மாட்டார்கள். என்னை நானே பார்த்துக் கொள்வேன். யாரும் எனக்கு தேவைப்படும் நிலைக்கு என்னை ஒருபோதும் நான் அனுமதிக்கமாட்டேன் என்று சபதம் செய்தேன். வெளிப்படையாகவே, நாம் அந்த வகையான ஒரு மனோபாவத்தில் வாழ முயற்சி செய்தால், நமக்கு எந்த உறவும் இருக்க முடியாது. நாம் அனைவருமே அவ்வப்போது காயப்படுகிறோம். நல்லவர்களும், நன்றாக இருக்க வேண்டுமென்று நினைப்பவர்களும் கூட ஒருவரையொருவர் காயப்படுத்துகிறார்கள். நாம் என்ன செய்ய வேண்டும் அல்லது எப்படி இருக்க வேண்டும் என்று யாரும் சொல்லாமல் நாம் இந்த சமூகத்தில் வாழ முடியாது ஆனால் இன்று பலர் அதை தான் செய்ய முயற்சிக்கிறார்கள், நம்மைச் சுற்றியுள்ள உலகம் கலகத்தாலும், சட்டவிரோதமான செயல்களாலும் நிரம்பியுள்ளது. மேலும், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நமக்கு ஒவ்வொருவரும் தேவை.

நாமனைவரும் நம்மை தனிமைப்படுத்திக் கொள்ளாமல், ஒருவருக்கொருவர் முற்றிலும் சுதந்திரமாக இருந்து ஒன்றாக, இசைந்து வேலை செய்வதற்காக தேவன் நம்மைப் படைத்திருக்கிறார்.

நீங்கள் காயமடைந்து, ஏமாற்றமடைந்திருந்து அதன் காரணமாக உங்களுக்கு யாரும் தேவையில்லை என்று முடிவு செய்திருந்தால், நீங்கள் எப்படி உணருகிறீர்கள் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ஏனென்றால் நானும் அப்படித்தான் இருந்தேன். ஆனால் நீங்கள் ஆரோக்கியமான, குணமடைந்த ஆத்துமாவைப் பெறுவதற்கு அந்த அணுகுமுறை மாற வேண்டும். நாம் தனியாக இருக்க உருவாக்கப்படவில்லை.

நான் எனக்குச் செய்த தவறான சத்தியங்களை நான் உடைக்க வேண்டியிருந்தது, நான் என் மனப்பான்மையை ஒப்புக்கொண்டு, சுவர்கள் அல்ல, ஆரோக்கியமான எல்லைகளைக் கொண்டிருக்க எனக்கு உதவுமாறு தேவனிடம் ஜெபித்தேன். இப்போதும் கூட யாராவது என்னை காயப்படுத்தும்போது, என் இருதயத்தில் ஒரு சுவர் மேலே எழும்பத் தொடங்குவதை என்னால் உணர முடிகிறது, ஆனால் அது தேவனுடைய சித்தம் அல்ல என்பதை நான் அறிந்திருப்பதால் அதை அப்படியே இருக்க நான் அனுமதிக்கிறதில்லை.

## தனிமைப்படுத்துதல்

நம் இருதயத்தில் சுவர்கள் இருந்து, மக்களை உள்ளே அனுமதிக்க மறுத்தால், அந்த சுவர்கள் உண்மையில் தடையாக மாறும், அது தேவனுடனான நமது உறவில் ஆவிக்குறிய ரீதியில் வளரவிடாமல் தடுக்கிறது. மக்களிடமிருந்து நம்மை தனிமைப்படுத்திக் கொண்டு, தேவனுடன் ஒரு நல்ல உறவை கொண்டிருப்பது சாத்தியமில்லை. தேவன் ஒரு மனிதனுக்கு மனிதன் என்று நாம் கூறலாம். அவர் மக்களை நேசிக்கிறார் மற்றும் அவரின் அன்பை நம் மூலம் காட்ட விரும்புகிறார். வேதாகமம் உறவுகளைப் பற்றிய ஒரு சிறந்த புத்தகம் என்பதை நான் கண்டிருக்கிறேன். இது தேவனோடும், நம்மோடும், சக மனிதரோடும் உள்ள நம் உறவைப் பற்றியது. நமது இரட்சிப்பை செயல்படுத்தி,மறுசீரமைப்பை அனுபவிப்பதின் ஒரு பகுதி. இந்த உறவுகள் அனைத்தும் குணமடைந்து

ஆரோக்கியமடைய பரிசுத்த ஆவியானவருடன் ஒத்துழைக்க வேண்டும். சிலர் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்வதால், அவர்களுடன் நாம் ஒருபோதும் நல்லுறவு கொள்ள முடியாது என்றாலும், பயத்தின் காரணமாக அனைத்து மக்களையும் நம் வாழ்வில் இருந்து வெளியேற்றக்கூடாது. நாம் சமூகத்தில் மற்றவர்களுடன் இசைந்து, மற்றவர்களை நேசித்து, மற்றவர்களால் நேசிக்கப்பட்டு, மன்னிப்பைக் கொடுத்து, மன்னிப்பை பெற்று, ஒருவரோடொருவர் இசைந்து, ஒருவருக்கொருவர் பலவீனங்களை தாங்கி வாழ வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். (கலாத்தியர் *6:1-3).*

எனது குணப்படும் பயணத்தின் ஆரம்ப ஆண்டுகளில் நான் கற்பிக்கும் போது அடிக்கடி இவ்வாறு கூறுவதுண்டு, வீட்டில் யாரும் இல்லாத வரை நான் எல்லோருடனும் நன்றாகப் பழகினேன், சீக்கிரமாக கோபப்படாமல், பொறுமையாகவும், கனிவாகவும், அன்பாகவும், இருந்தேன் என்று. ஆனால் மக்கள் வீட்டிற்கு வந்த போதோ, அது வேறு கதை. நான் சொல்வதை நீங்கள் நன்றாக உங்களுடன் தொடர்புபடுத்தி பார்க்கலாம். அந்த சில ஆண்டுகளில் நான் வீட்டில் இருக்கும் தாயாக இருந்தேன். பகலில், டேவ் வேலைக்கு சென்று விடுவார், என் குழந்தைகள் பள்ளிக்கு சென்றுவிடுவர், நான் எனது வீட்டுக் கடமைகளைச் செய்யும்போது இசை ஆராதனை அல்லது போதனைகளை கேட்பதுண்டு. அனைத்தும் அமைதியாகவும் சிறப்பாகவும் இருந்தன. ஆனால் என் பிள்ளைகள் வீட்டிற்கு வந்து சத்தம் போட ஆரம்பித்ததும் அல்லது என்னை கோபப்படுத்தும் விஷயங்களைச் செய்ய ஆரம்பித்தவுடன், நான் வேறொரு நபராக மாறினேன்.

நான் திடீரென்று பொறுமையாகவோ, கோபிக்கிறதற்கு மெதுவாகவோ, அன்பாகவோ, கனிவாகவோ இருக்கவில்லை. நம்மில் சிலர் நாம் காயப்பட்ட பிறகு, பிறருடன் நல்லுறவை தவிர்த்து, நம்மை தனிமைப்படுத்திக் கொள்வதை தெரிந்துக் கொள்கிறோம். ஆனால் நாம் அப்படிச் செய்தால் கிறிஸ்துவைப் போல ஆவதற்கான ஆவிக்குறிய முன்னேற்றம் வராது. உதாரணமாக, நமக்கு எல்லாமே விரைவாக கிடைத்தால் நாம் ஒருபோதும் பொறுமையைக் கற்றுக்கொள்ள முடியாது.

அன்பில்லாதவர்களோடோ அல்லது நமக்கு எரிச்சலூட்டும் பழக்கம் உள்ளவர்களோடோ இராவிட்டால், நாம் ஒருபோதும் அவர்களை நேசிக்க கற்றுக்கொள்ள முடியாது. கரடுமுரடான விளிம்புகளைக் கொண்டவர்களை தேவன் நம் கரடுமுரடான விளிம்புகளை நம்மை விட்டு அகற்றக்கூடிய மணலாகப் பயன்படுத்துகிறார்.

> கரடுமுரடான விளிம்புகளைக் கொண்டவர்களைக் தேவன் நம் கரடுமுரடான விளிம்புகளை அகற்ற மணலாக பயன்படுத்துகிறார்.

வாழ்க்கையில் தனியாக இருப்பது எளிதாகத் தோன்றலாம். ஆனால் அது வெறுமையாகவும் இருக்கிறது. நாம் தனியாக இருக்கும்போது, நாம் உண்மையில் யார் என்ற உண்மையை நாம் எதிர்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.வெளியில் அழகாக தோன்றும் ஒரு ஆரஞ்சு பழத்தை நீங்கள் வாங்கலாம், ஆனால் நீங்கள் அதை கசக்கி அல்லது வெட்டிய பின்னர் தான் அது உலர்ந்ததாகவும், சுவையற்றதாகவும் இருப்பதைக் காணலாம். உண்மை மட்டுமே நம்மை விடுதலையாக்குகிறது. நம் வாழ்க்கையில் மற்றவர்கள் நமக்கு ஏற்படுத்தும் “அழுத்தங்கள்”, நம் ஆவிக்குறிய வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதவை.

தனியாக இருப்பது நல்லதல்ல. மனிதன் தனியாக இருப்பது நல்லதல்ல என்பதால் தான் தேவன் ஏவாளைப் படைத்தார். தேவன் கூட தனியாக இல்லை. அவர் ஒரு திரித்துவம்-பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியாக இருக்கிறார்.

நாம் தனிமையில் இருக்கும்போது நம் தவறுகளுக்குக் கண்மூடித்தனமாக இருப்பது எளிது. ஏனென்றால் நம்மை எதிர்கொள்ள எதுவும் இல்லை. அழுத்தத்தின் கீழ் நாம் எப்படி இருக்கிறோம் என்பதைக் காணும் வகையில் நம்மை அழுத்துவதற்கு யாரும் இல்லை.

ஒரு போதகர் ஒருமுறை என்னிடம், “ஜாய்ஸ், எல்லா வகையான சூழ்நிலைகளிலும் ஒருவர் எவ்வாறு பிரதிக்கிரியை செய்கிறார் என்பதை நீங்கள் பார்க்கும் வரை நீங்கள் யாரையும்

முழுமையாக ஒருபோதும் அறிந்து கொள்ள மாட்டீர்கள்" என்று கூறினார். நான் நிச்சயமாக அது உண்மை என்று கண்டுபிடித்தேன்.

என் மாம்சத்தை சிலுவையில் அறையவே தேவன் அவரை என் வாழ்க்கையில் வைத்தார் என்று என் கணவர் டேவ் கிண்டலாக கூறுவதுண்டு. மேலும் அவர் நினைப்பதை விட அவர் மிகவும் சரியாகவே சொல்கிறார். டேவும் நானும் திருமணம் செய்துகொண்டபோது, நான் இல்லாத எல்லாமுமாக அவர் இருந்தார். நான் அனுதினமும் அவர் சூழ்நிலைகளுக்கு எவ்வாறு பிரதிக்கிரியை செய்தார் என்பதை நான் எப்படி செய்தேன் என்பதோடு ஒப்பிட்டு பார்த்த போது, எனக்கு பிரச்சனைகள் இருந்தன என்பதற்கும் நான் மாற உதவி தேவை என்பதற்கும் இது ஒரு தொடர்ச்சியான நினைவூட்டலாக இருந்தது.

நான் பொறுமையிழந்திருந்தேன், அவர் மிகவும் பொறுமையாக இருந்தார், அதனால் அவருடைய பொறுமை (நான் அவர் மெதுவாக செய்வதாகப் பார்த்தேன்) என்னை எரிச்சலூட்டியது. நான் மிக விரைவாக முடிவுகள் எடுப்பதுண்டு, அவரோ அவற்றை எடுக்க நீண்ட நேரம் எடுத்துக் கொள்வார். அதனால் எனக்கு அது ஒரு பிரச்சனையாக இருந்தது. இப்படியாக இந்த பட்டியல் தொடர்ந்துக் கொண்டேயிருக்கலாம்.

ஆனால் என் கருத்து என்னவென்றால், நான் டேவ் மற்றும் எனக்கு எரிச்சலையும் கோபத்தையும் ஏற்படுத்திய பலருடன் இல்லாதிருந்தால் நான் ஒருபோதும் மாறியிருக்க மாட்டேன். இறுதியாக, நான் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டியிருந்தது, மக்கள் உண்மையில் எனக்கு எரிச்சலூட்டுகிறார்களா, அல்லது நான் திருப்பதிப்படுத்த முடியாத அளவுக்கு கடினமானவளாக இருந்தேனா? எனக்கு ஒரு பெரிய பிரச்சனை இருக்கிறது என்பதை இறுதியாக ஒப்புக்கொண்டபோது அது ஒரு வலி மிகுந்த, கண்ணீர் வடித்த, கடினமான நாளாக இருந்தது.

> மக்கள் உண்மையில் எரிச்சலூட்டுகிறார்களா, அல்லது நான் மகிழ்ச்சியடைவது மிகவும் கடினமாக இருக்கிறதா?

என்னை மகிழ்விப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக இருந்தது. ஆனால் நான் கொஞ்சம் முன்னேற்றமடையத் தொடங்கிய நாளாகவும் அது இருந்தது.

உறவுகளின் குழப்பத்தை கையாள்வது உங்களுக்கு பிடிக்காததால் உங்களை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆம், அதில் வலி இருக்கலாம், ஆனால் இறுதியில் அது தகுந்ததே.

## மக்கள் நிரம்பிய அறையில் தனியாக

நீங்கள் எப்போதாவது மக்கள் நிறைந்த அறையில் இருந்திருந்தும், தனியாக உணர்ந்திருக்கிறீர்களா? நம்மில் பெரும்பாலோர் அப்படி உணர்ந்திருக்கிறோம், அது வெவ்வேறு காரணங்களால் நடைபெறலாம். வெறுமனே அந்த அறையில் யாரையும் நமக்குத் தெரியாது என்பதால் இருக்கலாம். நிச்சயமாகவே, யாராவது நம்முடன் வந்து பேச வேண்டும் அல்லது நம்மிடம் நட்பாக இருக்க வேண்டுமென்று காத்திருக்கவே விரும்புகிறோம். ஆனால் நம்பிக்கையுடனும் பாதுகாப்பாகவும் உணர்பவர் முன்முயற்சி எடுத்து மற்றவர்களிடம் பேசுவார்கள்.

நிராகரிக்கப்படுவோம் என்ற பயத்தால், நம்மை சுற்றி நாம் சுவர்கள் எழுப்பி இருந்தாலும் நாம் தனியாக உணரலாம். வாழ்க்கையில் நிறைய நிராகரிப்புகளை அனுபவித்தவர்கள், மற்றவர்களால் நிராகரிக்கப்படுவோம் என்று அதிகமாக பயப்படுவதால் அவர்கள் தங்களை தனிமைப்படுத்திக் கொள்வார்கள் அல்லது அவர்களின் பயம் அவர்களிடம் ஒரு விதமான நடத்தை பண்புகளை உருவாக்குகிறது. அது உண்மையில் மற்றவர்களை விரட்டி விடுகிறது.

ஜேனட் அவளது தேவாலயத்திலே ஊழியத்திலே ஈடுபட விரும்பிய ஒரு பெண் மற்றும் அங்கே நடைபெறும் சமூக நிகழ்வுகளில் சேர்க்கப்பட வேண்டும் என்று விரும்பினாள். அவள் ஒரு ஆய்வுக் குழுவில் சேர்ந்தாள், அவர்கள் பயணங்களை மேற்கொள்ளும் போது, பொதுவாக அவளை அழைக்கவில்லை என்பதை கவனிக்க ஆரம்பித்தாள். இந்த மாதிரியான விஷயங்கள்

அவளுடைய வாழ்க்கையில் அவளுக்கு மீண்டும் மீண்டும் நடந்தன, அது தொடர்ந்து நடைபெற அவள் விரும்பவில்லை, அதனால் அவள் தைரியத்தை வரவழைத்து, குழுவில் இருந்த பெண்கள் ஒருவரிடம், தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதில் சிரமம் இல்லை என்று தோன்றியவரிடம், அவள் ஏன் அழைக்கப்படுவதில்லை என்று கேட்டாள். அந்தப் பெண் அவளுக்கு நேர்மையான பதிலைக் கொடுத்தாள், அவள் எவருடன் நட்பாக இருந்தாலும் அவர்களை மூச்சுத் திணறும் அளவுக்கு கஷ்டப்படுத்திவிடுவதாக அவளிடம் சொன்னாள். அவள், சமநிலையற்ற வழியில் அவர்களுடன் தன்னை இணைத்துக் கொள்ள முயன்றாள். இது ஜேனட்க்கு கேட்க வேதனையாக இருந்தாலும், அந்தப் பெண் என்ன சொல்கிறாள் என்பதை முழுமையாகப் புரிந்துகொள்ள சிறிது நேரமும் ஆலோசனையும் தேவைப்பட்டாலும், அந்த எதிர்கொள்ளுதல் அவளுக்கு உதவியது, அவள் குற்றம் சாட்டுவதை நிறுத்தி விட்டு தனக்குத்தானே சில கேள்விகளைக் கேட்கத் தொடங்கினாள்: நான் ஏன் மற்றவர்கள் மூச்சுத் திணறும் அளவுக்கு நடந்துக் கொள்கிறேன்? நான் உண்மையிலே உறவுகளின் அணுகுமுறையில் சமநிலையை மீறுகிறேனா? இறுதியில் முடிவு என்னவென்றால், ஜேனட், அவளுடைய கடந்த காலத்தின் வலியின் காரணமாக நிராகரிக்கப்பட்டுவிடுவோமாவென்று மிகவும் பயந்தால் யாரேனும் அவளிடம் கொஞ்சம் நட்பாகத் தோன்றினாலும், அவள் அந்த உறவை இழக்க நேரிடுமோ என்று பயந்து அவர்களுடன் எல்லா நேரத்திலும் இருக்க விரும்பினாள்.

இப்படிப்பட்ட ஒரு பெண்ணை நான் அறிவேன், அவள் பல வழிகளில் அன்பான, கொடுக்கும் தன்மையுடையவளாக, அழகான பெண்ணாக இருந்தாலும், அவளும் கூட, அவளுடன் நட்பாக இருக்கும் நபர்களின் வாழ்க்கையின் தனிப்பட்ட பகுதிகளில் தன்னை நுழைத்துக் கொள்கிறாள். அவள் அதை பொருத்தமற்ற, உண்மையில் முரட்டுத்தனமான வழியில் செய்கிறாள். அவள் இப்படி இருப்பதால், மக்கள் அவளைத் தவிர்க்க முனைகிறார்கள். அவளுக்கு மற்றவர்களின் எல்லைகளை எப்படி மதிக்க வேண்டுமென்று தெரிந்திருக்கவில்லை, அது அவளுக்கென்று சொந்த எல்லைகள் இல்லாததைப் போன்ற ஒரு பிரச்சனையைப் போன்றதாக கூட இருக்கலாம்.

## அத்தியாயம் 19

# உங்களின் சிறந்த கூட்டாளியாகுங்கள்

> ஸ்னோ ஒயிட் கதையில் குறிப்பிடப்படுவது போல, "கண்ணாடியே, சுவரில் உள்ள கண்ணாடியே" என் எதிரியின் முகத்தை எனக்குக் காட்டு... வெளிப்புற சூழ்நிலைகளால் நாம் தோற்கடிக்கப்படுவதை விட நாமே நம்மை அதிகம் தோற்கடிக்கிறோம்.
>
> - ஜான் மேக்ஸ்வெல்

மக்கள் நம்மை அங்கீகரிக்க வேண்டும், நமக்கு எதிராக இருப்பதை விட நமக்காக இருக்க வேண்டும் என்று நாம் அனைவரும் விரும்புகிறோம். சிலர் அப்படி இருக்கிறதை காண்கிறோம், ஆனால் சிலர் அப்படி இல்லாமலிருக்கிறதையும் காண்கிறோம். அப்படி இருக்கும் போது, அது வேதனையாக இருக்கும். மேலும் நமக்காக இல்லாமலிருக்கும் பலரை நாம் அனுபவித்திருந்தாலோ அல்லது அனுபவித்துக்கொண்டிருந்தாலோ, அது குணமடைய வேண்டிய காயங்களை நம் ஆத்துமாக்களில் விட்டு விடும். ஒரே ஒருத்தரின் மறுப்பு கூட, அது ஒரு பெற்றோர் அல்லது வாழ்க்கைத்துணையாக இருந்தால், அது அந்த நபரை ஆழமாக காயப்படுத்தலாம். நாம் நம் குடும்பம் மற்றும் நெருங்கிய நண்பர்களின் அன்பை விரும்புகிறோம், அதைப் பெறாமலிருக்கும் போது, அது சிலருக்கு அடிக்கடி பேரழிவை ஏற்படுத்துகிறது. அவர்களின் பெற்றோர் அவர்களை தொடர்ச்சியாக நிராகரித்தாதலோ அல்லது அவர்களை ஏற்றுக் கொள்ளாததால் செயலிழந்த வாழ்க்கை முறைகளுடன் இன்னும் போராடிக்கொண்டிருக்கும், நாற்பது, ஐம்பது வயதுடையவர்களைச் சந்தித்துப் பேசுகிறதுண்டு. அப்போஸ்தலனாகிய பவுல் இந்த வார்த்தைகளால் ரோமரர்களை ஊக்கப்படுத்தினார்:

*இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோமர் 8:31).*

*சங்கீதக்காரன் தாவீது இவ்வாறாக கூறினார்:*

*கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்? சங்கீதம் 18:6.*

தேவனால் பெரிதும் பயன்படுத்தப்பட்ட இந்த இருவரும் அவர்களுக்கு ஆதரவாக இல்லாத பலரை சந்தித்தனர். அவர்கள் மற்றவர்களால் ஆறுதல் அடைந்தனர், மேலும் நமக்காக இராத அல்லது, நம்மை அங்கீகரிக்காத மக்களை நாம் கையாள வேண்டுமென்றாலும் தேவன் எப்பொழுதும் நமக்காகவே இருக்கிறார். நமது போராட்டம், வலிகள் மற்றும் துன்பங்களின் சமயத்தில் அவர் நம் பக்கம் இருக்கிறார் என்ற அறிவினால் மற்றவர்களுக்கு ஆறுதல் அளித்தார்கள்.

எதிரிகளுடன் உடன்படுவதை விட தேவனுடன் உடன்படுவேன் என்று முடிவு செய்ய வேண்டிய நேரம் இது. ஒருவேளை இரக்கமற்ற நபர்கள் உங்களைப் பற்றி என்ன சொன்னார்களோ, நினைத்தார்களோ அல்லது அவர்கள் எப்படி உங்களை நடத்தினார்களோ அதன் அடிப்படையில் உங்களைப் பற்றிய ஒரு கருத்தை உருவாக்கி இருக்கலாம். அப்படியானால், அது திருத்தப்பட வேண்டிய ஒரு தவறு. நீங்கள் உங்களுக்காக இருக்க வேண்டிய நேரம் இது, அப்படியென்றால், நீங்கள் உங்களுடன் நண்பராக இருப்பதற்கும், உங்களின் சிறந்த கூட்டாளியாக இருப்பதற்கும், தெய்வீகமாக உங்களை நேசிக்கக் கற்றுக்கொள்வதற்குமான நேரம் இதுவே.

தேவன் நமக்காகவும், மூலமாகவும் எவ்வளவு செய்ய விரும்பினாலும், நாம் அவருடன் உடன்படாதவரை அவரால் எதையும் செய்ய முடியாது. அப்படியென்றால் அவருடைய வார்த்தையுடன் நாம் உடன்பட வேண்டும். நாம் அவருடைய வாக்குறுதிகள் அனைத்தையும் நம்பினால் மட்டுமே அவை நம் வாழ்வில் நிஜமாகின்றன. நாம் பெரிதும் நேசிக்கப்படுகிறோம்,

அவருடைய ஞானத்தால் நிரப்பப்பட்டிருக்கிறோம் என்று தேவன் சொன்னால், நாம் அப்படி தான் இருக்கிறோம். நாம் மன்னிக்கப்பட்டிருக்கிறோம், நம் எதிர்காலத்திற்கான அவருடைய திட்டங்கள் நன்மையானவை என்று சொன்னால், பின்னர் அது அவ்வாறாகத் தான் இருக்கிறது.

> நீங்களே உங்களுக்கு நண்பராக இருக்க வேண்டிய நேரம் இது.

## நீங்கள் உங்களின் மோசமான எதிரியா?

ஒருவேளை நீங்கள் நீண்ட காலமாக மற்றவர்களையும் அவர்களின் விமர்சனங்களையும் கேட்டுக்கொண்டிருந்ததால், இப்போது உங்களுக்கு உங்கள் மேலேயே ஒரு தாழ்ந்த கருத்து ஏற்பட்டிருக்கலாம். நீங்கள் இதை வாசிப்பதை கொஞ்சம் நிறுத்தி, உங்களைப் பற்றி நீங்கள் எப்படி உணருகிறீர்கள் என்று உங்களிடம் நீங்களே கேட்குமாறு நான் பரிந்துரைக்க விரும்புகிறேன். உங்களுக்கு உங்களைப் பிடித்திருக்கிறதா? தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கும் திறமைகளையும், தாலந்துகளையும் நீங்கள் காண்கிறீர்களா, பாராட்டுகிறீர்களா? நீங்கள் மதிப்புமிக்கவர் என்று உங்களுக்குத் தெரியுமா? இன்று காலை நான் நடைபயிற்சி செய்து கொண்டிருந்த போது, என் காயமடைந்த ஆத்துமா குணமடைய எனக்கு உதவிய தேவன் எனக்குக் கற்றுக் கொடுத்த மிக முக்கியமான விஷயம் என்ன என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். அது அவர், என்னை அவருடைய படைப்பாகவும், மகளாகவும் நேசிக்கவும் ஏற்றுக்கொள்ளவும், எனக்கு நானே நண்பனாக மாறவும் கற்றுக்கொடுத்தது தான் என்பதை நான் உடனே அறிந்தேன். எனக்கு உண்மையிலேயே வாழ்க்கை மாறுவதாக இருந்தது, உங்களுக்கும் அப்படியே இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

நான் சுய நிராகரிப்பிலிருந்து என்னை அனுபவிக்க கற்றுக்கொண்டேன். நான் என்னுடன் இருக்க விரும்புகிறேன். நான் இன்று என்னுடன் மதிய உணவுக்கு வெளியே செல்கிறேன். நான் என்னுடன் முழு நாளையும் கழிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்களும் உங்களுடன் இருக்க விரும்ப

வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். நீங்களும் நீங்களாக இருக்க, உங்களை நேசிக்க, உங்களை அனுபவிக்க, மதிக்க கற்றுக்கொள்ளலாம், ஏனென்றால் நீங்கள் எப்போதுமே நீங்களாகவே இருப்பீர்கள். நாம் கிறிஸ்துவைப் போல் மாற வேண்டுமென்ற நம் வளர்ச்சியில் நாம் அனைவருமே மாறுகிறோம். ஆனால் நம்மைப் பற்றிய சில காரியங்களை, நாம் நமக்காக தேர்ந்தெடுத்துக் கொள்ளாமலிருந்தாலும் நாம் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. நீங்கள் விரும்பியதை விட உயரமாக இருந்தால், நீங்கள் எப்போதுமே உயரமாக இருப்பீர்கள், நீங்கள் உயரம் குறைவாக இருந்தால், நீங்கள் எப்போதுமே குள்ளமாகத் தான் இருப்பீர்கள். நீங்கள் உயரமான காலணிகளை அணியலாம், ஆனால் இறுதியில் நீங்கள் அணிந்தவற்றைக் கழற்ற வேண்டும். பிறகு நீங்கள் மீண்டும் குள்ளமாகவே இருப்பீர்கள்.

எனக்கு இனிமையான குரலும், இனிமையான ஆள்தத்துவமும் வேண்டும் என்று நான் விரும்பினேன். அது என்னை நான் எப்படி இருக்க வேண்டும் என்று நினைத்த மற்ற பெண்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வைத்தது. இந்நாட்களிலே என் ஆளுமை கொஞ்சம் இனிமையாக இருக்கிறது, ஆனால் என் குரல் இன்னும் ஆழமாக கவனத்தை ஈர்க்க கூடியதாக இருக்கிறது என்று நம்புகிறேன். நான் பொதுவாக எதையும் அமைதியாகச் சொல்வதில்லை. நான் என்னுடைய தோழியைப் போன்று நீண்ட, அடர்த்தியான முடியைப் பெற்றிருக்க விரும்பினேன், ஆனால் அது இன்னும் குட்டையாகவும், குழந்தையின் முடி போன்று மென்மையாகவும் இருக்கிறது. நம்மைப் பற்றிய ஒரு விஷயம் அல்லது இன்னொன்று விஷயத்தை விரும்பாமல் நம் வாழ்க்கையை வீணடிக்கலாம். ஆனால் உங்கள் பலம் மற்றும் தேவன் உங்களுக்கு கொடுத்துள்ள அனைத்து அற்புதமான குணங்கள் மீதும் கவனம் செலுத்துவது மிகவும் ஞானமான செயலாகும்.

உங்களை விரும்புவதற்கும் உங்களின் சிறந்த கூட்டாளியாக இருப்பதற்கும் கற்றுக்கொள்வது நீங்கள் எடுக்கக்கூடிய சிறந்த முடிவுகளில் ஒன்றாகும். எத்தனை பேர் உங்களை நேசித்து, பாராட்டினாலும், உங்களை நீங்கள் விரும்பவில்லை என்றால், நீங்கள் ஒருபோதும் மகிழ்ச்சியாக இருக்க மாட்டீர்கள். நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன்: உங்களைப் பற்றி நீங்கள்

மோசமாக உணர்கிறீர்கள் என்றால், மற்றவர்கள் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்களோ அதன் நிமித்தமாகவா அல்லது உங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அதன் காரணமாகவா? நாம் யார் என்று தேவன் சொல்லும் யதார்த்தத்தில் நாம் வாழ்ந்தால்,பிறர் கொண்டிருக்கும் எதிர்மறையான கருத்துக்களை நம்மால் எளிதாக முறியடிக்க முடியும் என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன்.

அப்போஸ்தலனாகிய பவுல் அடிக்கடி விமர்சிக்கப்பட்டார், ஆனால் அவர் பிறருடைய கருத்தை மதிப்பதை காட்டிலும் தேவனுடைய அபிப்பிராயத்தை அவர் அதிகமாக மதித்தார். அவர் இப்படியாக சொன்னார்:

> ஆயினும் நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாயதீர்ப்பு நாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது; நானும் என்னைக்குறித்துத் தீர்ப்புச்சொல்லுகிறதில்லை.
>
> என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. (1 கொரிந்தியர் 4:3-4).

மற்றவர்களின் விமர்சனங்களினிமித்தம் என்னைப் பற்றி நான் மோசமாக உணர்ந்து கொண்டிருந்தபோது இந்த வேதவசனங்கள் பலமுறை எனக்கு உதவியிருக்கின்றன. வாழ்க்கையில் ஒருபோதும் விமர்சிக்கப்படாமலிருக்க ஒரே வழி ஒன்றும் செய்யாமல் இருப்பதும், ஒன்றுமில்லாமலிருப்பதும் தான் என்பதை நான் கண்டுபிடித்தேன், ஆனால் அப்போதும் கூட நாம் சோம்பேறிகள் என்றும் பலனளிக்காதவர்கள் என்றும் விமர்சிக்கப்படுவோம்.

> விமர்சனத்தின் அச்சம் மகத்துவத்தின் மரணமாக இருக்கலாம்.

விமர்சனத்தின் அச்சம் மகத்துவத்தின் மரணமாக இருக்கலாம். நாம் விமர்சிக்கப்படும் போது, நம் விமர்சகர் சரியாக இருக்கறாரா, இல்லையா என்பதை கருத்தில் கொள்வது புத்திசாலித்தனம், அவர்கள் அப்படி சரியாக இருந்தால்,

*அவர்களுக்கு நன்றி செலுத்துங்கள்; அவர்கள் அப்படி இல்லையென்றால், அவர்களுக்காக ஜெபியுங்கள்.*

## உங்களுடன் சமாதானம் செய்து கொள்ளுங்கள்

*உங்களுடன் சமாதானம் செய்துகொள்ள உங்களை ஊக்குவிக்கிறேன். நம்மில் எவரும் நாம் விரும்புவது போல் இருப்பதில்லை. ஆனால் நாம் யார் என்பதைத் தழுவி, வாழ்க்கையில் பெரிய காரியங்களைச் செய்ய நம்மால் முடியும். நாம் தேவனை எப்போதும் சார்ந்து இருக்க வேண்டும், அவர் நமக்கு எப்போதும் தேவைப்பட வேண்டுமென்பதற்காக நம் ஒவ்வொருவருக்கும் சில பலவீனங்களை கொடுக்கிறார். பரிபூரணமான மனிதர்கள் என்று எவரும் இல்லை. பவுல், தன்னுடைய பலம் தேவனுக்குள்ளும் அவரின் மூலமாகவும் பூரணப்படுத்தப்படுகிறது என்று தேவன் அவரிடம் சொல்லும் வரை தனது பலவீனத்துடன் போராடினார். அதன் பிறகு, பவுல் அவைகளை அவர் யாராக இருக்கிறாரோ அவரின் ஒரு பகுதி என்று அவற்றை தழுவி ஏற்றுக்கொண்டார் **(2 கொரிந்தியர் 12:8-9).***

*குறைபாடுகள், குற்றங்கள் அல்லது பலவீனங்கள் இல்லாத ஒரு இடத்தை அடைவோம் என்று தேவனுடைய வார்த்தை ஒருபோதும் வாக்களிக்கவில்லை. ஆனால் தேவன் நம்முடைய பெலனாக இருப்பார் என்று அது நமக்கு உறுதியளிக்கிறது. நம்மிடம் குறைகள் இருப்பதில் தேவன்ஆச்சரியப்படுவதில்லை; நம் ஒவ்வொருவரையும் பற்றி நம்மிடம் உள்ள நாம் இன்னும் கண்டுபிடிக்காத காரியங்களையும் அவர் அறிந்திருக்கிறார் என்பதை நினைவில் வையுங்கள். மேலும் அவர் நம்மை நிபந்தனையின்றி நேசிக்கிறார்.*

*ஒருமுறை நான் நேர்காணல் செய்த ஒரு உளவியலாளர், பெண்கள் தங்கள் தொடைகளுடன் சமாதானம் செய்ய வேண்டும் என்று கூறினார். எத்தனையோ பெண்கள் அவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய தவறான எண்ணம் கொண்டிருக்கின்றனர். நம்மில் பெரும்பாலோர் ஏதோ நாளிதழின் அட்டையிலிருக்கும் படம் மாதிரியோ அல்லது குறைபாடுகள் எதுவும் புலப்படாத ஒரு திரைப்பட நட்சத்திரம் போன்று*

தோற்றமளிக்கப் போவதில்லை. நாம் நம்மை வேறு எவருடனும் ஒப்பிட மறுத்து, தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டதை நாம் ஏற்றுக் கொண்டு, நம்மால் முடிந்தவரை சிறப்பாகத் தோன்ற வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

நீங்கள் தோற்றமளிக்கும் விதம் உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால், நீங்கள் அதைப் பற்றி ஏதாவது செய்ய முடியும் என்றால், அதைச் செய்யுங்கள். ஆனால் உங்களால் முடியாவிட்டால், அதோடு சமாதானம் செய்து கொண்டு, நீங்கள் நீங்களாக இருப்பதை அனுபவியுங்கள். நீங்கள் எப்போதும் உங்களுடன் வாழ்கிறீர்கள், உங்களை உங்களுக்கு பிடிக்கவில்லை என்றால், நீங்கள் பரிதாபமாக இருக்கப் போகிறீர்கள்.

ஒருவேளை ஒரு பெண்ணின் முகத்தில் கரும்புள்ளிகள் இருக்கிறதென்று வைத்துக் கொள்ளுங்கள் அவள் அந்த கரும்புள்ளிகளை விரும்பவில்லை. அவளுக்கு ஒரு நடிகையாக இருக்க வேண்டும் என்ற ஒரு ஆசை இருக்கலாம், ஆனால் அவளது கரும்புள்ளிகள், மேற்கொள்ள முடியாத ஒரு பெரிய குறைபாடு என்று நினைக்கிறாள். அதனால் அவள் அவளது கனவை ஒருபோதும் பின்தொடராமலிருந்து வாழ்க்கையிலே நிறைவற்றவளாக இருக்கிறாள். ஏனென்றால் அவள் என்ன செய்ய வேண்டுமோ அதை செய்யவில்லை.

எனக்குத் தெரிந்த மிகவும் பிரபலமான நடிகைகளில் ஒருவருக்கு கரும்புள்ளிகள் இருந்ததென்று உங்களுக்குத் தெரியுமா? அவள் பெயர் டோரிஸ் டே. அவள் திரைப்படங்களில் முற்றிலும் அழகாக இருந்தாள். யாரும் கரும்புள்ளிகளில் கவனம் செலுத்தவில்லை. யாரும் அவைகளை கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். அவள் தன் கனவைப் பின்தொடர்ந்து வெற்றி பெற்றாள். ஒருவேளை நாம் நம் குறைகள் என்று நினைப்பதில் அதிக கவனம் செலுத்தவில்லை என்றால் மற்றவர்களும் அதை கவனிக்க மாட்டார்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் தாழ்மையுடன் இருக்கக் கற்பிக்கப்படுகிறோம்,.ஆனால் உண்மையிலேயே தாழ்மையுள்ள ஒரு நபர் தங்களைத் தாங்களே சிறுமைப்படுத்துவதில்லை அல்லது அவர்கள் மற்றவர்களைப் போல நல்லவர்கள் அல்ல என்று

*நினைப்பதில்லை. கிறிஸ்துவில் தாங்கள் யார் என்பதையும், அவர்கள் எந்த நல்ல காரியத்தை செய்தாலும் அது தேவனின் ஈவு என்பதையும் அவர்கள் அறிவார்கள்; அவர்கள் யாரையும் விட உயர்ந்தவர்களோ அல்லது சிறந்தவர்களோ அல்ல, ஆனால் அவர்கள் அவர்களை விட குறைவானவர்களும் அல்ல என்று அறிந்திருக்கிறார்கள். உண்மையிலே, ஒரு உண்மையான தாழ்மையான நபர், தங்களிடம் எது சரியாக இருக்கிறது அல்லது தவறாக இருக்கிறது என்று யோசிப்பதில் நேரத்தைச் செலவிடுவதில்லை. ஏனென்றால் அவர்கள் தங்களைப் பற்றி அதிகமாக நினைப்பதில்லை. அவர்கள் எப்படி தோன்றுகிறார்கள் என்பதில் அதிகமாக அக்கறை காட்டுவதில்லை. மக்கள் அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதில், அல்லது எல்லாவற்றிலும் முதலிடம் வகிக்கும் நிலையைப் பேணுவதில் அதிக அக்கறை காட்டுவதில்லை. அவர்கள் தாங்கள் யாராக இருக்கிறார்களோ அப்படியாகவே இருக்கவும், தேவனுக்காக தங்களால் இயன்ற சிறந்ததைச் செய்யவும் சுதந்திரமாக இருக்கிறார்கள். கிறிஸ்து இல்லாமல் நாம் ஒன்றுமில்லை, ஆனால் அவர் மூலமாக எல்லாவற்றையும் நம்மால் செய்ய முடியும்! குறைபாடுள்ளவர்களை இயேசு வரவேற்கிறார், அவர்கள் மூலமாக செயல்படுவதில் அவர் மகிழ்ச்சியடைகிறார்.*

## சுய சந்தேகத்தின் வேதனை

*நம்மைப் பற்றி நமக்குக் குறைந்த அபிப்பிராயம் இருக்கும்போது, நாம் அரிதாகவே முடிவெடுக்க தகுதியானவர்களாக உணர்கிறோம். நாம் நினைக்கும், உணரும் மற்றும் முடிவெடுக்கும் அனைத்திலும் நம்மையே சந்தேகிக்கும் வேதனையான நிலைக்குள் நாம் எளிதில் விழுந்துவிடலாம். யாரும் எல்லா நேரத்திலும் சரியாக இருப்பதில்லை. ஆனால் எல்லா நேரத்திலும் தவறாகவும் இருப்பதில்லை. மேலும் நாம் தேவனுக்கேற்ற ஞானத்தைப் பின்பற்றக் கற்றுக் கொள்ள வேண்டும், பிறகு நல்ல முடிவுகள் எடுக்க நம்மை நம்பிச் செயல்பட வேண்டும்.*

*நீங்களே ஒரு முடிவை எடுத்து விட்டு பின்னர், நீங்கள் சரியாகச் செய்தீர்களா இல்லையா என்று அதிகமாக யோசிக்கிறீர்களா?*

நீங்கள் அடிக்கடி உங்கள் மனதை மாற்றிக்கொண்டு இருமனம் கொண்டவர்களாக, இரண்டு முடிவுகளுக்கு இடையில் சிக்கிக்கொண்டிருக்கிறீர்களா? மற்றும் எது சரியானது என்பதைப் பற்றிய மனஅழுத்திலிருக்கிறீர்களா? நாம் முடிவெடுக்க வேண்டியிருக்கும் போது எது சரி என்று முடிவெடுக்க நமக்கு உதவி செய்யும்படி தேவனிடம் கேட்க வேண்டும், பிறகு முடிவு எடுத்தவுடன், நாம் நம்முடைய தெரிந்துக்கொள்ளுதலைப் பற்றிய விஷயத்தில் தயக்கத்துடனோ, இருமனதாகவோ இருக்க கூடாது. நாம் சுய சந்தேகத்தால் நிரப்பப்பட்டால், நமக்குத் தேவையான உதவியை தேவனிடமிருந்து பெற முடியாது (யாக்கோபு 1:5-6) என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறினார்.

> தவறான முடிவெடுக்கும் பயம் உங்களை தீர்மானிக்க இயலாதவர்களாக ஆக்குகிறதா?

ஒவ்வொரு முடிவும் சரியானது அல்ல என்பது உண்மைதான் என்றாலும், சில சமயங்களில் அதை நாம் கண்டுபிடிக்கக்கூடிய ஒரே வழி, சிறந்தது என்று நாம் நம்பும் திசையில் முன்னோக்கி நகரத் தொடங்க வேண்டியதேயாகும், நாம் செல்வது சரியா இல்லையா என்பது விரைவில் தெளிவாகிவிடும்.

தவறான முடிவெடுக்கும் பயம் உங்களை தீர்மானிக்க இயலாதாவர்களாக ஆக்குகிறதா? எந்த முடிவையும் எடுக்காமலிருப்பதும் ஒரு தீர்மானமே என்பதைஅறிந்திருக்கிறீர்களா? எதையும் செய்ய மறுப்பதன் மூலம் தவறுகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள மாட்டோம். நீங்கள் தவறு செய்தாலும் கூட, அதுவே முடிவல்ல, குறைந்தபட்சம் நீங்கள் அதிலிருந்து கற்றுக்கொள்ளலாம்.

நீங்கள் ஒரு முடிவை எடுக்க வேண்டியிருக்கும் போது நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று பலரிடம் கேட்கிறீர்களா?. இது நிச்சயமாக தவறில்லை, ஒரு முடிவைப் பற்றிய கருத்தைப் பெறுவதற்கு உதவியாக இருக்கலாம் என்றாலும், அவர்கள் என்ன செய்வார்கள் என்று நாம் மக்களிடம் கேட்கும்போது, அவர்களின் அறிவுரை அவர்களுக்கு சரியாக இருக்கலாம். ஆனால் நமக்கு முற்றிலும் தவறாக இருக்கலாம் என்பதை நாம் நினைவில் கொள்ள

வேண்டும். ஒவ்வொருவரும் பல விஷயங்களைப் பற்றி மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர், மேலும் பலரிடம் கேட்பது உதவி செய்வதை விட அதிக குழப்பத்தை ஏற்படுத்தும் குறைந்தபட்சம், அதனால் நிறைய நேரத்தை வீணடித்துவிடுவோம், ஏனென்றால் இறுதியில், நீங்கள் தான் முடிவெடுக்க வேண்டும்.

உங்கள் சொந்த இருதயத்தைப் பின்பற்றுவதற்குப் பதிலாக மக்கள் நீங்கள் செய்ய வேண்டும் என்று நினைப்பதை நீங்கள் தொடர்ந்து செய்தால், நீங்கள் யாராக இருக்கிறீர்களோ அதையும், தேர்வுகளை செய்ய தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கும் உரிமையையும் மறுக்கிறீர்கள்.

உங்கள் இருதயத்தைப் பின்பற்றவும், நீங்கள் செய்ய வேண்டிய சிறந்ததை அறிந்து கொள்ளவும் உங்களை நம்புங்கள். தேவனுடைய வார்த்தை ஏற்றுக்கொள்ளாத எதையும் அல்லது உங்கள் மனசாட்சி உங்களுக்குத் தவறு என்று சொல்லும் எதையும் ஒருபோதும் செய்யாதேயுங்கள், ஆனால் பல சாலைகள் உங்களை ஒரே இலக்குக்கு அழைத்துச் செல்லக்கூடும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள், மேலும் நீங்கள் எந்த சாலையில் செல்ல விரும்புகிறீர்கள் என்று தீர்மானிக்கும் பாக்கியத்தை தேவன் உங்களுக்கு வழங்கியுள்ளார். நீங்கள் எடுக்கும் முடிவு தவறானது அல்ல, ஏனென்றால் அது பிறர் எடுக்கும் முடிவு அல்ல.

> வேறொருவர் அதை செய்யாததால் நீங்கள் எடுக்கும் முடிவு தவறானது அல்ல.

நீங்கள் வாழ்க்கையை மாற்றும் ஒரு முடிவை எடுக்கும்போது, அதை எடுக்க நிறைய நேரம் எடுத்துக் கொள்ளுங்கள், அதைப் பற்றி ஜெபியுங்கள். தேவனுடைய வார்த்தை அதை பற்றி என்ன சொல்கிறது என்று பாருங்கள், மன சமாதானத்தை பின்பற்றுங்கள். நீங்கள் நல்ல முடிவுகளை எடுக்க முடியும் என்று நம்புங்கள். தேவன் உங்களை வழிநடத்துகிறார் என்று நம்புங்கள் மற்றும் பயமின்றி, தைரியமாக வாழுங்கள்.

நீங்கள் உங்களுக்கு மோசமான எதிரியாக இருப்பதற்கு பதிலாக உங்கள் சிறந்த நண்பராக இருக்க முடிவு செய்யுங்கள். உங்களை நீங்களே தோற்கடிக்காதீர்கள். தேவன் உங்களுக்காக இருக்கிறார்,

நீங்களும் உங்களுக்காக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நீங்கள் உண்மையிலேயே, மிகப்பெரிய அளவில் ஆக்கத்திறனை கொண்டிருக்கும் ஒரு அற்புதமான நபர். எனவே முன்னோக்கி நகர்த்தத் தொடங்குங்கள், எப்படியெல்லாம் இருக்க முடியுமோ அப்படியெல்லாமாக இருங்கள்.

### அத்தியாயம் 20

# சார்பு நிலை காயங்களை ஆற்றுதல்

*நான் உங்களுக்கு மருந்தாக இருந்தேன், நீங்கள் என் நோயாக இருந்தீர்கள். நான் உன்னைக் காப்பாற்றிக்கொண்டிருந்தேன், ஆனால் நீ என்னைக் கொன்று கொண்டிருந்தாய்!*

*- பெயரில்லா ஆசிரியர்*

நீங்கள் விரும்பும் ஒருவர் ஆழ்ந்து துன்பப்படுவதையும், சில சமயங்களில் தவறான அல்லது அடிமையாக்கும் நடத்தை மூலம் அவர்களே அவர்களுக்கு தீங்கு விளைவித்துக் கொள்வதையும் பார்ப்பதை விட வேதனையானது வேறெதுவும் இல்லை. நாம் விரும்பும் நபர்கள் காயப்படுவதைப் பார்ப்பது நம் சொந்த ஆத்துமாவை காயப்படுத்துகிறது.

நீங்கள் விரும்பும் நபர்கள் காயப்படுவதைப் பார்ப்பது உங்கள் ஆத்துமாவைக் காயப்படுத்துகிறது.

நாம் அக்கறைப்படும் நபர்களுக்கு உதவ முயற்சிப்பது எப்போதும் நல்லதே, ஆனால் அவர்களுக்கு உதவுவது, நம்மையே அழிக்க தொடங்கும் போது, நாம் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

என் உடன்பிறந்த ஒரே சகோதரன், ஒரு குடிகாரனாகவும், போதைப்பொருளுக்கு அடிமையாகவும் இருந்து, இறுதியில் நீண்டகால போதைப்பொருள் துஷ்பிரயோகம் காரணமாக ஸ்கிசோஃப்ரினிக் சித்தப்பிரமை அடைந்தான். நிரந்தர வெற்றி பெறாமலே அவனுக்கு உதவ பல வருடங்களாக முயற்சி

செய்தோம். அவருக்கு உதவுவதற்காக நாங்கள் எங்கள் வாழ்க்கையை முழுவதுமாக அர்ப்பணித்த வரை, அவன் மிகவும் நன்றாக இருப்பான், ஆனால் நிலையான, மேற்பார்வை இல்லையென்றால் அவன் தனது அடிமைத்தனமான நடத்தைகளுக்கு திரும்பி விடுவான். நான் அவனை நேசித்தேன், எல்லாவற்றிக்கும் மேல் அவனுக்கு உதவ அதிகமாக விரும்பினேன், ஆனால் என்னால் முடியவில்லை.

அவனை குணப்படுத்த முயற்சிப்பது என் வாழ்க்கையைத் திருடுகிறது என்பதை நான் இறுதியாக உணர வேண்டியிருந்தது. கடைசியாக நாங்கள் அவனை சிகிச்சைக்கு உட்படுத்தின போது, அவன் தனது சொந்த விருப்பப்படி அந்த இடத்தை விட்டு விட்டு மறைந்துவிட்டான். துரதிர்ஷ்டவசமாக, பல மாதங்களுக்குப் பிறகு அவன் ஒரு பாலடைந்த கைவிடப்பட்ட கட்டிடத்தில் இறந்து கண்டுபிடிக்கப்பட்டதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது. அந்தச் செய்தியைக் கேட்டதும், நான் போதுமான அளவு செய்திருக்கிறேனா என்று எனக்குள்ளே குற்ற உணர்ச்சியும், ஆச்சரியமும் ஏற்பட்டது, ஆனால் அவன் எடுக்க வேண்டிய முடிவுகளை அவனால் மட்டுமே எடுக்க முடியும், அவன் தனது பங்கைச் செய்யாவிட்டால் அவனுக்கு யாராலும் உதவி செய்ய முடியாது என்பதை என் இருதயத்தில் ஆழமாக அறிந்தேன். நீங்கள் விரும்பும் ஒருவர் தவறான தேர்வுகளை மேற்கொண்டால், அவருக்கு உதவுவதற்கான உங்கள் முயற்சிகள் அனைத்தும் அவர்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை என்றால் அவர்களை மீட்பது உங்கள் வேலை என்று நினைத்து, நீங்கள் மிகைப்படுத்தப்பட்ட பொறுப்புணர்வை எடுத்துக் கொள்ளாமல் இருக்க கவனமாக இருங்கள்.

நாம் விரும்பும் ஒருவருக்கு உதவ விரும்புவது, நாம் ஒருவரையொருவர் சார்ந்து இருக்கிறோம் என்று அர்த்தமல்ல, ஆனால் உதவி செய்வதற்கான நமது முயற்சிகள் நாம் கவனமாக இல்லாவிட்டால், நாம் ஒருவரையொருவர் சார்ந்து இருப்பதைப் போன்று உருவெடுத்து விடும். ஒரு நபர் இணை சார்ந்து இருந்தால், அது அவர்களின் வாழ்க்கை, வேறொருவரின் பிரச்சினைகள் அல்லது தவறான தேர்வுகளால் கட்டுப்படுத்தப்படுகிறது என்று அர்த்தம். எந்த நாள் அவர்களுக்கு எப்படி செல்லும் என்று அவர்கள் அறிய மாட்டார்கள். ஏனென்றால் அது அவர்களின்

வாழ்க்கையிலுள்ள பிரச்சனையுள்ள நபர் என்ன செய்கிறார் என்பதைப் பொறுத்து இருக்கிறது. டேவும் நானும், அலுவலகத்தில் ஒரு சவாலான நாளுக்குப் பிறகு வீட்டில் ஓய்வெடுக்கலாமென்று இருக்கும் போது, என் சகோதரன் சிறையில் இருக்கிறான் அல்லது மனநோயாளியாளியைப் போன்ற நடத்தையை வெளிப்படுத்துகிறான், அவனுடன் இருந்தவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை என்ற ஒரு அழைப்பு எனக்கு பல முறை வந்தது எனக்கு நினைவிருக்கிறது. என் சகோதரனின் பிரச்சினைகளால் நாங்கள் அடிக்கடி எங்கள் திட்டங்களை ரத்து செய்ய வேண்டியிருந்தது. ஒருவருக்கு உண்மையிலேயே நம் உதவி தேவைப்பட்டால், நாம் அனைவரும், நம் திட்டங்களை மாற்றத் தயாராக இருக்க வேண்டும், ஆனால் அதே நபர் அதே சூழ்நிலையை மீண்டும் மீண்டும் உருவாக்கினால் அது நல்லதல்ல.

என் சகோதரன் நான்கு வருடங்கள் எங்கள் வீட்டில் வாழ்ந்தான். அவனுடைய வாழ்க்கை சரியான திசையில் செல்ல நாங்கள் அவனுக்கு உதவ முயற்சித்தோம். நான்கு வருடங்களாக நாம் யாருக்காவது உதவி செய்ய முயற்சித்துக்கொண்டிருந்தும் அவர்கள் மேம்படவில்லை என்றால் அவர்கள் உண்மையில் மாற விரும்பவில்லை என்பதற்கான நல்ல வாய்ப்பு உள்ளது என்பதை நான் இறுதியாக உணர்ந்தேன். பலர் மாற வேண்டும் என்று கூறுகிறார்கள், ஆனால் அதற்குத் தேவையானதைச் செய்ய அவர்கள் தயாராக இல்லை. ஒரு நபர் தன் பங்கை செய்ய தயாராக இல்லை என்றால், அவருடைய பிரச்சனைகளை யாராலும் சரி செய்ய முடியாது.

நீங்கள் ஒரு இணைசார்ந்த உறவில் இருந்தால், நீங்கள் செய்யக்கூடிய கடினமான விஷயம் என்னவென்றால் அதை விட்டு விலகிச் செல்வது அல்லது உதவி செய்வதை நிறுத்துவதாகும். நான் சமீபத்தில் ஷாப்பிங் சென்ற போது ஒரு பெண்ணை சந்தித்தேன், அவள் ஆறு ஆண்டுகளுக்கு மேல் மதுபானப் பிரச்சனை இருந்த ஒரு மனிதருடன் உறவில் இருப்பதாக அவள் என்னிடம் சொன்னாள். அவள் மகிழ்ச்சியாக இல்லை என்றும், அவளுடைய வாழ்க்கையில் எந்த முன்னேற்றமும் இல்லை என்பதையும் அறிந்தாள். நான் அவளுக்கு ஆலோசனை வழங்க வேண்டும் என்று அவள் விரும்பினாள். அவன் நீண்ட கால

அர்ப்பணிப்புக்கு தயாராக இல்லாமலிருந்தபடியால் அவர்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதும் அவளுக்கு வருத்தமாக இருந்தது. அவளிடம் பேசிய சில நிமிடங்களுக்குப் பிறகு, அவளுக்கு ஏற்கனவே பலரிடமிருந்து நல்ல ஆலோசனைகள் கிடைத்திருந்தன, ஆனால் அவள் இன்னும் அதில் எதையும் ஏற்கத் தயாராக இல்லை என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. நான் அவளிடம், அவள் அவனிடமிருந்து விலகிச் செல்ல வேண்டும் என்று மற்றவர்கள் அவளிடம் என்ன சொன்னார்களோ அதையே சொன்னேன். அவள், நான் விலகி செல்ல வேண்டும் என்று எனக்குத் தெரியும், ஆனால் நான் அவரை சார்ந்து இருக்கிறேன். நான் அவருடன் மகிழ்ச்சியாக இல்லை, ஆனால் அவர் இல்லாமல் என்னால் வாழ முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை! என்றாள். அவள், நான் தொடர்ந்து அவளுடன் பேச விரும்பினாள், ஆனால் அவள் என்ன செய்ய வேண்டும் என்று நான் எத்தனை முறை அவளிடம் சொன்னாலும், அவளுடைய பதில் எப்போதுமே, "எனக்குத் தெரியும், ஆனால் அது மிகவும் கடினம்." என்பதாகவே இருந்தது, அவளுக்காக என்னால் எதுவும் செய்ய முடியவில்லை.

அவள் அவனை விட்டு விலகி வரும் முன் எத்தனை வருடங்கள் அவன் அவளது வாழ்க்கையைத் திருடி, அவளை சந்தோஷமற்று இருக்க செய்ய அனுமதிப்பாளோ தெரியவில்லை அல்லது, அவள் எப்போதாவது விலகி செல்வாளா? என் அப்பா செய்ததை என் அம்மா வெறுத்தார் - அவரது துஷ்பிரயோகம், குடிப்பழக்கம், மற்றும் வன்முறையான நடத்தை-ஆயினும் அவள் அவரை விட்டு விலகவில்லை. அவள் அவரை நேசித்தாள், ஆனால் அவள் அவரை வெறுத்தாள். அவள் அவருக்கும், அவள் அவருடன் வாழ்ந்த செயலற்ற வாழ்க்கைக்கும் அடிமையாக இருந்தாள். தன் செயலிழப்பிற்குள் எப்படி செயல்பட வேண்டும் என்பதை அவள் கற்றுக்கொண்டாள். அவளால் வேறு எதையும் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு அது அவளுக்கு மிகவும் சாதாரணமாகிவிட்டிருந்தது.

ஒருவரிடமிருந்து உங்களைத் தூர விலக்குவதற்கான நேரம் எப்போது என்பதைத் தீர்மானிப்பது, நீங்கள் உங்களுக்காக செய்ய வேண்டிய ஒரு தேர்வாகும். அது அதிக பிரார்த்தனை மற்றும்

ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு செய்யப்பட வேண்டும். மக்களுக்கு உதவுவதற்கும், அப்படி செய்வதற்கு நம்மையே தியாகம் செய்ய வேண்டியிருந்தாலும் அதை செய்ய வேண்டுமென்று தேவன் நம்மை அழைத்துள்ளார், ஆனால் நாம் மற்றவர்கள் செய்யும் மோசமான தேர்வுகளால் கையாளப்பட்டு, கட்டுப்படுத்தப்படும் வாழ்க்கையை வாழ அவர் நம்மை அழைக்கவில்லை.

நீங்கள் நேசிக்கும் ஒருவரின் தவறான தேர்வுகளால் உங்கள் ஆத்துமா காயமடைகிறது என்றால், நீங்கள் எப்படி உணருகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். அது எனக்குத் தெரியும், அந்த வலி மிகவும் ஆழமானது, ஆனால் அவர்களுக்கு உதவ முயற்சி செய்வதால் பிரயோஜனம் இல்லை என்றால், ஒருவேளை நீங்கள் அவர்களுக்கு உதவும் முயற்சியை நிறுத்தினாலே அது அவர்களுக்கு பேர் உதவியாக இருக்கும். சில நேரங்களில் நாம் உதவி செய்கிறோம் என்று நினைக்கிறோம், ஆனால் உண்மையில் அந்த நபர் நம்மை தொடர்ந்துக் காயப்படுத்த உதவுகிறோம். நீங்கள் அவர்களுக்கு உதவவில்லையென்றால், குறைந்தபட்சம் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் தொடர்ந்து முன்னேறி செல்ல அது உதவும். தொல்லைக்குள்ளானவர்கள் தங்களை யாரேனும் தொடர்ந்து மீட்க தயாராக இருக்கும் வரை மாற்றங்களைச் செய்யத் தயாராக இருக்க மாட்டார்கள் என்பது சாதாரணமாக நடைபெறக்கூடியதே.

## தாய்மார்களும் அவர்களின் குழந்தைகளும்

ஒரு தாய் தனது மகிழ்ச்சியற்ற குழந்தையை விட மகிழ்ச்சியாக இருப்பதில்லை என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த அறிக்கை எந்த அளவு உண்மை என்று என்னால் சாட்சி அளிக்க முடியும். எனக்கு நான்கு குழந்தைகள் உள்ளனர். அவர்கள் காயப்படும் போது நான் எப்படி உணர்கிறேன் என்பது எனக்குத் தெரியும். அழிவுகரமான நடத்தைகளுக்கு அடிமையான பிள்ளை உங்களுக்கு இருந்தால், தேவன் தாமே உங்களை அந்த வேதனை ஏமாற்றத்தினூடே உங்களை நடத்திச் செல்ல முடியும். அந்த வகையான சூழ்நிலையில் இருப்பவர்கள் என்னிடம் சொல்லும் ஒன்று தேவன் தாமே அதை கடந்து செல்ல உதவுகிறார் என்பதே. அவர் தாமே வேறு யாராலும் அடைய முடியாத நம் ஆத்துமாவின்

ஆழமான இடங்களை அடைய முடியும். உங்களை வழிநடத்தவும், குணப்படுத்தவும், மீட்டெடுக்கவும் அவரை முழுவதுமாக நம்பும்படி வருந்திக்கேட்டுக் கொள்கிறேன். அவருடைய கிருபை நாம் கற்பனை செய்ததை விட மிகவும் வேதனையான சூழ்நிலைகளில் கூட போதுமானதாக இருக்கிறது.

> நம்பிக்கை ஒரு சிறந்த ஊக்கம்.

அதிர்ஷ்டவசமாக, தேவனுடன், நாம் ஒருபோதும் நம்பிக்கையற்றவர்கள் அல்ல, நம்பிக்கை என்பது ஏதாவது நல்லது நடக்கும் என்ற எதிர்பார்ப்புடன் வாழ்க்கையில் நம்மை உந்தி நகர்த்தும் ஒரு சிறந்த உந்து சக்தியாகும்.

உங்களுக்கு ஒரு பிள்ளை வேதனையில் இருந்தால் அல்லது அவர்களின் வாழ்க்கையில் குணப்படுதலும் விடுதலையும் தேவைப்படுமென்றால், நீங்கள் கையாண்டுக் கொண்டிருந்தவற்றால் உங்கள் ஆத்துமா களைத்தும், காயமடைந்தும் இருந்தால், தேவன் உங்கள் ஆத்துமாவுக்குள் சென்றடைந்து உங்களை புத்துணர்ச்சியடையவும், குணமடையவும் செய்ய முடியும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். தேவனுடன் ஒரு வழக்கமான நேரத்தைச் செலவிடுங்கள், உங்களைப் பலப்படுத்தவும் குணப்படுத்தவும் அவரிடம் கேளுங்கள்.

ஒரு தாய் தன் பிள்ளைகள் எடுக்கும் தவறான தேர்வுகள் இறுதியில் அவர்களுக்கு வலியைத் தரும் என்பதை தெரிந்தும் அவர்களை அடைந்து உதவ முடியாமல் இருப்பதை பார்ப்பது மிகவும் கடினமானது. தேவன் நம் ஒவ்வொருவருக்கும், நாம் செய்யும் தேர்வுகள் சரியாக இல்லாவிட்டாலும், சுய சித்தத்தை வழங்குகிறார். சில சமயங்களில் நமது தவறான தேர்வுகளால் வலிமிகுந்த விளைவுகளை அனுபவிப்பதன் மூலம் தான் நாம் சிறப்பாகச் செய்ய கற்றுக்கொள்கிறோம். சில சமயங்களில் உதவி செய்யாமல் இருப்பதுதான் நாம் செய்யக்கூடிய கருணையான காரியம்.

நீங்கள் நேசிப்பவர்களை ஒருபோதும் கைவிட்டுவிடாதீர்கள். அவர்களை சென்றடைய நீங்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தாலும், நம் வாழ்நாள் முழுவதும் நம்மால் செய்ய

> நாம் நம் வாழ்நாள் முழுவதும் செய்ய முடியாததை தேவன் ஒரு நொடியில் செய்துவிடுவார்.

முடியாததை தேவன் ஒரு நொடியில் செய்ய முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தன் பிள்ளைகளுக்காக ஒரு தாய் செய்யும் பிரார்த்தனைகள் மிகவும் வல்லமை வாய்ந்தவைகள். எதுவும் மாறாதது போல் தோன்றினாலும், தேவன் கிரியை செய்துக் கொண்டிருக்கவில்லை என்று அர்த்தமாகாது. முடிவுகளைக் காண சிறிது காலம் ஆகலாம்-ஒருவேளை நீண்ட காலம் கூட ஆகலாம், ஆனால் தேவனால் எல்லாமே கூடும்!

## கட்டுப்பாடில்லாமல் இருப்பதும் அதை நேசிப்பதும்

நம்மால் முடியாத மனிதர்களையும் சூழ்நிலைகளையும் கட்டுப்படுத்த முயல்வதால் தான் நமக்கு வலியும் துயரமும் பெருமளவு ஏற்படுகிறது. பெரும்பாலான பெற்றோர்கள் அவர்களை கட்டுப்படுத்திக் கொண்டிருப்பார்களென்றால் அதை ஒப்புக்கொள்வது பொதுவாக அவர்களுக்கு கடினமாக இருக்கும்—அதில் நானும் அடங்குவேன்—ஆனால் நாம் கட்டுப்பாட்டை மீறினாலும் நேசிக்கவும் கற்றுக்கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன்! அது நமக்குக் கொண்டுவரும் சுதந்திரத்தை நாம் நேசிக்க முடியும். நாம் ஒரு சூழ்நிலையை முழுவதுமாக தேவனிடம் கொடுக்கும் போது, நாம் அவர் அதை செய்ய அவருக்கு "உதவி" செய்ய முயற்சிப்பதை விட அவர் அதிகம் செய்கிறார் என்றும் நான் நம்புகிறேன். சில நேரங்களில் நாம் அவருக்கு உதவுகிறோம் என்று நினைக்கிறோம், ஆனால் உண்மையில் நாம் தடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் கவலையையும், அதீத அக்கறையையும் அவர் மீது வைத்து விடும் போது, அவர் நம்மை கவனித்துக்கொள்கிறார் (பார்க்க 1 பேதுரு 5:7).

நான் சமீபத்தில் என்னை தொந்தரவு செய்த, என் அமைதியைத் திருடிய ஒன்றை கடந்துச் சென்றேன், இறுதியாக என்

மகிழ்ச்சியின்மைக்கு காரணமான உண்மையான பிரச்சினையை, நான் எதிர்கொண்டபோது, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மக்கள் என்ன செய்து கொண்டிருந்தனரோ அதை நான் கட்டுப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தேன். நான் அதை நிறுத்த வேண்டுமென்று தேவன் எனக்குக் காட்டினார். சில சமயங்களில் பொறுப்புக்கும், கட்டுப்படுத்துதலுக்கும் இடையேயான கோட்டை போடுவது எனக்கு கடினமாக இருப்பதால், வாழ்க்கையின் இந்த மிக முக்கியமான பகுதியில் நான் தேவனிடமிருந்து தொடர்ந்து கற்றுக்கொள்கிறேன்.

நான் இயல்பிலேயே பொறுப்பானவள், நான் ஒரு தவறான பொறுப்புணர்வை எளிதில் ஏற்க முடியும். உதாரணமாக, என் பிள்ளைகள் அனைவரும் தங்களை நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டும், அதனால் அவர்கள் தங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து, நன்றாக உணர்ந்து, நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நிச்சயமாக, அவர்கள் அதை எப்படி செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, "அம்மாவுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும்," இல்லையா?

அவர்களுக்கு நல்லதல்ல என்று எனக்குத் தெரிந்தவற்றை அவர்கள் சாப்பிடுவதைப் பார்க்கும்போதோ அல்லது அவர்கள் போதுமான அளவு உறங்கவில்லை என்று எனக்குத் தெரியும் போதோ அவர்களுக்கு என் கருத்தை தெரிவிக்காதிருக்க நான் இன்னும் கற்றுக் கொண்டிருக்கிறேன். அவர்கள் உடற்பயிற்சி செய்வதில் விடாமுயற்சியுடன் இருக்கிறார்களா இல்லையா என்றும் அவர்கள் மருத்துவ சோதனைகளை சரியாக செய்கிறார்களா என்பது பற்றியும், இதைப்போன்ற மற்றும் பல கேள்விகளை என்னால் கேட்க முடியும்.

அவர்கள் என்னிடம் பொறுமையிழப்பதை நான் பார்க்கும்போது, "நான் உங்களுக்கு உதவ முயற்சி செய்கிறேன்!" என்று அடிக்கடி சொல்வேன். நான் எப்போதும் நினைப்பேன். நீங்கள் ஒரு அம்மாவாக இருந்தால் இது உங்களுக்கும் பரிட்சியமானதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். நான் எனது அறிவுரையில் மிகவும் சுதந்திரமாக இருப்பதற்குப் பதிலாக, எப்படி ஜெபித்து, தேவன் வேலை செய்வதை பார்ப்பது என்பதை நான் மேலும்

*மேலும் கற்றுக்கொண்டிருக்கிறேன். ஆனால் நான் இன்னும் கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது.*

*கட்டுப்பாட்டை கைவிட்டு விடுவது உண்மையில் மிகவும் சுதந்திரமானது. நாம் கட்டுப்படுத்த வேண்டுமென்று தேவன் விரும்பும் ஒரே நபர், நாம் மட்டுமே. அதுவே நம் இலக்காக இருக்க வேண்டும். யாரேனும் நம்மைக் கட்டுப்படுத்த முயற்சித்தால் அது நமக்குப் பிடிக்காது, நாம் மற்றவர்களுக்கு அப்படி செய்தால் அவர்கள் அதை விரும்புவார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?*

*"விட்டுவிடுங்கள், கடவுள் கடவுளாக இருக்கட்டும்" என்ற கூற்றை நீங்கள் கேட்டிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். ஒருவேளை நீங்கள் மீண்டும் அதைக் கேட்க விரும்பாமலிருக்கலாம், ஆனால் அது தான் உண்மை. நாம் விட்டு விடும்போது, தேவன் கிரியை செய்யத் தொடங்குகிறார். ஜெபிப்பதை ஒருபோதும் நிறுத்தாதீர்கள். சரியான நேரத்தில் அறிவுரை வழங்க தேவன் உங்களுக்காக ஒரு கதவைத் திறந்தால், அதைக் கொடுங்கள்-ஆனால் கேட்க விரும்பாதவர்களைக் கேட்க வைக்க முயற்சிக்காதீர்கள். நீங்கள் அப்படி செய்தால், அது உங்கள் அமைதியையும் மகிழ்ச்சியையும் திருடவே செய்யும்.*

## நீங்கள் அதிகமாக உதவுகிறீர்கள் என்பதற்கான அறிகுறிகள்

*நீங்கள் அதிகமாக உதவுகிறீர்கள் அல்லது அதிகமாக கொடுக்கிறீர்கள் என்பதற்கான அறிகுறிகள் என்ன? நம் வாழ்வில் நாம் கவனிக்க வேண்டிய, கவனிக்க கூடிய காரியங்கள் உள்ளன அவற்றுள் சில இங்கே:*

*அடையாளம் 1: நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதைக் குறித்து நீங்கள் வெறுப்படைந்தால், நீங்கள் அதிகமாக உதவி செய்யலாம். நாம் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புவதை நாம் செய்யும் போது நாம் வெறுப்பை அல்ல அமைதியை உணர வேண்டும் என்று நான் நம்புகிறேன்.*

*அறிகுறி* ***2:*** நீங்கள் செய்வது பொறுப்பின்மை அல்லது திறமையின்மையை வளர்ப்பதாக இருந்தால், அல்லது அது உங்கள் மேல் அவர்களை அதிகமாக சார்ந்திருக்கச் செய்தால், அது நீங்கள் அதிகமாக உதவுகிறீர்கள் என்பதற்கான அறிகுறியாகும்.

*அறிகுறி* ***3:*** நீங்கள் கையாளப்படுகிறீர்கள் என்ற உணர்வு உங்களுக்கு இருந்தால், நீங்கள் அதிகமாக உதவுகிறீர்கள்.

*அடையாளம்* ***4:*** ஒருமுறை ஆசீர்வாதமாக இருக்கும் என்று நீங்கள் நினைத்தது நீண்ட காலக் கடமையாக மாறி, அது இப்போது உங்களுக்கு சுமையாக இருக்கிறதென்றால், நீங்கள் அதிகமாக உதவி செய்துக் கொண்டிருக்கலாம்.

*அறிகுறி* ***5:*** உங்கள் இருதயத்தில் இல்லை என்று சொல்ல வேண்டும் என்று தெரிந்தும், நீங்கள் உதவி செய்துக் கொண்டிருப்பவருக்கு ஆம் என்றே தொடர்ந்து கூறிக்கொண்டிருந்தால், நீங்கள் நிச்சயமாகவே அதிகமாக செய்கிறீர்கள்.

*அடையாளம்* ***6:*** நீங்கள் உதவி செய்யும் நபர் நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதற்கு நன்றியுடன் இருப்பதற்குப் பதிலாக அவர்களுக்காக இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்தால், நீங்கள் அதிகமாக உதவுகிறீர்கள்.

*அடையாளம்* ***7:*** நீங்கள் உதவி செய்துக் கொண்டிருப்பவருக்கு நீங்கள் உதவ வேண்டும் என்பதால், உங்கள் திட்டங்களைத் தொடர்ந்து ரத்து செய்தால், நீங்கள் ஒருவேளை அவர்களுக்காக அதிகமாகச் செய்துக் கொண்டிருக்கலாம்.

## உங்கள் நோக்கங்களைச் சரிபார்க்கவும்

நமக்கு உதவுவதற்காக இயேசு தம் உயிரை தியாகம் செய்தார். அவர் நம்மை செய்ய அழைத்துள்ள காரியங்களிலொன்று மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பதாகும். நாம் ஆரோக்கியமான முறையில் சரியான காரணங்களுக்காக மற்றவர்களுக்கு உதவுவதையும் கொடுப்பதையும் செய்யும் போது,

அதை விட வேறு எதுவும் நம்மை மகிழ்ச்சியடையச் செய்யாது.

சிலர் மற்றவர்களுக்கு உதவுகிறார்கள், ஏனென்றால் அது அவர்களைப் பற்றி நன்றாக உணர வைக்கிறது. அவர்கள் தங்கள் மதிப்பை, அவர்கள் செய்வது தீங்கு விளைவிப்பதாக இருந்தாலும், மற்றவர்களுக்காக காரியங்களைச் செய்வதில் காண்கிறார்கள். என் அம்மா செய்திருக்கக் கூடாத காரியங்களை என் சகோதரனுக்காக செய்தாள். அவள் அவனை மிகவும் நேசித்ததால் அவளால் இல்லை என்று சொல்ல முடியவில்லை என்று அவள் அடிக்கடி சொல்வதை கேட்டிருக்கிறேன். உண்மையில், நாம் மக்களை உண்மையாக நேசித்தால், ஆம் என்று சொல்வதை விட இல்லை என்று சொல்வது தான் அவர்களுக்கு உதவும் என்றால், நாம் அப்படியாகத்தான் சொல்லுவோம். என் அம்மா என் சகோதரனுக்கு அவள் உதவுகிறாள் என்று நினைத்தாள், ஆனால் உண்மையில் அவள் அவனை காயப்படுத்திக் கொண்டிருந்தாள்.

அநேகந்தரம் அவன் பேசி,பேசியே அவளது வலியை போக்குவதையும், அல்லது அவளால் கொடுக்க முடியாத பணத்தை அவனிடம் கொடுப்பதையோ நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். இத்தகைய கருணைச் செயல்கள் என்று அழைக்கப்படுபவை அவனது போதைக்கு உணவளித்தன.

என் அம்மாவுக்கு ஒரு மோசமான சுய உருவம் இருந்தது. அவள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் என் தந்தை என்னை துஷ்பிரயோகம் செய்ய அனுமதித்ததால் அவள் அன்பற்றவளாக உணர்ந்தாள். நிறைய குற்ற உணர்ச்சியையும் சுமந்தாள். மற்றவர்களுக்காக காரியங்களைச் செய்வதன் மூலம் அவள் தனது மோசமான உணர்வுகளை மறைத்தாள். அவள் பிறருக்கு உதவினாள், ஏனென்றால் அது அவளைப் பற்றி அவளை நன்றாக உணர வைத்தது, ஆனால் உண்மையிலே அது அவள் ஒருபோதும் கையாளாத பிரச்சினைகளை மறைப்பதற்காக இருந்தது.

நமது நோக்கங்களை நேர்மையாக மதிப்பீடு செய்வது வேதனையாக இருக்கலாம், ஆனால் நாம் செய்யக் கூடிய காரியங்களிலே அது தான் நம்மை விடுவிக்க கூடிய ஒன்றாக இருக்கும். நாம் செய்யும் காரியங்களின் நோக்கம் தவறானதாக இருந்தால், அவை முற்றிலும் மதிப்பு இல்லாமல் இருக்க கூடும்.

நீங்கள் செய்யும் பல காரியங்களை, குறிப்பாக உங்கள் வாழ்க்கையில் மன அழுத்தத்தை கொடுப்பது போல் தோன்றும் காரியங்களை ஏன் செய்கிறீர்கள் என்பதைக் காண்பிக்கும் படி தேவனிடம் கேளுங்கள். அவர் உங்களுக்கு வெளிப்படுத்துவதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படலாம்.

நம் ஆத்துமாவை காயப்படுத்தும் செயல்களை நாம் திரும்ப திரும்ப தொடர்ந்து செய்து கொண்டு, காயப்பட்ட நம் ஆத்துமாவை தேவன் குணப்படுத்த கேட்பது அவ்வளவு பெரிய நன்மையை ஏற்படுத்தாது. தேவன் குணப்படுத்தும் வேலையில் இருக்கிறார், அவர் நம்மை முழுமைப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறார், ஆனால் அவர் நாம் செய்ய வேண்டும் என்று நமக்கு காட்டும் அனைத்தையும் செய்து அவருடன் ஒத்துழைக்க வேண்டும்.

## அத்தியாயம் 21

# ஆரோக்கியமான ஆத்துமாவின் ஆசீர்வாதங்கள்

*என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி.*

*-சங்கீதம் 103:1-3*

நாம் ஒருவேளை ஒரு நீண்ட மற்றும் சங்கடமான பயணத்தைத் தொடங்கும்போது, நாம் நம் இலக்கை அடையும் போது அது எவ்வளவு அற்புதமாக இருக்கும் என்பதை சிந்திப்பது உதவியாக இருக்கும். அதைத்தான் இந்த அத்தியாயத்தில் நாம் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரிக்கும் வேதனையை எதிர்கொண்டபோது, அவர் அவருக்கு முன் இருந்த பரிசின் சந்தோசத்தினிமித்தம் வேதனையை சகித்தார் என்று வேதம் கூறுகிறது (எபிரேயர் 12:2). அவர் உயிர்த்தெழுதலைப் பற்றியும், அதனால் அவருடைய பிள்ளைகளுக்கு ஏற்படும் நன்மைகள் அனைத்தையும் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார் என்று நான் நம்புகிறேன். அவர் நம் பாவங்களுக்கான கிரயத்தை செலுத்தி, அவர் மூலமாக நமக்குப் புதிய வாழ்க்கையை வழங்க அவர் இந்த உலகத்திற்கு வருவதற்கு முன் பரலோகத்தில் அவர் இருந்த அவருடைய பிதாவின் வலது பாரிசமாகிய அவருக்குரிய சரியான இடத்திற்குத் திரும்பி செல்வதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு வலிமிகுந்த பயணத்தில் தொடக்கத்திலிருந்து முடிவைப் பார்ப்பது, அது கடினமாக இருக்கும்போது பின்வாங்காமல் இருக்க உதவுகிறது. நீங்கள் இன்னும் உங்கள் பயணத்தை மேற்கொள்ளாததால், உங்களுக்காக காத்திருக்கும் அனைத்து ஆசீர்வாதங்களையும் நீங்கள் அறிந்திராமலிருக்கலாம். எனவே நீங்கள் ஒரு ஆரோக்கியமான ஆத்துமாவைப் பெறுவதற்காக தேவனுடன் இணைந்து நீங்கள் செயலாற்றும்போது உங்களுக்காக என்ன காத்திருக்கிறது என்பதைப் பார்க்க உங்களுக்கு உதவுவேன் என்று நான் நம்புகிறேன்.

காயப்பட்ட ஆத்துமா உங்களை நோய்வாய்ப்படுத்துகிறதா? எல்லா நோய்களும் நிச்சயமாக நமது ஆத்துமாவிலிருக்கும் காயங்களால் ஏற்படுவதில்லை என்றாலும், சில நோய்கள் அவற்றால் ஏற்படுகின்றன. பலர் தங்கள் ஆத்துமா குணமடைந்தவுடன் உடல் சுகத்தையும் அனுபவிக்கிறார்கள். தேவன் நாம் அனுபவிக்க வேண்டுமென்று ஒருபோதும் விரும்பாத ஒரு பெரிய அளவினாலான வலியும், நோயும் நாம் சுமக்கும் மன அழுத்தத்தால் ஏற்படுகிறது. அமைதியும் மகிழ்ச்சியும் தான் அவருடைய சித்தம். இவை இரண்டும் நல்ல ஆரோக்கியத்தை வளர்க்கின்றன, ஆனால் பிசாசு கொல்லவும், திருடவும், அழிக்கவுமே வருகிறான் (யோவான் 10:10).

அப்போஸ்தலன் யோவான் இவ்வாறு ஜெபித்தார்:

> பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன். (3 யோவான் 1:2).

இந்த வேத வாக்கியத்தில் நமது ஆத்துமாவுக்கும் நம் சரீரத்திற்கும் இடையே உள்ள தொடர்பைக் காண முடிகிறது. நம் ஆத்துமா சிறப்பாக இருந்தால், நம் உடலும் சிறப்பாக இருக்கும். பல ஆண்டுகளாக நான் பெரும்பாலும் சோர்வாகவே இருந்தேன், நன்றாக தூங்கவில்லை, தினசரி தலைவலி மற்றும் பிற நோய்கள் இருந்தன. என் ஆத்துமா எந்தளவுக்கு குணமடைந்து, சமாதானத்தாலும் மகிழ்ச்சியாலும் நிரப்பப்பட்டதோ, அந்த அளவுக்கு நான் ஆரோக்கியமடைந்துவிட்டேன் என்று என்னால்

சாட்சியாக சொல்ல முடியும். நமக்குள் என்ன இருக்கிறதோ அது தான் வெளியே வரும். எனவே நம் ஆத்துமாவில் வலி இருந்தால், அது அடிக்கடி நம் உடலில் தோன்றும், அதே போல், நாம் ஆத்துமாவில் அமைதி இருந்தால், அது நம் உடலில் தெரியும்.

மகிழ்ச்சியான இருதயம் நம் வாழ்வில் ஒரு நல்ல மருந்தாக செயல்படுகிறது என்று தேவன் நமக்குக் கற்பிக்கிறார் (நீதிமொழிகள் 17:22).

இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் நான் பகிர்ந்து கொண்ட வேத வாக்கியம் இந்த உண்மையை அறிக்கையிடுகிறது. நம் ஆத்துமா தேவனை துதிக்கும்போது, நாம் பாவம் மற்றும் அதன் துன்பத்திலிருந்து விடுபடுவோம், அதில் வியாதி குணப்படுவதும் அடங்கும்.

> உணர்ச்சியின் மன அழுத்தம் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான ஆற்றலைக் குறைக்கிறது.

துஷ்பிரயோகம் மற்றும் மன உளைச்சலானது நம் உடலிலும், மனதிலும் ஏற்படுத்தும் எதிர்மறை விளைவுகளை நம்மால் சரியாகக் கண்டறிய முடியுமா என்பதையே நான் சந்தேகிக்கிறேன். நான் பதினெட்டு வயதிற்குள்ளாகவே என் உடலில் பிரச்சனைகளை அனுபவித்துக்கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் என் வாழ்க்கையில் நான் கடந்து வந்த விஷயங்களைக் கருத்தில் கொண்டால் அது ஆச்சரியமாக இருக்கிறதில்லை. நான் எவ்வளவு அமைதியாக இருக்கிறேனோ, அவ்வளவு அதிகமாக நான் உடல் ரீதியாக நன்றாக உணர்கிறேன் அதை சாட்சியாக என்னால் சொல்ல முடியும். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான ஆற்றலை மன அழுத்தம் குறைத்துவிடுகிறது. உங்கள் ஆத்துமாவின் நிலை உங்கள் உடலை எவ்வளவு பாதிக்கிறது என்பதை நீங்கள் ஒருபோதும் உணர்ந்திருக்க மாட்டீர்கள். ஆனால் அவை கண்டிப்பாக நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கிறது. ஒருவரையொருவர் பெரிதும் பாதிக்கிறது. எனவே, உங்கள் குணப்படும் பயணத்தை நீங்கள் தொடரும்போது நீங்கள் எதிர்நோக்கக்கூடிய இரண்டு விஷயங்கள் சிறந்த ஆரோக்கியமும், அதிக ஆற்றலுமாகும்.

இயேசு இங்கே பூமியில் இருந்த போது, அவர் மக்களின் நோய்களை தொடர்ந்து குணப்படுத்தினார். இன்றும் அவர் நம்மை குணப்படுத்துபவரே.

எல்லா சுகமும் தேவனிடமிருந்து வருகிறது என்று நான் நம்புகிறேன். அவர் ஒருவருக்கு அருளியிருக்கும் மருத்துவ தொழில்நுட்பத்தை கண்டுபிடிப்பதற்கான ஞானத்தின் மூலம் அவர் கிரியை செய்யலாம், அல்லது நம் உடல் குணப்படுவதை மேம்படுத்த நாம் செய்ய வேண்டிய மாற்றத்தை அவர் நமக்குக் காட்டலாம், அல்லது வேறு யாராலும் செய்ய முடியாததை அவர் அற்புதமாகச் செய்யலாம்.

எங்கள் அலுவலகத்தில் நாங்கள் அடிக்கடி பெறும் பிரார்த்தனை கோரிக்கைகளில் ஒன்று குணமடைய வேண்டும் என்பதே. மேலும் உங்களுக்கு சரீர சுகமடைதல் தேவை என்றால், உங்கள் சரீரத்திலும், உங்கள் ஆத்துமாவிலும் தேவன் கிரியை செய்ய நீங்கள் அவரை நம்ப வேண்டுமென்று நான் உங்களை ஊக்குவிக்கிறேன். உங்கள் சொந்த குணமடைதலுக்காக நீங்கள் காத்திருக்கும் போது, உதவி தேவைப்படுபவர்களை அணுகி அவர்களுக்கு உதவுவது புத்திசாலித்தனம். என் சொந்த பிரச்சனையை என்னால் தீர்க்க முடியவில்லை என்றாலும், தேவன் மற்றவருக்கு உதவும் திறனை எனக்கு தருகிறார். நாம் மற்றவர்களுக்கு உதவி செய்யும் போது,

நம் வாழ்வில் ஆசீர்வாதத்தின் அறுவடையை மீண்டும் கொண்டு வரும் விதையை நாம் விதைக்கிறோம். இந்த மூன்று வேத வசனங்களைக் கவனியுங்கள், நீங்கள் ஒத்துக் கொள்வீர்களென்று நான் நினைக்கிறேன்:

*சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.*

*கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார்; பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான்; அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர். படுக்கையின்மேல் வியாதியாய்க்கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவீர். (சங்கீதம் **41:1-3**).*

## நம்பிக்கை

*நம்பிக்கை என்பது குணமடைந்த ஆத்துமாவின் மற்றொரு பக்க விளைவு. தேவன், அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பில் நாம் பாதுகாப்பாக இருக்கவும், அவரில் நாம் யார் என்பதை அறிந்திருக்கும் வரை வாழ்க்கையிலே நாம் என்ன என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்யலாம் என்று விசுவாசிக்கவும் விரும்புகிறார்.*

*என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே*
*எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.*
*(பிலிப்பியர் 4:13).*

*இந்த வேத வாக்கியத்தை தியானிப்பதற்கு நான் ஒருபோதும் களைப்படைவதில்லை. இந்த வாக்கு அற்புதமானது! நாம் பயத்துடன் வாழ்வதிலிருந்து வாழ்க்கையில் எதற்கும் தயாராக இருக்கிறோம் என்ற நம்பிக்கையுடன் வாழும்படி மறுரூபமாக்கப்படலாம்.*

*நம் நம்பிக்கை நம்மால் என்ன செய்ய முடியும் என்பதில் இருக்கக்கூடாது. ஆனால் இயேசு நம் மூலம் என்ன செய்ய முடியும் என்பதில் இருக்க வேண்டும். நாம் நிபந்தனையின்றி நேசிக்கப்படுகிறோம் என்று சந்தேகத்திற்கிடமின்றி அறிவது, சாதாரணமாக பயத்துடன் செய்யும் காரியங்களை தைரியத்துடன் செய்ய தைரியத்தை அளிக்கிறது. நாம் தவறு செய்தாலும், தேவன் இன்னும் நம்மை நேசிக்கிறார், நமக்கு உதவ தயாராக இருக்கிறார் என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம். நீதிமொழிகள் 24:16, நீதிமான் ஏழு முறை விழுந்தாலும் மீண்டும் எழுகிறான் என்று நமக்குச் சொல்கிறது.*

*வாழ்க்கையில் நாம் வீழ்த்தப்படலாம், ஆனால் நாம் கிறிஸ்துவில் இருந்தால், நம் ஆத்துமா ஆரோக்கியமாக இருந்தால், நாம் எப்போதும் எழுந்து விடுவோம். நீங்கள் உங்கள் வலியிலும் துயரத்திலும் படுத்துக் கொண்டிருந்து, உங்கள் வாழ்க்கை கடந்து செல்வதை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தால், நீங்கள் மீண்டும் எழுந்து செல்ல வேண்டிய நேரம் இது.*

தன்னம்பிக்கை உங்களால் முடியாது என்று பயப்படுவதற்குப் பதிலாக உங்களால் முடியும் என்று நம்ப வைக்கிறது. மற்றவர்கள் உங்களைப் பற்றி என்ன நம்பினாலும் சரி, நீங்கள் எதை நம்புகிறீர்களோ அதுதான் முக்கியம். ஹென்றி டேவிட் தோரோ, "பொது கருத்தானது, ஒரு மனிதன் தன்னைப் பற்றி கொண்டிருக்கும் சொந்த தனிப்பட்ட கருத்துடன் ஒப்பிடுகையில் பலவீனமான கொடுங்கோலனாக இருக்கிறது. ஒரு மனிதன் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறானோ அது தான் அவனுடைய விதியை தீர்மானிக்கிறது, அல்லது காட்டுகின்றது."[25]

> நீங்கள் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்களோ அது தான் முக்கியம்.

நான் ஒருபோதும் எதையும் செய்ய மாட்டேன் என்று என் தந்தை என்னிடம் கூறினார். நான் அவரை நம்பின வரை, அவர் சொல்வது சரியாக இருந்தது. ஆனால் நான் கிறிஸ்துவின் மூலம் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்று தேவன் எனக்குக் காட்டியபோது, என்னை பற்றிய மதிப்பீட்டில் என் தந்தை தவறாக இருந்ததை நான் அறிந்தேன். உங்களைப் பற்றிய மதிப்பீட்டிலும் பலர் தவறாக இருக்கிறார்கள். மக்கள் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்களோ, அல்லது சொல்லுகிறார்களோ அது உங்கள் விதியை தீர்மானிக்க அனுமதிக்காதீர்கள்.

தன்னம்பிக்கை உள்ளவர்கள், தாங்கள் தோல்வியடைந்து விடுவார்கள் என்று முயற்சி செய்வதற்கு பயப்படுவதைக் காட்டிலும், வாய்ப்புகளை ஏற்றுக்கொண்டு முயற்சி செய்கிறார்கள்.

அமண்டாவுக்கு பாப்பை பிடிக்கும், ஆனால் அவனுக்கு அவளைப் பிடிக்கவில்லை என்று அவள் பயப்படுகிறாள். அவள் பாதுகாப்பின்மை மற்றும் நம்பிக்கையின்மையால் அவதிப்பட்டாள், அவளுடைய வாழ்க்கையின் கதை என்னவென்றால், அவள் உண்மையிலே அவள் செய்ய விரும்புவதை ஒருபோதும் அவள் செய்வதில்லை; மாறாக, அவள் பயத்தால் சுருங்கி விடுகிறாள். அமண்டா, பாபிடம் சென்று அவருடன் பேச விரும்புகிறார். அவன் கொண்டிருக்கும் சில திறமைகளுக்கு பாராட்டு தெரிவிக்க விரும்புகிறாள், ஆனால் நிராகரிக்கப்படுவாளென்று பயப்படுகிறாள்.

நிராகரிக்கப்படுவோமென்ற பயம் அவளை அவனிடம் நட்பற்றவளைப் போன்றும், புரிந்துக் கொள்ள இயலாதவளைப் போன்றும் நடந்துக் கொள்ள செய்தது. அவளைப் புரிந்துக் கொள்வது கடினமென்று அவன் உணர்கிறான். இதனால் என்ன நடந்தது என்று யூகிக்க முடிகிறதா? அவள் அவனைப் புறக்கணிக்கிறாள், அவனும் அவளைப் புறக்கணிக்கிறான், அவளுடைய அச்சங்கள் அவளுடைய யதார்த்தமாகிவிட்டன. அமண்டா தனது வாழ்க்கையில் அனுபவித்த சுழற்சி தொடர்கிறது, அவள் இன்னும் பரிதாபமாகவே இருக்கிறாள்.

அது அப்படியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. விஷயங்களை மாற்ற அமண்டா என்ன செய்ய முடியும்? அவள் தேவன் அவளை நேசிக்கிறார் என்று விசுவாசிப்பதின் மூலம் அதை ஆரம்பிக்கலாம். அந்த அன்பின் காரணமாக, அவள் நம்பிக்கையுடன் இருக்க முடியும். அவள் தன்னிடம் பேசும் பேச்சை மாற்றிக் கொள்ள வேண்டும். அவள் தன் வாழ் நாள் முழுவதும் தன் பேச்சினாலே காரியங்கள் நடைபெறாதபடி செய்துவிட்டாள். ஆனால் அவளால் அதை மாற்றிக் கொண்டு காரியங்கள் நடைபெறத்தக்கதாக பேச முடியும்.தேவன் நமக்கு எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருப்பதை கண்டுபிடிப்பது தான் அறிவியல்: ஒரு மனிதன் தன் இருதயத்தில் எப்படி நினைக்கிறானோ, அப்படியே அவன் ஆகிறான் (நீதிமொழிகள் 23:7).

விக்டோரியா பல்கலைக்கழக உளவியலாளர் டானு அந்தோனி ஸ்டின்சன், "சுய உறுதிப்பாடு [ஒருவரின் அடையாளத்திற்கு தனிப்பட்ட மதிப்புகளைப் பற்றி சிந்தனை செய்வது மையமானதாக இருக்கிறது] பாதுகாப்பற்ற மக்களுக்கு ஒரு உளவியல் இடையகத்தை வழங்குவதாகத் தெரிகிறது. அவர்கள் சமூக அச்சங்கள் மற்றும் கவலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, அன்பான, வரவேற்கும் வழிகளில் நடந்து கொள்ள அனுமதிக்கிறது."[26]

துரதிர்ஷ்டவசமாக, பல பெண்களும் பெண் பிள்ளைகளும் தாங்கள் எப்படி இருக்கிறார்கள் என்று நினைக்கிறார்களோ அதன் மூலம் தங்கள் நம்பிக்கையைப் பெறுகிறார்கள். அவர்கள் சமூகம் என்ன சொல்கிறது என்பதன் அடிப்படையில் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனரா, ஏற்றுக்கொள்ளப்படவில்லையா என்பதை

தீர்மானிக்கிறார்கள். தேவன் எல்லாவற்றையும் நன்றாக, அழகாகப் படைத்தார் என்று நான் நம்புகிறேன், அவர் நம்மையும் படைத்திருப்பதால் நாம் அனைவருமே நம் சொந்த வழிகளில் அழகாக இருக்கிறோம். நாம் யாரோ ஒருவர் போல் இல்லை என்பதால் நாம் அழகாக இல்லை என்று அர்த்தம் இல்லை. உண்மையான அழகு உள்ளிருந்து வருகிறது என்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அது உண்மை என்று நான் நம்புகிறேன். தேவன் தம்முடைய வார்த்தையில் பேசும் மறைந்திருக்கும் உள்ளான மனிதன் பேரில் போதுமான அளவு கவனம் செலுத்துவதைவிட நமது பல்வேறு உடல் பாகங்களின் மேல் அதிக கவனம் செலுத்துகிறோம்.

> *மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. (1 பேதுரு 3:3-4).*

எல்லாம் சரியாக இருக்கிறது என்பதை உறுதி செய்து கொள்ள, நான் வெளியே செல்வதற்கு முன் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட முறை என் உடைகளை மாற்றிக்கொண்டிருக்கிறேன். அழகாக தோற்றமளிப்பதில் தவறேதும் இல்லை என்றாலும், தேவன் என்னை சில முறைக்கு மேல் கனிவாக இடித்து, என் நம்பிக்கை இருக்க வேண்டிய இடம் என் ஆடையில் இல்லை என்பதை நினைவுபடுத்த வேண்டியிருந்தது.

டோவின் சுயமரியாதை திட்டத்தால் நியமிக்கப்பட்ட ஒரு கட்டுரையில் இந்த நாட்டில் பெண்கள் மத்தியில் சுயமரியாதை நெருக்கடி இருப்பதை வெளிப்படுத்தியது.[27]

- அனைத்து இளம் பெண்களில் அறுபத்தி இரண்டு சதவீதம் பேர் பாதுகாப்பற்றவர்களாகவும், தாங்கள் யார் என்பதைப் பற்றி உறுதியாகத் தெரியாதவர்களாகவும் உணர்கிறார்கள்.

- *ஐம்பத்தேழு சதவீத பெண் குழந்தைகள் தங்கள் தோற்றத்தை விமர்சிக்கும் தாயைக் கொண்டுள்ளனர்.*
- *குறைந்த சுயமரியாதை கொண்ட பெண்களில் எழுபத்தொரு சதவிகிதத்தினர் தங்கள் தோற்றம் போதுமான அளவில் இல்லை என்று நினைக்கிறார்கள்.*
- *அது அழகு, மெல்லிய தோற்றம்அல்லது நவ நாகரீகத்தையும் உள்ளடக்குகிறது*
- *ஒரு பெண்ணின் சுயமரியாதை, அவள் உண்மையில் எவ்வளவு எடையுடனிருக்கிறாள் என்பதைவிட அவள் தன் உடல் வடிவம் மற்றும் உடல் எடையை எப்படிப் பார்க்கிறாள் என்பதோடு அதிக தொடர்புடையது.*
- *குறைந்த சுயமரியாதை கொண்ட டீன் ஏஜ் பெண்களில் 61 சதவீதம் பேர் தங்களைப் பற்றி தவறாகப் பேசுகிறார்கள்.*
- *குறைந்த சுயமரியாதை கொண்ட பெண்களில் இருபத்தைந்து சதவீதம் பேர், அவர்கள் தங்களைப் பற்றி மோசமாக உணரும் போது, அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது, தங்களைத் தாங்களே வெட்டிக் கொள்வது, புகைபிடிப்பது அல்லது குடிப்பது போன்ற எதிர்மறையான செயல்களில் ஈடுபடுவதாகக் கூறுகிறார்கள்.*

பெண்களும் பெண் பிள்ளைகளும் தாங்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதில் தங்கள் நம்பிக்கையை வைத்து தங்கள் வாழ்க்கையை செலவிடுவதைக் காண்பது வருத்தமாக இருக்கிறது. ஏனென்றால் நாம் எவ்வளவு அழகாக தோன்றினாலும், உலகத் தரத்தின்படி நம்மை விட சிறப்பாகக் காணக்ப்படக்கூடிய ஒருவர் எப்போதுமே இருப்பார். நமது நம்பிக்கையும் அழகும் கிறிஸ்துவை அறிவதிலும், அவரைப் போல் ஆவதிலும் காணப்பட்டும்.

## உங்கள் குணப்படுத்துதல் குடும்பம் மற்றும் நண்பர்களை பாதிக்கிறது

நம் வாழ்வில் உள்ளவர்கள் நம் காயப்பட்ட ஆத்துமாவால் பாதிக்கப்படுவதைப் போலவே, நம் குணப்படுத்துதலாலும்

அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதை மனதில் வைத்துக் கொள்வது, விட்டு விடலாமென்று சோதிக்கப்படும் நாட்களில் வெற்றியை நோக்கி முன்னேற உதவுகிறது. என் காயங்கள் நான் விரும்பும் நபர்களை காயப்படுத்த வேண்டும் என்று நான் நினைக்கவில்லை, ஆனால் அவை அப்படி செய்தது. இப்போது என் சுகம் மற்றவர்களுக்கு உதவுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் வாழ்க்கையின் பெரிய பகுதி உறவுகளாகும். நாம் அனைவரும் நல்லுறவை அனுபவிக்க விரும்புகிறோம். நாம் நம் உள்ளான வாழ்க்கையில் காயங்கள், சிராய்ப்புகள் மற்றும் வலிகளுடன் வாழும் போது வாழ்க்கை மிகவும் கடினமாகிவிடும். நாம் மக்களை காயப்படுத்த விரும்பவில்லை, ஆனால் அப்படி செய்கிறோம். ஏனெனில் நமக்குள் என்ன இருக்கிறதோ அதுவே வெளியே வருகிறது.

நான் எனக்காக மட்டுமல்ல, எனது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் என் அன்றாட வாழ்க்கையில் நான் சந்திக்கும் அனைவருக்காகவும் நான் அழுத்தம் கொடுத்து முன்னோக்கி செல்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். நாம் செல்லும் இடமெல்லாம் மக்களைப் பாதிக்கின்றோம், தொடுகின்றோம். வீட்டில், பள்ளியில், வேலை ஸ்தலத்தில், தேவாலயத்தில், அல்லது நம் சுற்றுப்புறங்களில், மக்கள் மீது ஒரு அபிப்ராயத்தை விட்டு விடுகிறோம். சிலரைப் பார்த்து நான் சிரித்தாலும் சிரிக்காமலிருந்தாலும்-அவர்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றிய ஒரு அபிப்ராயம் ஏற்படுகின்றது. நான் குணமடைந்து மகிழ்ச்சியாக இருக்கும் போது சிரிப்பதைப் போல, என் வலியின் காரணத்தாலோ, மகிழ்ச்சியின்மையினாலோ நான் சோர்வடைந்து மனச்சோர்வடைந்திருக்கும் போது நான் சிரிக்கவோ அல்லது நட்பாகவோ இருக்க முடியாது. மற்றவர்களைப் பார்த்து புன்னகைப்பது போன்ற இந்த எளிமையான செயல் அவர்கள் தங்களைப் பற்றி நன்றாக உணர வைக்கும். மற்றவர்களுடனான நமது தொடர்பு சுருக்கமாக இருக்கலாம், ஆனால் சிலவழிகளில் அது நீடித்திருக்கும். நாம் அவர்களிடம் என்ன சொன்னோம் என்பதை மக்கள் நினைவில் வைத்திருக்க மாட்டார்கள், ஆனால் நாம் எப்படி அவர்களை உணர செய்தோம் என்பதை அவர்கள்

நினைவில் வைத்திருப்பார்கள். உங்களைப் பற்றி நீங்கள் எவ்வளவு நன்றாக உணருகிறீர்களோ, அவ்வளவு நன்றாக மற்றவர்களைப் பற்றி நீங்கள் உணர வைப்பீர்கள்.

> உங்களைப் பற்றி நீங்கள் எவ்வளவு நன்றாக உணருகிறீர்களோ, அவ்வளவு சிறப்பாக மற்றவர்கள் அவர்களைப் பற்றி உணர வைப்பீர்கள்.

ஆத்துமா குணமடைந்து ஆரோக்கியமாக இருப்பதன் மூன்று நன்மைகளைப் பார்த்தோம். ஆனால் இன்னும் நூற்றுக்கணக்கானவை உள்ளன. உங்களுக்காகக் காத்திருக்கும் அனைத்து நல்ல விஷயங்களையும் எதிர்நோக்குமாறு நான் உங்களை ஊக்குவிக்கிறேன்.

அவரைத் தேடுவதில் ஜாக்கிரதையாக இருப்பவர்களுக்கு எப்போதுமே பலன் அளிக்கிறார் (எபிரெயர் 11:6). சாமுவேல் ஜான்சன் கூறினார், “நாம் எப்போதும் எளிதாகச் செய்ய நம்பும் காரியங்களை முதலில் விடாமுயற்சியுடன் செய்ய வேண்டும்.” ஒரு புதிய வழியில் விஷயங்களைச் செய்வதற்கு விடாமுயற்சி தேவை, ஆனால் இப்போது உங்களால் கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக உணரக்கூடியது, நீங்கள் கைவிடாவிட்டால் ஒரு நாள் எளிதாகிவிடும் என்பதை நான் என் அனுபவத்தால் அறிந்திருக்கிறேன்.

## அத்தியாயம் 22

# வலியற்ற பாதை

*எது எளிதாக வருகிறதோ அது நிலைக்காது, நீடித்திருப்பது எளிதாக வராது.*

*- ஆசிரியர் தெரியவில்லை*

*நீங்கள் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கும் முன் இந்த அத்தியாயத்தின் தலைப்பைப் பார்த்திருந்தால், நீங்கள் முதலில் இதை படித்திருப்பீர்கள், ஏனெனில் நம்மில் பெரும்பாலோர் வலியற்ற பாதையை விரும்புகிறோம். அதனால் யாரோ ஒருவர் ஒரு நாளைக்கு மூன்று முறை இதை சாப்பிடுவது உங்கள் உடலில் இருந்து கொழுப்பைக் கரைக்கும் என்ற வாக்குறுதியுடன் ஒரு மாத்திரையை தொலைக்காட்சியில் விளம்பரப்படுத்தலாம், அவர்கள் அதனால் கோடிக் கணக்கான பாட்டில்களை விற்கிறார்கள். நம் மாம்சம் எப்பொழுதும் சுலபமான வழியையே தேடுகிறது, ஆனால் நான் உங்களுக்கு தவறான நம்பிக்கையை கொடுக்க விரும்பவில்லை, அதனால் நான் வெளிப்படையாக கூறுகிறேன். உங்கள் ஆத்துமா துஷ்பிரயோகம், நிராகரிப்பு, இழப்பு, கைவிடப்படுதல், நீண்ட கால நோய் அல்லது ஏதேனும் ஒன்றின் மூலம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்குமென்றால், குணப்படுதலை நோக்கிய பயணம் வலியற்றதாக இருக்காது. ஆனால் நீங்கள் குணமடைந்தவுடன், நீங்கள் அதை உங்கள் வாழ்நாள் முழுவதும் வைத்து அனுபவிக்க முடியும்.*

*நம் வாழ்க்கையிலே நாம் நடக்கக்கூடிய ஒரு குறுகிய பாதையும். ஒரு விசாலமான பாதையும் இருக்கிறது என்று இயேசு சொன்னார். நாம் குறுகலான பாதையை எடுத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்துகிறார், குறுகலான பாதையின் விளக்கமானது அதில் நடப்பது மிகவும் கடினம் என்று நமக்கு சொல்கிறது.*

> இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின்வழியாய்ப்பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். (மத்தேயு 7:13-14).

அகலமான பாதை இலகுவாகத் தோன்றினாலும், இறுதியில் அது நாம் எங்கு செல்ல வேண்டுமோ அங்கே நம்மை அழைத்துச் செல்லாது என்பதைக் கண்டறிவோம். இயேசு அழிவுக்கு நடத்திச் செல்லும் என்று கூறும் அகன்ற பாதையிலே நாம் இருந்தால், நம் மாம்ச சுமைக்கு நிறைய இடம் கிடைக்கும், ஆனால் குறுகிய பாதையில் நமக்கு கிடைக்காது. இருப்பினும், குறுகிய பாதை வாழ தகுதியான வாழ்க்கைக்கு நம்மை நடத்திச் செல்லும்.

"மாம்ச சுமை" என்பதன் அர்த்தம் என்ன? இயேசுவின் தலைமைத்துவத்தையும் வழிகாட்டுதலையும் பின்பற்றுவதைக் கற்றுக் கொள்வதைக் காட்டிலும், நாம் நம் மாம்ச இச்சையின்படி தொடர்ந்து நடந்துகொள்கிறோம் என்று நான் சொல்கிறேன். அவர் நாம் என்ன செய்ய வேண்டும் என்று நமக்கு அறிவுறுத்துகிறாரோ அதற்கு பதிலாக, நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ அதைச் செய்கிறோம்.

நாம் ஒருவரில் மூவரான மனிதர்கள்: நாம் ஆவியாயிருக்கிறோம், நமக்கு ஒரு ஆத்துமா உள்ளது, நாம் சரீரத்தில் வாழ்கிறோம். வேதம் "மாம்சம்" என்று குறிப்பிடும் போது, அது சரீரம் மற்றும் ஆத்துமா (மனம், விருப்பம் மற்றும் உணர்ச்சிகள்) இணைந்தது. மாம்சம் ஆவியிலிருந்து மிகவும் வேறுபட்டது. நாம் மறுபடியும் பிறக்கும் போது (விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறோம்), இயேசு நம்மில் வாழ வருகிறார். நம்முடைய ஆவி, வாழ்க்கையில் நம்மை வழிநடத்த முற்படும் அவருடைய ஆவியுடன் நிரப்பப்படுகிறது. நாம் சரியானதைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார், ஆனால் நாம் அதை செய்ய அவர் நம்மை ஒருபோதும் கட்டாயப்படுத்துவதில்லை.

மாம்சத்தில் அல்ல, ஆவியில் "நடக்க" விசுவாசிகளை பவுல் வலியுறுத்தினார். ஆவி பரிசுத்தமானது மற்றும் நல்லது, ஆனால்

மாம்சமோ தீமையை செய்யும் தன்மையால் நிரம்பியுள்ளது. உதாரணமாக, ஒரு விசுவாசி மாம்சத்தில் (அல்லது அதன்படி) நடந்து கொண்டிருந்தால் யாரோ அவளை புண்படுத்தும் போது, அவள் தன் உணர்வுகளைப் பின்பற்றி, கோபமாகவும், வெறுப்பாகவும், ஆத்திரமாகவும், வன்மத்துடன் இருந்து ஒருவேளை பழிவாங்க வேண்டும் என்பதை தேர்ந்தெடுப்பாள். மறுபுறம், ஒரு விசுவாசி ஆவியில் (அல்லது அதன்படி) நடந்தால், அவள் தொட்டால் சினுங்கியாக இருப்பதை எதிர்ப்பாள், விரைவில் மன்னிக்க தெரிந்துக் கொள்வாள். அவள் இந்த தேர்வை செய்ய வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் இது எளிதான ஒன்று அல்லது நியாயமானது அல்லது செய்ய விரும்புவது என்று அவள் நினைக்கிறாள். ஆனால் அவள் அதைத் தேர்ந்தெடுக்கிறாள், ஏனென்றால் அது தேவனுடைய விருப்பமாக இருக்கிறது. மாம்சத்தில் நடக்காமல் ஆவியில் நடப்பது என்பது இதுதான்.

தேவனுடைய சித்தத்தின்படி நாம் சரியான தேர்வுகளைச் செய்யும்போது, நாம் அகன்ற பாதையில் அல்ல, குறுகிய பாதையில் நடக்கிறோம். கிறிஸ்துவுடன் குறுகிய பாதையில் பயணிக்க நாம் முடிவெடுக்கும் போது, அந்த பாதை அநேக வேளைகளில் நாம் செல்ல செல்ல குறுகலாக மாறுவதைக் காணலாம். நாம் தேவையின் காரணமாக, பல்வேறு மாம்சம் சார்ந்தவைகளை நாம் அந்த பாதையில் இருக்க வேண்டுமென்பதால் விட்டு விட வேண்டியிருக்கும். மக்கள், கெட்ட கோப குணம் கொண்ட, பாதுகாப்பற்ற, மற்றவர்களைக் கட்டுப்படுத்துபவர்களைப் பற்றி அல்லது பயத்தால் ஆளப்படுகின்ற அவர்களுக்கு தெரிந்தவர்களைப் பற்றி பேசும் போது, அவர்கள் இப்படி சொல்வதை நான் அடிக்கடி கேட்கிறேன்: "அவர்களிடம் நிறைய சுமைகள் உள்ளன!"

பரிசுத்த ஆவியானவர் நாம் அவருடன் குறுகிய பாதையில் நமது பயணத்தைத் தொடர விரும்பினால் என்ன என்ன சுமைகளை விட்டு விட்டுச் செல்ல வேண்டும் என்பதைக் காட்டுகிறார். சமீபத்தில் எனது மாநாடு ஒன்றில் கலந்து கொண்ட ஒரு பெண், "ஆஹா, ஜாய்ஸ்! இன்று காலை தேவன் என்னை சரியாக அறைந்தார் என்று சொன்னாள்." அவள் என்ன அர்த்தத்தில் சொன்னாள்? அவர் ஒரு பெண்கள் குழுவுடன் வேத பாடம் மேற்கொள்வதாகவும், வேத பாட ஆசிரியர் ஒருவரின்

போதனையை குறுந்தகட்டில் கேட்க வேண்டுமென்பதே அந்த வாரத்திற்கான அவளது பணி என்று என்னிடம் கூறினாள். "தேவன் என்னிடம் நான் சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்த முயற்சிப்பதை நிறுத்திவிட்டு, என் வாழ்க்கையில் அவர் கிரியை செய்ய நான் விட்டுவிட வேண்டிய நேரம் இது என்று அதிக நிச்சயமாக காண்பித்தார் என்று சிவந்த முகத்துடனும் மிகுந்த உணர்ச்சியுடனும் அவள் சொன்னாள்."

தேவன் "அவளை சரியாக அறைந்தார்" என்று அவள் சொன்னபோது, சூழ்நிலைகளையும், மக்களையும் கட்டுப்படுத்த முயலும் சுமையை, அவள் சென்று கொண்டிருந்த பாதையில் அவள் மேலும் முன்னேற வேண்டுமென்றால் விட்டுவிட வேண்டியிருந்தது என்பதை அவளுக்கு திட்டவட்டமாக வெளிப்படுத்தினார் என்பதைக் குறித்து சொன்னாள். இந்த பெண் குறிப்பிடும் புரிதலின் வகையைதான் வேதம் வெளிப்படுத்துதல் என்று அழைக்கிறது. இது நாம் சாதாரணமாக அறிவு என்று அழைப்பதை விட ஆழமான ஒன்றாகும். இது நம்மை ஆழமாகப் பாதிக்கிறது. நம்முடைய அடுத்த படிகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை பற்றிய ஒரு நிச்சயத்தை நமக்கு கொடுக்கிறது.

இன்று காலை ஒரு இளைஞன் என்னை அழைத்தான், அவனுடைய பெயரை என் தொலைபேசியில் பார்த்தபோது, அவன் என்ன விரும்பினான் என்று எனக்கு உறுதியாக தெரிந்தது. அவன் புற்றுநோய்க்கு தன் இளம் மனைவியை இழந்து மிகுந்த வேதனையில் இருந்த போது அவன் எனக்கு ஒரு புண்படும் வகையில் ஒரு மின்னஞ்சல் எழுதியிருந்தார். நாங்கள் அவனுக்கு நிறைய உதவி செய்தோம், ஆனாலும் இறுதியில் நாங்கள் அவனுக்கு வேண்டிய அளவுக்கு உதவாமல் அவனைக் கைவிட்டதாக அவன் உணர்ந்தான். அவன் அனுப்பிய மின்னஞ்சல் அவனுக்கு முற்றிலும் பொருத்தமற்றதாக இருந்தது, நான் காயம் அடைந்தது மட்டுமல்ல ஆச்சரியமும் அடைந்தேன். நான் சில மாதங்களாக அவன் மன்னிப்பு கேட்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். அதை நான் என்னை விட அவனுக்கு அது அதிகமாக வேண்டும் என்று நான் நேர்மையாக சொல்ல முடியும். அவன் மனந்திரும்ப வேண்டும் என்றும், அவ்வாறு செய்யவில்லை என்றால், விரைவிலோ அல்லது

பின்னரோ அவனது செயல்கள் அவனுக்கு இடையூறாக ஆகிவிடும் என்றும் எனக்குத் தெரியும்.

நான் தொலைபேசி அழைப்புக்கு பதிலளித்த போது, அவன் உடனடியாக என்னிடம் அவன் அனுப்பிய மின்னஞ்சலுக்காக மிகவும் வருந்துவதாகவும் அவன் யார் மீதாவது பழி சுமத்தினால் தன்னுடைய வருத்தத்திலிருந்து விடுபடலாம் என்ற நம்பிக்கையில் அப்படி செய்ததாகவும் அவன் கூறினான். நாங்கள் சிறிது நேரம் பேசினோம், அவன் சில விஷயங்களைச் செய்ய முயற்சிக்கும்போது மிகுந்த மன அழுத்தத்தில் இருந்ததையும், அது தேவனுடைய அபிஷேகத்திற்கு (வல்லமை மற்றும் பிரசன்னம்) தடை அல்லது இடையூறாக இருக்கிறது என்ற ஒரு உணர்வை உணர்ந்ததையும், அவன் தேவனிடம் தன்னிடம் என்ன தவறிருக்கிறது என்று கேட்டபோது, அதை அவனுக்கு தேவன் வெளிப்படுத்தினாரென்றும், தான் அனுப்பிய மின்னஞ்சலுக்காகவும், அவர் அனுப்பிய அந்த சமயம் அவருக்கிருந்த மனப்பான்மைக்காகவும் மனந்திரும்ப வேண்டும் என்பது அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது என்றும் என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

அவன் மன்னிப்பு கேட்டதில் நான் மகிழ்ச்சியடைந்தேன். ஏனென்றால் எங்கள் உறவில் எந்த சண்டையும் இருக்க நான் விரும்பவில்லை, ஆனால் அவனுக்காக நான் அகமகிழ்ந்தேன் ஏனெனில் அவன் நடவடிக்கை எடுத்திருக்கிறான், அதனால் அவன் இப்போது விடுவிக்கப்பட்டு முன்னேறுவான்.

> எல்லாம் தவறாக இருப்பதாக உணரும்போது சரியானதைச் செய்வது முன்னேற்றத்திற்கான பாதை.

நாம் உண்மையிலேயே தேவனை கேட்க விரும்பினால், அவர் நம்மிடம் பேசுவார். ஆனால் நாம் கேட்பதை எப்போதும் விரும்பாமல் இருக்கலாம். நாம் பொதுவாக, செய்ய எளிதான ஒன்றை விரும்புகிறோம், ஆனால் மிகவும் கடினமான காரியங்களைச் செய்ய தேவன் நமக்கு கிருபையைக் கொடுக்க விரும்புகிறார். எல்லாமே தவறாக இருப்பதாக உணரும்போது சரியான விஷயத்தை செய்வது முன்னேற்றத்திற்கான பாதையாகும்.

*சமீபத்தில், நான் எனது பயிற்சியாளருடன் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தேன். அன்று நான் செய்தது எல்லாம் கடினமாக இருந்ததாக உணர்ந்தேன். அனைத்து எடைகளும் இயல்பை விட அதிகமாகத் தெரிந்தன. மேலும் நான் உடற்பயிற்சியை முடிக்க விரும்பினேன். நான், "இது உண்மையிலே இன்று கடினமாக இருக்கிறது." என்றேன். அவர், "இது எளிதானதாக இருக்கும் என்றால், நீங்கள் அதிக முன்னேற்றம் அடையவில்லை." என்று பதிலளித்தார். நான் கேட்க விரும்பியது அதுவல்ல. ஆனால் நான் முன்னேறிக் கொண்டிருக்கிறேன் என்ற எண்ணம் அசௌகரியத்தை எளிதாக்கியது.*

## எதுவும் உண்மையில் இலவசமா?

*இலவசம் என்ற வார்த்தையைக் கேட்டாலே நமக்கு உற்சாகம் வரும். எங்கள் மாநாடுகளில் நாங்கள் சில புத்தகங்களையும், போதனை குறுந்தகடுகளையும் அடுக்கி வைத்து விட்டு, அவற்றை ஒரு சிலருக்கு இலவசமாகக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லும் போது மக்கள் எவ்வாறு பிரதிபலிக்கிறார்கள் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். பொதுவாக தங்களை எப்படி முன்னிறுத்துகிறார்கள் என்பதில் உறுதியாக இருப்பவர்கள் கூட இலவசப் பரிசைப் பெற தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒருவராக இருப்பார் என்ற நம்பிக்கையில்அரங்கின் முற்பகுதிக்கு தங்கள் எல்லா ஒழுக்கக் கட்டுபாட்டையும் விட்டுவிட்டு ஓடி வருவார்கள்.*

*எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் இலவச புத்தகத்தை தொலைபேசியில் அழைத்துக் கேட்கும் எவருக்கும் வழங்குவோமென்றால், அன்றைய தினம் எங்கள் தொலைபேசி அழைப்புகள் பத்து மடங்கு அதிகமாக இருக்கும். இலவசம் என்று நாம் நினைக்கும் ஒன்றைப் பெறுவதில் நாம் உற்சாகமடைகிறோம், ஆனால் எதுவும் உண்மையில் இலவசம் அல்ல. நமக்கு இலவசமாகக் கிடைத்தாலும், அது நமக்குக் கிடைப்பதற்கு முன்னால் எங்காவது வேறு யாருக்காவது அது செலவாக இருந்திருக்கும். கிருபையினால் இலவசமாக நாம் இரட்சிக்கப்படுகிறோம், நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுகிறோம், விடுவிக்கப்படுகிறோம் என்று வேதம் சொல்கிறது (எபேசியர் 2:8). நமது இரட்சிப்பு*

நமக்கு இலவசம், ஆனால் அதற்காக இயேசு ஜீவனையே இழந்தார்.

வலியற்ற பாதையைத் தேடுவது சிறந்தது அல்ல, ஏனென்றால் நீங்கள் ஒன்றைக் கண்டுபிடித்தாலும், ஒருவேளை நீங்கள் எங்கு செல்ல விரும்புகிறீர்களோ அங்கு சென்றடைய கூடாமலிருக்கலாம். நான் இப்போது வாழும் வாழ்க்கையை நான் மிகவும் பாராட்டுகிறேன், ஏனெனில் அதை பெற்றுக் கொள்வது வேதனையாக இருந்தது. அதற்கு முயற்சி, விடாமுயற்சி, கருத்து மற்றும் என்னில் உள்ள அனைத்தையும் விட்டுவிட விரும்பும்போது தொடர்ந்து செல்லும் விருப்பம் தேவைப்பட்டது. துஷ்பிரயோகம் மற்றும் அதனால் ஏற்பட்ட காயங்களிலிருந்தும் எனக்கு விரைவாக குணம் கிடைக்கவில்லை. நான் நினைத்ததை விட அதிக காலம் எடுத்தது, மேலும் நான் இருக்கும் என்று எதிர்பார்த்ததை விட கடினமாகவும் இருந்தது. ஆனால் அது எவ்வளவு அற்புதமானது, சுவாரஸ்யமானது என்பதை உங்களுக்குச் சொல்ல என்னிடம் பொருத்தமான வார்த்தைகள் இல்லை.

அடிமைத்தனத்தில் இருந்து விடுபட்டு விடுதலையாக இருப்பதை, ஒருவர் ஆழ்ந்த துன்பங்களை அனுபவித்திருந்தால் மட்டுமே உண்மையாக அந்த சுதந்திரத்தைப் பாராட்ட முடியும் என்று நான் நினைக்கிறேன். நாம் பொதுவாகவே அதிக கிரயம் செலுத்தின காரியங்களை சிறப்பாகக் கவனிக்கிறோம், அதிகமாகப் பாராட்டுகிறோம். உங்கள் காயமடைந்த ஆத்துமாவிலிருந்து விடுபடுவதற்கு உங்கள் பங்கில் முயற்சி தேவைப்படலாம், ஆனால் உங்களால் கற்பனை செய்ய முடிந்ததை விட நீங்கள் அதை அதிகமாக மதிப்பீர்கள்.

நான் குறுகிய பாதையைத் தேர்ந்தெடுக்காமல் இருந்திருந்தால் என் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என்று என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. மிக நீண்ட காலமாக யாராவது என்னை பொருத்துக் கொண்டு என்னுடன் இருந்திருப்பார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. அதனால் நான் அமெரிக்க சமூக சேவகியும், நடிகையுமான ஸ ஸ கபோர் ஐ விட அதிக முறை திருமணம் செய்திருப்பேன் - அவள் ஒன்பது முறை திருமணம் செய்து கொண்டாள். எனக்கு குழந்தைகள் இருந்திருந்தால் அவர்களும் என்னை மிகவும் விரும்பியிருக்க மாட்டார்கள்.

எனக்கு உண்மையான நண்பர்கள் இருந்திருக்க மாட்டார்கள், மேலும் தனிமையான, நிர்பந்தமான வாழ்க்கையை வாழ்ந்திருந்திருப்பேன். டேவ், தான் இருபது வெவ்வேறு பெண்களை மணந்திருந்திருப்பதைப் போன்று உணர்ந்ததாக அடிக்கடி சொல்வதுண்டு, ஏனென்றால் ஒவ்வொரு முறையும் தேவன் என்னை மாற்றிய போது, ஒரு சிறந்த பதிப்பாகிய என்னை நீங்கள் மேலும், மேலும் சிறப்பாக மாற்றுகிறீர்கள். ஆனால் அகலமான பாதையில் நீங்கள் அதே மாதிரியாக இருப்பீர்கள் அல்லது நீங்கள் இன்னும் மோசமாக மாறலாம்.

கடினமாகத் தோன்றினாலும், குறுகிய பாதையிலே இருங்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களை சரியான வேகத்தில் வழிநடத்துவார்.

மேலும் அந்த வழியில் செல்லும் போது நீங்கள் பெறும் ஒவ்வொரு சிறிய, சிறிய வெற்றியையும் பாராட்டலாம், கொண்டாடலாம்.

நீங்கள் இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்பதையும் உங்களிடம் இருக்கும் தவறு என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பதை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கும் தவறை மட்டும் செய்யாதீர்கள். தேவனுக்கு நீங்கள் பயணம் செய்ய தயாராக இருக்கிறீர்களா, ஒவ்வொரு நாளும் நீங்கள் இன்னும் கொஞ்சம் முன்னேறுகிறீர்களா என்பது மட்டும் முக்கியம்.

## விரைவான திருத்தங்கள்

உடைந்த பொருட்கள் விரைவாக சரிசெய்யப்படும் போது நாம் அதை விரும்புகிறோம், ஆனால் தேவனிடம் நிறைய விரைவான திருத்தங்கள் இல்லை. நாம் பொதுவாக தேவன் மிகவும் மெதுவான வேகத்தில் நகர்கிறார் என்று நினைக்கிறோம், ஆனால் அவர் விரைவான திருத்தங்களை விட தரம் மற்றும் ஆழம் ஆகியவற்றில் அதிக அக்கறை கொண்டிருக்கிறார்.

நம்முடைய ஜெபம் அநேக வேளைகளில் “ஆண்டவரே, தயவுசெய்து என்னைப் பொறுமையாக்கும், அதை இப்போதே செய்யும்!” என்பதாக இருக்கிறது. “நாம் சகிப்புத்தன்மையையும்,

உறுதியையும், பொறுமையையும் நம்மில் முழுமையாக கிரியை செய்ய அனுமதித்து, அவை முழுமையான வேலையை நம்மில் செய்ய நாம் அனுமதிக்க வேண்டும்," அதனால் நாம் முழுமையானவர்களாகவும், பரிபூரணமானவர்களாகவும், எதிலும் குறைவில்லாதவர்களாகவும் இருக்க முடியும் என்று வேதம் சொல்கிறது. (யாக்கோபு 1:4). தேவன் ஒரு இறுதி இலக்கை மனதில் வைத்திருக்கிறார், மேலும் அவர் அவரது இலக்கை அடைய தேவையான எதையும் செய்யவும், அதற்கு தேவையான எந்த நேரத்தையும் எடுத்துக் கொள்ளவும் தயாராக இருக்கிறார்.

ஒரு காளான் ஒரே இரவில் வளர முடியும், ஆனால் ஒரு பெரிய ஆல மரமோ அல்லது ஒரு பெரிய தேக்கு மரமோ வளர நீண்ட நேரம் எடுக்கும். கேள்வி என்னவென்றால், நாம் ஒரு காளானாக இருக்க விரும்புகிறோமா அல்லது நல்ல கனிகளைத் தருவதை நிறுத்தாத நீதியின் மாபெரும் மரமாக இருக்க விரும்புகிறோமா (எரேமியா 17:8)? நம்முடைய கர்த்தராகிய இயேசு மூன்று வருட ஊழியத்திற்காக முப்பது வருடங்கள் ஆயத்தப்பட்டார், ஆனால் அந்த மூன்று வருடங்களின் வல்லமை என்றென்றும் நிலைத்து இருக்கும். எகிப்தின் பிரதம மந்திரியாக இருக்க யோசேப்பு பதின்மூன்று ஆண்டுகள் தயார் செய்யப்பட்டார், பின்னர் தேவன் அவரைப் பஞ்ச காலத்தில் பலரை பட்டினியில் இருந்து காப்பாற்ற பயன்படுத்தினார்.

வைரங்கள் பூமியில் மிகவும் மதிப்புமிக்க நகைகளில் ஒன்றாகும், அவை பூமியின் ஆழத்தில் புதைந்திருப்பதால் ஏற்படும் பெரும் அழுத்தத்தினாலும் மிக அதிக வெப்பநிலையின் காரணமாகவும் மிக மெதுவாக, உருவாகின்றன. ஜியோட்கள் எனப்படுபவை ஒரு அசிங்கமான வெளிப்புறம் கொண்ட பாறைகள் ஆனால் உட்புறம் அவை மிக அழகாக இருக்கிறது, ஏனெனில் அதின் உட்புறம் பல்வேறு வண்ணங்களின் படிகங்களால் பூசப்பட்டுள்ளது.

நாம் நம்மைப் பற்றி சிந்திக்கும்போது வைரங்கள் மற்றும் ஜியோட்களின் உதாரணங்களைப் பயன்படுத்தலாம். நாம் தேவனோடு நம் குணப்படுத்துதல் மற்றும் முழுமைக்கு நேராக நம் பயணத்தைத் தொடங்கும்போது, நம் நடத்தை மிகவும் கவர்ச்சியற்றதாக இருக்கலாம், ஆனால் நமக்குள் (நம் ஆவியில்),

பரிசுத்த ஆவியானவர் வாழும் இடத்தில், மிகுந்த அழகு மற்றும் நன்மை செய்வதற்கான திறன் உள்ளது.

தேவன் நமக்குள்ளே கிரியை செய்யும் போது வெளியே நம் வாழ்வில் வெளிப்படும் இந்த மறுரூபமடையும் செயல் கால நேரம் எடுத்துக் கொள்ளுகிறது. நம் பயணத்திலே, நம் வெளிப்புற ஓட்டை உடைத்து உள்ளே உள்ளதை வெளியே கொட்ட, வெப்பத்தையும், அழுத்தத்தையும் அனுபவிக்கலாம்.

ஆனால் வேலை முடிந்ததும், தேவன் நம்மில் உருவாக்கிய மகத்தான மாற்றத்தைப் பற்றி நாம் வியந்திருப்போம்.

வில்லியம் ஷேக்ஸ்பியரின் ஒத்தெல்லோவில் இந்த மேற்கோள், நான் இங்கே குறிப்பிடும் ஒரு விஷயத்தை நன்றாகச் சுருக்கமாகக் கூறுகிறது:

> பொறுமை இல்லாதவர்கள் எவ்வளவு ஏழைகளாயிருக்கிறார்கள்! எந்த காயமும் கொஞ்சம் கொஞ்சமாக அல்லாமல் உடனே ஆறுமா?[29]

நம் காயங்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தான் குணமாகும். காயத்தை சரியாகப் பராமரிப்பதற்கு சரியானதை செய்ய நேரமும், விடாமுயற்சியும் அதற்கு தேவை. ஒருவருக்கு காயம் ஏற்பட்டு, மருத்துவரிடம் சென்றால், மருத்துவர் ஒரு மருந்து தைலத்தை கொடுக்கலாம், காயத்தை சுத்தமாக வைத்திருக்கவும், தைலத்தை தினமும் இரண்டு முறை தடவவும், அதை கட்டு போட்டு வைக்கவும் பரிந்துரைக்கலாம். மேலும், மருந்துச்சீட்டில், தேவைப்பட்டால் தைலத்தை குப்பியில் மறுபடியும் நிரப்பிக் கொள்ளலாம் என்றும் சலுகை வழங்கப்பட்டிருக்கலாம். வீட்டிற்கு வந்து ஒருமுறை தைலத்தை தடவியவுடன் குணமாகிவிட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறதில்லை. இது ஒரு செயல்முறையாக இருக்கும் என்பதையும், நாம் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும் என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம்.

உடல் ரீதியான காயங்களைப் போலவே உணர்ச்சி காயங்களுக்குமான அடிப்படை ஒன்றுதான். நாம் பொறுமையாக இருந்து, தேவன் நம்மை வழிநடத்தும் விஷயங்களைச் தொடர்ந்து செய்ய வேண்டும், படிப்படியாக நம் காயங்கள் குணமாகும்.

பொறுமையின் பயிற்சி கசப்பானதாக இருக்கலாம், ஆனால் அதன் பலனோ இனிப்பு.

## உங்கள் வலியைத் தேர்ந்தெடுங்கள்

> முன்னேற்றத்தின் தற்காலிக வலி வேண்டுமா அல்லது அப்படியே இருப்பதன் நித்திய வலி வேண்டுமா?

நம்மில் பெரும்பாலோர் எந்த வலியும் இல்லாமலிருக்கும் வாழ்க்கையை விரும்புகிறோம். ஆனால் தேவன் நம்மை குணப்படுத்த அனுமதிக்கவோ அல்லது நாம் இருக்கும் விதமாகவே இருக்க ஒரு தேர்வு செய்யும் போது, வலியை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் முன்னேற்றத்தின் தற்காலிக வலியை விரும்புகிறீர்களா அல்லது அப்படியே இருக்கும் நித்திய வலியை விரும்புகிறீர்களா?

எந்த விதமான வலியும் ஒரு நல்ல விஷயத்திற்கு வழிவகுக்கும் என்று எனக்குத் தெரிந்தால், அதைத் தாங்குவது மிகவும் எளிதானது என்று நான் காண்கிறேன். உதாரணமாக, கோபத்தை விட்டுவிட்டு என்னை காயப்படுத்தியவர்களை மன்னிக்க நான் தேர்வு செய்தேன், ஏனென்றால் அமைதியும், தேவனுடைய சித்தத்தில் இருப்பதுமே ஆசீர்வாதம் என்று எனக்கு தெரியும். நான் சில சமயங்களில் எனக்காக வைத்திருக்க விரும்பும் பொருட்களை கூட பிறருக்கு கொடுத்துவிடுகிறேன், ஏனென்றால் கொடுப்பது மகிழ்ச்சியைத் தருகிறது மற்றும் என் வாழ்க்கையில் ஒரு பெரிய அறுவடையைக் கொண்டுவருகிறது என்பதை நான் அறிவேன். நீங்கள் அதைப் பற்றி சிந்திக்க நேரம் ஒதுக்குங்கள். நாம் எல்லோரும் ஒவ்வொரு நாளும் பல முடிவுகளை எடுக்கிறோம், அது நாம் விரும்பும் ஒன்றை விட்டு விட செய்யும், அது நாம் இன்னும் அதிகமாக விரும்பும் மற்றொரு விஷயத்தைப் பெற்றுக் கொள்ள செய்யும்.

சில சமயத்தில், உங்கள் தீர்மானத்தின் முடிவிலிருக்கும் சந்தோஷத்தை நீங்கள் உணர்ந்துகொள்வதால் எளிதாகவோ அல்லது வசதியாகவோ இல்லாத ஒரு முடிவை நீங்கள் அநேக வேளைகளில் எடுப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். இயேசு

மரித்து உங்களுக்கு வழங்கிய வாழ்க்கையை நீங்கள் அனுபவிக்க, உங்கள் ஆத்துமாவில் உள்ள அனைத்து காயங்களையும் தேவன் திறந்து குணப்படுத்திவிட வேண்டும் என்ற முடிவை எடுப்பது எளிதானது அல்ல. ஆனால் காயங்களுடன் வாழ்வது அதைவிட கடினமானதொன்று.

தான் காதலித்தவனால் ஏமாற்றப்பட்ட ஒரு பெண்ணைப் பற்றிய ஒரு திரைப்படத்தைப் பார்த்தேன், ஒவ்வொரு முறையும் அவள் அவனைப் பார்த்த போதோ அல்லது அவன் பெயரைக் கேட்ட போதோ, அவள் மிகுந்த கசப்பையும், கோபத்தையும் உணர்ந்தாள். அவன் அவளை மன்னிக்கும்படி கேட்டான், ஆனால் அவளால் அதை செய்ய முடியாது என்று உணர்ந்தாள். ஒரு பாதிரியார் அவளுடன் அந்த நிலைமையைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார், அவர் கூறினார், “உங்களுக்கு மிகவும் மோசமான பல்வலி இருந்து, அதை பிடுங்கிவிடுவது தான் ஒரே தேர்வாக இருக்கும் என்றால், அதைத் தள்ளி போடுவதில் எந்த அர்த்தமும் இல்லை, ஏனென்றால் அதனால் ஏற்படும் வலியை பற்றி நீங்கள் பயப்படுகிறீர்கள்.”

இந்த திரைப்படம், பல் மருத்துவர்கள் மயக்க மருந்துகளை உபயோகப்படுத்துவதற்கு முன்பு 1800 களில் எடுக்கப்பட்டது, அதனால் நான் ஒரு பல்லை பிடுங்குவது மிகவும் வலியாக இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பார்க்கிறேன். ஆயினும்கூட, போதகர் அவளுக்கு பல்லை பிடுங்குவது சிறிது நேரம் வலிக்கும், ஆனால் அதை வைத்துக்கொண்டிருப்பது எப்போதும் வலித்துக் கொண்டேயிருக்கும் என்பதை நினைவுபடுத்தினார். அவர், “நீங்கள் உங்களைக் காயப்படுத்திய மனிதனை மன்னித்தால், அது வலிமிகுந்த பல்லை பிடுங்குவது போல் இருக்கும். நீங்கள் அதைச் செய்து அதை முடித்து விடுவீர்கள், அதனால் நீங்கள் தொடர்ந்து காயப்படுவதை நிறுத்தி விடலாம்.”

குறுகிய பாதை வலி இல்லாமல் இருக்காது, ஆனால் அந்த பாதையிலே எப்போதுமே இயேசு உங்களுடன் இருப்பார். அது அவர் நடக்கத் தேர்ந்தெடுத்த பாதை, அவர் நம்மைத் தேர்ந்தெடுக்கும்படி தூண்டும் பாதையும் கூட. உங்களுக்காக ஒரு பெரிய வெற்றி காத்திருக்கிறது, நீங்கள் சரியான திசையில் எடுக்கும்

ஒவ்வொரு அடியும், உங்களை அதற்கு நேராக கொஞ்சம் நெருக்கமாக கொண்டு வருகிறது. உங்கள் இருதயத்தில் உள்ள ஒவ்வொரு அறையையும் தேவனுக்குத் திறந்து அதை அவர் வெளிச்சத்தினாலும், அன்பினாலும், சந்தோஷத்தினாலும் நிரப்புவார் என்று நம்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## அத்தியாயம் 23

# மிகப்பெரிய பரிமாற்றம்

*கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்,*

*கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்.*

- *ஏசாயா 61:1-3*

உங்கள் நகரத்தில் தேய்ந்து போன, பயனற்ற, பாழடைந்த, இனிமேல் வேலை செய்யாத எந்த பொருளையும் எடுத்துக் கொண்டு, புத்தம்-புதியதை எந்த செலவும் இல்லாமல் மாற்றிக் கொடுக்கக்கூடிய ஒரு கடை இருப்பது உங்களுக்குத் தெரிந்தால் எப்படி இருக்கும்? அப்படி ஒரு கடை இருந்திருந்தால், பல பொருட்களை பரிமாறிக்கொள்வதில் எந்த நேரத்தையும் நீங்கள் வீணடிப்பீர்களா என்று சந்தேகப்படுகிறேன் - நான் வீணடிக்கமாட்டேனென்று எனக்குத் தெரியும். இதற்கு

தேவையானதொன்று என்னவென்றால், நீங்கள் புதியதைப் பெறுவதற்கு முன், பாழடைந்த பழைய பொருளைக் கொடுத்துவிட வேண்டும்.

பரிமாற்றமான வாழ்க்கையை வாழ இயேசு நம்மை அழைக்கிறார். எந்த நாளிலும், நாம் ஒரு கெட்ட மனப்பான்மையை ஒரு நல்ல மனப்பான்மைக்காக பரிமாறிக்கொள்ளலாம் நம் பாவங்களை மன்னிப்புக்காக பரிமாறிக் கொள்ளலாம், நம் தோல்விகளை கருணைக்காகவும், நம் நம்பிக்கையின்மையை நம்பிக்கைக்கும், ஆயிரக்கணக்கான நல்ல விஷயங்களுக்காகவும் பரிமாற்றம் செய்துக் கொள்ளலாம். ஆனால் நாம் பழையதை கொடுத்துவிடும் வரை புதியதைப் பெற்றுக் கொள்ளப்போவதில்லை.

இயேசுவிடம் நம்மையே - நாமாக இருக்கும் அனைத்தையும், நம்மிடம் இருக்கும் அனைத்தையும் கொடுக்க நாம் தயாராக இருந்தால், அவர் தம்மையும், தம்மிடம் உள்ள அனைத்தையும் கொடுப்பார் (யோவான் 16:15). நாம் விட்டுக் கொடுப்பதை விட அவர் கொடுப்பது அளவிட முடியாதது. சற்று யோசித்துப் பாருங்கள்: பிதாவிடம் உள்ள அனைத்தும் நம்முடையது, நாம் செய்ய வேண்டியதெல்லாம், நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் அதை அனுபவிப்பதற்காக நமது பழைய யோசனைகளையும் வழிகளையும் கைவிடுவதுதான்.

நாம் ஏன் பழையதை விட்டுவிடத் தயங்குகிறோம்? பழைய விஷயங்களில் மர்மம் இல்லை என்று நான் நினைக்கிறேன் - நாம் அவற்றை விரும்பாமல் இருக்கலாம், ஆனால் குறைந்தபட்சம் அவைகள் நமக்கு ஆச்சரியமானதாக இல்லை. நம்மிடம் இருப்பதை விட்டுவிட்டு, நாம் எதை நோக்கி நடக்கிறோம் என்பதை அறியாமலே நடக்க வேண்டுமென்ற எண்ணமே பயமாக இருக்கிறது. அதனால் பலர் அதை செய்ய மறுக்கிறார்கள். அவர்கள் ஒரு புதிய வாழ்க்கையை மாற்றிக் கொள்ள இயலும் போது, தாங்கள் மகிழ்ந்தனுபவிக்காத, ஒரு தாழ்வான, வலிமிகுந்த, பயனற்ற வாழ்க்கையையே வாழ்கிறார்கள்.

தேவனுடைய பரிமாற்றக் கடை எப்போதுமே திறந்திருக்கிறது. அவர் உங்களைச் சந்திக்க எப்போதுமே தயாராக இருக்கிறார். மிகவும் வேதனையான விஷயம் என்னவென்றால் அநேருக்கு அது

*இருக்கிறது என்பதே தெரிவதில்லை, அப்படி தெரிந்திருந்தாலும் அதன் கூற்றுகள் உண்மை என்று நம்புவது அவர்களுக்கு கடினமாக இருக்கிறது.*

## சாம்பலுக்கு பதில் சிங்காரம்

*நான் சமீபத்தில் சந்தித்த ஒரு நபர், "ஜாய்ஸ், உங்களைப் போலவே நானும் சிறுவயதில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டேன். அந்த நேரத்தில் நான் வாழ்வதை நிறுத்திவிட்டு, உயிர் பிழைக்க ஆரம்பித்தேன், தேவன் எனக்கு சாம்பலுக்கு பதில் சிங்காரத்தை கொடுக்க விரும்புகிறார் என்று நீங்கள் சொல்வதைக் கேட்கும் வரை நான் அப்படியாகத்தான் இருந்தேன். அதன்பிறகு என் வாழ்க்கை மாறிவிட்டது, இனி நான் ஒருபோதும் அப்படியாக இருக்க மாட்டேன்."*

*இந்த மனிதன் நீண்ட காலமாக ஒரு கிறிஸ்தவராக இருந்தான், அவன் தன் வலியுடன் தேவாலயத்திற்குச் செல்வான், பின்னர் அதை அவனுடன் வீட்டிற்கு எடுத்துச் செல்வான். பெரிய பரிமாற்றம் பற்றி அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.*

*ஏசாயா **61:1-3** நிச்சயமாகவே எனக்கும், நான் சந்தித்த மனிதனுக்கும் வாழ்க்கையை மாற்றுவதாக இருந்தது, அது உங்களுக்கும் அவ்வாறாக இருக்க வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். தேவன் உங்களுக்கு ஒரு அழகான ஆத்துமாவையும், அழகான வாழ்க்கையையும் கொடுக்க விரும்புகிறார், மேலும் அவர் உங்கள் கடந்த கால சாம்பலை எடுத்து, அவற்றைக் கொண்டு அழகான, புதிதானதொன்றை உருவாக்குவார். நாம் அனுமதித்தால் தேவன் நம் நன்மைக்காக எதையும், அனைத்தையும் செய்ய வல்லவராக இருக்கிறார் (ரோமர் **8:28**). முதல் படி இயேசுவை நம்புவதும், அவருடைய வாக்குறுதிகள் ஒவ்வொன்றும் உங்களுக்குரியது என்றும், அவர் உங்களை வழிநடத்த, விசுவாசப் படிகளை நீங்கள் எடுக்கும்போது அவை உங்கள் வாழ்க்கையில் நிஜமாகும் என்றும் நம்புவதும் ஆகும்.*

*ஒருவேளை உங்கள் அடையாளம் நான் என் கடந்த காலத்தினால் காயமடைந்திருக்கிறேன் என்பதாக இருக்கலாம். ஆனால் அது*

நான் கிறிஸ்துவில் ஒரு புதிய சிருஷ்டியாக இருக்கிறேன் என்பதாக மாறலாம். சாம்பலுக்கு பதில் சிங்காரம் கிடைக்கும் என்ற வாக்குறுதி நமக்கு நம்பிக்கையைத் தருகிறது, மேலும் வலியுள்ள இடத்திலேயே நாம் தங்கிவிடுவதற்குப் பதிலாக முன்னேற நம்மைத் தூண்டுகிறது. நாம் வெறுமனே பிழைத்து மட்டும் இருக்காமல், உண்மையாகவே வாழ்க்கையை அனுபவித்து வாழ்வதற்க்கும் நம்மை ஊக்குவிக்கிறது.

நாம் செய்ய வேண்டிய ஒன்று, நமது சாம்பலை விட்டுவிடுவது தான், அப்படியென்றால் உண்மையிலே சில காரணங்களுக்காக தேவைப்படாலொழிய நம் கடந்த காலத்தைப் பற்றி சிந்திப்பதையும், பேசுவதையும் நிறுத்த வேண்டும். தேவனுடைய உதவியால், நமது கடந்த காலம், ஒரு தொலைதூர நினைவாக மாறலாம் என்று நாம் விசுவாசிக்கிறோம் என்பதும் இதன் பொருளாகும். என் குழந்தைப் பருவத்தைப் பற்றி இப்போது நினைக்கும்போதோ அல்லது பேசும்போதோ, நீண்ட காலத்திற்கு முன்பு நான் அறிந்த ஒருவரைப் பற்றி நான் அடிக்கடி நினைத்துக் கொண்டிருக்கிறேன் அல்லது பேசுகிறேன் என்பதாக தோன்றுகிறது.

இயேசு சிறைக் கதவுகளைத் திறந்துவிட்டார், நாம் செய்ய வேண்டியது எல்லாம் வெளியே சென்று அவருடன் நமது புதிய வாழ்க்கையைத் தொடங்குவதுதான். அவர் சிறைபிடிக்கப்பட்டவர்களைவிடுவிக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கும், மனம் உடைந்தவர்களுக்கும் உதவுவதற்கும் வந்தார். அவர் சிறைச் சாலையின் கதவுகளை திறப்பது மட்டுமல்ல ஏசாயாவின் கூற்றுப்படி, அவர் நம் கண்களையும் திறக்கிறார். நாம் வாழும் சிறைச்சாலையில் கதவுகள் இருந்தாலும், அவை திறந்திருப்பதைக் காணும் வரை நாம் வெளியே நடக்க மாட்டோம், அவை திறந்திருக்கிறது என்று தேவனுடைய வார்த்தை நமக்குக் காட்டுகிறது. கிறிஸ்துவில் எத்தனை விசுவாசிகள் காயப்பட்ட ஆத்துமாக்களுடன் வாழ்கிறார்கள் என்பதை நினைக்கும் போது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது ஏனென்றால் இயேசு

> இயேசு சிறைக் கதவுகளைத் திறந்தார், நாம் செய்ய வேண்டியது அவருடன் வெளியே நடப்பதுதான்.

*சிறைக் கதவுகளைத் திறந்தார் என்றும் அவர்கள் விடுதலையாக இருக்கலாம் என்றும் அவர்களுக்கு கூறப்படவில்லை.*

*துக்கப்படுகிறவர்களையும், துயரப்படுகிறவர்களையும், விசனமாயிருக்கிறவர்களையும் இயேசு ஆறுதல்படுத்த விரும்புகிறார். இப்போதே தேவனுடைய அனுக்கிரக காலம் என்ற நற்செய்தியை அறிவிக்க வந்தார். ஒருவேளை நீங்கள் எப்போதுமே வாழ்க்கையில் எல்லாவற்றிலும் கடைசியில் இருப்பதைப் போன்று உணர்ந்திருக்கலாம். ஒருவேளை நீங்கள் அணியில் இடம்பெறுவதற்கு ஒருபோதும் தேர்ந்தெடுக்கப்படாதவராகவோ அல்லது ஒருபோதும் எந்த விருதையும் பெறாதவர்களாகவோ இருந்திருக்கலாம். உங்கள் வாழ்க்கையில் கடை நிலையில் இருப்பதாக நீங்கள் உணர்ந்திருக்கலாம், ஆனால் இது ஒரு புதிய நாள்-தேவனுடைய தயவின் நாள்!*

*தேவன் நமக்கு தயவைக் கொடுக்கும்போது, அவர் மட்டுமே திறக்கக்கூடிய மற்றும் ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பின் கதவுகளைத் திறக்கிறார் என்று அர்த்தம். அவர் வாக்களித்தபடி நம்மை வாலாக அல்ல தலையாகவும், கீழாக இல்லாமல் மேலாகவும் இருக்க செய்கிறார். (உபாகமம் 28:13).*

*தேவ தயவுடன் வாழ்வதன் மகிழ்ச்சியை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? வேலையில் நம் மேற்பார்வையாளரின் தயவைப் பெறுவது அற்புதமானது என்று நாம் நினைக்கலாம், ஆனால் தேவனுடைய தயவுடன் அதை ஒப்பிடுகையில் அது மங்கலாக இருக்கிறது. எல்லா உண்மையான பதவி உயர்வுகளும் தேவனிடமிருந்து வருகிறது. அவர் உங்களை இருக்கவேண்டிய இடங்களில் வைத்து, உங்களை வியக்க வைக்கும் மரியாதைக்குரிய பதவிகளை உங்களுக்கு வழங்க அவரால் முடியும்.*

## துயரத்திற்கு பதிலாக மகிழ்ச்சி

*ஆழ்ந்த காயங்களுக்கு உள்ளானவர்கள் பெரும்பாலும் துக்கத்துடனும் அல்லது துக்க உணர்வோடும் வாழ்கின்றனர். அவர்களைப் பற்றி விளக்குவதற்கு கடினமான ஒரு சோகம் அவர்களுக்கு உண்டு. அது என்ன என்று அவர்கள் அதை*

அடையாளம் கண்டு கொள்ளாத அளவுக்கு நீண்ட காலமாக அதனுடன் வாழ்ந்திருக்கலாம். நான் எப்பொழுதும் ஏதோ ஒரு வகையில் சுமையை சுமந்துக் கொண்டிருப்பதாக அல்லது என் உள்ளத்தில் ஒருவித பாரம் இருப்பதாகவே உணர்ந்தேன். அந்த உணர்வை மகிழ்ச்சிக்காகவும், துதிக்காகவும் பரிமாறிக் கொள்ள முடியும் என்று கண்டுபிடிக்கும் வரை அப்படியாக உணர்ந்து கொண்டிருந்தேன்.

பரிவர்த்தனை செய்வது தேவனால் எல்லாமே கூடும் என்று நம்பும் தீர்மானத்தோடு தொடங்குகிறது, மேலும் நாம் அந்த நிலையில் உறுதியாகவும், பொறுமையாகவும் இருந்தால் கெட்ட உணர்வுகள் மகிழ்ச்சியானவைகளுக்கு வழிவகுக்கும். சந்தோஷமானது கனமான, சுமையான, தோல்வியுற்ற மனநிலையால் நாம் வருந்திக் கொண்டிருப்பதை மாற்றும்.

வேலை செய்யாத ஒன்றை நீங்கள் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை - நீங்கள் அதை பரிமாறிக்கொள்ளலாம். நமது செல்போன் வேலை செய்யவில்லை என்றால், கடைக்குச் சென்று அதை மாற்றவோ அல்லது பழுதுபார்க்கவோ நமக்கு அதிக நேரம் எடுக்காது. ஆனால் சரியாக இல்லாத நம் வாழ்க்கையை நாம் பொறுத்துக் கொள்கிறோம். இருப்பினும், இனி அப்படி இருக்க வேண்டிய அவசியமில்லை, ஏனென்றால் இயேசு அதை மாற்ற காத்திருக்கிறார் என்று இப்போது உங்களுக்குத் தெரியும். நான் சமீபத்தில் ஒரு ஜோடி காலணிகளை வாங்கினேன், நான் நடக்கும்போது அவை கீச்சு, கீச்சென்று சத்தமிட்டது. நான் அதை எந்த கடையில் வாங்கினேனோ அந்த கடையில் இருந்தேன். அந்த விற்பனையாளரிடம் காலணிகளைப் பற்றி சொன்னேன், அவர், “அவற்றை மீண்டும் கொண்டு வாருங்கள். நாங்கள் அவற்றை மாற்றிக்கொடுப்போம் என்று கூறினார் - வேறு எந்த கேள்வியும் கேட்கப்படவில்லை.”

> சரியாக இல்லாத ஒன்றை நீங்கள் வைத்திருக்க வேண்டியதில்லை.

நான் அந்த குறிப்பிட்ட கடையில் நிறைய ஷாப்பிங் செய்கிறேன். அதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று அவர்களின்

பரிமாற்றக் கொள்கையே காரணமாகும். நான் வாங்கின பொருள் எனக்கு சரியாக பொருந்தவில்லை என்றால், நான் அதை திரும்ப அவர்களிடம் கொடுத்தால், அவர்கள் அதை மாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அந்த மாதிரி கடை நம்மை உற்சாகப்படுத்துமென்றால், தேவனும் அப்படிபட்ட ஒரு கடையை வைத்திருக்கிறார் என்பதைக் கண்டுபிடித்ததற்காக நாம் எவ்வளவு உற்சாகமாக இருக்க வேண்டும்?

## நம்முடைய நீதிக்கு பதிலாக தேவனுடைய நீதி

தேவனுக்குப் பிரியமாக இருக்க, போதுமான அளவு சரியான விஷயங்களை நம்மால் ஒருபோதும் செய்ய முடியாது. ஏசாயா, நம் நீதி அழுக்கான கந்தையைப் போல இருக்கிறது அல்லது அசுத்தமான ஆடை போன்றிருக்கிறது என்று கூறினார் (ஏசாயா 64:6). தேவன் பரிபூரணமானவர், நம்முடைய நீதியானது, நம்முடைய பாவங்களுக்கான காணிக்கையாக தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கும் பொருட்டு பரிபூரணமாக இருக்க வேண்டும். அது நம்மைப் போன்ற குறைபாடுள்ள, பலவீனமான மனிதர்களுக்கு சாத்தியம் இல்லை. ஆனால் விரக்தியடைய வேண்டாம், இயேசு நமக்காக என்ன செய்தாரோ அதன் காரணமாக - நம்முடைய பூரணமற்ற நீதியை தேவனுடைய பரிபூரண நீதிக்காக நாம் பரிமாறிக்கொள்ளலாம்.

> நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். (2 கொரிந்தியர் 5:21).

நாம் புத்தகங்களைப் படிக்கும்போது அடிக்கடி செய்வது போல, இந்த வேத வாக்கியத்தை நீங்கள் அவசரமாக வாசித்து சென்றிருந்தால், திரும்பிச் சென்று மெதுவாகப் வாசித்து, சொல்லப்பட்டிருக்கும் அழகைப் பற்றி சிந்தியுங்கள். என்னே ஒரு அற்புதமான பரிமாற்றம்! அதை விசுவாசிப்பதின் மூலம் அது நம்முடையதாகிறது.

என் வாழ்க்கையின் பெரும் பகுதியில், என்னவென்று எனக்குத் தெரியாதிருந்த போதும் என்னில் ஏதோ தவறு இருப்பதாக நான் உணர்ந்தேன். என்னில் என்ன தவறு?, என்னில் என்ன தவறு? என்று நித்தமும் ஒரு பதிவு செய்யப் பட்ட பதிவைப் போன்று ஓடிக்கொண்டிருந்தது. நான் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட எனது குழந்தைப் பருவத்தில் இது தொடங்கியது, மேலும் என்னிடம் ஏதோ தவறு இருக்கிறது அதனால் தான் என் தந்தை எனக்கு இழிவான செயல்களைச் செய்ய விரும்பினார் என்று உறுதியாக உணர்ந்தேன். மற்ற சிறுமிகளுக்கு அவ்வாறு நடக்காது என்று உறுதியாக உணர்ந்தேன், இருப்பினும் அது எவ்வளவு பொதுவானதாக இருந்தது என்பதை நான் அப்போதிருந்து கற்றுக்கொண்டேன். துஷ்பிரயோகம் எவ்வளவு நீண்டு தொடர்ந்ததோ, அவ்வளவு ஆழமாக நான் குறை உள்ளவளாக உணர்ந்தேன்.

தேவன், அவருடைய நற்குணத்தின் காரணமாக, என்னைச் சரியானவளாகக் கருதுகிறார் என்பதை நான் அறிந்தபோது என் மகிழ்ச்சியை கற்பனை செய்து பாருங்கள். நான் தவறாக இருக்கிறேன் என்ற அனைத்து உணர்வுகளும் முற்றிலும் மறைந்து போக நீண்ட காலம் எடுத்தது. ஆனால் சிறிது சிறிதாக அவை மறைந்தன, குற்ற உணர்ச்சியும், அவமானமும் இல்லாமல் வாழவும், தேவன் என்னை ஏற்றுக்கொள்கிறார் என்பதை அறிந்து விசுவாசிப்பதும் ஒரு அற்புதமான உணர்வாகும். இதே காரியம் இது தேவைப்படும் எவருக்கும், தேவனை விசுவாசித்து, பழையதை விட்டுவிடுவதற்கு தயாராக இருக்கும் எவருக்கும் கிடைக்கிறது. இந்த வேத வாக்கியத்தையும், தேவனுடன் சரியாக இருப்பது பற்றிய இது போன்ற மற்ற வாக்கியங்களையும் தியானித்து, அறிக்கையிடுவது எனக்கு மிகவும் உதவியது. அது தேவனுடைய சத்தியத்திற்கு என் மனதை புதுப்பிக்க உதவியது. நான் என் வாழ்க்கையின் பெரும்பகுதியில் சாத்தானின் பொய்களை நம்பிக்கொண்டிருந்தேன். படிப்படியாக, என் மனதில் இருந்த பழைய பதிவு, ஒரு புதிய பதிவினால் மாற்றப்பட்டது.

இஸ்ரவேலர்கள் வாழ்ந்த பழைய உடன்படிக்கைச் சட்டத்தின் கீழ், பாவம் மன்னிக்கப்படுவதற்காக, பாவி ஒரு கடவுளின் பலிபீடத்திற்கு மிருக பலியை கொண்டு வந்தான்,மேலும் அவனோ

அல்லது ஆசாரியானோ அந்த விலங்கின் தலை மேல் கைகளை வைத்து, தனது பாவத்தையும் குற்றத்தையும் ஒப்புக்கொள்வதுண்டு. பாவம் அந்த மிருகத்தின் மீது போடப்பட்டு விட்டதாக அவர்கள் நம்பினர், பின்னர் மரணத்திற்கு தகுதியான பாவியின் இடத்தில் அது கொல்லப்பட்டது.

இயேசு, “உலகத்தின் பாவத்தைச் சுமந்த தேவஆட்டுக்குட்டி” (யோவான் 1:29) என்று அழைக்கப்படுகிறார். யோவான் அதை அறிவித்தபோது, யூதர்கள் அவர் எதை குறிப்பிட்டார் என்று அறிந்திருந்தனர் ஏனென்றால் அவர்கள் தங்கள் பலிகளுக்கு ஒரு ஆட்டுக்குட்டியை தான் பயன்படுத்தினர். இயேசு நமக்கு ஒரு பெரிய பரிமாற்றத்தை வழங்குகிறார் - அவர் நம்முடைய பாவத்தை ஏற்றுக்கொள்கிறார், நாம் அவருடைய மன்னிப்பைப் பெற்றுக் கொள்கிறோம். பழைய உடன்படிக்கையின் கீழ் பாவம் மூடப்பட்டது, ஆனால் இயேசு நம் பாவத்தை கிழக்கில் இருந்து மேற்கு எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரம் நீக்கி விடுகிறார்.

> *மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார். (சங்கீதம் 103:12)*
>
> *ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எபிரெயர் 8:12).*
>
> *அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்.*
>
> *இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால், இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே. (எபிரெயர் 10:17-18).*

பாவம் இனி மூடிமறைக்கப்படுவதில்லை. நீங்கள் செய்ததை எப்போதும் தெளிவற்ற முறையில் நினைவூட்டி, உங்களை குற்ற உணர்வடைய செய்வதில்லை; அது முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டது!

*இயேசு உங்கள் பாவத்தையும், குற்றத்தையும் எடுத்துக்கொண்டு அதை அவருடைய மன்னிப்பு மற்றும் தேவனுடனான சரியான நிலைக்காக மாற்றிவிடுவாராக.*

## தோல்விகளுக்கான கருணை

*நமது தோல்விகளை தேவனுடைய இரக்கத்திற்காக மாற்றிக் கொள்ளலாம். நாம் தைரியமாக தேவனுடைய சிங்காசனத்திற்கு முன் சென்று நம் தோல்விகளுக்கு கிருபையும்,இரக்கத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பவுல் போதித்தார்(எபிரேயர் 4:16). இரக்கம் என்பது நமக்குத் தகுதியில்லாததை தேவன் நமக்கு கொடுப்பதாகும். அவர் நமக்கு உதவுகிறார், நம் பிரார்த்தனைகளுக்கு பதிலளிக்கிறார், நம் தேவைகளை நமக்கு வழங்குகிறார், நிபந்தனையின்றி நம்மை நேசிக்கிறார், இவை அனைத்திற்கும் நாம் தகுதியற்றவர்கள். ஆனாலும் அவருடைய மிகுந்த இரக்கத்தினிமித்தம், அவை அவரிடமிருந்து நமக்குக் கிடைத்த பரிசாக இருக்கிறது.*

*நாம் பரிமாறிக்கொள்ளக்கூடிய விஷயங்களின் பட்டியல் மிக நீளமானது, அவை அனைத்தையும் இந்தப் புத்தகத்தில் பகிர்ந்து கொள்ள என்னால் முடியவில்லை, ஆனால் அவை அனைத்தையும் உள்ளடக்கிய மற்றொரு புத்தகம் உள்ளது, அதுவே பைபிள். அதைப் வாசித்துப் படிக்க உங்களை ஊக்குவிக்க விரும்புகிறேன், அதனால் நீங்கள் தேவன் உங்களுக்காக வைத்திருக்கும் அனைத்தையும் கண்டுபிடிக்கலாம் - ஒரு மதக் கடமையாகவோ அல்லது ஒரு கிறிஸ்தவராக அதை உங்கள் கடமையாக நீங்கள் கருதுவதால் அல்ல. வேதாகமானது பூமியில் உள்ள மிகப் பெரிய புத்தகம், மேலும் அது பிரமிக்க வைக்கும் வாக்குறுதிகளால் நிரம்பியுள்ளது... மேலும் அவை அனைத்தும் கிறிஸ்துவுக்குள் உங்களுடையது!*

# முடிவுரை

லட்சக்கணக்கான மக்கள் தங்கள் உள்ளத்தில் ஏற்பட்ட காயங்களில் இருந்து மீண்டு, சுகத்தோடும், முழுமையோடும் வாழ்க்கையை வாழ இந்தப் புத்தகம் உதவ வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை. நீங்கள் இயேசுவை உங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், இந்தப் புத்தகத்தின் முடிவில் கொடுக்கப்பட்டிருக்கும் ஜெபத்தை ஜெபிக்கும்படி நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் புதிய வாழ்க்கையை இப்போதே தொடங்குங்கள். பரிமாற்ற கடைக்கு நீங்கள் அடிக்கடி செல்ல வேண்டியிருக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு தேவைப்பட்டால் ஒவ்வொரு நாளும் பல முறை செல்லுங்கள். நீங்கள் விலைமதிப்பற்றவர், மிகவும் நேசிக்கப்படுகிறவர் என்பதை மறந்துவிடாதீர்கள். மேலும் இயேசு நமக்கு முன் பரலோகத்திற்குச் சென்று நாம் அவருடன் நித்திய நித்தியமாக வாழ நமக்காக ஒரு இடத்தைத் ஆயத்தம் செய்யச் சென்றது மட்டுமல்லாமல், பூமியில் நம் பயணத்தின் போது அபரிதமான, நிறைவான வாழ்க்கையை வாழவும் அவர் ஏற்பாடு செய்துள்ளார். அது சவால் மற்றும் சிரமம் இல்லாத ஒன்றாக இருக்காது, ஆனால் அவர் நம்மில் வாழ்வதால், நாம் வெற்றியுடன் வாழ முடியும். நீங்கள் உங்களை நேசிக்கிற கிறிஸ்துவின் மூலம் மேற்கொள்ளுகிறவர்களாக இருக்கிறீர்கள்!

# பின் இணைப்பு 1

வாக்குரிமை

*உலகம் முழுவதும் பெண்கள் வாக்களிக்கும் திறனைப் பெற்ற வருடங்கள்:*

*1893 நியூசிலாந்து*
*1902 ஆஸ்திரேலியா1*
*1906 பின்லாந்து*
*1913 நார்வே*
*1915 டென்மார்க்*
*1917 கனடா2*
*1918 ஆஸ்திரியா, ஜெர்மனி, போலந்து, ரஷ்யா*
*1919 நெதர்லாந்து*
*1920 அமெரிக்கா*
*1921 ஸ்வீடன்*
*1928 பிரிட்டன், அயர்லாந்து*
*1931 ஸ்பெயின்*
*1934 துருக்கி*
*1944 பிரான்ஸ்*
*1945 இத்தாலி*
*1947 அர்ஜென்டினா, ஜப்பான், மெக்சிகோ, பாகிஸ்தான்*
*1949 சீனா*
*1950 இந்தியா*
*1954 கொலம்பியா*
*1957 மலேசியா, ஜிம்பாப்வே*
*1994 தென்னாப்பிரிக்கா*
*2005 குவைத்*
*2006 ஐக்கிய அரபு எமிரேட்ஸ்*
*2011 சவுதி அரேபியா3*

*1. ஆஸ்திரேலியப் பெண்கள், பழங்குடியினப் பெண்களைத் தவிர, 1902 இல் வாக்களித்தனர். பழங்குடியினர், ஆண் மற்றும் பெண்களுக்கு 1962 வரை வாக்களிக்கும் உரிமை இல்லை.*

*2. கனேடியப் பெண்கள், கனேடிய இந்தியப் பெண்களைத் தவிர, 1917 இல் வாக்களித்தனர். கனேடிய இந்தியர்கள், ஆண் மற்றும் பெண், 1960 வரை வாக்களிக்க உரிமையில்லை. ஆதாரம்: நியூயார்க் டைம்ஸ், மே 22, 2005.*

*3. முனிசிபல் தேர்தல்களில், பெண்களை வேட்பாளர்களாக நிறுத்தவும், வாக்களிக்கவும் அனுமதிக்க வேண்டும் என்று மன்னர் அப்துல்லா 2011 இல் ஆணையிட்டார். ஆனால் அவர்களுக்கு முதல் வாய்ப்பு டிசம்பர் 2015 வரை வரவில்லை, ராஜா மரணமடைந்து கிட்டத்தட்ட ஒரு வருடம் கழித்து ஜனவரி 2015 இல் கிடைத்தது.*

*ஆதாரம்: http://www.infoplease.com/ipa/A0931343.html.*

---

**ஊதிய சமத்துவமின்மை**

*அமெரிக்காவில், ஆண்டு முழுவதும் முழுநேர வேலை செய்யும் பெண்ணின் சராசரி ஆண்டு ஊதியம் $40,742 ஆகும். ஆண்டு முழுவதும் முழுநேர வேலை செய்யும் ஒருவருக்கு சராசரி ஆண்டு ஊதியம் $51,212. இதன் பொருள், ஒட்டுமொத்தமாக, பெண்களுக்கு அமெரிக்க ஐக்கிய நாட்டில், ஆண்களுக்கு வழங்கப்படும் ஒவ்வொரு டாலருக்கும் 80 சென்ட்கள் வழங்கப்படுகின்றன, இதனால் வருடாந்திர பாலின ஊதிய இடைவெளி $10,470யாக இருக்கிறது.*

*ஆதாரம்: அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியகம். (2016) தற்போதைய மக்கள்தொகை கணக்கெடுப்பு, ஆண்டு சமூக மற்றும் பொருளாதார (ASEC) துணை: அட்டவணை PINC-05: 2015 இல் பணி அனுபவம் - 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் 2015 இல் மொத்தப் பண வருவாய் அடிப்படையில், வயது, இனம், ஹிஸ்பானிக் தோற்றம், பாலினம் மற்றும் இயலாமை நிலை. அக்டோபர் 12, 2016 அன்று http://www.census.gov/ இலிருந்து பெறப்பட்டது,*

தரவு/அட்டவணைகள்/நேரத் தொடர்/ டெமோ/வருமானம்-வறுமை/cps-pinc/pinc-05.html (இதன் அடிப்படையில் வெளியிடப்படாத கணக்கீடு, 2015 இல் முழுநேரம் பணிபுரிந்த அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கான சராசரி வருடாந்திர ஊதியம்).

ஜனவரி 2017 நிலவரப்படி, அந்த S&P 500 நிறுவனங்களில் பெண்கள் தற்போது 27 (5.4 சதவீதம்) CEO பதவிகளை வகிக்கின்றனர்.

ஆதாரம்: http://www.catalyst.org/knowledge/women-ceos-sp-500.

உலகெங்கிலும் உள்ள ஊதிய இடைவெளியின் சதவீதம் (சதவீதம் என்பது பெண்களை விட ஆண்கள் எவ்வளவு அதிகமாக சம்பாதிக்கிறார்கள்):

தரவரிசை நாடு % ஊதிய இடைவெளி

| | | |
|---|---|---|
| 1 | கொரியா | 37.5 |
| 2 | ரஷ்யா | 32.1 |
| 3 | எஸ்டோனியா | 27.9 |
| 4 | ஜப்பான் | 27.4 |
| 5 | சைப்ரஸ் | 25.1 |
| 6 | இந்தியா | 24.81 |
| 7 | உக்ரைன் | 22.2 |
| 8 | ஜெர்மனி | 20.8 |
| 9 | இஸ்ரேல் | 20.7 |
| 10 | ஆஸ்திரியா | 19.2 |
| 11 | கனடா | 19.2 |
| 12 | பின்லாந்து | 18.9 |
| 13 | சுவிட்சர்லாந்து | 18.5 |
| 14 | ஐக்கிய இராச்சியம் | 18.2 |
| 15 | செக் குடியரசு | 18.1 |

| | | |
|---|---|---|
| *16* | அமெரிக்கா | *17.8* |
| *17* | சீனா | *17.5* |
| *18* | லக்சம்பர்க் | *17.3* |
| *19* | நெதர்லாந்து | *16.7* |
| *20* | லாட்வியா | *16.5* |

ஆதாரம்: *http://www.movehub.com/blog/global-gender-pay-gap-map.*

---

**சொத்துரிமை**

*மிசிசிப்பி 1839 இல் பெண்கள் தங்கள் சொந்த பெயரில் சொத்துக்களை வைத்திருக்க அனுமதித்தது. அவ்வாறு செய்த முதல் மாநிலம் இதுவாகும். 1844இல், மைனேயில் உள்ள திருமணமான பெண்கள், "தனி பொருளாதாரம்" உரிமையை வென்ற முதல் அமெரிக்கர் ஆனார்கள். ஒரு பெண்ணுக்கு வேலை இருந்து மற்றும் பணம் சம்பாதிக்க முடியும் என்றால், அந்த நிதியின் ஒதுக்கீட்டை அவளால் முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும், அவரது கணவரிடமிருந்து சட்டப்படி அனுமதி பெற வேண்டியதில்லை).*

ஆதாரம்: *https://en.wikipedia.org/wiki/Timeline_of_women's_legal_rights_(other_than_voting).*

---

**கல்வி**

*ஒரு பெண் ஒரு வருடம் கூடுதலாக கல்வி கற்கும் போது, வயது வந்தவுடன் 20 சதவீதம் அதிகமாக சம்பாதிக்க முடியும்.*

ஆதாரம்: *abcnews.go.com (2013).*

*உலகளவில், இன்னும் 31 மில்லியன் ஆரம்பப் பள்ளி வயதுடைய பெண்கள் பள்ளிக்கு செல்வதில்லை. இவற்றில் 17 மில்லியன் பெண்கள் பள்ளிக்குள் நுழையவே மாட்டார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பள்ளி செல்லாத ஆண் பிள்ளைகளை விட 4 மில்லியன் பெண் பிள்ளைகள் அதிகமாக உள்ளனர். மூன்று நாடுகளில் ஒரு மில்லியனுக்கு மேல் பெண் பிள்ளைகள்*

*பள்ளிக்கு செல்வதில்லை: நைஜீரியாவில், கிட்டத்தட்ட 5.5 மில்லியன்; பாகிஸ்தானில், 3 மில்லியனுக்கு மேல்; மற்றும் எத்தியோப்பியாவில், 1 மில்லியனுக்கும் அதிகமான பெண் பிள்ளைகள் பள்ளிக்கு செல்வதில்லை (2013 வரை).*

*ஆதாரம்: ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு, http://en.unesco.org/gem-report/sites/gem-report/ files/girls-factsheet-en.pdf.*

*கல்வி அறிவு பெற்ற பெண்கள் பிரசவத்தில் இறப்பது குறைவு: அனைத்து தாய்மார்களும் ஆரம்பக் கல்வியை முடித்திருந்தால், பிரசவ இறப்புகள் மூன்றில் இரண்டு பங்கு குறைக்கப்பட்டு 98,000 உயிர்கள் காப்பாற்றப் படும். சப்-சஹாரா ஆப்பிரிக்காவில், அனைத்து பெண்களும் ஆரம்பக் கல்வியை முடித்திருந்தால், பிரசவ இறப்புகள் 70 சதவீதம் குறைக்கப்பட்டு, கிட்டத்தட்ட 50,000 உயிர்கள் காப்பாற்றப்படும்.*

*ஆதாரம்: ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு, http://en.unesco.org/gem-report/sites/gem-report/ files/girls-factsheet-en.pdf (note: multiple tabs). (குறிப்பு: பல தாவல்கள்).*

---

### பாலினப்படுகொலை

*பெண் குழந்தைகள் பெரும்பாலும் பிறந்த பிறகு, உடனே கொல்லப்படுவதைக் காட்டிலும், இறக்கும் வரை புறக்கணிக்கப்படுகிறார்கள். ஆனாலும் குடும்பங்கள் பெண் குழந்தைகளை மூழ்கடித்து, மூச்சை அடக்கி, கழுத்தை நெரிப்பதும், கைவிட்டுவிடுவதும் இன்னும் தொடர்கின்றன. தற்போது, ஆண்டுக்கு சுமார் 2 மில்லியன் பெண் குழந்தைகளை பாலினப்படுகொலைக்கு இழக்கிறோம்.*

*ஆதாரம்: வலேரி எம். ஹட்சன் மற்றும் ஆண்ட்ரியா எம். டென் போயர், பேர் கிளைகள்: ஆசியாவின் பாதுகாப்பு தாக்கங்கள் உபரி ஆண் மக்கள் தொகை (கேம்பிரிட்ஜ், எம்ஏ: எம்ஐடி பிரஸ், 2005), 112-113, 157. மேலும் பார்க்கவும் மாரா ஹ்விஸ்டெண்டால், இயற்கைக்கு மாறான தேர்வு: பெண்களை*

*விட ஆண் குழந்தைகளைத் தேர்ந்தெடுப்பது மற்றும் ஆண்கள் நிறைந்த உலகின் விளைவுகள் (நியூயார்க்:பொ து விவகாரங்கள், 2011).*

*பாலினப்படுகொலை எங்கு நிகழ்கிறது?*

- *கிழக்கு ஆசியா: சீனா, வியட்நாம், சிங்கப்பூர் மற்றும் தைவான்*
- *தெற்காசியா: இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான்*
- *மேற்கு ஆசியா: துருக்கி, சிரியா, ஈரான், அஜர்பைஜான், ஆர்மீனியா மற்றும் ஜார்ஜியா*
- *கிழக்கு ஐரோப்பா: அல்பேனியா, ருமேனியா, மாண்டினீக்ரோ, கொசோவோ மற்றும் மாசிடோனியா*
- *வட ஆப்பிரிக்கா: எகிப்து, துனிசியா மற்றும் அல்ஜீரியா*
- *துணை-சஹாரா ஆப்பிரிக்கா: பெரும்பாலான நாடுகள்*
- *அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள ஆசிய அமெரிக்க சமூகங்கள்*

*ஆதாரம்: கிளாசென் அண்ட் விங்க், மிஸ்ஸிங் வுமன்: எ ரிவியூ ஆஃப் தி டிபேட்ஸ் அண்ட் அன் அனாலிசிஸ் ஆஃப் ரீசண்ட் ட்ரெண்ட்ஸ், 2002,*

*SSRN இல் கிடைக்கிறது: https://ssrn.com/abstract=321861, p. 19. அமெரிக்காவைப் பற்றிய தரவுகளுக்கு, டக்ளஸைப் பார்க்கவும் பாதாம் மற்றும் லீனா எட்லண்ட், "2000 யுனைடெட் ஸ்டேட்ஸ் மக்கள்தொகை கணக்கெடுப்பில் மகன்-சார்பு பாலின ரேஷன்," செயல்முறைகள் தேசிய அறிவியல் அகாடமி 105, எண். 15 (ஏப்ரல் 15, 2008): 5681-5682.*

---

## பெண் பிறப்புறுப்பு சிதைவு

*பெண் பிறப்புறுப்பு சிதைவு (FGM) வேண்டுமென்றே மாற்றும் அல்லது பெண்ணுக்கு மருத்துவமற்ற காரணங்களுக்காக பிறப்புறுப்பு உறுப்புகளில் காயத்தை ஏற்படுத்தும்*

செயல்முறைகளை உள்ளடக்கியது. இந்த செயல்முறை பெண் குழந்தைகளுக்கு மற்றும் பெண்களுக்கு எந்த ஆரோக்கிய நன்மைகளையும் கொண்டிருக்கவில்லை. இந்த நடைமுறைகளால் கடுமையான இரத்தப்போக்கு மற்றும் சிறுநீர் கழிப்பதில் சிக்கல்கள், பின்னர் நீர்க்கட்டிகள், தொற்றுகள் மற்றும் சிக்கலான பிரசவம் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தை இறக்கும் ஆபத்து ஏற்படலாம். இன்று முப்பது நாடுகளில் 200 மில்லியனுக்கும் அதிகமான, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஆசியாவில், உயிருடன் உள்ள பெண்களுக்கு பெண் பிறப்புறுப்பு சிதைவு செய்யப்பட்டுள்ளது. பெண் பிறப்புறுப்பு சிதைவு பெரும்பாலும் குழந்தைப் பருவத்திலிருந்து பதினைந்து வயதுக்கு இடைப்பட்ட இளம் பெண்களுக்கு செய்யப்படுகிறது. பெண் பிறப்புறுப்பு சிதைவு என்பது பெண்கள், சிறுமிகளின் மனித உரிமைகளை மீறுவதாகும்.

ஆதாரம்: ஜே. சிமிஸ்டர், "கென்யாவில் குடும்ப வன்முறை மற்றும் பெண் பிறப்புறுப்பு சிதைவு: இனத்தின் விளைவுகள் மற்றும் கல்வி," குடும்ப வன்முறை ஜர்னல் 25, எண். 3 (2010): 247-257.

உலகளவில் சுமார் 100-140 மில்லியன் சிறுமிகள் மற்றும் பெண்கள், பெண் பிறப்புறுப்பு சிதைவின் விளைவுகளுடன் வாழ்கின்றனர், தோராயமாக

ஒவ்வொரு ஆண்டும் 3.3 மில்லியன் பெண்கள், பெண் பிறப்புறுப்பு சிதைவு ஆபத்தில் உள்ளனர், மேலும் இருபத்தெட்டு நாடுகளில் தேசிய அளவில் பரவுயுள்ளது என்ற தகவல் இருக்கிறது (ஆப்பிரிக்காவில் இருபத்தி ஏழு மற்றும் யேமன்), பத்து வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 101 மில்லியனுக்கும் அதிகமான பெண்கள் பெண் பிறப்புறுப்பு சிதைவின் விளைவுகளுடன் வாழ்கின்றனர்.

ஆதாரம்: P. S. Yoder, S. Wang, மற்றும் R. E.B. Johansen, "ஆப்பிரிக்க நாடுகளில் பெண் பிறப்புறுப்பு சிதைவு/வெட்டு: தேசிய ஆய்வுகளில் இருந்து எண்களின் மதிப்பீடுகள்," வெளியிடப்படாத தாள்.

*பெண் பிறப்புறுப்பு சிதைவின் உடனடி மற்றும் நீண்ட கால ஆரோக்கிய விளைவுகள்:*

- *கடுமையான வலி*
- *அதிர்ச்சி*
- *இரத்தப்போக்கு (அதிக இரத்தப்போக்கு)*
- *செப்சிஸ்*
- *சிறுநீர் கழிப்பதில் சிரமம்*
- *தொற்றுகள்*
- *இறப்பு*
- *உளவியல் விளைவுகள்*
- *திட்டமிடப்படாத லேபியா இணைவு*
- *அறுவை சிகிச்சை தேவை*
- *சிறுநீர் மற்றும் மாதவிடாய் பிரச்சனைகள்*
- *வலிமிகுந்த உடலுறவு மற்றும் மோசமான பாலியல் வாழ்க்கை*
- *கருவுறாமை*
- *நாள்பட்ட வலி*
- *தொற்றுகள் (எ.கா., நீர்க்கட்டிகள், புண்கள் மற்றும் பிறப்புறுப்பு புண்கள், நாள்பட்ட இடுப்பு தொற்றுகள், சிறுநீர் பாதை நோய்த்தொற்றுகள்)*

*ஆதாரம்: பெண் பிறப்புறுப்பு சிதைவு மற்றும் மகப்பேறியல் விளைவு பற்றிய WHO ஆய்வுக் குழு, "பெண் பிறப்புறுப்பு சிதைவு மற்றும் மகப்பேறியல் விளைவு: ஆறு ஆப்பிரிக்க நாடுகளில் WHO கூட்டு வருங்கால ஆய்வு," லான்செட் **367**, எண். **9525 (2006):1835-1841;** ஆர். பெர்க், ஈ. டெனிசன், மற்றும் ஏ. ஃப்ரீதைம், உளவியல், சமூக மற்றும் பாலியல் விளைவுகள் பெண் பிறப்புறுப்பு சிதைவு/ வெட்டுதல் (FGM/C): அளவீட்டு ஆய்வுகளின் முறையான ஆய்வு (ஒஸ்லோ: நாஸ்ஜோனால்ட் சுகாதார சேவைக்கான அறிவு மையம், **2010**).*

---

## பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் துஷ்பிரயோகம்

*தங்கள் பங்குதாரர்களால் உடல் ரீதியாகவோ அல்லது பாலியல் ரீதியாகவோ துன்புறுத்தப்பட்ட பெண்கள் இருமடங்கு*

அதிகமாக கருக்கலைப்பு, மனச்சோர்வை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். சில பகுதிகளில், பங்குதாரர் வன்முறையை அனுபவிக்காத பெண்களுடன் ஒப்பிடும்போது அவர்களுக்கு எச்.ஐ.வி தொற்று,1.5 மடங்கு அதிகமாகியிருக்கிறது.

ஆதாரம்: உலக சுகாதார நிறுவனம், இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் ஆராய்ச்சித் துறை, லண்டன் ஸ்கூல் ஆஃப்

சுகாதாரம் மற்றும் வெப்பமண்டல மருத்துவம், தென்னாப்பிரிக்க மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், உலகளாவிய மற்றும் பிராந்திய மதிப்பீடுகள் பெண்களுக்கு எதிரான வன்முறை: நெருங்கிய கூட்டாளியின் வன்முறை மற்றும் பங்குதாரர் அல்லாத பாலுறவின் பரவல் மற்றும் ஆரோக்கிய விளைவுகள் வன்முறை, 2013, ப. 2. தனிப்பட்ட நாட்டின் தகவலுக்கு, ஐக்கிய நாடுகளின் பொருளாதாரத் துறை மற்றும் சமூக விவகாரங்களைப் பார்க்கவும், உலகப் பெண்கள் 2015, போக்குகள் மற்றும் புள்ளிவிவரங்கள், அத்தியாயம் 6, "பெண்களுக்கு எதிரான வன்முறை," 2015.

அமெரிக்க கல்லூரி வளாகங்களில் ஐந்தில் ஒரு பெண் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியிருக்கிறாள்.

ஆதாரம்:https://www.ncjrs.gov/pdffiles1/nij/grants/221153.pdf. பெரும்பாலான ஆய்வுகள், ஆண்களை விட பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகும் அபாயதிற்குள்ளிருக்கின்றனர் என்று முடிவு செய்திருக்கின்றனர்.

ஆதாரம்: அப்ரோடைட் மட்சாகிஸ், வென் தி பஃப் பிரேக்ஸ் (ஒக்-லேண்ட், சிஏ: நியூ ஹார்பிங்கர் பப்ளிகேஷன்ஸ், 1991).

1991 ஆம் ஆண்டு வன்முறைக் குற்றங்களுக்காக தண்டனை அனுபவித்து வரும் அனைத்து மாநிலக் கைதிகளையும் ஆய்வு செய்ததில், கற்பழிப்பு அல்லது பாலியல் வன்கொடுமைக்காக தண்டனை பெற்றவர்களில், பாதிக்கப்பட்ட மூன்றில் இரண்டு பங்கு, குழந்தைகள் மற்றும் பாதிக்கப்பட்ட நான்கு பேரில் மூன்று பேர் இளம் பெண்கள் ஆவார்கள்.

ஆதாரம்: லாரன்ஸ் கிரீன்ஃபீல்ட், குழந்தை பாதிக்கப்பட்டவர்கள்: வன்முறை குற்றவாளிகள் மற்றும் அவர்களின்

*பாதிக்கப்பட்டவர்கள்: நிர்வாக சுருக்கம் (வாஷிங்டன், DC: நீதிப் புள்ளியியல் அலுவலகம் மற்றும் சிறார் நீதி மற்றும் குற்றச் செயல் தடுப்பு அலுவலகம், அமெரிக்க நீதித்துறை, 1996).*

---

**தகாத உறவுமுறை**

*பாலியல் பலாத்காரம் செய்யப்படும் குழந்தைகளில் 46 சதவீதம் பேர் குடும்ப உறுப்பினர்களால் பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.*

*ஆதாரம்: பேட்ரிக் லாங்கன் மற்றும் கரோலின் ஹார்லோ, குழந்தை பலாத்கார பாதிக்கப்பட்டவர்கள், 1992 (வாஷிங்டன், DC: நீதித்துறை அலுவலகம் புள்ளியியல், அமெரிக்க நீதித்துறை, 1994).*

*குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோகம் குறித்த நாட்டின் முன்னணி ஆராய்ச்சியாளர்களில் ஒருவரான டேவிட் ஃபிங்கெல்ஹோர் 1 மில்லியன் அமெரிக்கர்கள் தந்தை-மகள் உறவுமுறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஆண்டுதோறும் 16,000 புதிய வழக்குகள் நிகழ்கின்றன என்று மதிப்பிடுகிறார்.*

*ஆதாரம்: டேவிட் ஃபிங்கெல்ஹோர், குடும்பங்களின் இருண்ட பக்கம்: தற்போதைய குடும்ப வன்முறை ஆராய்ச்சி (நியூபரி பார்க், CA: சேஜ் பப்ளிகேஷன்ஸ், 1983).*

- *தகாத பாலுறவு அதனால் பாதிக்கப்பட்டவர்கள் தீவிர நீண்ட கால விளைவுகளை கொண்டிருப்பார்கள். உயிர் பிழைத்தவர்கள் மத்தியில், தாயினால் தகாத பாலுறவுக்குட்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்ட, 60 சதவீத பெண்களுக்கு உணவு உண்ணும் கோளாறு இருக்கிறது என்று ஒரு ஆய்வு முடிவு செய்தது.*

*ஆதாரம்: குற்றம் மற்றும் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தேசிய மையம் ஆராய்ச்சி மற்றும் சிகிச்சை மையம், அமெரிக்காவில் கற்பழிப்பு: தேசத்திற்கு ஒரு அறிக்கை (ஆர்லிங்டன், VA: குற்றம் மற்றும் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தேசிய மையம் ஆராய்ச்சி மற்றும்*

*சிகிச்சை மையம், 1992); ஹெய்டி வாண்டர்பில்ட், ஹெய்டி, "இன்செஸ்ட்: எ சில்லிங் ரிப்போர்ட்," லியர்ஸ் (பிப்ரவரி 1992): 49-77.*

**மனித கடத்தல்**

*லுட்விக் டார்சன் ஃபைன்பெர்க் என்ற ஒரு கடத்தல் குற்றவாளி, "நீங்கள் ஒரு பெண்ணை 10000 டாலர்களுக்கு வாங்கினால், அவள் அழகாகவும் இளமையாகவும் இருந்தால் ஒரே வாரத்தில் பணத்தை திரும்ப பெற்றுக்கொள்ளலாம் என்றார். அப்புறம் மற்றதெல்லாம் லாபம்."*

*ஆதாரம்: இ. பெஞ்சமின் ஸ்கின்னர், ஒரு கொடூரமான குற்றம்: நவீன கால அடிமைத்தனத்துடன் நேருக்கு நேர் (நியூயார்க்: இலவசம் பிரஸ், 2008).*

*ஒரு மனித கடத்தல்காரன் ஒரு பெண்ணை வாங்க அவன் அல்லது அவள் கொடுத்ததை விட இருபது மடங்கு அதிகம் சம்பாதிக்க முடியும்.*

*அவளது அழகைக் கெடுக்கும் அளவுக்கு கொடூரமாக அவள் சித்திரவைக்குட்படுத்தப்பட்டு அவள் உடல் நிலை பாதிக்கப்படவில்லை எனில் , அந்த கடத்தல்காரன் அவளை மீண்டும் அதிக விலைக்கு விற்கலாம். ஏனென்றால் அவன்அவளைப் பயிற்றுவித்து, அவளது மனதை உடைத்திருக்கிறான். நெதர்லாந்தில் 2003 இல் நடைபெற்ற ஒரு ஆய்வின் படி சராசரியாக, ஒரு பாலியல் அடிமை தனது பிம்ப்புக்கு ஆண்டுக்கு $250,000 சம்பாதித்துக் கொடுப்பதைக் கண்டறிந்தார்கள்.*

*ஆதாரம்: இ. பெஞ்சமின் ஸ்கின்னர், ஒரு கொடூரமான குற்றம்: நவீன கால அடிமைத்தனத்துடன் நேருக்கு நேர் (நியூயார்க்: இலவசம் பிரஸ், 2008).*

*அமெரிக்க வெளியுறவுத்துறையின் கூற்றுப்படி, ஒவ்வொரு ஆண்டும் 600,000 முதல் 800,000 பேர் சர்வதேச எல்லைகள் வழியாக கடத்தப்படுகிறார்கள், இதில் 80 சதவீதம் பெண்கள், அதில் பாதி குழந்தைகள்.*

ஆதாரம்: *https://www.dosomething.org/us/facts/11-facts-about-human-trafficking.*

தேசிய மனித கடத்தல் அவசர தொலைபேசி அழைப்பானது அமெரிக்காவில் உள்ள மற்ற மாநிலங்களை விட டெக்சாஸிலிருந்து அதிக அழைப்புகளைப் பெறுகிறது. அந்த அழைப்புகளில் பதினைந்து சதவீதம் டல்லாஸ்-ஃபோர்ட் வொர்த் பகுதியில் இருந்து வருகிறது.

ஆதாரம்: *https://www.dosomething.org/us/facts/11-facts-about-human-trafficking.*

மனித கடத்தல் மூன்றாவது பெரிய சர்வதேச குற்றத் தொழிலாகும் (சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தலுக்கு அடுத்தது).

ஒவ்வொரு ஆண்டும் $32 பில்லியன் லாபம் ஈட்டுவதாக கூறப்படுகிறது. அந்த எண்ணிக்கையில், 15.5 பில்லியன் டாலர்கள் தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளிலிருந்து ஈட்டப்படுகிறது.

ஆதாரம்: *https://www.dosomething.org/us/facts/11-facts-about-human-trafficking.*

எச்.ஐ.வி (ஏய்ட்ஸ்) பரவுவதில் பாலியல் கடத்தல் முக்கிய பங்கு வகிக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆதாரம்: அந்தோனி எம். டெஸ்டெபனோ, மனித கடத்தல் மீதான போர் (பிஸ்கடேவே, NJ: ரட்ஜர்ஸ் யுனிவர்சிட்டி பிரஸ், 2007).

கடத்தப்படும் குழந்தைகளில் 71 சதவீதத்திற்கும் அதிகமானோர் தற்கொலை செய்து கொள்ளும் தன்மையைக் காட்டுகின்றனர்.

ஆதாரம்: இ. பெஞ்சமின் ஸ்கின்னர், ஒரு கொடூரமான குற்றம்: நவீன கால அடிமைத்தனத்துடன் நேருக்கு நேர் (நியூயார்க்: இலவசம் பிரஸ், 2008).

FBI படி, 2008 இல் கலிபோர்னியாவில் ஒரு பெரிய மனித கடத்தல் அமைப்பு, பன்னிரெண்டு வயதுக்குட்பட்ட சிறுமிகளைக் கூட விபச்சாரிகளாக வேலை செய்ய அடித்து

*உடல் ரீதியாக மட்டும் அச்சுறுத்துகிறதில்லை, அவர்கள் தொடர்ந்து மாந்திரீகத்தாலும் அச்சுறுத்துகின்றனர்.*

*ஆதாரம்: FBI, "சர்வதேச மனித கடத்தல்," நவம்பர் 13, 2009. https://www.fbi.gov/audio-repository/news-podcasts-inside-international-human-trafficking.mp3/view.*

---

## பின் இணைப்பு II

## கிறிஸ்துவுக்குள் நீங்கள் யார்

*நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும், 18. தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்; நான் இயேசுவைப் பற்றிய அறிவில் ஞானம் மற்றும் வெளிப்பாட்டின் ஆவியைப் பெற்றிருக்கிறேன், என் புரிதலின் கண்கள் அறிவொளி பெற்றிருக்கிறது (எபேசியர் 1:17-18).*

*வியாதியஸ்தர்கள் மீது கைகளை வைத்து அவர்கள் குணமடைவதைக் காணவும், பிசாசுகளைத் துரத்தவும் பரிசுத்த ஆவியின் வல்லமையை நான் பெற்றிருக்கிறேன். புதிய மொழிகளால் பேச வேண்டும். எதிரியின் அனைத்து சக்தியின் மீதும் எனக்கு அதிகாரம் உள்ளது, எதுவும் எந்த வகையிலும் தீங்கு செய்யாது (மாற்கு 16:17-18; லூக்கா 10:17-19).*

*நான் பழைய மனிதனைக் களைந்துவிட்டு, புதிய மனிதனை அணிந்தேன், அது உருவத்திற்குப் பிறகு அறிவில் புதுப்பிக்கப்படுகிறது. என்னைப் படைத்தவர் (கொலோசெயர் 3:9-10).*

*நான் கொடுத்தேன், அது எனக்குக் கொடுக்கப்பட்டது; நல்ல அளவு, கீழே அழுத்தி, ஒன்றாக அசைத்து, ஓடி, ஆண்கள் கொடுக்கிறார்கள் என் மார்பில் (லூக்கா 6:38).*

*என் தேவன் கிறிஸ்து இயேசுவின் மூலம் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தின்படி என் தேவைகள் அனைத்தையும் வழங்குவதால் எனக்கு எந்தக் குறைவும் இல்லை (பிலிப்பியர் 4:19).*

*துன்மார்க்கனின் அக்கினி ஈட்டிகள் அனைத்தையும் என் நம்பிக்கைக் கேடயத்தால் அணைக்க முடியும் (எபேசியர் 6:16).*

*கிறிஸ்து இயேசுவின் மூலமாக நான் எல்லாவற்றையும் செய்ய முடியும் (பிலிப்பியர் 4:13).*

*இருளிலிருந்து தம்முடைய அற்புதமான ஒளிக்கு என்னை அழைத்த கடவுளின் துதிகளை நான் காட்டுகிறேன் (1 பேதுரு 2:9).*

*நான் கடவுளின் பிள்ளை, ஏனென்றால் நான் கடவுளின் வார்த்தையின் அழியாத விதையிலிருந்து மீண்டும் பிறந்தேன், அது என்றென்றும் வாழ்கிறது. (1 பேதுரு 1:23).*

*நான் கடவுளின் வேலைப்பாடு, நற்கிரியைகளுக்காக கிறிஸ்துவில் படைக்கப்பட்டவன் (எபேசியர் 2:10).*

*நான் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய சிருஷ்டி (2 கொரிந்தியர் 5:17).*

*நான் கடவுளுக்கு உயிருள்ள ஆவி (ரோமர் 6:11; தெசலோனிக்கேயர் 5:23).*

*நான் ஒரு விசுவாசி, நற்செய்தியின் ஒளி என் மனதில் பிரகாசிக்கிறது (2 கொரிந்தியர் 4:4).*

*நான் வார்த்தையின்படி செய்கிறவன், என் செயல்களில் ஆசீர்வதிக்கப்பட்டவன் (யாக்கோபு 1:22, 25).*

*நான் கிறிஸ்துவின் வாரிசு (ரோமர் 8:17).*

*என்னை நேசிப்பவர் மூலம் நான் ஒரு வெற்றியாளரை விட*

அதிகமாக இருக்கிறேன் (ரோமர் 8:37).

ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் என் சாட்சியின் வார்த்தையினாலும் நான் ஜெயங்கொண்டவன் (வெளிப்படுத்துதல் 12:11).

நான் அவருடைய தெய்வீக சுபாவத்தில் பங்காளியாக இருக்கிறேன் (2 பேதுரு 1:3-4). நான் கிறிஸ்துவின் தூதுவன் (2 கொரிந்தியர் 5:20).

நான் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமுறையின் ஒரு பகுதி, ஒரு அரச ஆசாரியத்துவம், ஒரு பரிசுத்த தேசம், வாங்கப்பட்ட மக்கள் (1 பேதுரு 2:9).

நான் இயேசு கிறிஸ்துவில் தேவனுடைய நீதியாக இருக்கிறேன் (2 கொரிந்தியர் 5:21).

நான் பரிசுத்த ஆவியின் ஆலயம்; நான் என்னுடையவன் அல்ல (1 கொரிந்தியர் 6:19).

நான் தலை, வால் அல்ல; நான் மேலே மட்டுமே இருக்கிறேன், கீழே இல்லை (உபாகமம் 28:13).

நான் உலகத்தின் ஒளி (மத்தேயு 5:14).

நான் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவன், இரக்கம், தயவு, பணிவு மற்றும் நீண்ட பொறுமை ஆகியவற்றால் நிறைந்தவன் (ரோமர் 8:33; கொலோசெயர் 3:12).

என் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு இரத்தத்தில் கழுவப்பட்டேன் (எபேசியர் 1:7).

நான் இருளின் சக்தியிலிருந்து விடுவிக்கப்பட்டு, தேவனுடைய ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டேன் (கொலோசெயர் 1:13).

நான் பாவம், வியாதி மற்றும் வறுமையின் சாபத்திலிருந்து மீட்கப்பட்டேன் (உபாகமம் 28:15-68; கலாத்தியர் 3:13).

*நான் உறுதியாக வேரூன்றி, கட்டியெழுப்பப்பட்டு, என் விசுவாசத்தில் நிலைநிறுத்தப்பட்டு, நன்றியுணர்வுடன் நிரம்பி வழிகிறேன் (கொலோசெயர் **2:7**).*

*நான் தேவனுடைய துதியின் குரலாக இருக்கும்படி அழைக்கப்பட்டேன் (சங்கீதம் **66:8; 2** தீமோத்தேயு **1:9**).*

*இயேசுவின் தழும்புகளால் நான் குணமடைந்தேன் (ஏசாயா **53:5; 1** பேதுரு **2:24**).*

*நான் கிறிஸ்துவோடு எழுப்பப்பட்டு பரலோகத்தில் அமர்ந்திருக்கிறேன் (எபேசியர் **2:6;** கொலோசெயர் **2:12**).*

*நான் கடவுளால் மிகவும் நேசிக்கப்படுகிறேன் (ரோமர் **1:7;** எபேசியர் **2:4;** கொலோசெயர் **3:12; 1** தெசலோனிக்கேயர் **1:4**).*

*அவருடைய மகிமையான வல்லமையின்படி நான் சகல வல்லமையினாலும் பலப்படுத்தப்பட்டேன் (கொலோசெயர் **1:11**).*

# முடிவுரை

1. *http://www.history.com/topics/womens-history/19th-amendment.*

2. அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியகம். (2016) தற்போதைய மக்கள்தொகை கணக்கெடுப்பு, ஆண்டு சமூக மற்றும் பொருளாதார (ASEC) துணை: அட்டவணை PINC-01. 2015 இல் மொத்த பண வருமானம், 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பண்புகள் வேலையின் அடிப்படையில் 2015 இல் அனுபவம், இனம், ஹிஸ்பானிக் தோற்றம் மற்றும் பாலினம். *http://www.census.gov/data/ tables/time-series/demo/income-poverty/cps-pinc/pinc-01.html* (வெளியிடப்படாத கணக்கீடு அடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் ஆண்டு முழுவதும் முழுநேர வேலை செய்த அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கான சராசரி வருடாந்திர ஊதியத்தில், 2015 இல் ஆண்டு முழுவதும் முழுநேர வேலை செய்யும் பெண்களின் மொத்த எண்ணிக்கை பெருக்கப்படுகிறது).

3. *abcnews.go.com* (2013).

4. ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு, *http://en.unesco.org/gem-report/sites/gem-report/files/girls-factsheet-en.pdf.*

5. ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு, *http://en.unesco.org/gem-report/sites/gem-report/files/girls-factsheet-en.pdf (note: multiple tabs).* (குறிப்பு: பல தாவல்கள்).

6. பாலின அழிப்பு விழிப்புணர்வு திட்டம், *Gendap.org.*

7. வலேரி எம். ஹட்சன் மற்றும் ஆண்ட்ரியா எம். டென் போயர், வெறும் கிளைகள்: ஆசியாவின் உபரியின் ஆண் மக்கள் தொகை பாதுகாப்பு தாக்கங்கள் (கேம்பிரிட்ஜ், எம்ஏ: எம்ஐடி பிரஸ், 2005), 10-13, 171-172. Mara Hvistendahl, இயற்கைக்கு மாறானவற்றையும் பார்க்கவும் தேர்வு: பெண்களை விட ஆண் குழந்தைகளைத் தேர்ந்தெடுப்பது மற்றும் ஆண்கள் நிறைந்த உலகத்தின் விளைவுகள் (நியூயார்க்: பொது விவகாரங்கள், 2011).

8. உலக சுகாதார நிறுவனம், இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் ஆராய்ச்சித் துறை, லண்டன் ஸ்கூல் ஆஃப் ஹைஜீன் மற்றும் வெப்பமண்டல மருத்துவம், தென்னாப்பிரிக்க மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், பெண்களுக்கு எதிரான வன்முறையின் உலகளாவிய மற்றும் பிராந்திய மதிப்பீடுகள்: நெருங்கிய கூட்டாளி வன்முறை மற்றும் பங்குதாரர் அல்லாத பாலியல் ஆகியவற்றின் பரவல் மற்றும் ஆரோக்கிய விளைவுகள் வன்முறை, 2013, ப. 2. தனிப்பட்ட நாட்டின் தகவலுக்கு, ஐக்கிய நாடுகளின் பொருளாதாரத் துறையைப் பார்க்கவும் சமூக விவகாரங்கள், உலகப் பெண்கள் 2015, போக்குகள் மற்றும் புள்ளிவிவரங்கள், அத்தியாயம் 6, "பெண்களுக்கு எதிரான வன்முறை," 2015.

9. UNODC, நபர்கள் கடத்தல் பற்றிய உலகளாவிய அறிக்கை, 2014, பக். 5, 11.

10. சர்வதேச தொழிலாளர் அமைப்பு, உலகில் கட்டாய உழைப்பின் குறைந்தபட்ச மதிப்பீடு (ஏப்ரல் 2005), ப. 6.

11. https://www.dosomething.org/us/facts/11-facts-about-human-trafficking.

12. ஸ்கின்னர், இ. பெஞ்சமின், எ க்ரைம் சோ மான்ஸ்ட்ரஸ்: ஃபேஸ்-டு ஃபேஸ் வித் மாடர்ன் டே ஸ்லேவரி (நியூயார்க்: இலவசம் பிரஸ், 2008).

13. https://www.goodreads.com/quotes/230438-in-a-futile-attempt-to-erase-our-past-we-deprive.

14. *https://www.goodreads.com/quotes/255850-of-one-thing-i-am-perfectly-sure-god-s-story-never.*

15. *http://www.encyclopedia.com/humanities/dictionaries-thesauruses-pictures-and-press-releases/discernment.* 16 *https://lenski.com/how-to-let-go-of-unresolved-conflict.*

17 *http://www.sermonsearch.com/sermon-illustrations/1084/not-today.*

18 *https://www.brainyquote.com/quotes/quotes/t/theodorero380703.html.*

19 *https://www.goodreads.com/quotes/230436-over-the-years-i-have-come-to-realize-that-the.*

20. ஐபிட்.

21 *https://www.brainyquote.com/quotes/quotes/g/georgewash158549.html.*

22 *http://www.healanxietyanddepression.com.*

23 *https://www.brainyquote.com/quotes/quotes/a/abrahamlin383153.html.*

24 *http://www.success.com/article/how-to-stand-up-for-yourself.*

25 *https://www.goodreads.com/quotes/51815-public-opinion-is-a-weak-tyrant-compared-with-our-own.*

26 *https://www.sciencedaily.com/releases/2011/08/110815162348.htm.*

27 *http://www.isacs.org/misc_files/SelfEsteem_Report%20-%20Dove%20Campaign%20for%20Real%20Beauty.pdf.*

28 *https://www.goodreads.com/quotes/63061-what-we-hope-ever-to-do-with-ease-we-must.*

29 *https://www.goodreads.com/quotes/42890-how-poor-are-they-that-have-not-patience-what-wound.*

# இயேசுவுடன் உங்களுக்கு உண்மையான ஐக்கியம் இருக்கிறதா?

*கடவுள் உங்களை நேசிக்கிறார்! அவர் உங்களை ஒரு விசேஷமான, தனித்துவம் வாய்ந்த, தன்னிகற்றவராக உருவாக்கினார், மேலும் அவருக்கு ஒரு குறிப்பிட்ட நோக்கமும் உங்கள் வாழ்க்கையை குறித்த திட்டமும் உண்டு. உங்கள் படைப்பாளரான கடவுளுடனான தனிப்பட்ட உறவின் மூலம் உங்கள் ஆத்துமாவை உண்மையிலேயே திருப்திப்படுத்தும் ஒரு வழியைக் கண்டறியலாம்.*

*நீங்கள் யாராக இருந்தாலும், நீங்கள் என்ன செய்திருந்தாலும் அல்லது உங்கள் வாழ்க்கையில் இப்போது நீங்கள் எங்கிருந்தாலும், தேவனின் அன்பும் அருளும் உங்கள் பாவத்தை விட உங்கள் தவறுகளைவிட பெரியது - தம்முடைய ஜீவனை மனமுவந்து கொடுத்ததால் நீங்கள் தேவனிடமிருந்து மன்னிப்பைப் பெறலாம், அவருக்குள் புதிய வாழ்க்கையை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் அவரை உங்கள் இரட்சகராகவும், ஆண்டவராகவும் இருக்க அவரை அழைப்பதற்காக அவர் காத்திருக்கிறார்.*

*உங்கள் வாழ்க்கையை இயேசுவிடம் ஒப்படைத்து அவரைப் பின்பற்ற நீங்கள் தயாராக இருந்தால், நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் உங்கள் பாவங்களை மன்னிக்கும்படியும், நீங்கள் வாழ வேண்டிய வாழ்க்கைக்கு ஒரு புதிய தொடக்கத்தை கொடுக்கும் படியும் அவரிடம் கேளுங்கள். இந்த ஜெபத்தை ஜெபிப்பதன் மூலம் தொடங்குங்கள்...*

*கர்த்தராகிய இயேசுவே, எனக்காக உமது ஜீவனைக் கொடுத்ததற்கும், உம்முடன் தனிப்பட்ட உறவுக் கொண்டிருக்க என் பாவங்களை மன்னித்ததற்கும் உமக்கு நன்றி. நான் செய்த தவறுகளுக்கு மனப்பூர்வமாக வருந்துகிறேன், நான் சரியாக வாழ எனக்கு உம்முடைய உதவி தேவை என்று எனக்குத் தெரியும்.*

*உம்முடைய வார்த்தை ரோமர் 10:9 ல் கூறுகிறது, "நீங்கள் உங்கள் வாயினால் இயேசுவே ஆண்டவர்*

என்று அறிவித்து விசுவாசித்தால் கடவுள் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார், நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்" (நிவ்). நீங்கள் மகன் என்று நான் நம்புகிறேன் நீர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன், மேலும் நீர் என்னுடைய இரட்சகரென்றும், ஆண்டவரென்றும் அறிக்கையிடுகின்றேன். நான் எப்படியிருக்கிறேனோ அப்படியே என்னை எடுத்து, என் இதயத்தில் கிரியை செய்து, நீர் விரும்பும் நபராக நான் இருக்க என்னை உருவாக்கியருளும். இயேசுவே, நான் உமக்காக வாழ விரும்புகிறேன், இன்று உம்முடனான என் புதிய வாழ்க்கையில் எனக்கு ஒரு புதிய தொடக்கத்தை அளித்ததற்காக நன்றியுடனிருக்கிறேன்.

இயேசுவே நான் உம்மை நேசிக்கிறேன்!

தேவன் நம்மை மிகவும் நேசிக்கிறார் என்பதை அறிவது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது! நாம் ஒவ்வொரு நாளும் ஜெபத்திலும் வேதம் வாசிப்பதிலும் அவருடன் நேரத்தை செலவிடும்போது வளரும் ஒரு நெருங்கிய உறவை நம்முடன் வைத்திருக்க அவர் விரும்புகிறார். கிறிஸ்துவுடனான உங்கள் வாழ்க்கையில் உங்களை ஊக்குவிக்க விரும்புகிறோம்.

ஜாய்ஸின் ஒரு புதிய வாழ்க்கை முறை: என்ற புத்தகத்தைக் பெற்றுக்கொள்ள, தயவுசெய்து *joycemeyer.org/salvation* ஐப் பார்வையிடவும், இது உங்களுக்கு எங்களின் பரிசாகும். தேவன் உங்களுக்காக வைத்திருக்கும் அனைத்தையும் பின்பற்றுவதில் முன்னேற்றம் அடைய உதவும் பிற இலவச ஆதாரங்களும் ஆன்லைனில் உள்ளன.

கிறிஸ்துவுக்குள் உங்கள் வாழ்க்கையின் புதிய தொடக்கத்திற்கு வாழ்த்துக்கள்! உங்களிடமிருந்து விரைவில் கேட்போம் என்று நம்புகிறோம்.

# எழுத்தாளரைப் பற்றி

*ஜாய்ஸ் மேயர் உலகின் முன்னணி நடைமுறை பைபிள் ஆசிரியர்களில் ஒருவர். நியூயார்க் டைம்ஸின் அதிகம் விற்பனையாகும் எழுத்தாளர், ஜாய்ஸின் புத்தகங்கள் கோடிக் கணக்கான மக்கள் இயேசு கிறிஸ்துவின் மூலம் நம்பிக்கை மற்றும் மறுசீரமைப்பு கண்டுபிடிக்க உதவியிருக்கிறது. ஜாய்ஸின் நிகழ்ச்சிகள், அன்றாட வாழ்க்கையை அனுபவித்தல் மற்றும் ஜாய்ஸ் மேயருடன் அன்றாட பதில்கள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணையத்தில் உலகம் முழுவதும் ஒளிபரப்பப்படுகிறது.*

*ஜாய்ஸ் மேயர் ஊழியங்கள் மூலம், ஜாய்ஸ் சர்வதேச அளவில் பல தலைப்புகளில் கற்பிக்கிறார், தேவனுடைய வார்த்தை நம் அன்றாட வாழ்வில் எவ்வாறு பொருந்துகிறது என்பதில் குறிப்பிட்ட கவனம் செலுத்தி போதிக்கிறார். அவருடைய நேர்மையான தகவல்தொடர்பு பாணி அவருடைய நடைமுறை அனுபவங்களைப் பற்றி வெளிப்படையாகப் பகிர அனுமதிக்கிறது, அதனால் அவர் கற்றுக்கொண்டதை மற்றவர்கள் தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்த முடிகிறது.*

*ஜாய்ஸ் நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார், அவை நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் புத்தகங்களாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன, மேலும் 65 மில்லியனுக்கும் அதிகமான அவரது புத்தகங்கள் உலகம் முழுவதும் விநியோகிக்கப்படுகின்றன.*

*சிறப்பாக விற்பனையாகும் புத்தகங்களில் வல்லமையான எண்ணங்கள்; நம்பிக்கையுள்ள பெண்; மேன்மையாக தோன்றுங்கள், மேன்மையாக உணருங்கள்; உங்கள் நாளை சரியாகத் தொடங்குங்கள்; உங்கள் நாளை சரியாக முடியுங்கள்;*

அங்கிகார அடிமைத்தனம்; தேவனிடமிருந்து எப்படி கேட்பது; சாம்பலுக்கு பதில் சிங்காரம்; மற்றும் மனதின் போர்க்களம் ஆகியவை உள்ளடங்கும்.

காயப்படும் மக்களுக்கு உதவும் ஜாய்ஸின் ஆர்வம், ஹேன்ட் ஆஃப் ஹோப்பின் (நம்பிக்கையின் கரம்) தரிசனத்திற்கு அடித்தளமாக உள்ளது. ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் நம்பிக்கையின் கரமானது உணவுத் திட்டங்கள், மருத்துவ பராமரிப்பு, அனாதை இல்லங்கள், பேரிடர் நிவாரணம், மனித கடத்தல் குறுக்கீடு மற்றும் மறுவாழ்வு மையம் போன்ற பல உலகளாவிய மனிதாபிமான நலன்களை வழங்கி கிறிஸ்துவின் அன்பையும் நற்செய்தியையும் எப்போதும் பகிர்ந்து கொள்கிறது.

To contact the author in the United States, Please write:
Joyce Meyer Ministries
P.O. Box 655,
Fenton, Missouri 63026
or call: (636) 349-0303
or log on to: www.joycemeyer.org
Go to tv.joycemeyer.org
to watch Joyce's messages in a variety of languages

To contact the author in India, Please write:
Joyce Meyer Ministries
C14, Vikrampuri Colony,
Karkhana, Secunderabad,
Telangana - 500 009
or log on to: www.jmmindia.org

ஜாய்ஸ் மேயர் உலகின் முன்னணி நடைமுறை பைபிள் ஆசிரியர்களில் ஒருவர். அவரது தினசரி ஒளிபரப்பு, உலகம் முழுவதும் நூற்றுக்கணக்கான தொலைக்காட்சி நெட்வொர்க்குகள் மற்றும் வானொலி நிலையங்களில் ஒளிபரப்பப்படுகிறது.

ஜாய்ஸ் 100 க்கும் மேற்பட்ட ஊக்கமளிக்கும் புத்தகங்களை எழுதியுள்ளார். அவரது புத்தகங்களில் வலிமையான எண்ணங்கள் அடங்கும்; தி கான்ஃபிடன்ட் பெண்; நன்றாக பாருங்கள், நன்றாக உணருங்கள்; உங்கள் நாளை சரியாகத் தொடங்குதல்; உங்கள் நாளை சரியாக முடிப்பது; ஒப்புதல் அடிமையாதல்; கடவுளிடம் இருந்து எப்படி கேட்பது; சாம்பலுக்கு பதில் சிங்காரம்; மற்றும் மனம் ஒரு போர்க்களம்.

ஜாய்ஸ் ஆண்டு முழுவதும் மாநாடுகளை நடத்துகிறார், உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கானவர்களுடன் பேசுகிறார்.



# ஒரு பெண்ணின் ஆத்துமாவை சுகமாக்குதல்

“கடவுள் தம்முடைய சாயலில் படைக்கப்பட்ட ஒரு பெண்ணாகிய உங்களுக்காக எப்படிப்பட்ட வாழ்க்கையை விரும்பினார்? இது நிச்சயமாகவே ஒரு குறைக்கப்பட்ட, மதிப்பிழக்கப்பட்ட, தவறாக நடத்தப்பட்ட, தவறாகப் பயன்படுத்தப்பட்ட, பிறரால் பயன்படுத்தப்பட்ட மற்றும் தாக்கப்பட்ட வாழ்க்கை அல்ல. அவர் நமக்கு நிபந்தனையற்ற அன்பை, எல்லையற்ற மதிப்பை, முழுமையை, நீதியை, அமைதியை மற்றும் மகிழ்ச்சியை வழங்குகிறார் - அதுவே அவரை யார் நம்புவார்களோ, அவருடன் வாழ்க்கையில் நடப்பார்களோ அவர்களுக்கான அவரது ஆசீர்வாதங்களின் ஆரம்பம்!”

— ஜாய்ஸ் மேயர், அறிமுகம்

JOYCE MEYER
MINISTRIES®
Sharing Christ – Loving People

C14, Vikrampuri Colony,
Karkhana, Secunderabad,
Telangana - 500 009